# காதல் போயின்...

இந்துமதி

**பூஞ்சோலைப் பதிப்பகம்**
11, சிவப்பிரகாசம் தெரு, பாண்டிபஜார்
தி.நகர் சென்னை – 600 017
✆ 434 5904

காதல் போயின்... (சமூக நாவல்)
முதற் பதிப்பு : டிசம்பர் 1997
விலை : ரூ. 50.00

24149
4008623

**KAATHAL POYIN...**
tamil social novel
by **INDHUMATHI**
© INDHUMATHI

First Edition : December, 1997
Pages : 240

**POONCHOLAI PATHIPPAGAM**
1. Sivaprakasam Street
Pondy Bazaar T. Nagar
Chennai - 600 0017 ✆ 434 5904
P.B : 5193

Price : **Rs. 50.00**

ஒளி அச்சக் கோர்வை : லேசர்லிங் சிஸ்டம்ஸ், சென்னை - 600 017
அச்சு : மணி ஆப்செட் சென்னை - 600 005

## ஒரு முன்னோட்டம்

ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் எழுத ஆரம்பிக்கிறேன். கிட்டத்தட்ட மூன்று வருட இடைவெளி. கடைசியாக நான் எழுதியது 'தேவி'யில்தான். 'விரலோடு வீணை' தொடர். ஏகோபித்த வரவேற்பு பெற்ற முப்பத்தாறு வாரத் தொடர் முடிந்த மறுவாரமே அடுத்த தொடரை ஆரம்பிக்கச் சொல்லிக் கேட்டார்கள். ஒரு தொடர் முடிந்த கையோடு மறு வாரமே அடுத்த தொடரை ஆரம்பிக்கக் கூடிய சந்தர்ப்பம் இதுவரை வேறு எந்த எழுத்தாளருக்கும் கிடைத்திருக்காது என்றே நினைக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு நல்ல சந்தர்ப்பத்தைக் கூட நழுவ விட்டிருக்கிறேன்.

காரணம்...?

திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க நானாக உட்புகுந்ததுதான்.

திரைப்படத் துறைக்குக் கதாசிரியராகப் போகலாம். வசன கர்த்தாவாகலாம். உதவி டைரக்டராகிப் பின்னர் அந்த அனுபவத்தில் இயக்கத்தில் கூட இறங்கலாம். இதையெல்லாம் விட்டு விட்டுத் தயாரிப்பாளராகிற எண்ணம் எப்படி ஏற்பட்டது...?

இப்படித்தான் ஆக வேண்டும். இதுதான் என வலிந்து நான் எதையும் மேற்கொள்ளவில்லை. திரைப்படத் துறையில் உற்ற நண்பர்கள் இருந்தபோதும் மகேந்திரன், ருத்ரைய்யா, பாலசந்தர், பாரதிராஜா, மணிரத்னம் இவர்களைப் பார்த்துப் பிரமித்த போதிலும் அத்துறையை விட்டு நான் தள்ளியே நின்றிருந்தேன். வெறும் பார்வையாளியாக மட்டும் இருந்த என்னைத் தயாரிப்பாளர் என்கிற நிலைமைக்குக் கொண்டு போய்விட்டது ஒரு பாடல் 'ஒரே ஒரு பாடல்' என்றால் நம்புவீர்களா...?

எல்லாக் கலைஞர்களுமே உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். அதிலும் நான் அதிக உணர்ச்சிவசப்படுபவள். இரக்கம், அன்பு, பாசம், கோபம் என்கிற எல்லா உணர்வுகளுக்குமே சட்சட்டென்று ஆட்பட்டு

விடக்கூடியவள். அப்படிப்பட்ட என்னை அதிகம் உணர்ச்சிவசப் படுத்திய ஒரு பாடல் உண்டு என்றால் அது ஆபாவாணனின் ஊமைவிழிகள் படத்தில் வந்த 'தோல்வி நிலை என நினைத்து மனிதன் வாழ்வை இழக்கலாமா...?' என்ற பாடல்தான். அதுவும் அந்தப் படத்தை நான் தியேட்டரில் பார்க்கவில்லை. வீட்டு டி.வி.யில் காஸெட்டில்தான் பார்த்தேன். உதிரிப்பூக்கள், முள்ளும் மலரும், அவள் அப்படித்தான், முதல் மரியாதை போன்ற படங்களைப் பார்த்த அதே உணர்வுகளுடன் 'ஊமை விழிகளை'யும் ஏழெட்டு முறைகள் பார்த்திருக்கிறேன். அதில் வருகிற அந்தக் கார்க் காட்சிக்காகவும், இந்தப் பாடல் காட்சிக்காகவும் மீண்டும் மீண்டும் எத்தனையோ தரம் பார்த்திருக்கிறேன். 'தோல்வி நிலையென' பாடலின் உத்வேகம் மட்டுமின்றி அதன் நிலைக்கு ஆளான பத்திரிகை அலுவலகம், பத்திரிகை ஆசிரியனது தார்மீகக் கோபம், அவனது வேகம், விவேகம், சோகமும், வீரமும் ததும்ப அவன் பாடிய அந்தப் பாடல் வரிகள் என எல்லாமே என் மனதை ஆழமாய் பாதிக்கச் செய்தன. அந்தப் பாதிப்பின் விளைவு... ஆடியோ காஸெட்டின் இரண்டு பக்கங்களிலும் அந்த ஒரு பாடலை மட்டும் திரும்பத் திரும்பப் பதிவு செய்து வைத்து டேப்ரிக்கார்டரில் போட்டுக் கேட்டுக் கொண்டே நிறைய எழுதியிருக்கிறேன். மனது கஷ்டப்படுகிறபோது, சங்கடத்தில் தவிக்கிறபோது, சோகமாக இருக்கிறபோது என நிறைய நேரங்களில் அப்பாடல் என்னை எழுந்து நிற்கச் செய்திருக்கிறது. 'கமான் இந்துமதி, இதற்குப் போய்த் துவண்டு விடலாமா... போராடு... உறுதியாய்ப் போராடு...' என முதுகில் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தி யிருக்கிறது.

அப் படத்தைத் தயாரித்து அந்தப் பாடலை எழுதிய ஆபாவாணன் அவர்கள் 'கறுப்பு ரோஜா' என்கிற திரைப் படத்திற்கு வசனம் எழுத வேண்டும் என என்னைக் கேட்டுக் கொண்டார். திரைத்துறையை விட்டு 'வேண்டாம், நமக்கு ஒத்து வராது. நம் மனநிலைக்குச் சரிப்படாது' என ஒதுங்கியிருந்த நான் அந்தப்



பாடலின் பாதிப்பினால் இதற்கு ஒத்துக் கொள்ள எண்ணி திரைத்துறையைச் சேர்ந்த என் நண்பர்களிட மெல்லாம் விசாரித்தேன்.

'ரொம்ப நல்ல யூனிட்மா, அற்புதமான மனிதர்கள், ஒரு கெட்ட பழக்கம் கிடையாது, டீ, காபி கூட குடிக்கமாட்டாங்க. வெரி ஸ்ட்ரெய்ட் ஃபார்வர்டு பீப்பிள். உங்களுக்கு ஒத்துப் போகும். தைரியமா செய்யலாம்...' என ஒருவர் தவறாமல் சர்டிபிகேட் தந்த பின்னரே நானும் தைரியமாக வசனம் எழுத ஒப்புக் கொண்டு கதை டிஸ்கஷனில் கலந்து கொண்டேன்.

வசனம் மட்டுமே எழுதப் போன நான் பின்னர் அந்த யூனிட்டின் ஒழுக்கம் தவறாமை, கட்டுப்பாடு, எளிமை, மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்துப் பழகும் தன்மை இவைகளினால் கவரப்பட்டேன். ஒரு கால கட்டத்தில் வசனகர்த்தாவாக மட்டும் நிற்காமல் இப்படிப்பட்ட நல்ல மனிதர்களோடு சேர்ந்து திரைப்பட நுணுக்கங்களை அறிந்து கொள்கிற ஆவலினாலும், அந்த யூனிட்டில் ஒருத்தியாக இணைகிற எண்ணத்தினாலும், அப்படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்த கருணாமூர்த்தி என்கிற அற்புதமான மனிதருக்கு ஏற்பட்ட சின்ன பணமுடக்கம் காரணமாகவும் உதவி செய்ய எண்ணினேன்.

என் கணவரோடு கலந்து பேசி, 'இப்படிப்பட்ட நல்ல மனிதர்கள் கிடைக்க மாட்டார்கள். சாதாரணமாகவே நல்லவர்களைக் காண்பதென்பது அரிதாக இருக்கிற இக்காலத்தில் திரைப்படத் துறையில் இப்படிப்பட்ட நேர்மையானவர்களும், பண்பானவர்களும் இருந்தால் அவர்களின் நட்பை விட்டு விடக்கூடாது. 'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல்' இல்லாமல் - நெட்டியும், ஆம்பலும் போல் - குளத்தோடு ஒன்றாக இணைந்து ஒன்றாக வாழ்ந்து ஒன்றாக மடிகிற அல்லியும், தாமரையும் போல் ஒரு ஆழமான நட்பிற்கு உதாரணமாகத் திகழ வேண்டும்' என்கிற உறுதியான முடிவில்தான் தயாரிப்பாளர் என்கிற முத்திரையை இறுதியாகக் குத்திக் கொண்டேன்.

ஒரு பத்திரிகையில் வெளியான என் பேட்டியில் இப்படத்தின் தோல்வியினால் மூன்றரை கோடி ரூபாய் நஷ்டப்பட்டதாக வெளியிட்டு விட்டார்கள்.

அப்பேட்டி வந்த உடனே பத்திரிகையின் ஆசிரியரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நான் பேசினேன். ஒன்றரை கோடி என்பதை மூன்றரை கோடியாக மிகைப்படுத்தி எழுதிவிட்ட நிருபரின் தவறு அது. வெறும் வாய் வழியாகக் கேட்டுக் கொண்டு போய் எழுதப்படுகின்ற பேட்டிகளில் இதுபோன்ற தவறுகள் ஏற்படுவது உண்டு. அத் தகவல் அப்படி வெளியான ஒன்றுதான்!

ஆரம்பத்தில் 'கறுப்பு ரோஜா' படத் தோல்வி என்னை மட்டுமின்றி எங்கள் அனைவரையும் பாதித்தது உண்மை. ஆனால், அதனால் துவண்டு போய் மூலையில் முடங்கி விடாமல், உடைந்து நொறுங்காமல் எதிர்த்துப் போராடி தைரியமாகச் சமாளித்து வெளியில் வந்திருக்கிறோம் என்றால் அதற்கு முழுக்க முழுக்க ஆபாவாணன் அவர்கள்தான் காரணம்.

நாங்கள் பிராமணர்கள்; வாழ்க்கையில் அதிகம் ரிஸ்க் எடுக்காத வர்கள்; 'நாம் உண்டு; நம் வேலை உண்டு' என ஒதுங்கிப் போகிறவர்கள். போர்க்குணமற்றவர்கள். அப்படிப்பட்ட எங்களை, வாழ்க்கைத் தோல்விகளைக் கண்டு கொஞ்சம் கூடக் கண்கலங்காத, பயந்து ஒதுங்காத, எதிர்நோக்கிச் சமாளிக்கிற போராளிகளாக மாற்றியிருக்கிறது என்றால் அந்தப் பெருமையும் ஆபாவாணனையே சாரும்.

அவரின் தைரியமும், தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும், போராடும் தன்மையும் எங்களைப் பிரமிக்க வைத்திருக்கின்றன.

'நீ படமெடுத்தாய், நஷ்டப்பட்டாய். அதற்கு நான் என்ன செய்ய முடியும்...?' என மிகச் சுலபமாக ஆபாவாணன் அவர்கள் ஒதுங்கிக் கொண்டிருக்கலாம். வேறு யாரானாலும் அப்படித்தான் செய்திருப்பார்கள். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.



'நாம் கேட்காமலேயே நமக்கு உதவ முன் வந்தார்கள். அவர்களுக்கு உயிருள்ளவரை நம்மால் ஆன உதவிகளைச் செய்ய வேண்டும்' என்கிற உயரிய நோக்கத்தில் எங்கள் குடும்பத்தில் ஒரு அங்கத்தினராகி இன்று வரை எங்கள் கஷ்ட நஷ்டங்களுக்குக்கூட நின்று கை கொடுத்து சமாளித்து, காலூன்றி நிற்கக் கற்றுக் கொடுத்து...

நூறு வருடங்கள் வாழ்ந்து நூறாயிரம் பேர்களோடு பழகினாலும் கற்றுக்கொள்ள முடியாத வாழ்க்கையில் நெளிவு சுளிவுகளையும், அனுபவங்களையும் யதார்த்தமான சில உண்மைகளையும், முக்கியமாய் மனிதர்களைப் புரிந்து கொள்ளவும் கற்றுக் கொண்டேன். இயல்பான என் படபடப்பு அடங்கி நிதானமாக, அமைதியாக இருக்க, யோசித்துப் பேச...

இத்தனை சுலபமாய் இதையெல்லாம் கற்றுக் கொண்டிருக்க முடியுமா? இவ்வளவு சீக்கிரம் வருமா? மனிதர்களையும், வாழ்க்கையையும் புரிந்து கொள்வது என்பது இயலுமா? தோல்வியைப் போன்ற மிகச் சிறந்த நண்பன் யார்...?

இந்தக் 'கறுப்பு ரோஜா' மட்டும் தோல்வியடையாது போயிருந்தால் இவை அனைத்தையும் பெறமுடியாது போயிருக்கும். இதற்காக ஆபாவாணனுக்கு மீண்டும் மீண்டும் என் நன்றி உரித்தாகும்.

'தேவி'யில் எழுதி முடித்து வேறு எதற்கும் எதுவும் எழுதாமலிருந்து மறுபடியும் தேவியிலேயே எழுத நேர்ந்தது சந்தோஷமாக இருக்கிறது. விட்ட இடத்திலிருந்து தொடருகிற மாதிரி இருக்கிறது. 'விரலோடு வீணை' பெற்ற வெற்றியை இந்நாவலும் நிச்சயம் பெறும். இனி படிப்பதும் படித்து விட்டுத் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவதும் உங்கள் பொறுப்பு...

— அன்புடன்

**இந்துமதி**

## நன்றி

'தேவி' ஆசிரியர்
திரு. பா. இராமச்சந்திர ஆதித்தன் அவர்களுக்கும்
உதவி ஆசிரியர்
திரு ஜேம்ஸ் அவர்கட்கும்

- இந்துமதி

24149
H008623
சௌந்தர், சென்னை-17.

# காதல் போயின்...

## 1

காரை பெயர்த்து சுண்ணாம்பு காணாத புராதனச் சுவரில் மாட்டப்பட்டிருந்தது அந்த நிலைக் கண்ணாடி. ஆளுயரத்திற்குப் பெரிய கண்ணாடி அது. செவ்வகமான நூக்கமரப் பலகையில் பொருத்தப்பட்ட கோழி முட்டை வடிவக் கண்ணாடி. சிறிது கூட அலையோடாத, பூதம் காட்டாத பெல்ஜியக் கண்ணாடி. தாத்தாவிற்குத் தாத்தா காலத்தில் வெள்ளைக்கார துரை ஒருவர் பரிசாகக் கொடுத்ததாம். அம்மா அடிக்கடி அதைப் பெருமை கலந்த குரலில் சொல்லக் கேட்டிருக்கிறாள் ரம்யா.

"கிட்டத்தட்ட அம்பது அறுபது வருஷக் கண்ணாடி அது. கொஞ்சம் கூடப் பாதரஸம் போகாம, பளபளப்பு மங்காம எப்படி இருக்குது பாரு...!"

அதைக் கேட்கிற போதெல்லாம் ஆத்திரம் வரும் ரம்யாவிற்கு. குபீரென்று கோபம் பற்றிக்கொள்ளும். சொல்லமுடியாத எரிச்சல் ஏற்படும். அம்மாவின் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமற் போகும்.

"ஆமாம்… தட்டு முட்டுச் சாமான்களையும் ஒட்டை உடைசல் நாற்காலிகளையும் வரிசையாய்ப் பெத்துப் போட்டிருக்கிற தம்பி தங்கச்சிங்களையும் விட்டா நீ பெருமையடிச்சிக்க ஓஸியாய்க் கிடைச்ச இந்தக் கண்ணாடி தவிர வேற என்ன இருக்குது. இந்த வீட்ல…?"

பட்டென்று வாய் மீது போட்டுவிட்ட நிம்மதி. நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி நறுக்கென்று நாலு வார்த்தை கேட்டபின் அடங்கி விட்ட வேகம். அதன் பின்பு அம்மாவின் முகம் போன போக்கில் ஏற்படுகிற குரூர திருப்தி…

'வேண்டும். நன்றாக வேண்டும்.' இப்படித்தான் வார்த்தைகளால் குளவியாகக் கொட்டுவேன். வலி தாங்க முடியாமல் துடிக்கிறாயா… நன்றாகத் துடி… உள்ளுக்குள் அவஸ்தைப் படுகிறாயா…? நன்றாகப் படு. என்னை யார் பெற்றுக் கொள்ளச் சொன்னது…? உன் வயிற்றில் பிறக்க வேண்டுமென்று நானா வேண்டினேன்? அல்லது என்னையே பெறவேண்டுமென்று நீதான் தவமிருந்தாயா…? விதி என்னை உன் மகளாக்கி உன்னை என் தாயாக்கித் தொலைந்து விட்டது.

இல்லாவிட்டால் இந்த வீட்டில் வந்து பிறக்க வேண்டியவளா நான்…? இதுபோன்ற ஒண்டுக் குடித்தன வீட்டில் அடைபட வேண்டியவளா…? வரிசையாகக் கிழிசல் பாய் விரித்து ஆறு பேருக்கு மத்தியில் படுக்க வேண்டியவளா…? ஐந்திற்கும் பத்திற்கும் உன்னிடம் கையேந்தி நிற்க வேண்டியவளா…?

ஒரு நாள்… ஒரே ஒருநாள் சிநேகிதிகளைக் கூட்டிக் கொண்டு ஓட்டலுக்குப் போயிருப்பேனா…? ஓட்டல் கூட வேண்டாம். காலேஜ் காண்டீனிற்கு அழைத்துப் போய் காபி வாங்கித் தந்திருப்பேனா…? அவர்கள் பணமில்லாமல் என் கைப் பணம் செலவழித்து சினிமா டிக்கெட் எடுத்திருப்பேனா…? மாருதியிலும், சியராவிலும், சியல்லோவிலும் கல்லூரிக்கு வருகிறவர்கள் மத்தியில் கையில் டிபன் பாக்ஸோடு ஒன்பது மணிக்குக் கிளம்பி கழுத்தும், கையடியும், பின் முதுகும் வியர்வையில் நனைய ஓட்டமும் நடையுமாகக் கல்லூரி அடைந்து கர்சீப்பால் முகம் துடைத்து ஆசுவாசப்படுத்திக் கொண்டு அப்புறம்தானே வகுப்பிற்குள் நுழைவேன்…



அது போகட்டும் ஒரு பண்டிகை, பிறந்தநாள் எதற்காவது புதுசு கண்டிருப்பேனா… எத்தனைப் பிறந்த நாட்களுக்கு உன் எதிரில் நின்று கேட்டிருப்பேன்… புது உடைக்காக அம்மாவைக் கெஞ்சுகிற காட்சி தமிழ்த் திரைப்படம் மாதிரி அவள் கண்முன் விரியும்.

"அம்மா… ஆகஸ்ட் பத்தாம் தேதி எனக்குப் பிறந்த நாள்மா…"

மறந்து போகிற நாளா அது… ஆனாலும் வாய் மூடி மவுனித்திருப்பாள் அம்மா. ரம்யா தன்னை எங்கு பிடிக்கப் போகிறாள் என்பது அவளுக்குத் தெரியும். ஆகஸ்ட் பிறப்பதற்குள் முன் ஒவ்வொரு வருடமும் விளையாடி அலுத்துப் போய்விட்ட நிழல் யுத்தம்தான் அது.

"எல்லாரும் அவங்கவுங்க பிறந்த நாளுக்குப் புதுசு போட்டுக்கிட்டு வருவாங்க. என் பிறந்த நாள் பத்தாம் தேதின்னு அவங்களுக்குத் தெரியும். ஏண்டி ரம்மி புதுசு போட்டுக்கலைன்னு கேட்பாங்க…"

இயலாமையின் வேதனையில் உருகிச் சடாரென்று பதில் சொல்வாள் அம்மா.

"உன் சிநேகிதிங்கள்ளாம் வீட்டுக்கு வர்றவங்கதானே ரம்யா. நம்ம நிலைமை தெரியாதவங்களா என்ன…? அப்பா செத்துப் போனதற்கப்புறம் உன்னையும் ரெண்டு தங்கச்சி தம்பிங்களையும் வச்சிக்கிட்டு நான் ஒண்டியா சமாளிக்கிறதைப் பார்க்கிறவங்கதானே…? எக்ஸ்போர்ட் கார்மெண்ட் கம்பெனில நான் வேலைக்கு இருக்கிறதும், ராப்பகலா தையல் மிஷின் ஓட்டறதும் தெரிஞ்சவங்கதானே…? ஒருத்தி சம்பளத்துல ஆறு பேர் கொண்ட குடும்பத்தைக் காப்பாத்தறது எத்தனை கஷ்டம்… நம்ம கஷ்டம் தெரிஞ்ச நல்ல பொண்ணுங்கம்மா அவங்க. அப்படியெல்லாம் எதுவும் கேட்க மாட்டாங்க…"

அதைக் கேட்ட உடனே ரம்யாவின் முகம் சிவக்கும். கண்களில் கனல் பறக்கும்.

"ஏம்மா… அவங்க நல்ல பொண்ணுங்கன்னா என்ன அர்த்தம்…? நான் கெட்ட பொண்ணுன்னு மறைமுகமாக சொல்ல வரியா…!"

பதறிப் போவாள் அம்மா. கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாகி விடப் போகிறதே என்கிற கவலையில் பதட்டத்தோடு மறுப்பாள்.

"ஐயய்யோ... நான் அப்படியெல்லாம் சொல்லலை ரம்யா. உன்னைப் போய் அப்படிச் சொல்வேனா..? அழகு, புத்திசாலித்தனம் எல்லாம் நிறைஞ்ச அருமையான பொண்ணு நீன்னு எனக்குத் தெரியாதா..?"

அழகென்று சொல்லி விட்ட புகழ்ச்சியில் சட்டென்று ரம்யாவின் குரல் தாழும். தூரத்தில் ஆர்ப்பரித்து அட்டகாசமாகப் புறப்படுகின்ற கடலலை கரையை நெருங்குகிற போது ஒன்றுமே இல்லாமல் வெறுமனே கால் நனைத்து விட்டுப் போகிற மாதிரி சினம் அடங்கும்.

"தெரிஞ்சிருந்தா இப்படிக் கேட்டிருக்க மாட்டியேம்மா... அழகுலே என் கால் தூசு பெறாதவங்கள்ளாம் வேளைக்கு ஒரு டிரஸ்ஸும், நாளுக்கு ஒரு அலங்காரமுமாக வர்றபோது எனக்கு மட்டும் ஆசை இருக்காதா..? ஒரு பதினெட்டு வயசுப் பொண்ணு அதுவும் காலேஜ் படிக்கிற பொண்ணு பிறந்த நாளுக்குப் புதுசு கட்டிக்கிட்டுப் போக ஆசைப்படறது தப்பா..? அதைப் போய் பெரிய குத்தமாக்கிப் பேசிட்டியே..?"

சரசரவென்று அம்மாவின் கண்களில் நீர் கோர்த்துக் கொள்ளும். ஏற இறங்க மகளைப் பார்க்கிற பார்வையில் எல்லையற்ற கருணை தெரியும். அவளின் அழகு பிரமிக்க வைக்கும்.

கடைசல் பிடிக்கப்பட்ட சந்தனச் சிலை மாதிரி எவ்வளவு அழகு! அந்த நிறம். உயரம், தீர்மையான மூக்கு, நீண்டு அகன்ற கண்கள், இயற்கையாகவே சீராக வளர்ந்திருந்த புருவங்கள், கருமையும், அடர்த்தியுமான கண்ணிமைகள், பனம் நுங்கு போன்ற முகவாய், கட்டான உடல் முழுவதும் பொங்கித் ததும்புகிற இளமை..

தன்னைப் போன்று கருப்பாய், குள்ளமாய் இல்லாமல் அவள் தன் கணவனின் நிறத்தையும் உருவத்தையும் கொண்டு வந்திருந்தாள். உருவம் மட்டுமல்ல, குணத்தில் கூட ரம்யா அச்சு அப்படியே அப்பாதான்.

அவரோடு வாழ்ந்த அந்தப் பனிரெண்டு வருடங்களில் அவள் அவருக்குக் கொஞ்சம்கூடப் பொருத்தமில்லாததை எத்தனை முறைகள் கட்டிக் காட்டியிருப்பார். ரம்யா இப்போது கொட்டுகிற மாதிரி எவ்வளவு தடவை வார்த்தைக் குளவிகளால் கொட்டியிருப்பார்.



கருப்பு, குள்ளம் என்பதை எப்படியெல்லாம் பேசியிருப்பார். கத்தரிக் காய்க்குக் கைகால் முளைக்கச் செய்து என் தலையில் பெண்டாட்டி யாகக் கட்டி விட்டார்கள் என நொந்து கொண்டிருப்பார்..

அழகில்லை என்ற காரணத்தால், தன்னை வெளியில் தலை காட்ட விட்டிருப்பாரா..? சினிமா, டிராமா என ஒரு இடத்திற்கு அழைத்துப் போயிருப்பாரா..? கோவில், குளம், கடை கண்ணி என்று சேர்ந்து வந்திருப்பாரா..? வராவிட்டால் கூடப் போகட்டும். வார்த்தை நெருப்பால் சுடாமல் இருந்திருக்கக் கூடாதா..?

'ஏங்க... என் பெரியம்மா பொண்ணுக்குக் கல்யாணங்க. நேர்ல வந்து பத்திரிகை வச்சு அழைச்சுகிட்டுப் போயிருக்காங்க. நீங்க வீட்ல இல்லைன்னு உங்க கிட்ட சொல்லச் சொல்லி நூறு தரம் சொல் விட்டுப் போனாங்க. நம்ம ரெண்டு பேரையும் சேர்ந்து ஒன்னா வரச் சொல்லியிருக்காங்க..'

கோபம் வந்தால் இப்போது பெண்ணிற்கு முகம் சிவக்கிறதே.. அதே போல் அவருக்கும் சிவந்து போகும். விறுவிறு வென்று வார்த்தைகளில் வேகம் ஏறும்.

"ஒன்னா வரச் சொன்னாங்களா..? அவங்க சொன்னாங்களா..? இல்ல நீயே சொல்றியா..?"

"இல்லீங்க.. அவங்கதான்.."

"சீ! வாயை மூடிக்கிட்டு கம்முனு கட. ஒன்னா போவணுமாம். ஒன்னா... நல்லா லட்சணமா வெள்ளை வெளேர்னு ராசாத்தி மாதிரி இருக்க பாரு. கூட கூட்டிக்கிட்டுப் போகாதது ஒன்னுதான் குறைச்சல். கரிக்கட்டையாட்டம் இருந்துக்கிட்டு ஆசையைப் பாரு.. என் கூட வர என்ன தகுதி இருக்குது ஒனக்கு..? இந்த மூஞ்சியும் முகரக்கட்டையும் வச்சுக்கிட்டுக் கூட வரணுமாம் கூட....

பொரிந்து தள்ளி விட்டுத் துண்டை உதறி தோளில் போட்டுக் கொள்வார்.

"என் தலையெழுத்து. செஞ்ச பாவம். தலைல கட்டி வச்சிட்டாங்க.."

உறுமிக் கொண்டே வெளியேறுவார். எங்கே போகிறார் என்ன செய்கிறார் என்கிற எதையும் கேட்டுவிடக் கூடாது. எதுவும் தெரியவும்

தெரியாது. கொடுக்கிற பணத்திற்குள் குடும்பம் நடத்த வேண்டும். பத்து பைசாவானாலும் கணக்குச் சொல்ல வேண்டும். வேளை தவறாமல் சோறாக்கிப் போட வேண்டும்.

இவ்வளவு வெறுக்கிறாரே... தேவை என்கிறபோது மட்டும் கூப்பிடுவார். அதுவும் எப்படி..? அதட்டலும், அதிகாரமுமாகத்தான். உருட்டலும் மிரட்டலுமாகத்தான். நடு ராத்திரியில் எழுந்து உட்கார்ந்து குரலைச் செருமிக் கொள்வார். இரண்டு மூன்று செருமலுக்குப் பின் குரல் இறுக்கமாக வரும்.

"என்ன... காதுல உழல..?"

அறைக்கு வெளியில் சுவர் ஓரம் ஒடுங்கிக் கிடப்பாள். வாரிச் சுருட்டி எழுந்து உட்கார்ந்து மெதுவாகக் கேட்பாள்.

"என்னங்க..?"

"இத்தினி தரம் இருமுனனே... காதுல விழல..?"

"தண்ணி வேணுங்களா..? சுடு தண்ணி வச்சுத் தரட்டுமா..?"

"அழகுதான் இல்லேன்னா அறிவு கூடவா இல்லாமப் போவனும்..? ஜடம். மூதேவி... எழுந்திருச்சி வந்து இப்படிப் படு..."

மறுத்ததில்லை. மறுக்கவும் முடியாது. 'நான் கறுப்பு. அழகில்லாதவள். கத்தரிக்காய்க்குக் காலும் கையும் முளைச்ச மாதிரி இருப்பவள். எந்த விதத்திலும் உங்களுக்கு ஏற்றவளில்லை. கூட வரக் கூட லாயக்கற்றவள். இப்போது மட்டும் எதற்கு..? வேண்டாமே...'

சொல்லிவிட முடியுமா..? கேட்கத் துடிப்பதைக் கேட்டு விட முடியுமா..? உள்ளுக்குள் வார்த்தைகளாக ஊற்றெடுப்பதை வெளியில் கொட்டிவிட முடியுமா? அப்படிக் கொட்டியபின் அந்த வீட்டில் வாழத்தான் முடியுமா?

எல்லாவற்றையும் போட்டு அடக்கிக் கொண்டு, குண்டும் குழியுமான தரையை திமிசால் தட்டிச் சமப்படுத்துகிற மாதிரி மனதை சமன்படுத்திக் கொண்டு அமைதியாய் எழுந்து போய் அவர் அருகில் படுத்துக் கொள்வாள். அரைமணி நேரத்திற்குப் பின் வேகம் தணிந்து மீண்டும் அவர் குரல் உறுமலாக வெளிவரும்.

"ம்... ம்...எழுந்திருச்சுப் போய் ஒன் எடத்துல படு..."



இயந்திரமாக எழுந்து வந்து படுத்துக் கொண்டிருக்கிறாள். இயந்திரமாய் எழுந்து போய், இயந்திரமாய் இயங்கி, இயந்திரமாய் திரும்பி வந்து... அப்படியே ஐந்து குழந்தைகளைப் பெற்றாகிவிட்டது. முதல் மூன்றும் பெண்கள். அடுத்த இரண்டும் பையன்கள். மற்ற நான்கு குழந்தைகள் மீது இல்லாத ஆசையும் பாசமும் அவருக்கு ரம்யா மீது உண்டு. முதல் குழந்தை. அதிலும் தன்னை அப்படியே உரித்து வைத்துப் பிறந்த குழந்தை. வெள்ளை வெளேரென்று தன்னைப் போன்ற அழகான ஒரு குழந்தை பெற்றுத் தந்த சந்தோஷத்தில் அவரது இயல்பான கடுமை கூடச் சற்று குறைந்து கொண்டே வந்தது.

"பார்த்தியா... இவ ஒம் பொண்ணு இல்ல... எம் பொண்ணு. என்னை மாதிரியே எத்தினி அழகாயிருக்கா பார்த்தியா..?

அதற்கும் அவளிடமிருந்து பதில் வராது. வெறுமனே சிரிக்க முயற்சிப்பாள். சிரிப்பு மறந்து போன வறண்ட முகத்தில் மெதுவாக எட்டிப் பார்க்க முயல்கிற புன்முறுவல்தானே தவிர அது சிரிப்பில்லை. அவள் வாய்விட்டுச் சிரித்து வருடங்களாகிப் போனது நினைவிற்கு வரும். என்றைக்குக் கடைசியாகச் சிரித்தாள்..? கல்யாணத்தன்றா..? அத்தனை பேரும் ஒட்டு மொத்தமாக மாப்பிள்ளையின் அழகைப் பாராட்டியபோது மனசெல்லாம் மொட்டவிழ்ந்து, பூ பூக்க... அப் பூக்கள் முகம் முழுதும் விகசிக்கச் சிரித்தாளே... அதுதான் கடைசிச் சிரிப்பா..?

அல்லது காதில் கிசுகிசுத்து, கன்னத்தைக் கிள்ளி, கையில் பால் செம்புடன் முதலிரவன்று அறைக்குள் அனுப்பினார்களே, அப்போது வெட்கித் தலை குனிந்து மிக இயல்பாகப் புது வெள்ளம் போல் உள்ளுக்குள்ளிருந்து புறப்பட்டு வந்ததே...

அதுதான்... அதுவேதான் அவளின் கடைசிச் சிரிப்பு.

"ஏய்... என்ன... நான் சொல்லிக்கிட்டிருக்கேன்... நீ பாட்டுக்கு எங்கியோ பார்த்துக்கிட்டு நிக்கறே..? ராசாத்தி மாதிரி எத்தினி அழகா ஒரு புள்ள பொறந்திருக்குது... அந்த அழகை ரசிக்கக் கூடவா தெரியலை..? ஜடம்... ரம்யான்னா என்ன அர்த்தம் தெரியுமா..? ரொம்ப ரொம்ப அழகானவ. மனசுக்குப் பிரியமானவன்னு அர்த்தம். எப்பிடிப் பேரு..? பொருத்தமாயில்ல... பேரு மட்டும் பொருத்தமா வச்சா [illegible] போறாது. பொருத்தமா வளர்க்கவும் செய்யணும். இந்த வெள்ளைக்

காரக் குட்டியை, என் ராசாத்தியை ஒரு மகாராணி மாதிரி வளர்க்கப் போறேன். தெரிஞ்சுக்க..."

அப்படித்தான் வளர்த்தார். வீட்டில் உலைக்கு அரிசியில்லாது போனாலும் அழகழகாய் அவளுக்கு உடுப்புகள் வாங்கினார். கால் கொலுசு, கைவளை, கழுத்துச் சங்கிலி, காதுத் தொங்கட்டான் எனக் கடன் வாங்கி அவள் வரை தங்கமாய் நிரப்பினார். பத்து வயது வரை அவளது பாதம் நோகாமல் பார்த்துக் கொண்டார்.

அதன்பின் திடீரென்று ஒரு நாள் பகல் போதில் எல்லாம் மாறிப் போயிற்று. சட்டென்று மொத்தமும் நின்று போயிற்று. நோயில்லை, நொடியில்லை, தலைவலி, காய்ச்சல் என்று படுக்கக்கூட இல்லை.

"ஏய்... நெஞ்சு வலிக்கிற மாதிரி இருக்குது. கொஞ்சம் தண்ணி கொண்டு வா..." என்றவர் அவள் தண்ணீர் கொண்டு வருவதற்குள் கட்டையாய்ச் சரிந்து கீழே விழுந்தார். அதன்பிறகு எழுந்திருக்கவே இல்லை.

ஆயிற்று... அவர் போய் எட்டு வருடங்கள் ஓடிப்போய் விட்டன. வீட்டில் இருந்த தங்கமும், பித்தளையும் பணமாய் மாறி, பழைய வீடு விட்டு இந்த ஒண்டுக் குடித்தன வீட்டிற்குக் குடி புகுந்து, தையல் கற்றுக் கொண்டு, எக்ஸ்போர்ட் கம்பெனியில், வேலைக்குச் சேர்ந்து... வேலை நேரம் போக ஓவர் டைம் உழைத்தாலும் கூட கைக்கு வருகிற பணம் வயிற்றுக்கும் வாய்க்குமே சரியாகப் போகிறது. சரியாக எங்கே போகிறது...? சரிக்கட்ட வேண்டியிருக்கிறது... மாதக் கடைசியானால் கை நீட்டிக் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. இரண்டு வருட இடைவெளியில் வரிசையாகப் பிறந்த அத்தனைக் குழந்தைகளையும் பசியாற்றிப் படிக்க வைப்பதே பெரிய காரியமாக இருக்கிறது. மூத்தவள் ரம்யா கல்லூரியில் பி.ஏ. இரண்டாம் வருடம் படிக்கிறாள். என்றால் கடைசிப் பையன் தரணி ஐந்தாம் வகுப்பு படிக்கிறான். அத்தனை பேர் படிப்பும் முடிய வேண்டும். அவர்களை ஆளாக்கிக் கரை சேர்க்க வேண்டும். பெண்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும். அடுத்தடுத்து வரிசையாக மூன்று பெண்கள்... என்னதான் படித்தாலும், வேலையில் இருந்தாலும் ஆளாளுக்குப் பத்து சவரனாவது இல்லாமல் கல்யாணம் முடிக்க



முடியாது. அதுவே என்ன ஆயிற்று...? முப்பது சவரன்கள்... அதன்பின் கட்டில், பீரோ, மெத்தை, தலைகாணி, பாத்திரம், பண்டங்கள்,... தீபாவளி, பொங்கல் எனப் பண்டிகைச் சீர்கள், மாப்பிள்ளைகளுக்குப் பாண்ட்டு ஷர்ட்டு, மோதிரம்...

மூச்சு முட்டிற்று அவளுக்கு. நினைக்கும்போதே நெஞ்சைப் பயம் கவ்விக் கொண்டது. அத்தனையும் எப்படி செய்யப் போகிறோம் என்கிற மலைப்பில் உடம்பு மெதுவாக ஆட்டம் கண்டது. நிகழ்காலம் நெஞ்சை உலுக்க எதிர்காலம் மருட்ட ஒவ்வொரு நாளாய்க் காலம் தள்ள வேண்டியிருந்தது. 'அப்பாடா... இன்றைய பொழுது போயிற்று...' எனப் பெருமூச்சு விட்டுப் படுத்துக் கொள்கிற போதே மறுநாள் பொழுது வந்து நிதர்சன உண்மையாய்க் கண்ணெதிரில் நிற்கும். அன்றைய பொழுது போனால் மறுநாள்... அதற்கும் அடுத்த நாள்....

நிகழ்கால மருட்சியும் எதிர்காலப் பயமுமாகத்தான் இந்த எட்டு வருடங்களும் போயிருக்கின்றன. இன்னமும் ஒவ்வொரு நாளும் அப்படித்தான் போய்க் கொண்டும் இருக்கிறது.

இவையெல்லாம் தெரிந்தும் தெரியாதவளாக, அறிந்தும் அறியாதவளாக ரம்யா ஏன் இப்படி இருக்கிறாள்...? குழந்தைத் தனமா...? வெகுளிப் பெண்ணா...? மனதளவில் இன்னமும் அப்பா வளர்த்து விட்ட அந்தப் பத்து வயதிலேயே நின்று கொண்டிருக்கிறாளா...? அல்லது வேண்டுமென்றே செய்கிறாளா...? நாக்குக் கொடுக்கால் விஷமாகக் கொட்டி அதில் எதிராளி துவண்டு துன்புறுவதைக் கண்டு சந்தோஷப் படுகிறாளா...? அல்லது அந்த அதீத அழகு தந்த கர்வமா...? இறுமாப்பா...? அப்பாவைப் போலவே அழகற்றவர்களைக் கண்டு எள்ளி நகையாடுகின்ற ஏளனமா...?

ரம்யா... இதில் நீ யார்...? எது உன்னுடைய இயல்பான தன்மை? குழந்தையா...? குரூர குணம் கொண்டவளா...? 'நீ பாம்பா... அல்லது பழுதையா...?'

உண்மையான ரம்யாவைப் புரிந்து கொள்கிற சக்தியற்று ஒரு ஆழமான பெருமூச்சோடு எழுந்து உள்ளே போகிற அம்மாவைப் பார்த்தவாறு நீண்ட நேரம் அப்படியே நின்றிருந்தாள் ரம்யா...

## 2

குளித்து முடித்து உடல் கூடத் துடைக்காமல் நீண்ட நெடும் துண்டைச் சுற்றிக் கொண்டு அப்படியே வெளியில் வந்தாள் ரம்யா. பனிக்குச் சிலை ஒன்று தன் மீது பன்னீர் தெளித்துக் கொண்டு வந்த மாதிரி இருந்தது. அந்த ஒண்டுக் குடித்தன வீட்டு ஆண்களின் கண்களில் பளீரென மின்னல் வெட்டின. இதயங்களில் இடி இறங்கிற்று. மனதினில் குபீரெனத் தீ பற்றிக் கொண்டது. உடம்புகளில் மின்சாரம் பாயத் துவங்கிற்று...

தினமும் பாய்கிற மின்சாரம்தான் இது. நாள் தவறாமல் பற்றிக் கொள்கிற தீ. காலை எட்டு மணியளவில் கண்களைப் பறிக்கின்ற மின்னல். இதயங்களில் இறங்குகிற இடி.

ஏழரை மணியளவில் அந்த ஒண்டுக் குடித்தன வீட்டின் கொல்லைப் புறத்தில் ஆண்களின் கும்பல் கூடும். வயது வித்தியாசமின்றி சேரும். வரிசையாக எதாவதொரு சாக்கு கிடைக்கும். ஒவ்வொரு பாவனையாக வரும். படிக்கிற பாவனை; படிப்பு சொல்லித் தருகிற பாவனை; கிணற்றிலிருந்து நீர் மொள்கிற பாவனை; குழந்தைக்கு விளையாட்டுக் காட்டுகிற பாவனை; தண்டால் எடுக்கிற பாவனை; காக்கைக்குச் சாதம் வைக்கிற பாவனை...

ரம்யா குளித்துவிட்டு வருகிற காட்சி காண அவர்களாக ஏற்படுத்திக் கொண்ட விதம் விதமான பாவனைகள்... வழுவழுப்பான கால்களும், திரட்சியான கைகளும்... ஒரு மாமங்கம் வாழ்ந்து விட்ட திருப்தி...

ஆண்களுக்குப் பாவனை என்றால் பெண்களுக்கு மெல்லக் கிடைத்த அவல். தினமும் மென்று கொண்டுதான் இருக்கிறார்கள்.

"இது என்னடீ இது ...? இப்படியா துண்டைச் சுத்திக்கிட்டு ஒரு வயசுப் பொண்ணு வெளியில வரும்...?"

"இத்தனை ஆம்பிளைங்களுக்கு எதிர்ல இப்படி நடக்குதே... அதுக்கு வெட்கம் மானம் இருக்காதா...?"

"இல்லக்கா... பெரிய வெள்ளைக்காரிச்சி கணக்கா இருக்கால்ல. அதான் ஃப்ரீ ஷோ காட்றா..."

"அந்தம்மா பாவம் சாது... இருக்கிற இடம் தெரியாது. இது போடற ஆட்டத்தைப் பாரு..."



"இது அப்பா மாதிரியாம் அத்தை. செக்கச் செவேல்னு பாகவதர் கணக்கா இருப்பாராம் அவரு. அந்தத் திமிர்ல ஆடாத ஆட்டமில்லேன்னு சொல்றாங்க. அதே ஆட்டத்தை இப்பப் பொண்ணு ஆடுது..."

"நம்ம வீட்டு ஆம்பிளைங்களும் வெட்கம் கெட்டுப் போய் வரிசையா நிக்கறாங்க பாரு..."

"அவங்களச் சொல்லிக் குத்தமில்லேக்கா... இவ ஃப்ரீ ஷோ காட்டினா... பார்க்காமல் யாரு கண்ணை மூடிப்பாங்க...?"

முதல்ல இதுக்கு ஒரு முடிவு கட்டணும். அதுங்கிட்ட போணம்னால் துடுக்காகப் பேசும். அந்தம்மா கிட்ட சொல்லி அடக்கப் பார்ப்போம்..."

"ஆமாம்... அந்தம்மா கிட்ட சொன்னால் உடனே அடங்கிடும் பாரு..."

"அந்தம்மாவே பாவம். உழைச்சுக் களைச்சு ஒய்ஞ்சு வராங்க..."

"அதுக்காக... ஒரு பிரச்சனைன்னால் சொல்லாமல் இருக்க முடியுமா...? வாங்க போய்ப் பேசுவோம்..." பேசினார்கள். அமைதியாகக் கேட்டுக் கொண்டே காவேரியம்மாள் மகளிடம் மெல்ல வாய் திறந்தாள். அதிலும் நேரிடையாகச் சொல்ல பயந்து மறைமுகமாக ஆரம்பித்தாள்.

"ரம்யா... குளிச்சிட்டு இப்படித் துண்டு சுத்திக்கிட்டு வராதே... பார்க்கிறவங்க கண்ணு படும்மா..."

"ஆமாம். பெரிய கண்ணு பட்டுடப் போவுது... இந்தக் கண்ணுல மண்ணுல எல்லாம் நம்பிக்கை இல்லேம்மா..."

"இல்ல ரம்யா... அதுக்கு மட்டும் சொல்லல... இத்தனை ஆம்பிளைங்க இருக்கிற இடம். பாத்ரூம் நம்ம போர்ஷனுக்குள் தனியா இருந்தாலும் பரவாயில்லை. கொல்லைப் பக்கம் இருக்கிற பொது பாத்ரூம். நாலு குடித்தனக்காரங்க வந்துதான் போவாங்க. 'என் பொண்ணு குளிக்கிறா... அந்தப் பக்கம் வராதீங்க'ன்னு சொல்ல முடியாது. நாம்தான் நல்லபடியா நடந்துக்கணும்..."

"நான் இப்போ என்ன கெட்டபடியா நடந்துகிட்டேன்னு இப்படி ஒரு லெக்சர் குடுக்கற?"

"கெட்டபடின்னு சொல்லலம்மா. குளிச்சிட்டு எல்லார் மாதிரியும் உள்பாவாடையும் ஜாக்கெட்டும் போட்டு, மேல் கைகால் தெரியாமல் புடவையை இழுத்து சுத்திக்கிட்டு வான்னு சொல்றேன்..."

"ஏன், துண்டு சுத்திக்கிட்டு வந்தால் என்ன தப்பாம்...?"

"தப்பு ஒண்ணுமில்லேம்மா... முட்டிக்குக் கீழ் காலும், தோள் பட்டையிலிருந்து கையும் தெரியுது பாரு..."

"தெரிஞ்சா என்ன...? கையில்லாத ஜாக்கெட் போட்டா கை தெரியல...? ஸ்கர்ட் போட்டா கால் தெரியல...? அதையெல்லாம் தப்புன்னா சொல்றீங்க...? நான் எதைச் செய்தாலும் ஏன் வேணும்னே ஓடி வந்து தப்பு கண்டுபிடிக்கிற...?"

"நான் தப்பு கண்டு பிடிக்கலம்மா... எல்லாக் குடித்தனக் காரங்களும் வந்து சொல்றாங்க..."

"ஆமாம்... அவங்க சொல்வாங்க. அவங்களுக்கு வேற என்ன வேலை...? நீச்சல் குளத்துல குளிக்கிறவங்க, நீச்சல் டிரஸ் போடறதை அவங்க பார்த்ததில்லை...? என் பிரண்ட்ஸ் மொத்த பேருமே டூபீஸ் நீச்சல் டிரஸ் போட்டுக்கிட்டு சவேராவிலும், சோழாவிலும், பார்க் ஷெரட்டனிலும் நீச்சல் அடிக்கிறாங்க. நீ என்னடான்னால் நான் பாத்ரூமிலிருந்து துண்டு சுத்திக்கிட்டு வெளில வர்றதையே பெரிய விஷயமாக்கற..."

"நீச்சல் குளத்துல நீச்சல் டிரஸ் போட்டுக்கலாம்மா... அதுல தப்பு இல்ல. அசிங்கமும் இல்ல... ஆனால் அதையே வீட்டுல போட்டுக்கிட்டா...? நல்லாவா இருக்கும்? நாலு பேர் நாலுவிதமாக பேசத்தான் செய்வாங்க..."

"பேசட்டுமே... எனக்கென்ன வந்தது...? பேசிப் பேசித் தானாக ஓய்ஞ்சுப் போறாங்க... எனக்கு எது சரின்னு படுதோ அதைச் செய்யறேன். எனக்குத் தப்புன்னு படாத ஒன்னைச் செய்யாதேன்னு சொன்னால்... என்னால் செய்யாமல் இருக்க முடியாது. அதனால் இந்த மாதிரி வீணான அறிவுரையெல்லாம் சொல்றதை விட்டுட்டு உன் வேலையைப் போய்ப் பாரும்மா... எனக்கும் வயசு பதினெட்டாகிறது. நான் இப்போ மேஜர். எதைச் செய்யலாம் எதைச் செய்யக் கூடாதுன்னு தெரியும் சும்மாச் சும்மா அவங்க சொன்னாங்க, இவங்க



கேட்டாங்கன்னு வந்து நின்னால் எனக்குக் கெட்ட கோபம் வரும்... தெரிஞ்சுக்க..."

ஓங்கிக் கதவை அறைந்து சாத்திக் கொண்டு உடை மாற்றப் போனாள். மனசுக்குள் கோபம் பொங்கிப் பொங்கி வந்தது. 'சீ! என்ன மனுஷங்க. இவங்க... மற்றவங்க என்ன செய்யறாங்க, ஏது செய்ய றாங்கன்னு கண்கொத்திப் பாம்பு மாதிரி கவனிச்சுக்கிட்டு... எல்லாத் துலயும் தப்பு கண்டுபிடிச்சுக்கிட்டு... தனி மனித சுதந்திரத்துல யெல்லாம் தலையிட்டுக்கிட்டு... நான் என்ன செய்தால் இவர்களுக் கென்னவாம்...? நான் துண்டு சுத்திக்கிட்டு வரேன். துணி சுத்திக்கிட்டு வரேன்... அது என் சொந்த விஷயம். இதனால் யாருக்கு என்ன பாதிப்பு...? எதுக்காக வீணான விஷயங்களிலெல்லாம் தலையிட்டு குட்டையைக் குழப்பறாங்க...?'

'எனக்கு துண்டு சுத்திக்கிட்டு வந்தால் நல்லாயிருக்கு... வரேன்... அவங்களுக்கெல்லாம் புடவை கட்டினாலே நல்லா இருக்காது. இதுக்கு யார் என்ன செய்ய முடியும்...? பொறாமை பிடிச்ச ஜென்மங்கள். நான் அழகாக இருக்கிற ஆத்திரம் தாங்காத ஜென்மங் கள்... இங்கே வந்து அதுவும் இந்த வீட்டுல வந்து பிறந்து தொலைச் சோம் பாரு... எங்கேயாவது அமெரிக்காவில் பிறந்திருக்கக் கூடாது?'

உடம்பின் ஈரத்தை அழுத்தித் துடைக்காமல் மெல்ல ஒற்றி ஒற்றி எடுத்தவள், தாத்தாவிற்குத் தாத்தா காலத்து ஆளுயரக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். சடாரென்று அத்தனைக் கோபமும் ஓடிப் போயிற்று. சலிப்பும் விரக்தியும் மறைந்தன. பொய்யே சொல்லாத அந்தக் கண்ணாடியில் தெரிந்த உருவத்தில் பிரமிப்பு ஏற்பட்டது.

'இத்தனை அழகா நான்...!'

நேரிடையாக ஒரு தரம். பக்க வாட்டில் ஒரு தரம். இன்னொரு பக்க வாட்டில் இன்னொரு தரம், பின்புறம் ஒரு தரம்...

எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காது அவளுக்கு. அந்தக் கண்ணாடி முன் நாள் முழுவதும் நின்று கொண்டிருந்தாலும் சலிக்காது. யார் கூப்பிட்டாலும் காதில் விழாது. எந்த அவசர மானாலும் தெரியாது...

மீண்டும் மீண்டும் முகம் பார்த்து, விரல் நுனிகளால் கன்னங்களின் வழுவழுப்பு தொட்டு, செப்பு உதடுகளை நுனி நாக்கினால் நீவி, கத்தி போன்ற மூக்கைத் தடவித் தந்து, கண்ணிமைகள் படபடத்து, புருவங்களின் அடர்த்தி கண்டு வியந்து...

"ரம்மி... காலேஜுக்கு நேரமாவுது பாரு..."

'இந்த அம்மாவுக்கு வேற வேலை இல்லை.' காதில் விழாதவளாகக் கழுத்தடிக்கும், கையடிகளுக்கும் பவுடர் தூவினாள். உள்ளாடைகள் அணிந்து மீண்டும் கண்ணாடி பார்த்தாள்.

'இதுவே டுபீஸ் ஸ்விம்மிங் டிரஸ் மாதிரித்தானே இருக்கிறது...'

"நான் வேலைக்குப் போகணும் ரம்யா... சீக்கிரம் வந்தால் சாப்பாடு போட்டுவிட்டுப் போவேன்."

கதவருகிலிருந்து மீண்டும் கேட்ட அம்மாவின் குரலில் கன்ளென்று கோபம் எட்டிப் பார்த்தது.

"நீ சாப்பாடு எடுத்து வச்சு மூடிட்டுப் போ... நானே போட்டு சாப்பிட்டுக்கிறேன்."

"டிபன் பாக்ஸுக்கு என்ன வைக்க...?"

"என்ன இருக்கு...?"

"காரக்குழம்பு இருக்கு கட்டித் தரட்டுமா...?"

அவளிடமிருந்து பதில் இல்லை.

"வேற என்ன வேணும்? மோர் சாதம் கட்டி ஊறுகாய்..."

"ஏம்மா... இந்த மோர் சோற்றையும், குழம்பையும் தவிர வேற என்ன தந்திருக்க நீ...?"

"வேற என்னடீ வேணும்...?"

"ஆமாம்... சொன்னால் உடனே கட்டித் தந்திடப் போறே...? இட்லி, தோசை, பூரி, சப்பாத்தின்னு விதம் விதமா நாளுக்கு ஒரு டிபன் செய்யற பாரு... நான் சொல்லாதது ஒன்னுதான் பாக்கி..."

'முதல் முள் தைக்கத் துவங்கிவிட்டது. இன்றைய தினத்தின் முதல் கொட்டுதல் ஆரம்பமாகி விட்டது. இதுபோல் இன்னும் எத்தனை பாக்கியிருக்கிறதோ...?' காவேரியம்மாள் பெருமூச்சு விட அவளே தொடர்ந்தாள்.



"வழக்கம்போல் எதையாவது வச்சுத் தொலை... திரும்பத் திரும்ப தொந்தரவு செய்யாமல் என்னை கொஞ்சம் நிம்மதியாக டிரஸ் பண்ணிக்க விடு. வாசல் கதவை மூடிக்கிட்டு நீ உன் வேலைக்கு போ... நான் காலேஜுக்குப் போகிறபோது பூட்டி, பக்கத்து வீட்ல சாவி கொடுத்திட்டுப் போறேன்..."

அதன்பின் அம்மாவின் குரல் கேட்காததில் நிம்மதியடைந்தாள். அழுது அடம்பிடித்து வாங்கிய சல்வார் கம்மீஸைப் போட்டுக் கொண்டு திரும்பவும் கண்ணாடி பார்த்தாள். கொள்ளை போகிற மாதிரி இருந்ததில் பரமதிருப்தி ஏற்பட்டது. மெல்லிய துப்பட்டா திண்ணென்று மார்பை எடுத்துக் காட்டியதில் பெருமை பொங்கிற்று. எல்லாமே அளந்து அளந்த வைத்தாற் போன்றதில் சந்தோஷம் பிடிபடாமற் போயிற்று...

'இந்த மாதிரி உடம்பு, முகம், உருவம், உயரம் எல்லாம் சேர்ந்து யாருக்கு அமைய முடியும்...? வேறு யாருக்கு வரும்...?'

பொங்கிப் பொங்கி வர முகத்திற்குப் பவுடர் பூசினாள். பென்சிலால் புருவங்களைத் தடவிக் கொடுத்தாள். அழகாய் ஸ்டிக்கர் பொட்டு வைத்துக் கொண்டாள். இயற்கை நிறத்தில் உதட்டிற்குச் சாயம் பூசினாள்.

ஆயிற்று தலைமுடியைப் பிரித்து ஈரம் துடைத்து சிடுக்கு எடுத்து வாரினால் போதும். காதோரங்களில் தூக்கிக் கிளிப் போட்டு முடி நுனியில் துணியால் செய்யப்பட்ட எலாஸ்டிக் பாண்ட் போட்டுக்கொண்டால் முடிந்து விடும். பின்னர் கல்லூரிக்குக் கிளம்பி விடலாம்...

தலைக்கட்டு பிரிந்து ஈரம் போகத் துடைத்துக் கொண்டாள். சீப்பு எடுத்து சிடுக்கு பிரித்து வாரத் துவங்கியவள், வேர் வேராகக் கையோடு வந்த நீளநீளமான முடியைப் பார்த்துக் கலங்கிப்போனாள்.

'ஐயோ... என்ன இது... ஏன் இப்படிக் கொட்டுகிறது என் தலைமுடி...? புட்டபர்த்தி சாய்பாபா மாதிரி எவ்வளவு அடர்த்தியாக இருந்தது. பின்னலிட்டால் கறுகறுவென்று பாம்பின் பருமனுக்குக் கீழ் இடுப்பை எட்டுமே... இப்போது வேர் வேராக உதிர்ந்து ஒரு கால் முடியாகி விட்டதே. இது போன்று இரண்டு பாகத்தை இழந்து விட்டோமே...? இப்படியே போனால் மொட்டையாகி விடுமோ...? எலி

வால் பின்னலாகி நிற்குமோ..? அப்படியெல்லாம் ஆனால், என் இந்த ஈடு இணையற்ற அழகு என்னவாகும்..?'

'கடவுளே... இந்த அழகு குறைந்து விடக்கூடாது... சாகும் போதுகூட மெழுகுப் பொம்மை கண்மூடிக் கிடக்கிற மாதிரிதான் கிடக்க வேண்டுமே தவிர, வாய் திறந்து, கண் செருகி... முகம் கோணி... ஒரு கோரம் வந்து விடக்கூடாது... இதே அழகில் இப்படியே படுத்துத் தூங்குகிறாற்போல்...'ஏய் திவ்யா எழுந்திரு...' எனத் தட்டி எழுப்பினால் எழுந்து விடுகிற மாதிரி...'

'சாவதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். அதற்கு இன்னும் எத்தனையோ வருஷமிருக்கிறது. முதலில் இந்த முடி கொட்டுவதை நிறுத்த வேண்டும். அதுவும் உடனே நிறுத்தியாக வேண்டும். என்ன செய்வது? யாராவது டாக்டரிடம் போகலாமா...?'

இதுவரை தலைவலி ஜுரம் என்று படுத்தபோது கூட அவள் டாக்டரிடம் போனதில்லை. எந்த டாக்டரையும் பார்த்ததில்லை... நோய்க் கிருமிகளை எதிர்க்க மருந்து கொடுத்து, அது ஒத்துக் கொள்ளாமற் போய்விட்டால்..? அலர்ஜியாகித் தழும்புகளோ... நிறமோ மாறி விட்டால்? எந்தக் காரணத்தினாலும் முக வசீகரமோ, பளபளவென்ற பொன் நிறமோ, தோலின் மினுமினுப்போ மாறிவிடக் கூடாது என்றுதான் பயந்தாள்.

அவள் வகுப்பில் படிக்கிற சாரதாவுக்கு அப்படித்தான் ஆகி விட்டது. ஆங்கில மருந்து எதுவோ ஒத்துக் கொள்ளாததில் உடம்பு முழுவதும் திட்டுத் திட்டாகக் கருப்பாகி விட்டது. 'அதுபோல் எனக்கும் ஆகிவிட்டால்..? அதன்பின் உயிர் வாழ்வதை விடத் தற் கொலை செய்து கொண்டு விடலாம்...'

அந்த பயத்தில் மருத்துவம் தவிர்த்தாள். கூடுமானவரை ஆங்கில மருந்துகளை அண்டவிடாமல் பார்த்துக் கொண்டாள். வெறும் வைட்டமின் மாத்திரைகளைக் கூட எடுத்துக் கொண்ட தில்லை.

அப்படிப்பட்டவள் தலைமுடி உதிர்வதைத் தடுக்க என்ன செய்வது என்று கவலையுற்றபோது சட்டென்று குணசேகரன் நினை விற்கு வந்தான்.



குணசேகரன் அவளது மாமா பையன். அம்மாவின் சொந்த அண்ணன் மகன். அம்மா வீட்டில் அம்மா மாதிரி யாரும் அட்டைக் கரி இல்லை என்றாலும் கருப்புதான். அம்மாவின் அண்ணன் மட்டும் சற்று மாநிறம். சராசரி உயரம், பார்க்கவும் சிறிது சுமாராக இருப்பார்.

குணசேகரன் அவரது மூத்த மகன். இருபத்தெட்டு வயது. தியாகராஜா கலைக்கல்லூரியில் பி. ஏ. முடித்துவிட்டுப் பின்னர் தாத்தாவின் தொழிலான ஆயுர்வேதத்தில் நம்பிக்கையுற்றான். வீட்டி லுள்ளவர்கள் வேண்டாம் வேண்டாமென அடித்துக் கொள்ள ஆயுர்வேத வைத்தியம் பயின்றான். தாத்தாவின் பழைய ஓலைச் சுவடிகளைத் தேடி எடுத்து ராப்பகல் அதில் மூழ்கினான். கொல்லி மலை, சுருளி மலை என மூலிகைகளுக்காக ஓடி, கட்டுக் கட்டாகக் கொண்டு வந்து, காய வைத்து இடித்து, அரைத்து, கொதிக்க வைத்து, புடம் போட்டு... கிட்டத்தட்ட ஏழெட்டு வருடங்களை அதற்காகச் செலவிட்டு, அதில் ஏதேதோ ஆராய்ச்சி செய்து, கடைசியாக ஆயுர்வேத மருத்துவத்தில் எம்.டி. பட்டம் பெற்று...

இப்போது அண்ணாநகரில் 'குணா ஆயுர்வேத வைத்திய சாலை' திறந்து...

நாலைந்து வருடங்களுக்குள் நல்ல பெயர்.

"டாக்டர் குணாவா... நல்ல மனிதர். வியாதியும் நல்லா குணமாகுது. பொறுமையாக, நிதானமாகப் பார்ப்பார். அமைதியாக, அடக்கமாக இருப்பார். இளம் வயசானாலும் நல்ல கைராசி..."

சொல்லிச் சொல்லி பரவிப் பரவி... எப்போது போனாலும் நோயாளிகள் கியூவில் நிற்பார்கள்.

ஏதாவது உடம்பு என்றால் அவனிடம்தான் போவாள் ரம்யா.

"அம்மா... நாலைஞ்சு நாளா ரொம்பத் தலை வலிக்குது. சைனஸ் பிராப்ளம்னு நினைக்கிறேன். உன் அண்ணன் பையனுக்கு போன் பண்ணிக் கொஞ்சம் மருந்து அனுப்பச் சொல்லேன்..."

அதைக் கேட்டு காவேரியம்மாளின் மனது குமுறும்... 'அவன் என்னவோ உன்மேல் உயிரை வச்சுக்கிட்டுத்தான் இருக்கான். உனக்கு என்றால் எது செய்யவும் தயாராக இருக்கான். உன்னைப் பார்க்க, பேச தவிச்சுக்கிட்டுத் தானிருக்கான். வீட்டுக்கு வந்தால் கூடப் பார்வை உன்னைத் தானே தேடுது... 'எங்கே அத்தை... ரம்யாவைக் காணோம்..?'

அந்தக் கேள்வியின் எதிர் பார்ப்பு... அவனது உள் மன ஆசைகள்...

'எனக்குப் புரிந்து என்ன பிரயோசனம்...? உனக்குப் புரியலையே...?' புரிந்தாலும் நீ என்ன அவனை மதிக்கவா போகிறாய். பிரியமாக ஒரு வார்த்தை பேசப் போகிறாயா...? துச்சமாகப் பார்த்து, கேலியாகச் சிரித்து... மரியாதையில்லாமல் நடந்து...

'இப்போது மட்டும் நான் ஏன் போன் பண்ணனும்? நீயே பண்ணிக் கொள்.'

அப்படியெல்லாம் கொட்டத் தவித்த மனதை அடக்கிக் கொள்வாள் அந்த அம்மாள்.

"கைவேலையாக இருக்கேன் ரம்யா... நீயே கொஞ்சம் போய் போன் பண்ணிடேன்" என அமைதியாகச் சொல்வாள்.

இன்றும் அம்மாவிடம் போன் பண்ணச் சொல்லலாமா என்று நினைத்தாள். கதவு திறந்து வெளியில் வந்தபோது அம்மா வேலைக்குப் போய்விட்டது தெரிந்தது. இன்று கல்லூரிக்கு லீவு போட்டு விட்டு நேராகப் போய் குணாவைப் பார்த்து தலைமுடி உதிர்வதைச் சொல்லி மருந்து வாங்கி வந்தால் என்ன...?

உடனே அதைச் செயலாக்க நினைத்து வீட்டைப் பூட்டிக் கொண்டு தெருக்கோடி மளிகைக் கடைக்குப் போய் குணாவின் தொலைபேசி எண்களைச் சுழற்றினாள். மறுபக்கம் குணசேகரனின் குரல் கேட்டது.

"குணா... நான் ரம்யா பேசறேன். எனக்கு ஒரு பெரிய பிராப்ளம். உடனே வந்து உங்களைப் பார்க்கலாமா...?"

ரம்...யா...!

ஒரு வினாடி இதயம் துடிப்பது நின்று மீண்டும் தொடர அவசரமாகச் சொன்னான் அவன்.

"நீ வர அனுமதி கேட்கணுமா ரம்யா ...? இது உன் கிளினிக். நீ எப்போது வேண்டுமானாலும் வரலாம்..."

"சரி. அப்படியானால் இப்போதே வரேன்."

"வா ரம்யா... உனக்காக நான் சந்தோஷமாகக் காத்துக்கிட்டிருப்பேன்..."



தொலைபேசித் தொடர்பைத் துண்டித்துக் காசு கொடுத்த ரம்யா மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

'ஆமாம்... நீ சந்தோஷப்படலேன்னுதான் நான் அழுதுகிட்டிருக்கேன்...'

# 3

ரம்யா வரப் போகிறாள்! தொலைபேசியை வைத்தபின் உள்ளுக்குள் மிகவும் பரபரத்தான் குணசேகரன். மனதினுள் ஆர்ப்பரித்தான். தனக்கு உதவியாளராக இருக்கும் மகேஸ்வரியம்மாளை அழைத்துச் சொன்னான்.

"அம்மா... கொஞ்சம் கிளினிக்கைச் சுத்தம் பண்ணிடுங்க. முக்கியமான ஒருத்தங்க வரப் போறாங்க..."

மரத்தடுப்பிற்கு அந்தப் பக்கமிருந்த மகேஸ்வரியம்மாளிடமிருந்து உடனே பதில் வரவில்லை. வழக்கமாக அந்த அம்மாள் உடனடியாகப் பதில் சொல்வாள். எதுவானாலும் டக்கென்று பிடித்துக் கொள்வாள். கிட்டத்தட்ட மூன்று வருடங்களாக அவனிடம் வேலை செய்கிறாள். எல்லாவற்றையும் கற்றுத் தந்திருக்கிறான். லேகியம் செய்வது, பஸ்பம் பண்ணுவது, சூர்ணம் அரைப்பது, தைலம் காய்ச்சுவது, ஸ்புடம் போடுவது... ஒன்று விடவில்லை. அது போல் வர்மக் கலையையும் விட்டு வைக்கவில்லை.

"இதப் பாருங்கம்மா... இந்த நரம்பை அழுத்தாதீங்க... மேலிருந்து கீழ் உருவாதீங்க. கீழேயிருந்து மேலே போங்க..."

"முதுகுத் தண்டை ஒரு விரலால் தேய்க்காதீங்க. அத்தனை விரல்களையும் வச்சு ரெண்டு கையாலும் பக்குவமா தேயுங்க..."

"கழுத்துப் பக்கம் இப்படித் தட்டணும்மா. கராத்தே சண்டை போடற மாதிரி உள்ளங்கை ஓரத்தால் தட்டணும். ஒரே தட்டுல நோயாளியின் உடம்பு முழுசும் மின்சாரம் பாயணும்." - சொல்லிச் சொல்லியே தேர்ச்சி பெற வைத்து விட்டான். தான் இல்லாது போனாலும் அந்த அம்மாளால் தனியாக மருத்துவம் செய்ய முடியும் என்கிற நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டான்.

பொதுவாக ஆயுர்வேதம், சித்தம், யுனானி மருத்துவ முறைகளில் யாருக்கும் எதையும் சொல்லித்தர மாட்டார்கள். மிகவும்

ரகசியமாக வைத்துக் கொள்வார்கள். தொழில்முறை ரகசியம் காப்பார்கள். பரம்பரை பரம்பரையாக வருமே தவிர அடுத்தவர்களை அண்டவிட மாட்டார்கள்.

அவன் கூடத் தன் தாத்தாவிடம்தான் தொழில் கற்றுக் கொண்டான். காலை ஆறு மணியிலிருந்து தாத்தா வீட்டு வாசலில் கூட்டம் சேருவதைப் பார்த்திருக்கிறான். வாதம், பித்தம், கபம் என்கிற மூன்றைச் சொல்லி தாத்தா மருந்து மாற்றுவதைக் கவனித்திருக்கிறான்.

"இதப் பாரு குணா... கையை இப்படிப் பிடிச்சு நாடி பார்க்கணும்ப்பா..."

"இங்கே வா... தொட்டுப் பாரு... இதுக்குப் பேர்தான் கணைச்சூடு..."

"எல்லா நோய்களுக்கும் எது காரணம்னு நினைக்கிற...? மந்திரம் கால், மதி முக்கால்ன்ற மாதிரி வயிறு பாதி, மனசு பாதி... சாப்பிடக் கூடாததை சாப்பிடறதும், சாப்பிட வேண்டிய நேரத்துக்கு சாப்பிடாததும், தேவைக்கு அதிகமாகச் சாப்பிடறது... ருசியாக இருக்கேன்னு கூட ரெண்டு போட்டுக்கிறது... ருசின்னு எது சொல்லுது..? நாக்கா..? நாக்குக்கு ருசின்னு எது தெரியப்படுத்துது..? மனசுப்பா... இந்த மனசுதான் எல்லாத்துக்கும் காரணம்... மனசுன்றது என்ன..? சொல்லு பார்க்கலாம்?"

சிறிது யோசித்து அந்த எட்டு வயதில் சொன்னான்.

"மனசுன்றது வேற ஒண்ணுமில்ல தாத்தா... எண்ணங்கள் தான். நம்ம எண்ணங்கள்ளாம் ஒண்ணாச் சேர்ந்துதான் மனசாகுது..."

சிரித்துக் கொள்வார் தாத்தா. பேரனை இழுத்துத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொள்வார். எட்டு வயதிற்கு அந்த பதில் அதிகம்; மிகவும் அதிகம். எண்ணங்கள் பற்றி, மனசு பற்றியா போகும்...!

சடாரென்று புரிந்து கொண்டார் பெரியவர். இவன் மற்ற பையன்களைப் போல் பம்பரம் சுற்றுபவனில்லை; கில்லிதாண்டு விளையாடுகிறவன் இல்லை. பந்தைத் தேடி ஓடுகிறவனில்லை. குடும்பத்தில் மற்ற யாருக்குமில்லாத ஏதோ ஒன்று இவனிடம் இருக்கிறது... இவன் தாங்கக் கூடியவன். இவனை இழுத்துக் கொள்ள வேண்டும். வித்தை பழக்க வேண்டும். விவரம் சொல்லி விற்பன்னனாக்க வேண்டும்... முடியுமா..? விடுவார்களா..?



யார் விடுவது..? இவன் தன்னுடைய பேரன். தன்னிலிருந்து ஜனனமானவன். தன்னைப் போன்றவன். இவனைத் தானாக்கி விடவேண்டும். மூச்சடக்கப் பழக்க வேண்டும். நெற்றிப் பொட்டில் நிற்கச் செய்ய வேண்டும். கண்மூடி உட்கார்ந்தால் கல்லாகிவிட வேண்டும்.

எழுபது வயதிற்கு இரும்பு மாதிரி இருப்பார் தாத்தா. அவரும் நல்ல கறுப்புதான். ஆனால், தார் கறுப்பில்லை. கண்ணில் அடிக்கிற குழைத்த கறுப்பில்லை. கருங்கல் ஜல்லி மாதிரி வெண்மை கலந்த கறுப்பு. வெளிர் கறுப்பு. தலை முடியும், நீண்டு நுனி முடிந்த நாடியும் பளீரென்று தும்பைப் பூ மாதிரி இருக்கும். அந்தக் கறுப்பு முகத்திற்கு வெள்ளைத் தாடி ரொம்பப் பொருத்தமாகவும், அதே சமயம் பொருத்தமில்லாததாகவும் தெரியும். அகல முகம். உருண்டை முகம். விரிந்த பலகை போன்ற மார்பு. மார்பின் இரு பக்கங்களிலும் இரண்டு பெரிய இரும்புச் சட்டம் வைத்து அடித்த மாதிரி இருக்கும். கையை நீட்டிவாரானால் பெரிய மரத் தூணைக் குறுக்கில் நிறுத்தினாற்போல் தெரியும்.

"டேய் குணா... எங்கடா உன் சினேகிதப் பசங்க... கூட்டிக்கிட்டு இங்க வாடா..." - என்பார். வாசல் திண்ணை விட்டு எழுந்து நின்று கை நீட்டுவார்.

"எங்கே, வரிசையா இதுல தொங்குங்க பார்க்கலாம்..."

உருண்டு திரண்ட புஜமும், நீண்ட அவரது கையும் மற்ற பையன்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். இரு கையும் பற்றித் தொங்குவார்கள். வரிசையாக மூன்று பேர்கள் ஒரே நேரத்தில் தொங்குவார்கள். பார்ப்பதற்குப் பெரிய மரக்கிளையில் வவ்வால்கள் தொங்குகிற மாதிரி இருக்கும்.

பிரமித்துப் போய் நின்றிருக்கிறான் குணா.

"என்ன பார்க்கற..? இந்த பலம் எப்படி வந்ததுன்னா..? வெறும் உடம்பு பலம் மட்டுமில்ல இது. அந்தக் காலத்துல ரிஷிகேசத்துலயும், அனுராதபுரத்துலயும் மூச்சை இழுத்து இழுத்து உள்ளே அடக்கினதன் பலன். எழுபது வயசுக்கும் இரும்பா நிக்கறேன்... உனக்கு வேணாம்..? நீ கத்துக்க வேணாம் இதையெல்லாம்?"

சொல்லிச் சொல்லியே உள்ளுக்குள் பொறியாகக் கிடந்ததை விசிறினார். விசிறி விசிறி நெருப்பாக்க

அது பற்றிக் கொண்டது. காட்டுத் தீ மாதிரி மனசு முழுதும் வியாபித்தது. தாத்தாவிற்கு முழுநேர சிஷ்யனான போது வீடு முணு முணுக்கத் தொடங்கிற்று. முதலில் அம்மாதான் ஆரம்பித்தாள்.

"டேய் குணா.. வேணாண்டா.. உனக்கு எதுக்குடா இந்த வேண்டாத வேலையெல்லாம். படிச்சுப் பெரிய வேலைல சேர்ற வழியைப் பாரு.. இதையெல்லாம் கத்துக்கிட்டா, தாத்தா மாதிரி திண்ணையைத் தேய்ச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கணும்... இல்லாட்டி போனா மருந்து பையத் தூக்கிக்கிட்டு வீடு வீடாக அலையணும்.."

அம்மா சொன்ன மருந்து பை என்பது தாத்தாவின் உடலுறுப்புகளில் ஒன்று மாதிரி. கவச குண்டலங்களோடு கர்ணன் பிறந்தான் என்பார்களே.. அதுபோல் இந்த மருந்துப் பையோடு தாத்தா பிறந்திருக்கிறாரோ என்றுகூட நினைத்துக் கொண்டிருக்கிறான். பை பெரிய கித்தான் பை. நூறு இருநூறு மருந்து பொட்டலங்கள். பாட்டில் பாட்டிலாய் லேகியங்கள். எண்ணைகள் எல்லாவற்றையும் போட்டு தனித்தனியாகக் கட்டி அந்தப் பைக்குள் போட்டுக் கொண்டிருப்பார்.

வீட்டிற்கு வந்து மருந்து வாங்கிக் கொண்டு போகிறவர்களைத் தவிர வர முடியாதவர்களின் வீடுகளுக்கு இவரே போவார். நல்ல உயரமும், பலமான ஆகிருதியும், தட்டுச் சுற்று வேட்டியும், வெற்று மார்பும், இடது தோள் வெள்ளைத் துண்டும், வலது தோளில் கித்தான் பையும், வெள்ளைத் தாடியும், நீண்ட தலை முடியும், கறுப்பு முகத்திற்குக் களையாக நெற்றி நிறைந்த திருநீரும், புருவ மத்தியில் பெரிதான குங்குமப் பொட்டும்.. அந்த உருவத்திற்குச் சற்றும் பொருத்தமற்றதாகத் தோன்றும். சாந்தமும், அமைதியான கண்களும், நிதானமான பேச்சும்.. வருடிக் கொடுக்கிற பார்வையும்...

குரல் காண்டாமணிதான். ஆனால், அதன் மென்மை.. வார்த்தைகளில் வெளிப்படுகின்ற இதம்.. வருடித் தருகின்ற சுகம்...

இவை ஏன் அம்மாவிடமும் அப்பாவிடமும் இல்லை. அவர்கள் ஏன் எதற்கும் பதறுகிறார்கள்...? படபடக்கிறார்கள்? எரிச்சலும் கோபமும் காட்டுகிறார்கள்...? சாதாரண சின்ன



விஷயத்தைக் கூடப் பெரிதாக்குகிறார்கள்...? பொறுத்துக் கொள்ள முடியாமல் தவிக்கிறார்கள்...?

எத்தனைப் பெரிய விஷயமும் தாத்தாவிற்குச் சின்ன விஷயம்தான். வெகு சாதாரணம்தான். துளிப் பதட்டம் தெரியாது. பேச்சு படபடக்காது. எரிச்சலோ, கோபமோ எட்டிப் பார்க்காது.. நிதானம், நிதானம், நிதானம்தான்...

அந்த அமைதிக்கும் நிதானத்திற்கும் ஆசைப்பட்டுதான் அவன் தாத்தாவைப் போல் ஆக நினைத்தான். அவர் கற்றுக் கொடுத்ததையெல்லாம் கற்றுக் கொண்டான். வாசி பழகினான். மூச்சடக்கிப் புருவ மத்தியில் நின்றான். யோகம் பயின்றான், நாடி பார்க்கத் தொடங்கினான். தாத்தாவின் அறையிலிருந்த பனையோலை ஏடுகளைப் புரட்டி இரவு பகல் தெரியாமல் அதில் மூழ்க ஆரம்பித்தபோதுதான் அம்மாவின் தூண்டுதலில் அப்பா ஆக்ரோஷத்தோடு வந்து கொத்தாய் தலைமுடி பற்றி உலுக்கினார்.

"எழுந்திரிச்சு வாடா வெளில.. அறிவு கெட்ட முண்டம்.."

அது பள்ளிப்படிப்பு முடித்த கோடை விடுமுறைக் காலம். கல்லூரியில் காலெடுத்து வைக்க வேண்டிய நேரம். உடம்பு முழுவதும் வாலிபம் பரவித் ததும்புகிற பருவம்...

மற்ற யாருக்கானாலும் கோபம் வந்திருக்கும். அப்பாவே ஆனாலும் தலைமுடி பற்றி உலுக்கியதற்கு உடம்பு முடிகள் சிலிர்க்க உக்கிரமாகியிருப்பார்கள். மூர்க்கமாகத் தங்களை விடுவித்துக் கொண்டிருப்பார்கள்.

ஆனால், அவன் அப்படி எதுவும் செய்யவில்லை. கொஞ்சம் கூட கோபம் காட்டவில்லை. கோபம் காட்டா திருப்பது வேறு. கோபமே வராதிருப்பது வேறு. தனக்குச் சிறிதுகூட கோபம் வரவில்லை என்பது அவனை சந்தோஷப்படுத்தியது. தோளுக்கு மிஞ்சி வளர்ந்தவனிடம் தோழமையோடு சொல்லாமல் தொட்டு முடி பற்றி இழுத்து மூர்க்கமாகப் பேசிய அப்பாவிடம் அனுதாபம் பிறந்ததில் இன்னமும் சந்தோஷப்பட்டுப் போனான்.

'தாத்தா... இது முடிகிறது... எனக்கு வருகிறது... முடியும் என்னால் முடியும்...'

ஓடிப் போய் தாத்தாவிடம் சொல்ல வேண்டும் போலிருந்ததை அடக்கிக் கொண்டான்.

'ம்ஹூம். இதுவும் நிற்க வேண்டும். மனசுக்குள் ஆனாலும் இப்படி குதித்து கும்மாளமிடுவதை நிறுத்த வேண்டும். கோபம் எப்படிக் கூடாதோ அதே மாதிரி குதூகலமும் கூடாது. இதை அடக்காதவரை, மனசு எல்லாவற்றையும் வெறும் காட்சிப் பொருளாக மட்டும் நின்று பார்க்காத வரை, நிச்சலனம் பெறாத வரை தான் எப்படி தாத்தாவாக முடியும்? அவரைப் போல் அதையும் பெற்றுவிட வேண்டும். கோபம் அறுத்த மாதிரி குதூகலமும் அறுக்க வேண்டும். முடியுமா...?'

"என்னடா... நான் கேட்டுக்கிட்டிருக்கேன் நீ பாட்டுக்கு எங்கியோ பார்த்துக்கிட்டிருக்க...?"

அவனை இழுத்து வெளியில் கொண்டு வந்த அப்பா கேட்டார். அவன் அவரைப் பார்த்தான்.

"கேட்டீங்களா...? என்ன கேட்டீங்க...?"

"ஓஹோ... இந்த அலட்சியத்தைக் கூட சுத்துக் குடுத்துட்டாரா எங்கப்பா..."

அவன் பேசாமல் நின்றிருந்தான்.

"டேய்... ஒழுங்கா எல்லார் மாதிரியும் காலேஜ் போய் படிச்சோம். வேலைக்குச் சேர்ந்தோம். நாலு காசு சம்பதிச்சோம் குடும்பத்தைக் காப்பாத்தினோம்னு இருக்கப் போறியா... இல்ல... எங்கப்பா மாதிரி பிள்ளை குட்டிங்களைப் பத்தி கவலைப் படாம, காசு பணத்துமேல அக்கறையில்லாம, நாடோடி மாதிரி, காவி கட்டாத சன்யாசி மாதிரி மருந்துப் பையைத் தூக்கிக்கிட்டு காலணாக் காசுக்குப் பிரயோசனமில்லாமல் வீடு விடா ஓடிக்கிட்டிருக்கப் போறியான்னு சொல்லிடு... இன்னிக்கு எனக்கு ரெண்டுல ஒன்னு தெரிஞ்சாகணும்..."

எல்லா அப்பாக்களையும் போல் இவரும் ஒரு அப்பா. எல்லா அப்பாக்களுக்கும் இருக்கக்கூடிய அதே ஆதங்கம்தான் இவருக்கும் இருக்கிறது. இவர் கேட்பதில் தவறு ஒன்றுமில்லை. இவருடைய ஆசையை நிறைவேற்றுவதிலும் தப்பு இல்லை. கருவேப்பிலைக் கன்று



மாதிரி தான் ஒருவன்தான். தன்னிடம் எதிர்பார்க்காமல் வேறு யாரிடம் எதிர்பார்ப்பார்கள்...?

அன்பாகவும், பிரியமாகவும் அப்பாவைப் பார்த்தான். சிறு குழந்தையை பார்க்கிற மாதிரி பார்த்தான். அந்தப் பார்வை என்னவோ செய்ய ஆக்ரோஷம் அடங்கிச் சற்று அமைதி யானார் அவர். உருக்கமான குரலில் ஆரம்பித்தார்.

"டேய்... வேணாண்டா... இதெல்லாம் எங்க அப்பாவோட போகட்டும்டா... வர்ற காலம் பொல்லாத காலம்டா... போட்டி போட்டுக்கிட்டு ஓடற காலம். காசு பணம் தவிர சகலமும் மதிப்பிழக்கப் போகிற காலம். அந்தக் காலத்தோட ஒத்துப் போகணும்னா நீ படிக்கணும். பெரிய படிப்பா படிக்கணும். பெரிய வேலைல உட்காரணும். கை நிறைய காசு சம்பாதிக்கணும். கண்ணுக்கு நெறைவா கல்யாணம் கட்டிக்கணும். அதுவும் உங்க அத்தை பொண்ணைக் கட்டிக்கணும்னா அவங்க மதிப்புல ஒசந்து நின்னாத் தாண்டா நடக்கும். உங்க அத்தை புருஷன் இருக்காரு பாரு... ஏற்கனவே திமிர் புடிச்ச ஆளு. யாரையும் மதிக்க மாட்டாரு... அதுவும் என் தங்கச்சின்னா அவருக்குக் கிள்ளுக் கீரை... தங்கச்சியையே அப்பிடி நடத்தறவருக்கு நாம எம்மாத்திரம்...? தூசி மாதிரி ஊதி உட்டுடுவாரு... அவரு எதிர்ல தலைநிமிர்ந்து நிக்கணும்னா, அவுரு மதிக்கணும்னா... நீ உசந்தாதாண்டா முடியும்..."

'உசந்தாத்தான்னா...?' இவர்கள் சொல்கிற உயரம் வேறு. தான் நினைக்கிற உயரம் வேறு. தன் உயரம் இவர்களுக்குப் புரியாது. இவர்களின் உயரம் தனக்குப் பிடிக்காது என்ன செய்வது...? எப்படி இந்தப் பிரச்சனையைச் சமாளிப்பது...?'

இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் சந்திக்க நினைத்தான் அவன். மெல்ல அப்பாவை சமாளிக்க முடிவு செய்தான்.

"அப்பா... உங்களுக்கு நான் இப்போ என்ன செய்யணும்...? மேல படிக்கணும்... அவ்வளவுதானே...?"

"அது மட்டும் போறாதுடா... வெறும் படிப்பு போறாது. பெரிய படிப்பு. பெரிய வேலை. உன் அத்தை புருஷன் அதிர்ந்து போகணும். அதனால் உன் அத்தைக்கு வாழ்வு வரணும். 'என்

பெண்ணைக் கட்டிக்குங்க'ன்னு கேட்டு நம்ம வாசல்படி மிதிக்கணும். கெஞ்சிக்கிட்டு உன் பின்னால் ஓடி வரணும்..."

அப்போதுதான் அவனுக்கு முற்றிலும் பிடிபட்டது. பெரியதோர் முடிச்சு அவிழ்ந்த மாதிரி இருந்தது. தன் அப்பாவிற்கு அத்தை பெரிது. அத்தையின் புருஷன் பெரியவர். அவர் மகள் இன்னமும் பெரியவள். அதனால்தான் தன்னைப் பெரியவனாக்கிப் பார்க்கத் துடிக்கிறார். அவருக்காகக் கூட இல்லை. அடுத்தவர்களுக்காக அவன் அவர் சொற்படி நடக்கவேண்டும். நிறைய விட்டுக் கொடுக்க வேண்டும். தேவையா அது..?

உள்ளுக்குள் நிகழ்ந்த போராட்டத்தை வெளியில் காட்டாமல் ஒரு வினாடி கண்களை மூடி அடக்க முயன்றான்.

'அமைதியாக இரு.. மனமே அமைதியாக இரு... கோபம் குறை. குழப்பம் தவிர். நிதானமாக நட...'

தாத்தா சொல்லித் தந்ததை திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டான். மீண்டும் மீண்டும் மனதிற்குள் எதிரொலிக்கச் செய்தான். தாத்தா அப்போது வீட்டில் இருந்திருந்தால் நன்றாக இருக்குமென எண்ணிக் கொண்டான். வைத்தியம் பார்க்கப் போகாமல் தாத்தா வீட்டில் இருந்தால் அப்பா இந்தப் பேச்சையே எடுத்திருக்க மாட்டார். இப்போது இவ்வளவு பேசுகிற அப்பா தாத்தா எதிரில் ஒரு வார்த்தை பேசமாட்டார். பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடப்பார். தலைகுனிந்து நின்றிருப்பார். தாத்தாவின் கண்களை நேருக்கு நேர் சந்திக்கிற தைரியம் அப்பாவுக்குக் கிடையாது. அப்பாவிற்கு மட்டுமல்ல. அந்த ஊரில் யாருக்குமே கிடையாது. அவனைத் தவிர வேறு யாரும் தாத்தாவின் முகம் பார்த்துப் பேசிய நினைவு அவனுக்கு இல்லை...

அவன் அமைதியாக நிற்பதைப் பார்த்த அவனது அப்பா அவன் தனது எண்ணங்களுக்கு இணங்கி வருவதாக நினைத்துக் கொண்டார். அவன் இறங்கி வரும்போது தான் சற்று ஏறினால்தான் சரியாக இருக்கும் என்று கணக்குப் போட்டார்.

"டேய்.. நாளையிலிருந்து இந்த ஓலைச்சுவடி மண்ணாங் கட்டி மருந்து புட்டி எதையும் தொட மாட்டேன்னு எனக்கு சத்தியம் செய்து குடுடா..." கை நீட்டினார் அவர்.



"சத்தியமெல்லாம் செய்ய மாட்டேன். ஆனால், நான் காலேஜ் சேர்ந்து ஒழுங்கா படிக்..." சொல்லிக் கொண்டே தலைநிமிர்ந்தவன் அப்பாவின் நீட்டிய கை கண்ணிற் பட சட்டென்று நிறுத்திக் கொண்டான்.

கையா அது! கருங்கம்பம் மாதிரி நீளுகிற தாத்தாவின் கை எங்கே..? இது எங்கே..? ஒல்லியாய், ஒடிசலாய் உலர்ந்து போன முருங்கைக்காய் மாதிரி... உயரமும் பருமனுமாக ஆஜானுபாகுவாய் எழுந்து நிற்கிற தாத்தா...

அவர் மகனா இவர்..? அந்தத் தாத்தாவிற்குப் பேரனாக இருக்கப் போகிறேனா..? அல்லது இந்த அப்பாவிற்கு மகனாக இருந்தால் மட்டும் போதுமா..?

அவன் யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் தந்தி வந்தது. எந்த அத்தை புருஷனைப் பற்றி அப்பா பேசினாரோ அந்த அத்தை புருஷன் மாரடைப்பால் மரணமடைந்துவிட்ட செய்தி வந்தது. படித்து இவன் சேதி சொன்ன உடனே அப்பாவும் அம்மாவும் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தார்கள். அவர்கள் வைத்த ஒப்பாரியில் சிறிதாய் ஊர் கூட ஆரம்பித்தது. யாரோ போய் சேதி சொல்லி தாத்தாவை அழைத்து வந்தார்கள்.

விஷயம் கேட்ட தாத்தா வினாடி நேரம் அமைதியாக இருந்தார். பின்னர் மெல்ல ஒரு பெருமூச்சு விட்டார். அதன்பிறகு தனது கனீர் குரலில் நிதானமாகவே மகனைப் பார்த்து சொன்னார்.

"எழுந்திருடா சுந்தரம். இப்படித் தரையில் விழுந்து புலம்பி அழுவறதால் தங்கச்சி புருஷன் உயிரோட எழுந்து வந்திடப் போறாரா..?"

"தங்கச்சி புருஷனா..? உங்க மருமகன்ப்பா. பெத்த பொண்ணோட புருஷன்..."

'யாராக இருந்தாலும் இனி அவன் புருஷனில்லேடா... பிணம்' சொல்ல வாயெடுத்தவர் சொல்லாமல் நிறுத்திக் கொண்டார்.

"சரிடா... இப்படி அழுவறதை நிறுத்திட்டுக் கிளம்புங்க..."

"கிளம்புங்கன்னா... நீங்க வரல..?"

"உஹ⁻ம். நீங்கள்ளாம் போங்க.. இப்ப பஸ்ஸோ, ரயிலோ பிடிச்சா ராத்திரி போய் சேர்ந்திடலாம். காலைல எடுக்க வசதியா இருக்கும். குணசேகரா.. நீயும் கூடப் போ.. கூட மாட ஒத்தாசையா உதவியா இருக்கும்.."

இதுவரை அவன் போயிராத அத்தை வீடு. எப்போதோ எட்டு வயதிலோ, பத்து வயதிலோ அவர்கள் கல்யாணத்தின் போது பார்த்த அத்தை புருஷன் முகம்.. மறந்து கூடப் போயிருந்தது.. அத்தையின் முகம் கூட தெளிவில்லாமல் கலங்கலாகத்தான் நினைவிற்கு வந்தது.

இவர்கள் போய் இறங்கிய போது இரவு மணி பத்திருக்கும். வீடு முழுவதும் ஒப்பாரி வைத்து அழத்துவங்கிற்று. அழுகை வராமல் என்ன செய்வதென்றும் புரியாமல் சுற்றிப் பார்த்தபோதுதான் அவனுக்குள் அந்த அபூர்வ ரசவாதம் நிகழத் தொடங்கிற்று. அவன் கண்களிற் பட்டு பளிரெனத் தாக்கினாள்.

அவனுக்குள் மின்னல் வெட்டிற்று. குபீரெனத் தீ பற்றிய மாதிரி வெப்பம் பரவிற்று. இதயத் துடிப்பு ஒரு கணம் நின்று மீண்டும் தொடர மெல்ல விசாரித்தான் அவன்.

'யார் இவள்..?'

கூட்டத்தில் யாரோ சொன்னது காதில் விழுந்தது.

"இதுதான் இவருடைய மூத்த பொண்ணு. பேரு ரம்யா.."

பத்து வயதுப் பெண்ணாக ரம்யா அவனுக்கு அறிமுகமானது அப்போதுதான்.

## 4

அத்தை புருஷன் என்பவர் அஸ்தியாகக் கரைந்து போய் இருபது நாட்களாகி விட்டன. இந்த இருபது நாட்களும் குணசேகரனும் அவனது பெற்றோரும் கூடவே இருந்தனர். அவனது பெற்றோர் காவேரியம்மாளின் பக்கத்தில் உட்கார்ந்து கண்துடைக்க, குணசேகரன்தான் ஒவ்வொரு வேலையாகப் பார்க்கத் தொடங்கினான்.

அதுவரை வேலை செய்தே அறியாதவன் அங்கு போன மறுநாளிலிருந்து பொறுப்புணரத் துவங்கினான். அதிலும் ரம்யாவைப் பார்த்த பின்னர் ரங்கராட்டினமாகச் சுழல ஆரம்பித்தான்.



பச்சை மூங்கில்கள் வரவழைத்து பச்சைப் பனை யோலைகள் கொண்டு வந்து, முடைய ஆள் தேடிப் பிடித்து, சங்கு ஊத, தாரையடிக்க, தப்பட்டை முழங்க என ஒவ்வொருவராகச் சேகரித்து, அத்தையின் மூத்த மகள் தலையில் தண்ணீர் ஊற்றி நனைய வைத்து நெருப்புச் சட்டி தூக்க வைத்து..

மறுநாள் பாலுக்கும் கூடப் போனான். ஏழாம் நாள்.. பதினைந்தாம் நாள். பதினாறாவது நாள் விடியற் காலையில் வீட்டின் கொல்லைப் புறமிருந்து பெருங்குரலெடுத்து அழுகிற சத்தம் கேட்டது. ஓடிப்போய் மறைவிடத்தில் நின்று கொண்டு பார்த்தான். வெள்ளைப் புடவை கட்டிய வயதான இரண்டு மூதாட்டிகள் அத்தையின் இரு பக்கத்திலும் நின்று அவளது பொட்டை அழித்தார்கள். பூவைக் கழற்றினார்கள். கை வளையல்களை உடைத்து நொறுக்கினார்கள். தாலியைக் கழற்றிய போது அத்தை மீண்டும் பெருங்குரல் எடுத்து அழத் துவங்கினாள். அவனுக்கும் அழு கை வந்தது. ஓடி வந்து படுக்கையில் படுத்துக் கொண்டு விட்டான்.

பொட்டு, பூ, தாலிச்சரடு எல்லாம் போன அத்தை அதிகோரமாகக் கண்முன் வந்தாள். 'இது என்ன கொடுமை..? இதை ஏன் செய்கிறார்கள்..?' என்று குமுறிப் போனான்.

புருஷன் கட்டியது தாலி. அதை வேண்டுமானாலும் கழற்றிப் போடட்டும். ஆனால், பொட்டும், பூவும் ஒவ்வொரு பெண்ணும் பிறந்த நாளிலிருந்து வைத்துக் கொள்கிற விஷயமல்லவா..? அவளோடு கூடப் பிறந்த விஷயம். பெண் என்கிறபோதே ஞாபகத்திற்கு வருகிற விஷயம். அவளோடு பிறந்தது அவளுடன் தானே போக வேண்டும்? அதை விட்டு இப்படி இடையில் வந்த கணவன் போன காரணத்தால் அவையும் போக வேண்டுமென்பது என்ன நியாயம்..? யார் மாற்றப் போகிறார்கள் இவற்றை..? ஒரு பெரியார் போதவில்லையோ..? ஒரு நூறு பெரியாராவது பிறந்திருக்க வேண்டுமோ..? அப்போதுதான் மாற்ற முடியுமோ..? அப்போதாவது முடியுமா..?

'அத்தை.. ஏன் இதற்கு ஒப்புக் கொண்டீர்கள்..? மாட்டேன் என மறுத்திருக்கக் கூடாதா..? இவையெல்லாம் உங்கள் சொந்த விஷயமில்லையா..? அந்தரங்க அபிலாஷைகளில்லையா..? அவற்றில்

நுழைய அடுத்தவர்களுக்கு என்ன உரிமை..? வாழ்கிற போது வாழ்ந்த வராத உறவுக்காரர்கள் தாழ்கிற போது தாங்களாக ஓடி வருவது எதற்காக..? இதற்கா..? இது ஏன் ஏற்பட்டது..? எதற்காக ஏற்பட்டது..? யாரால் எப்போது இக்கொடுமை நுழைக்கப்பட்டது? பெண்ணுக்குப் பெண்ணே செய்கிற கொடுமை.. பெண்ணுக்குப் பெண்தான் எதிரி.

இதைச் செய்து கொள்ளாமற் போனால் ஊர் உலகம் தூற்றும் எனப் பயந்து தான் செய்து கொள்கிறார்கள். பெண்ணின் விருப்பம் கேட்டு நடைபெறுகிற விஷயமல்ல இவை.

"தாலியறுத்தவ.. என்னமா தளுக்கி மினுக்கிக்கிட்டுப் பூவும் பொட்டுமாப் போறா பார்த்தியா..?"

பேசுகிறவர்கள் சுலபமாகப் பேசி விடுகிறார்கள். பாதிக்கப்படுவது தாங்களாக இருக்கிற பட்சத்தில் அந்த சோகம் தெரியும். இழப்பு புரியும். இழக்க வேண்டியதை இழக்கலாம். இழக்கக் கூடாததையெல்லாம் ஏன் இழக்க வேண்டும்? என்கிற கேள்வியின் நியாயம் பிடிபடும். இது அவரவர் மனோபாவத்தையும், சொந்த விஷயத்தையும் பொறுத்துச் செய்கிற முடிவு. இதில் தலையிடத் தங்களுக்கு என்ன உரிமை எனத் தள்ளி நிற்கிற பக்குவம் வரும்..

எப்போது வரப் போகிறது இந்தப் பக்குவம் நம் ஜனங்களுக்கு..? இது என் சொந்த விஷயம். நான் பூ வைப்பேன். பொட்டு வைப்பேன். ஏன் முடிந்தால் மறுதாலி கூடக் கட்டிக் கொள்வேன். இதைக் கேட்க நீங்கள் யார் எனத் திருப்பிக் கேட்கிற தைரியம் என்று வரும் நம் பெண்களுக்கு..?

சட்டென்று அவனுக்குத் தாத்தாவின் நினைவு வந்தது. இந்த இருபது நாளும் தாத்தா எட்டிக் கூடப் பார்க்காதது ஞாபகத்திற்கு வந்தது. கேட்டால் 'அங்கு எனக்கு என்னடா வேலை...?' எனத் திருப்பிக் கேட்பார்.

"சாவும் பிறப்பும் மாறி மாறி நிகழ்கின்ற சாதாரண விஷயம்தானேடா..?" என்பார்.

"தாத்தா.. செத்தது உங்க சொந்த மருமகன். வேறு யாரோ இல்லை.." என்றால் கையெடுத்துக் கும்பிடுவார்.



"அப்பா.. நான் கொஞ்சம் தள்ளி வெளிய நிக்கறேன். மறுபடியும் இழுத்து உள்ள போட்டு விடாதே.." என்று சொல்லி சிரித்துக் கொண்டே நகருவார்.

ஒருவேளை தாத்தா இங்கு இருந்திருந்தால் இவையெல்லாம் நிகழ்ந்தே இருக்காதோ..? அனுமதித்திருக்க மாட்டாரோ..? தாத்தாவின் ஒரு சொல்லுக்கு அத்தனை பேரும் கட்டுப்பட்டிருப்பார்களோ..?

ஆனால், தாத்தா சொல்ல மாட்டார். அவனுக்குத் தாத்தாவை மிக நன்றாகத் தெரியும்.

"நான் யாரப்பா அதைச் சொல்ல..?"

"உங்க பொண்ணுக்கு நீங்க சொல்லாமல் வேறு யார் சொல்ல முடியும்?"

"நல்ல கேள்வி கேட்ட அப்பனே.. என் பொண்ணுக்காக நானா சாப்பிடுகிறேன்..? என் பொண்ணுக்காக நானா மூச்சு விடுகிறேன்..? அவ தானே அதை செய்துக்கிறா.. அந்த மாதிரி இதையும் அவளே செய்து கொள்ள வேண்டியதுதான். அவளே சொல்லி தடுத்துக் கொள்ள வேண்டியதுதான்.."

"அப்படின்னா நீங்க என்ன தான் செய்வீங்க தாத்தா..?"

"பார்த்துக்கிட்டே இருப்பேன். என்னைச் சுற்றி நடக்கிற சகலமான விஷயங்களையும் பார்த்துக்கிட்டிருப்பேன். உள்ள நுழையாமல் வெளிய நின்னே பார்ப்பேன்.. உள்ள நுழைஞ்சமோ.. ஆபத்துதான். மாட்டிக்குவோம். கர்மாவுல சிக்கிக்குவோம். பந்தப்படுவோம். அப்புறம் கோதாவுல இறங்கணும். குஸ்தி போடணும்.. எதுக்கு அதெல்லாம்..? தேவையா..? முடியுமா என்னால்..? அதுவும் இந்த வயசுல..?" என்று சிரிப்பார்.

வயசா ஒரு பொருட்டு அவருக்கு..? கல்தூண் மாதிரி கைநீட்டி மூன்று பையன்களைத் தொங்க விடுபவருக்கா...? வயது வெறும் சாக்கு. உண்மைக் காரணம் தெரியும் அவனுக்கு. கவிதையாக அவர் அடிக்கடி சொல்லக் கேட்டு அவனுக்கே மனப் பாடமாகியிருந்தது. அப்போது அந்த நிமிடத்தில் தாத்தாவின் குரல் காதருகில் வந்து

சொல்கிறார் போல் இருந்தது. தன்னிடம் கேட்கிற மாதிரி தோன்றியது.

"குணா... நீ கவிதையெல்லாம் படிக்கிறதுண்டாப்பா...?"

"எந்தக் கவிதை தாத்தா...? பாரதியார் கவிதையா...?"

"புதுக்கவிதைப்பா... ஒருவிதத்துல பாரதியார் கூட புதுக் கவிஞர்தான். ஆனால், ஏதோ ஒரு இலக்கியப் பத்திரிகையில் படிச்சேன். பத்திரிகையா, புஸ்தகமான்னு கூட நினைவில்லை. ஆனால், கவிதை மட்டும் நல்லா நினைவிருக்கு. சி. மணின்றவர் எழுதி இருந்தார். நல்ல கவிதை நம்ம நிலைமையைத் தெரியப்படுத்துகிற கவிதை. நான் சொல்கிறேன் கேட்கிறியா...?"

"சொல்லுங்க தாத்தா..."

கணீரென்று கோவில் மணிக் குரலில் சொல்வார். அவர்.

*மேற்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்*
*தெற்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்*
*வடக்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்*
*கிழக்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்*
*எழும்பிக் குதித்தேன் இடித்தது ஒரு கூரை*

கவிதை சொன்ன கணீர்க் குரல் சற்று இறங்கி சன்னமாக வரும்.

"எப்பிடி இருக்கு...?" கேட்கின்ற ஒவ்வொரு முறையும் கண்கள் அகலும் அவனுக்கு.

"ரொம்ப நல்லா இருக்கு தாத்தா..."

"புரியுதா...?"

"புரியுது... நல்லாவே புரியுது. நாமல்லாம் எப்படி ஒரு சின்ன சதுரத்துக்குள் அடைக்கப்பட்டுக் கிடக்கிறோம்னு தெரியப்படுத்துது."

"நாமெல்லாம்னு ஏன் என்னையும் சேர்த்துக்கிற... நான் வெளியில் நின்னுக்கிட்டிருக்கேன். அகண்டு பரந்த வெட்ட வெளி..."

கவிதை நினைவிற்கு வந்த விநாடியில் சட்டென்று ஒரு விஷயம் பிடிபட்டது அவனுக்கு. அகண்டு பரந்த வெட்ட வெளிக்கும் ஒரு எல்லை உண்டே. ஆரம்பம் முடிவு இரண்டும் உண்டே...



தாத்தாவிடம் போய் சொல்ல வேண்டும் என நினைத்துக் கொண்டே பதினாறாம் நாளைக் கழித்தான். பதினேழு, பதினெட்டு, பத்தொன்பது என்று ஓடி இருபதாவது நாள் வந்தது. அத்தனை நாட்களாக இருந்து வந்த இறுக்கமும் துக்கமும் குறைந்து படீரெனத் திரை விலகின மாதிரியான யதார்த்தம் வெளிப்பட்டது.

எல்லோரும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது மெதுவாக அத்தையிடம் பேச்சைத் துவக்கினார் அவனது அப்பா.

"என்ன காவேரி... வீட்டைக் காலி செய்திட்டு, குழந்தைகளை யெல்லாம் அழைச்சுக்கிட்டு எங்க கூட கிளம்பறதானே...?"

சமையலறையின் இருட்டு மூலையிலிருந்து அத்தையின் குரல் மறு கேள்வியாக வெளிவந்தது.

"எங்கண்ணே...?"

"நம்ம வீட்டுக்குத்தாம்மா..."

"எதுக்குங்கண்ணே...?"

ஒரு வினாடி அந்தக் கேள்வியில் அயர்ந்து போனார் அப்பா. அதைச் சிறிதும் அவர் எதிர்பார்க்கவில்லை என்பது அவரது அடுத்த கேள்வியின் குரல் உயர்வில் தெரிய வந்தது.

"இது என்ன கேள்வி காவேரி...? இங்க இருந்து என்ன செய்யப் போற...? இத்தனைக் குழந்தைகளை வச்சுக்கிட்டுத் தனியா என்ன செய்ய முடியும்...?"

"ஏங்கண்ணே... ஏதாவது வேலை தேடி சுயமாக சம்பாதிச்சு இவங்களைக் காப்பாத்த முடியாதா என்ன...?"

"வேலை தேடிக்கிறதா...?" சுயமாக சம்பாதிக்கிறதா...? அதிர்ந்து போய் அத்தையைப் பார்த்த அப்பாவின் மீது அவனுக்குக் கோபம் வந்தது. அவரால் தாங்க முடியாதது தெரிந்தது.

'தங்கை வெளியில் போய் வேலை செய்து கஷ்டப்படப் போகிறாளே' என்பதில் ஏற்பட்ட தாங்க முடியாததில்லை இது எனக் கண்டு கொண்டான் அவன்.'

'இது ஈகோ. அவருடைய தன்மானத்தில் விழுந்து விட்ட அடி. அதுவும் ஒரு பெண் அடித்து விட்ட அடி. விதவைப் பெண் இப்போது

தான் விதவையான பெண் விதவையாகி இருபது நாள் கூட ஆகாத பெண். அவள் அடித்த அடி...

'எத்தனை ஆணாதிக்க சமூகம் இது...!' என்பதை மீண்டும் வருத்தத்தோடு நினைவுபடுத்திக் கொண்டான். ஒரு பெண் நிமிரலாமா? சுயமாகச் சிந்திக்கலாமா...? சுய சம்பாத்தியம் பற்றிப் பேசலாமா...? சுய கால்களில் நிற்க நினைக்கலாமா...? ஆண்களின் ஏகபோக உரிமை என யாரோ ஒரு முகமறியாத ஆண் மகனால் சாசனம் செய்து கொடுக்கப்பட்டு விட்ட சுய மரியாதையை ஒரு பெண் சொந்தம் கொண்டாட முன் வரலாமா...? அதுவும் அவள் தன் வீட்டுப் பெண்ணாகவே இருந்து விட்டால்...?

தாங்கிக் கொள்வார்களா...? தாங்கிக் கொள்ள முடியுமா...? சம்பாதித்துப் போட ஒரு ஆண் இருக்கிற பட்சத்தில் பெண் சம்பாதிக்கப் போவதாவது...? இதை எந்த வீட்டு ஆண்மகன் தாங்குவான்...? பட்டிணத்து ஆண்களுக்க வேண்டுமானால் சகஜமாக இருக்கலாம். ஆனால், கிராமத்து ஆணுக்கு...? பட்டிக்காட்டு ஆண்மகனுக்கு... அதுவும் தன் அப்பாவுக்கு...?

'அப்பா... அந்தத் தாத்தாவிற்கு நீங்கள் எப்படி மகனாக வந்து பிறந்தீர்கள்...?'

'அத்தை... நீங்களாவது தாத்தாவின் மகளாக இருங்களேன்... இனிமேலாவது தாத்தாவைப் போல் நிமிர்ந்து நில்லுங்களேன்... இதற்குப் பிறகாவது தாத்தாவின் மகளாக மாறுங்களேன்... ப்ளீஸ்...'

அவன் மனதிற்குள் கெஞ்சியது அத்தைக்குக் கேட்டு விட்டதோ என்னவோ... மெல்ல சமையலறையின் இருட்டு மூலை விட்டு வெளியில் வந்து நின்றாள். அப்பாவை நேரிடையாகப் பார்த்துக் கேட்டாள்.

"என்னங்கண்ணே பேசாமல் இருக்கீங்க...?"

"ஏம்மா... நீ என்ன பேசறேன்னு தெரிஞ்சுதான் பேசறியா...? வேலை தேடிக்கிறதும், சுயமாக சம்பாதிக்கிறதும் அத்தனை சுலபம்னா நினைச்சுக்கிட்டிருக்க...?"

அத்தை பதில் பேசவில்லை.



"என்ன வேலை தேடுவ...? எங்க போய் தேடுவ... யார் தருவாங்கன்னு நினைக்கிற? ஆனானப்பட்ட படிப்பு படிச்சவங்களே திண்டாடற நிலைமைல உனக்கு எவன் வேலை போட்டுத் தருவான்...?"

நிதரிசனமாக உண்மை முகத்தைத் தாக்கியதில் அத்தை விக்கித்துப் போய் நிற்பதைப் புரிந்து கொண்டான். அப்பாவின் உதட்டோரத்தில் தெரிந்த ஏளனம் மிகக் குரூரமானதாகப் பட்டது அவனுக்கு.

'அப்பா... உங்களுக்கு என்ன வேண்டும்... அத்தை ஓடி வந்து உங்கள் கால்களைப் பற்றிக் கொண்டு அழுதிருக்க வேண்டுமோ...?'

'அண்ணே... என்னைக் காப்பாத்துண்ணே; எனக்கும் என் குழந்தைங்களுக்கும் உங்களை விட்டால் வேறு கதி இல்லைங் கண்ணே... என்னையும், என் குழந்தைங்களையும் கூட கூட்டிட்டுப் போங்கண்ணே...' எனக் கதறியிருந்தால் திருப்தியாகி இருக்குமோ...? அதைத்தான் எதிர் பார்த்தீர்களோ...? அத்தையின் பதில் உங்களை ஏமாற்றி விட்டதோ...? அதனால் அத்தையைச் சொற்களால் காயப்படுத்தி உங்களைத் திருப்திப் படுத்திக் கொள்கிறீர்களோ?'

அப்பாவின் குரல் அவனைக் கலைத்து கவனம் திருப்பிற்று.

"சரி... வேலை வேண்டாம். மூணாங்கிளாஸ் கூடப் படிக்காத உனக்கு வேலை கிடைக்காதுன்னு விட்டு விட்டு சுயதொழில் செய்யறேன்னு வச்சிக்க. என்ன செய்வ...? பராசக்தி படத்துல வர்ற கல்யாணி மாதிரி இட்லிக் கடைதான் வைக்கணும். இத்தினி லட்சணமா வயசுக்கு வரப் போகிற ஒரு பொண்ணையும் வச்சுக்கிட்டு இட்லிக் கடை போடறேன்னு வச்சுக்கிட்டாலும் வரவனுங்க சும்மாவா இருப்பானுங்கா...? ஆண் துணை இல்லாத குடும்பம். அழகான பொண்ணுன்னா அவனவனுக்கு மூக்குல வேர்க்காது...? அப்புறம் ஊர் என்ன பேசும்...? இத்தினியும் பார்த்துக்கிட்டு அண்ணன்காரன் சும்மா இருக்கானேன்னு என்னை சிரிக்காதா...? கடைசியில் நானும் பாரசக்தி படத்து வசனம்தான் பேசணும்..."

"அன்னை பராசக்தி உனக்குத் தாய்... என் தங்கை காவேரி உனக்கு தாரமாடான்னு கேட்கணும்... இல்லாட்டி 'என் தங்கை ஓடினாள். ஓடினாள், வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்ன்னு ஒப்பாரி

வைக்கணும்..' இதையா நீ எதிர்பார்க்கிற..? இதையா செய்யணும்னு ஆசைப்படற..? சொல்லு..?"

அப்பா பேசப் பேச அத்தையின் முகம் இறுகுவது கண்டான். உடம்பில் ஒரு ஆவேசம் நுழைவது தெரிந்தது. சடாரெனத் தாத்தா அவனுக்குள் புகுந்து கொள்வது போலிருந்தது. அவளின் முகமும், கண்களும் உதடுகளும்.. தாத்தாதான்.. அப்படியே தாத்தா.

அவன் எதிர்பார்த்த அந்த அத்தை வெளியில் வந்தாள். தான் தாத்தாவின் மகள் என்பதை நறுக்குத் தெரித்த வார்த்தைகளில் நிரூபித்துக் காட்டினாள்.

"இல்லீங்கண்ணே. என்னை மன்னிச்சுடுங்க. இத்தினி குழந்தைகளையும் கூட்டிக்கிட்டு வந்து உங்களுக்கு பாரமாக இருக்க விரும்பலே. நீங்க சுமக்க வேண்டிய பாரமில்ல இது. நான் சுமக்க வேண்டிய பாரம். என்னுடைய பாரம். அதனால் நானே சுமக்க முடிவு செய்திட்டேன். நான் பராசக்தி கல்யாணியாக மாறவும் மாட்டேன். உங்களை அந்த மாதிரி வசனம் பேச வைக்கவும் மாட்டேன். என்னால் வாழ முடியும். இந்தக் குழந்தைகளை வாழ வைக்க முடியும். நாணயமான நல்ல முறையில் உங்கக் கண் முன்னாலேயே வாழ்ந்து காட்டறேன். பாருங்க.."

அழுத்தமான குரலில் மிக உறுதியான இறுதிமுடிவு போல் அத்தையின் தொனி வந்ததும் அப்பா சாடரென இறங்கி வந்து கட்சி மாறிய அரசியல்வாதியானார்.. மெல்ல பேச்சை மாற்றி கெஞ்சத் தொடங்கினார்.

"சரி.. காவேரி.. உன்னால் முடியும்னே வச்சுக்க.. மரம் வச்சவன் தண்ணி ஊற்றாமல் போக மாட்டான். நிச்சயம் குழந்தைகளை வாழ வச்க உன்னாலும் வாழ்ந்து காட்ட முடியும்னாலும்... எதுக்கும்மா அந்த விஷப் பரிட்சையெல்லாம்..? நமக்குள்ள எதுக்கு விம்பும், வீண் பிடிவாதமும்..? அண்ணன்னு நினைச்சு உரிமையோட ஏதேதோ பேசற..? நாளைக்கே நான் சம்பந்தியாகப் போகிறவன்றதை மறந்துடாதேம்மா. உன் பொண்ணு ரம்யா என் மகன் குணசேகரனைக் கட்டிக்கிட்டு அந்த வீட்டின் மருமகளாகப் போறவ. அங்க வந்து வாழப் போறவ. உன் மகளோட எதிர்காலத்தை நீ மனகுல



வச்சுக்கணும். அப்போ வர்றதை அவ இப்பவே வந்து விடட்டும்னு சொல்றேன். ரம்யாவோட சேர்ந்து நீங்க எல்லோரும் வந்திருங்கன்னு தான் கூப்பிடறேன்.."

சடாரென்று சாப்பாட்டுக் கையை உதறிக் கொண்டு எழுந்து நின்ற ரம்யாவை திடுக்கிட்ட மாதிரி பார்த்தார்கள் அத்தனை பேரும். அந்த வெள்ளை முகம் சிவந்து போய் நெருப்பு மாதிரி தகதகத்தது. வார்த்தைகள் பொறியாகப் பறந்து வெளி வந்தன.

"ஏன் மாமா... என்ன சொன்னீங்க..? உங்க வீட்டுக்கு மருமகளாக வர்றதா..? உங்க மகனைக் கட்டிக்கிறதா..? யாரு.. நானா? இந்தக் கறுப்பனையா..?"

'யாரு.. நானா..!?'

'இந்தக் கறுப்பனையா..?!'

'இந்தக் கறுப் ... பனை..யா..?!'

மீண்டும் மீண்டும் உள்ளுக்குள் வந்து விழுந்து கொண்டிருந்த நெருப்புக் கட்டிகளின் ஜ்வாலையில் வெந்து தணிந்து போனான் அவன்..

## 5

பட்டு கத்தரிக்கிற மாதிரி 'நாசூக்காகக் கூட இல்லாமல் நறுக்கென்று பேசினாள் ரம்யா. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்றாள்.

'உங்க மகனையா..? கல்யாணம் பண்ணிக்கிறதா..? யாரு.. நானா?! இந்தக் கறுப்பனையா..?'

கொக்கி போட்டு இழுத்த அந்தக் கேள்விகளுக்குப் பின்னர் கூடத்தில் அமைதி நிலவியது. அமைதி என்றால் சாதாரண அமைதி இல்லை. துல்லியமான அமைதி. ஊசி விழுந்தால் கேட்கிற அளவிற்கு அசாதாரணமான அமைதி. அந்த அசாதாரணமான அமைதியைக் கலைத்தவர் குணசேகரனின் அப்பா தான். கனமான தன் குரலைச் செருமிப் பேச்சை ஆரம்பித்தார். நேரிடையாக ரம்யாவைக் கேட்பதை விட்டுத் தன் தங்கையை ஏறிட்டார்.

"என்ன காவேரி.. உன் பொண்ணு சொல்றதைக் கேட்டியா..?"

அம்மாவை முந்திக் கொண்டு ரம்யாவே அதற்கும் பதில் சொன்னாள்.

"இதப் பாருங்க மாமா... இதுல அம்மாவை எதுக்கு இழுக்கறீங்க...? அவங்களால் என்ன சொல்ல முடியும்...? இது என் விஷயம். நான்தான் பதில் சொல்லணுமே தவிர அம்மா இல்லை..."

அப்பா மீண்டும் அதிர்ந்து போவதைக் கவனித்தான் குணசேகரன். நெஞ்சு வலித்தது. அறுந்து போன பல்லியின் வாலாகத் துடித்தது. 'இப்படி நடுக்கூடத்தில் போட்டு உடைக்க வேண்டிய விஷயமா இது...? எத்தனை மென்மையான விஷயம். நாசூக்கான விஷயம். அந்தப் பத்து வயதுப் பெண் அறியாமல் ஏதோ பேசுகிற தென்றால்... இந்த அப்பாவிற்கு என்னவாயிற்று...? எங்கே போயிற்று...? கல்யாணம் பேச வேண்டிய தருணமா இது...? எதற்கு வந்து விட்டு என்ன பேசுகிறார் இவர்... எவ்வாறு இவ்வளவு விவஸ்தை கெட்டுப் போனார்...?'

'வேண்டாம்... இதற்கு மேல் எதுவும் வேண்டாம். தயவு செய்து யாரும் எதுவும் பேசாதீர்களேன்... ப்ளீஸ்...' எதுவும் மனதிற்குள் கெஞ்சி வெளியில் மெதுவாக "அப்பா..." என்று ஆரம்பித்தான்.

"நீ சும்மா வாயை மூடிக்கிட்டு இருடா... இந்த வீட்லதான் தலை இருக்க வால் ஆடுதுன்னா... நீயும் ஆடப் பார்க்காதே..." என்றவர் சரேலென்று நேரிடையாக ரம்யா பக்கம் திரும்பினார்.

"சரி, முடிவா நீ என்னதான் சொல்ற...?"

"உங்க மகனை நான் கல்யாணம் செய்துக்க மாட்டேன்னு சொல்றேன்..."

"அதுதான் ஏன்னு கேட்கிறேன்..."

"ஏன்னு என்கிட்ட கேட்கறீங்களா...?" என்று இளக்காரமாகச் சிரித்தாள் அவள். கூனிக் குறுகிப் போனான் அவன். 'ஐயோ... வேண்டாம். இரண்டு பேரும் விட்டு விடுங்களேன். சற்று வாயை மூடிக் கொண்டிருங்களேன்...' என்று கத்தத் தோன்றியதை அடக்கிக் கொண்டான் கத்தி, குரல் உயர்த்திப் பழக்கமில்லாத காரணத்தால் வார்த்தைகள் தொண்டைக் குழிக்குள், முட்களாகச் சிக்கிக் கொண்டன. அவனது வலியும், வேதனையும் புரியாமல் பேசிக் கொண்டே போனாள் ரம்யா.



"என்னைக் கேட்டு தெரிஞ்சுக்கிற விஷயமா மாமா இது...? கொஞ்சம் திரும்பி உங்க மகன் முகத்தைப் பாருங்க... உங்களுக்கே தெரியும்..."

"ஏன்... அவன் முகத்துக்கென்ன...? ராஜா மாதிரி நல்லாத்தானே இருக்கான்...?" பெற்ற வயிறு பொறுமிற்று. "எங்கே அவனைத் தன் தலையில் கட்டி விடுவார்களோ...?" என்கிற அவஸ்தையில் அவளும் பதிலுக்குப் பொறுமினாள்.

"ஆமாம் ராஜாதான். கறுப்பு ராஜா, கரிக்கட்டை ராஜா!"

"ரம்...யா...!" அதுவரை அவர்கள் பேச்சில் குறுக்கிடாதிருந்த அத்தை தீனமாகக் குரலை உயர்த்த, அதையும் மீறினாள் அவள்.

"நீ சும்மா இரும்மா. அண்ணன் - அண்ணன் மகன். உறவு விட்டுப் போகக் கூடாதுன்னு நீ தலையாட்டினால் அப்பா உன்கூட பட்ட அதே கஷ்டத்தை நானுமில்ல உன் அண்ணன் மகன் கூடப் படணும்...?"

வார்த்தை கொடுக்கிலிருந்து கொட்டிய விஷத்தால் அத்தையின் முகத்தில் கருநீலம் பாய்வதைக் கண்டான் அவன், சொல்ல முடியாத சங்கடம் ஏற்பட்டது. அங்கு வந்த அந்த இருபது நாட்களும் ரம்யாவைப் பார்ப்பது தவிர பேசியறியாதவன், முதல் முறையாக அவளிடம் வாய் திறந்தான்.

"என்ன ரம்யா இது...?"

"என்னன்னு என்னைக் கேட்டீங்கன்னா... என்ன அர்த்தம்...? ஆரம்பிச்சவரு உங்க அப்பா. அவரையில்ல கேட்கணும்?"

"ஆமாம்... நான்தான் ஆரம்பிச்சேன்..." என்று சடாரென்று இடையில் புகுந்தார் அப்பா.

"ஆரம்பிச்சதுக்கப்புறம் முடிவு தெரியாமல் எதையும் விடக் கூடாது. இப்போ எனக்கு ஒரு முடிவு தெரிஞ்சாகணும்."

"நான்தான் ஆரம்பத்திலேயே முடிவைச் சொல்லிட்டேனே... அதுக்கப்புறமும் புரியலைன்னா என்ன செய்ய முடியும்...? புட்டு புட்டா வைக்க முடியும்...?"

ஓங்கி கன்னத்தில் அறைகிற பதில். பத்து வயதுப் பெண்ணின் வெகுளித்தனமா...? அகங்காரமா...? திமிரா...? தன் அழகைப் புரிந்து

கொண்டிருக்கிற ஆணவமா..? அல்லது குழந்தையின் பிடிவாதமா..? எது இது..?

அவனுக்குப் புரியவில்லை. ஆனால், அப்பாவின் முகம் ஜிவுஜிவுப்பது தெரிந்தது. கண்களில் சூடு பரவிற்று. சரேலென்று கையை உதறிக் கொண்டு எழுந்தார் அவர். கூடவே அம்மாவும் எழுந்து கொண்டாள். அதன் பின்னரும் எழுந்திருக்காமல் உட்கார்ந்து கொண்டிருந்த அவனைச் சுட்டு விடுகிற மாதிரி பார்த்தார். வார்த்தை களிலிருந்தும் அதே சூடு வெளிப்பட்டது.

“டேய் அறிவு கெட்டவனே... நாங்க எழுந்திரிச்சிட்டது தெரியுதில்ல. அதுக்கப்புறமும் ஏண்டா உட்கார்ந்துக் கிட்டிருக்க..?”

எழுந்திருப்பதா வேண்டாமா என்பதை முடிவு செய்ய முடியாமற் பேசாதிருந்தான் அவன். அப்பாவையும் அம்மாவையும் மாறி மாறிப் பார்த்தபோது அத்தை ஓடி வந்து அப்பாவின் கையைப் பற்றிக் கொண்டாள்.

“என்னங்கண்ணே இது..? நீங்க இப்படி எந்திரிச்சுப் போறது நல்லாவா இருக்கு..?”

“அது சரி. நான் எந்திரிச்சுப் போறது நல்லாயில்ல. ஆனால் உன் பொண்ணு பேசறது மட்டும் ரொம்ப நல்லாயிருக்கு இல்ல..”

“அது என்னங்கண்ணே.. சின்னப் பொண்ணு...”

“அதுவா சின்னப் பொண்ணு... யம்மாடி...! என்ன பேச்சு பேசுது..! முளைச்சு மூணு இலை விடலை அதுக்குள்ள இந்தப் பேச்சு பேசுது..”

“நேத்து பெய்த மழைல இன்னிக்கு முளைச்ச காளானெல்லாம் என் மகனைக் கறுப்புங்கும், கரிக்கட்டைங்கும்.. நாங்க கேட்டுக்கிட்டு சும்மா இருக்கணும். உட்கார்ந்து சாப்பிடணும்னு சொல்ல வரீங்களா..?”

“ஐயோ அண்ணி. நான் அப்பிடிச் சொல்லலீங்களே..?”

“பின்ன.. வேற எப்பிடிச் சொல்றீங்க..? பொண்ணு எங்களை ஒண்ணும் புரியாத முட்டாள்னு சொல்றா... அம்மாக்காரி என்ன சொல்லப் போறீங்க. சொல்லிடுங்க..”



“அது ஏதோ சின்னப் பொண்ணு. அப்பா செத்துப் போன துக்கத்துலயும், மன வருத்தத்துலயும் அறியாமப் பேசிடுச்சு. அதுக்கு நான் மன்னிப்பு கேட்டுக்கறேன் அண்ணி..”

“அம்மா.. நீ எதுக்கு மன்னிப்பு கேட்டுக்கணும்..?” என்ற ரம்யா எரித்து விடுகிற மாதிரி அத்தையைப் பார்த்தாள். பின்பு அப்பாவின் பக்கம் திரும்பினாள்.

“இதப் பாருங்க... மாமா... மாமி... உங்க ரெண்டு பேருக்கும் மறுபடியும் தெளிவாகச் சொல்றேன் கேட்டுக்குங்க. நான் எந்த மனவருத்தத்துலயும், துக்கத்துலயும் பேசல. நல்லா தீர்மானமா சுத்தான் சொல்றேன். முளைச்சு மூணு இலை விடலையோ.. இல்ல.. நேத்து பெய்த மழையில் இன்னிக்கு முளைச்ச காளானோ.. எதுவா இருந்தாலும் சரி. உங்க பிள்ளையும் எனக்கு வேண்டாம். உங்க வீடும் வேணாம். உங்க வீடு இருக்கிற திசையில் தலை வச்சு கூட நான் படுக்க மாட்டேன். அதனால் அனாவஸ்யமா கற்பனை பண்ணாமல், என்னை மருமகளாக்கிக்கலாம்னு கனவு காணாமல் போயிட்டு வாங்க.. என் விஷயத்துல தலையிடாமல் உங்க வேலையை முடிச்சுக் கிட்டு கிளம்புங்க...” படாரென்று இரு உள்ளங்கைகளையும் தட்டிக் கைகூப்பினாள் அவள்.

அம்மா, அப்பா இருவருமே ஒரு வினாடி அயர்ந்து போனார்கள். அவனும் கூட அயர்ந்துதான் போனான். ஆனால், அவனால் அமைதியாக இருக்க முடிந்தது. அந்த அமைதி அம்மா, அப்பாவிடம் இல்லை. படபடவெனப் பொரிந்தார்கள்.

“இத்தனைக்கப்புறம் இங்க நிக்க எங்களுக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு... அதுமட்டுமில்ல... இனிமே நல்லது கெட்டது எதுவானாலும் இந்த வீட்டுப் படிய நாங்க மிதிக்கிறதாக இல்லை..” இதையே வெவ்வேறு வார்த்தைகளில் வெவ்வேறு விதமாகச் சொன்னார்கள். சொல்லிவிட்டு அம்மா துணிமணிகள் எடுக்கப் போக அப்பா அத்தையைப் பார்த்தார்.

“காவேரி ரொம்ப நல்லாப் பொண்ணை வளர்த்து வச்சிருக்கிற போ... இருந்தவரை வீட்டுக்காரர் கிட்ட பட்ட. இனிமேல் இந்தப் பொண்ணுகிட்ட [illegible]போற போல இருக்கு. பத்து வயசு முடியல.. பெரிய மனுஷியாகல.. அதுக்குள்ள இத்தினித் திமிரா..! இந்த வாயா..!”

அப்பா சொல்லி முடிப்பதற்கு முன் அத்தை நிதானமாகத்தான் ஆரம்பித்தாள்.

"அண்ணே... நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. பத்து வயசு முடியல. பெரிய மனுஷியாகக் கூட ஆகலேன்னு தெரிஞ்சுக் கிட்டு அதுங்கிட்ட போய் இந்தப் பேச்சை எடுக்கலாமா...?"

அத்தை சொன்னது கேட்டு ரௌத்திரமானார் அப்பா.

"அதுங்கிட்டேயா நான் பேசினேன்...? ஆரம்பத்திலிருந்து ஞாபகப்படுத்திப் பாரு காவேரி...? உன்கிட்ட கேட்டேன். குழந்தை களை, அழைச்சுக்கிட்டு கூட வந்திடுன்னு உன்னைக் கூப்பிட்டேன். உன் மகதான் கையை உதறிக்கிட்டு போருக்குப் போறவ மாதிரி எழுந்திருச்சி நின்னா... அமைதியாக இருந்த என் மகனை 'இந்தக் கறுப்பனையான்னு' அவமரியாதையாகப் பேசினா... கறுப்புனா என்ன... உன் மகளுக்கு அத்தனை இளக்காரமாயிடுச்சா... வெள்ளைத் தோலைப் போட்டுக் கிட்டிருக்கிறதால் இவ மனசுக்குள்ள வெள்ளைக் காரின்னே நினைப்பு போல இருக்குது..."

அப்பனுக்குப் பொண்ணு நான் தான்னு தப்பாமல் வந்து பொறந்திருக்குது. இந்தத் திமிரையும், அகங்காரத்தையும் ஆண்டவன் அடக்காமல் போக மாட்டான். நாங்களாக ஓடி வந்து, நாங்களாக இவ்வளவும் செய்து இத்தினியூண்டு பொண்ணுகிட்ட இவ்வளவும் கேட்டுக்கிட்டுப் போறோம் பாரு... அதைத்தான் தலையெழுத் துன்றாங்க போல இருக்குது. எங்க புத்தியத்தான் செருப்பால் அடிச்சுக்கணும்... வேற யாரை என்ன சொல்ல முடியும்...?

அன்றைக்கு அவனையும் அழைத்துக் கொண்டு கிளம்பியவர் கள்தான். அதன் பின்னர் அந்த வீட்டுப்படி வாசல் மிதிக்கவில்லை. சென்னை மண்ணில் மீண்டும் கால் பதியவில்லை. அத்தையின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

அத்தை மட்டும் இரண்டு மூன்று முறைகள் ஓடி வந்தாள். கடுதாசி கடுதாசியாக எழுதினாள். எதற்கும் பலனில்லை. அப்பா திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

"இதப்பாரு காவேரி... நீ வா... போ... நான் வேணாம்னு சொல்லல... ஆனா மனசு விட்டுப் போச்சன்னால் மறுபடியும் ஒட்டா துன்னு தெரிஞ்சுக்க..."



24149
4008623

ரம்யா பெரியவளானதைத் தெரிவிக்க மறுபடியும் வந்தாள் அத்தை. அப்பாவை வரச் சொல்லிக் கெஞ்சினாள்.

"தாய்மாமன், நீங்க வரலேன்னா நல்லா இருக்காதுங் கண்ணே..."

"தாய் மாமன்னு நினைச்சிச்சா என் பொண்ணு? பெரியவங் கன்னு மரியாதை தந்திச்சா? நாம் பேசிக்கிட்டிருக்கிறப்ப உள்ள நுழைஞ்சு என்னா எகிறு எகிறுச்சு... பணக்காரங்களுக்கு பணத்திமிர் பிடிக்கிறாப்பல, பதவியில் இருக்கிறவங்களுக்குப் பதவித் திமிர் பிடிக்கிறாப்பல, உன் பொண்ணு அழகாயிருக்கிறோம்னு அழகுத் திமிர் பிடிச்சுக்கிட்டு அலையறா..."

"என் மகனைக் கறுப்பு, கரிக்கட்டைன்னு என் முன்னாலேயே சொல்றா... ஆம்பிளைக்கு என்ன நிறம் வேண்டிக்கிடக்கு...? ஆம்புளைக்கு அழகு வெள்ளைத் தோல் இல்லன்னு எடுத்துச் சொல்லாமல், வரிஞ்சுக் கட்டிக்கிட்டு மல்லுக்கு வந்த பொண்ணை 'வா யை மூடிக்கிட்டு உள்ள போடி'ன்னு அடக்காமல் இன்னிக்கு எனக்கு ஓடியாந்து புத்தி சொல்ற... அன்னிக்கு அந்த தம்மாத் துண்டு பொண்ணுக்கு புத்தி சொல்லவோ, அடக்கவோ உன்னால் முடியல..."

"இல்லீங்கண்ணே... அது நான் சொன்னால் கேட்காதுங் கண்ணே... அப்படி வளர்த்தி வச்சிட்டுப் போயிருக்காரு அவரு..."

"இதப்பாரு... இனிமேல் உன் அடங்காப்பிடாரிப் பொண்ணைப் பத்தின பேச்சை எடுத்துக்கிட்டு என்கிட்ட வராதே... வர்ரியா... வேற ஏதாச்சும் பேசு... நீ சவுக்கியமா நான் சவுக்கியமான்னு ஒப்புக்கு இருந்துக்கிடலாம். பேசிக்கிடலாமே தவிர இனி மேல் வேற எதுவும் நமக்குள்ள சாத்தியப்படாது. அதுவும் அந்தப் பொண்ணு பெரிசானா என்ன... ஆகாட்டிப் போனாத்தான் என்ன... நான் வர மாட்டேன். இனி உன் வீட்டுப்படி மிதிக்கிற எண்ணமே கிடையாது. நீ போயிட்டு வா..."

அதன் பின்னர் அத்தை வருவதும் நின்று போயிற்று. எப்போ தாவது கடிதம் மட்டும் வரும்.

'துணிங்க தைச்சு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யிற கார்மெண்ட் எக்ஸ்போர்ட் கம்பெனில வேலை செய்யறேங்கண்ணே...

வர்ற சம்பளத்துல குடும்பம் நல்லபடியாக ஓடுது. அப்பா, நீங்க, அண்ணி, குணா எல்லாரும் சவுக்கியமா...? ஒழிஞ்சபோது லெட்டர் போடுங்கண்ணே...'

- அத்தை தன் கையாலேயே தப்பு தப்பாகக் கடிதம் எழுதுவாள். அதற்கும் அப்பா பதில் போட்டதில்லை. அப்பாவிற்குத் தெரியாமல் இவன் மட்டும் பதில் எழுதுவான்.

"அப்பாவிற்குத் தெரியாமல் எழுதுகிறேன் அத்தை. நாங்கள் இங்கு நலம். நீங்களும் குழந்தைகளும் நலமா...? எனக்கு அங்கே ஒரு கல்லூரியில் இடம் கிடைத்திருக்கிறது. ஹாஸ்டலில் தங்கி படிக்கப் போகிறேன். நேரில் வந்து உங்களைப் பார்க்கிறேன். ரம்யாவிடம் சொல்லவும்.

அன்புடன்

குணசேகரன்

அதுபோல் இரண்டு மூன்று கடிதங்கள் எழுதினான். கிராமம் விட்டுக் கிளம்பி, கல்லூரியில் சேர்ந்து, ஹாஸ்டலில் தங்கிய பின் அத்தையைப் போய்ப் பார்த்தான். மிகுந்த சந்தோஷப்பட்டாள் அவள். அவன் கைகளைப் பற்றிக் கொண்டு குரல் கரகரக்கச் சொன்னாள்.

"தடியால் அடிச்சு தண்ணிய விலக்கிட முடியாது குணா... அதைப் புரிஞ்சுக்கிட்டு நீயாவது அடிக்கடி வந்து போய்க்கிட்டு இரு. இந்தப் பொண்ணு சொன்னது எதையும் மனசுல வச்சுக்காதே... அதன் சார்புல நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன்..."

"ஐயோ... என்ன அத்தை இது...? ஏன் பெரிய பேச்செல்லாம் பேசறீங்க...? அதையெல்லாம் இன்னுமா மனசுல வச்சுக்கிட்டிருப்பேன்னு நினைக்கிறீங்க...? அப்படி வச்சுக்கிட்டிருந்தால் இப்போ வந்திருப்பேனா...? மறந்துட்டேன் அத்தை... எல்லாத்தையும் எப்பவோ மறந்துட்டேன்..."

சொன்னானே தவிர எதுவும் மறக்கவில்லை. எதையும் மறக்க முடியவில்லை.

'யாரு... நானா...? இந்தக் கறுப்பனையா...?'

மீண்டும் மீண்டும் ரம்யா மனசுக்குள் வந்து போனாள். போனால் தானே வருவதற்கு...? அவள்தான் அங்கு நிலையாக



நிற்கிறாளே...? என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டான். வெள்ளையாகக் கிடந்த பளிங்கு மனதில் பதிந்து போன அவளது உருவத்தை அழிக்கவே முடியாது என்று தோன்றிற்று.

'ரம்யா... உன்னை என்னால் மறக்கவே முடியாது போலிருக்கிறதே ரம்யா...'

அடிக்கடி வாய்விட்டுச் சொல்லிக் கொண்டான்.

'எதற்காக அப்பா அம்மாவுடன் அங்கு போனோம்...? எதற்காக அவளைப் பார்த்தோம்...? பளீரென்று கண்களிற்பட்ட அந்த அழகு பார்த்த மறுவினாடியே ஏன் இப்படி ஓடி வந்து மனதில் ஒட்டிக் கொண்டு விட்டது அதை விலக்கவே முடியாது போலிருக்கிறதே. அகற்றவோ, அழிக்கவோ முடியாது என்று தோன்றுகிறதே... தான் அகன்றால்தான் அதுவும் அகலும் போலிருக்கிறதே... தான் அழிந்தால் தான் அதுவும் அழியும் போலிருக்கிறதே... என்ன செய்வது இதற்கு...? இப்படியே வதைபட வேண்டியதுதானா...? அல்லது ரம்யாவின் மனசு மாறுமா...? எப்போது மாறும்...? எப்படி மாறும்...? மாறுமா மாறாதா...?

'உனக்கு மிகவும் பிடித்த நடிகரான ரஜினிகாந்த் கறுப்புதான் ரம்யா... விஜயகாந்த் கூட கறுப்புதான்... அவர்கள் படமென்றால் ஓடுகிறாயே நீ... அவர்களை ரசிக்கிற உன்னால் என்னை மட்டும் ஏன் ரசிக்க முடியாமல் போயிற்று...? அவர்கள் கறுப்பு பிடிக்கிற உனக்கு என் கறுப்பு மட்டும் ஏன் பிடிக்காமற் போயிற்று...?'

விடை கிடைக்காத அந்தக் கேள்வியை மனதில் வைத்துக் கொண்டு அடிக்கடி அத்தை வீட்டிற்குப் போக ஆரம்பித்தான்.

"ஹாஸ்டல் சாப்பாடு நல்லாவே இல்லீங்க அத்தை... அதான் இங்க சாப்பிடலாம்னு வந்திருக்கேன்..."

'இன்னிக்கு காலேஜ் லீவுங்க அத்தை. பார்த்திட்டுப் போகலாம்னு வந்தேன்...'

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணம். வருகிற போதெல்லாம் பார்வை ரம்யாவைத் தேடும். சில சமயம் நேரிடையாகக் கேட்கும்.

"எங்கே அத்தை... ரம்யா இல்லை...?"

அத்தைக்கும் புரிந்தது. அத்தைக்குப் புரிந்திருப்பது அவனுக்கும் தெரிந்தது. ஆழமாய் பெருமூச்சு விடுவதைத் தவிர அவளால் வேறு எதுவும் செய்ய முடியாது என்பதும் தெரிந்திருந்தது. இதில் யாரும் எதுவும் செய்ய முடியாது. ரம்யாவைத் தவிர...

'ரம்யா.. என்னைப் பாரேன்... என்னிடம் பேசேன்... நான் உன்னை எந்த அளவிற்கு நேசிக்கிறேன் எனத் தெரிந்து கொள்ளேன். உனக்காக எது செய்யவும் காத்துக் கொண்டிருக்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ளேன்...'

மனசு உருகும்; கெஞ்சும். உள்ளுக்குள்ளேயே மன்றாடும். ஆனாலும் பேசாதிருப்பான் அவன். அவள் வருகிற வரை காத்திருந்து 'ஹலோ' சொல்வான்.

பதிலுக்கு அவளும் வெறுமனே ஹலோ சொல்லிவிட்டு மறைவாள். அல்லது ஒப்புக்கு ஏதாவது பொது விஷயம் பேசுவாளே தவிர மனசு விட்டுப் பேசியதில்லை; வாய்விட்டுச் சிரித்ததில்லை.

அவன், "போயிட்டு வரேன்..." என்றால், "ம்.. போயிட்டு வாங்க.." நடந்து கொண்டே பதில் வரும். நின்று நிதானமாகக் கூட வராது. 'நீ வந்தால் எனக்கென்ன போனால் எனக்கென்ன' என்கிற மாதிரி இருக்கும். அத்தனை அலட்சியம் தெறிக்கும்.

நொந்து போவான் அவன். 'ஒரு பெண்ணிற்காக ஏங்குவது ஹிம்சை... மிகப் பெரிய ஹிம்சை. படிக்கப் பிடிக்காமல், சாப்பிட முடியாமல், தூக்கம் வராமல் தவிக்க வைக்கிற ஹிம்சை... கொஞ்சம் கொஞ்சமாக மெழுகு வர்த்தி மாதிரி உள்ளுக்குள்ளேயே உருகி உருக்குலைக்க வைக்கிற ஹிம்சை...

அந்த ஹிம்சையில் மூன்று வருடங்கள் உருகி, உருக்குலைந்து விட்டுப் பின்னர் மீண்டும் ஊருக்குக் கிளம்பிப் போனான் அவன்...

## 6

எங்கு போனாலும் துரத்திக் கொண்டு வந்தாள் ரம்யா. கூடவே ஓடி வந்தாள். உள்ளுக்குள் ஒட்டிக் கொண்டு அலைக் கழித்தாள்.

'மறப்பதா...? என்னையா...? எங்கே, முடிகிறதா பார்...?'



உதட்டைச் சுழித்து வழக்கம் போல் அவனைப் பார்த்து அலட்சியமாகச் சிரித்தாள்.

அதில் இன்னமும் நொந்து போனான் குணசேகரன். அந்த உதட்டுச் சிரிப்பு... அலட்சியம்... 'கடவுளே...! எங்கு போனாலும் விடாதோ...? இப்படித்தான் துரத்திக் கொண்டு வருமோ...? இனி அவளைத் தன்னால் தவிர்க்கவே முடியாதோ...?'

'வேண்டாம் ரம்யா.. தயவு செய்து வேண்டாம். உனக்குத்தான் என்னைப் பிடிக்கவில்லையே... விட்டு விடேன் ப்ளீஸ்...'

தன் இயலாமையை நினைத்து வாய்விட்டு அரற்ற ஆரம்பித்தான்.

'மறக்கவே முடியாதா அவளை...? இப்படித்தான் அல்லாடி அலைக்கழியப் போகிறோமோ...? வாழ்நாள் முழுதும் அவஸ்தைப் படப் போகிறோமோ...?' எதற்காக அங்கு மீனின் முள்ளாக அவளை அவஸ்தைப்படுத்திற்று. அந்த முள்ளை அகற்றுகிற வழி தெரியாதவனாக மனதிற்குள் புலம்பிக் கொண்டான்.

'யார் செத்தால் எனக்கென்ன' என்று பேசாமல் இருந்திருக்கக் கூடாது...? தாத்தா மாதிரி தள்ளி நின்றிருக்கக் கூடாது...? தான் பெற்ற மகளின் புருஷன், சொந்த மருமகன் செத்ததற்கே ஆடவில்லை அவர்; அசங்கவில்லை; அழுத்தமாகக் காலூன்றி நின்றிருந்தார்.

"செத்தது உங்க மருமகன்ப்பா...

சொந்த மருமகன்..." அப்பா ஆத்திரப்பட்ட போது கூட என்ன சொன்னார் அவர்!

'யாராக இருந்தாலும் இனி அவன் புருஷனில்லேடா... பிணம்...'

எப்படிச் சொன்னார்...! எப்படி அசையாமல் நின்றிருந்தார்! அப்படி நிற்க நினைத்தவன். தாத்தா மாதிரி வாழ ஆசைப்பட்டவன். விட்டு விடுதலையாகிற வித்தை கற்றுக் கொண்டவன்.

இப்போது...?

எல்லாம் பொய், கற்ற வித்தை கைவிட்டு, பெண்ணின் அழகிற்கு அடிமையாகி, அல்லாடி, அலைக் கழிந்து... சாப்பிடப் பிடிக்காமல், தூக்கம் வராமல், கொளுத்துகிற சித்திரை வெய்யில் தெரியாமல் வயல் வெளி, கடலைக் கொல்லை, மாந்தோப்பு,

ஏரிக்கரை என இலக்கு ஏதுமின்றி சுற்றி, உடலும் மனமும் ஓய்கிற வரை அலைந்து திரிந்து..

அதன் பின்பு வீடு திரும்பினாலும் பழைய சந்தோஷம், உற்சாகம், சுறுசுறுப்பு எதுவுமில்லை. மூச்சடக்கி உட்காருவதில்லை; நெற்றிப் பொட்டில் நிற்க வைப்பதில்லை; பெற்றோரிடம் பழகுவதில்லை. தாத்தாவிடம் பேசுவதில்லை. அறையோடு அறையாக அடைபட்டு மோட்டு வளையை வெறித்தவாறு உட்கார்ந்து கொண்டு..

ஒரு நாளா... இரண்டு நாட்களா... கிட்டத்தட்ட மூன்று வருடங்களுக்கு மேலாக இதே அல்லாடல், இதே அலைக்கழியல், இதே அவஸ்தைதான்.

'ஏன் இப்படி மாறிப் போனோம்..?'

'எவ்வாறு இவ்வளவு தலைகீழானோம்..?'

விஸ்வாமித்திரரின் ஞாபகம் வந்தது அவனுக்கு. அவரைப் போல் ஒரு பெண்ணின் அழகிற்கு அடிமைப்பட்டு அத்தனையும் காற்றில் பறக்கவிட்டது தெரியவந்தது.

'ஒருபெண்ணின் அழகிற்கு அத்தனை வலிமையா..? அதனால் எத்தனை சாம்ராஜ்யங்கள் எழுந்து விழுந்திருக்கின்றன..! விவரம் தெரிந்து, விஷயம் புரிந்த தானும் அதில் வீழ்ந்தது எவ்வாறு...? சீ! அந்தத் தாத்தாவின் பேரனா நான்..?'

உள்ளுக்குள் வெட்கப்பட்டான். மிகவும் வேதனைப்பட்டுப் போனான். மீண்டும் பழைய குணாவாக முடியாதா என்று ஏக்கப் பட்டான். தறிகெட்டு ஓடுகிற மனதை லகான் போட்டு அடக்க நினைத்தான். கடிவாளமிட்டு நிறுத்தத் துடித்தான். ஆனால் அது எப்படி என்பது புரியாமலும் யார் உதவிக்கு வரப் போகிறார்கள் எனத் தெரியாமலும் தடுமாறினான்.

வேறு யார் வருவார்கள் தாத்தாவைத் தவிர என்கிற எண்ணத்தில் மீண்டும் அவர் நினைவுக்கு வந்தது. வேறு யார் வர முடியும் அவரைத் தவிர எனவும் கூடவே சொல்லிக் கொண்டான். வேறு யாருக்கு அத்தனை தெளிவும் தீர்மானமும் இருக்க முடியும் என்பதில் ஒருவித நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால், தான் சொல்லாமல்



தன் பிரச்சனை தாத்தாவிற்கு எப்படித் தெரியவரும் என்கிற கேள்வி எழுந்ததும் சற்றுமுன் தோன்றிய நம்பிக்கை அணைந்து போயிற்று. மீண்டும் இருட்டும், குழப்பமும் அவனைச் சூழ்ந்து கொண்டன. இதை அவரிடம் எப்படிச் சொல்வது.. என்ன நினைப்பார் அவர்..? நீயா.. நீயா குணா இப்படி..? பொந்திற்குள் எலி நுழைகிற மாதிரி உனக்குள் இந்த எண்ணம் எப்படி நுழைந்தது. ஒரு பெண்ணின் அழகு இந்த அளவிற்கு என்னை அலைக்கழிக்கிறதென்றால்.. அத்தனை வலிமையற்றவனா நீ..? மனத் திண்மையற்றவனா..? என்னிடம் கற்றதற்கெல்லாம் என்ன அர்த்தம்..? எங்கே போயிற்று அவை அனைத்தும்..?

இவை எதையும் கேட்கக் கூட மாட்டார் அவர். ஒரு பார்வை பார்ப்பார். அதில் அத்தனை தீட்சண்யம் இருக்கும். அத்தனைக் கேள்விகளும் வெளிப்படும். நிச்சயமாய் அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. அவர் எதிரில் தலைகுனிந்து நிற்க முடியாது. ஆகவே இந்தப் பிரச்சினையைத் தன்னால் அவரிடம் கொண்டு போக முடியாது என்பதான தயக்கம் வந்து அழுத்தியதில் அவனது பரிதவிப்பு அதிகமாயிற்று.

பதிலற்ற கேள்விகளும், தயக்கமும், சந்தேகமுமாக அவன் தவித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் தாத்தாவிற்குள்ளும் நிறைய கேள்விகள் எழுந்தன. நிறைய சந்தேகங்கள் ஏற்பட்டன. என்ன வாயிற்று இந்த குணசேகரனுக்கு என்று ஆராயத் தொடங்கினார் அவர். ஆடாமல், அசையாமல் கண்மூடி அமைதியாய் மணிக் கணக்கில் உட்காருகிறவன் இப்போது ஏன் இப்படித் தராசுத் தவளை யானான்..? எதற்காக நிலை கொள்ளாமல் அலைகிறான்..? இரவு பகல் பாராமல் அறைக்குள்ளாகவே அடைபட்டுக் கிடக்கிறான்..? தன்னிடம் கூடப் பேசாமல், மருந்து பற்றின கேள்வி எதுவுமில்லாமல், மூச்சடக்கி உட்காராமல், யோகம் பயிலாமல், வாசி பழகாமல்.. இந்த அளவிற்கு ஆடிப் போகிற மாதிரி என்னவாயிற்று அவனுக்கு?

சடாரென்று பொறி தட்டியது அவருக்கு. இன்று நேற்று அல்ல... கிட்டத்தட்ட மூன்று வருடங்களாகவே இப்படித்தான் இருக்கிறான் என்பது நினைவிற்கு வந்தது. மூன்று வருடங்கள் பின்னோக்கி காரணம் தேடிக் கொண்டே போனபோது சட்டென்று ஓர் இடத்தில் முளையடித்த மாதிரி மனசு நின்றது. அந்தப் புதிருக்கான விடை கிடைத்தாற்போல் தோன்றியது.

காவேரியின் புருஷன் இறந்ததற்குப் போனதிலிருந்துதான் இப்படி இருக்கிறான். எதிலும் பிடிப்பின்றி அலைகிறான். மனசை வேறெங்கும் திசை திருப்ப முடியாமல் தவிக்கிறான். நங்கூரம் போட்டு நிலைப்படுத்திவிட்ட இடத்திலிருந்து நகர முடியாமல் சங்கடப் படுகிறான். நங்கூரக் கொக்கி மாட்டி நகரவிடாமல் அடித்து நிறுத்தி யிருப்பதற்குக் காரணம் காவேரி இல்லை... அவள் கணவன் இறந்தது மில்லை... தேர் சக்கரம் எந்தப் பள்ளத்தில் இறங்கியிருக்கிறது என்பது மெல்லத் தெரிய வந்தது.

பிடி கிடைத்த பின்பு முடிச்சவிழ்ப்பது அவருக்குக் கஷ்டமாக இல்லை. மூலம் பிடிபட வெகு நேரமாகவில்லை. வியாதி இன்ன தென்று கண்டுபிடித்த பின் வைத்தியம் பார்ப்பதா பெரிய விஷயம் அவருக்கு...?

இதற்கு மேல் தள்ளிப் போடக் கூடாது. உடனே வைத்தியத்தைத் தொடங்கியாக வேண்டும் என்கிற முடிவில் மெல்ல எழுந்து அவனது அறைக் கதவு திறந்தார். கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து மின் விசிறியின் சுழற்சியை வெறித்துக் கொண்டிருந்தவன் அவர் வந்ததைக் கவனிக்கக் கூட இல்லை. அருகில் போய் மென்மை யாகத் தொட்டார் அவர்.

சடாரென்று திரும்பியவனின் பார்வை ஒரு வினாடி அவர் முகத்தில் பதிந்து மெல்ல கவிழ்ந்து கொண்டது. அந்தப் பார்வையில் தெரிந்த வலி... வேதனை... நெஞ்சின் ரணம்...

எதற்கும் சலனப்படாத அவருக்குள்ளும் ஒரு வருத்தம் ஏற்பட்டது. எப்படிப்பட்டவன் இவன்! இவனுக்கா...? இந்த அளவு வேதனைக்குக் காரணம்? இந்தப் பேரனை அந்தப் பேத்தி வேண்டா மென்று விட்டதுதானோ...?

காவேரியின் பெண் மகா அழகு என குடும்பம் முழுதும் சொல்லக் கேட்டிருக்கிறார். 'அடேயப்பா...! பாப்பாரப் பொண்ணுங்க மாதிரி என்ன நிறம்! எத்தனை அழகு! எவ்வளவு லட்சணம்!' என வியக்கக் கேட்டிருக்கிறார்.

"ஐயோ பொண்ணா அது...! என்னதான் அழகாயிருக்கட்டும். அதுக்காக இப்பிடியா திமிர் பிடிச்ச அலையும். அப்பனுக்கு இருந்த அதே அகங்காரமும், மனுசங்களை மதிக்காத இளக்காரமும்



இதுக்குமில்ல வந்திருக்குது... பெரியவங்கன்ற மட்டு மரியாதை கூட இல்லாம எத்தினித் துடுக்கா தூக்கி எரிஞ்சுப் பேசுது... இப்படி வளர்த்தி வச்சிருக்காங்களே... எங்க போய் குப்பைக் கொட்டப் போவுதோ அது...!" மருமகனின் சாவிற்குப் போய்விட்டு வந்த பின் மகனும், மருமகளும் மாறி மாறி அங்கலாய்த்துக் கொண்டிருந்ததும் காதில் விழுந்தது.

நாள்தோறும் நடந்து கொண்டிருந்த வசைமாறிப் பொழிதலில் ஒரு நாள் தாங்க முடியாதவராகக் கேட்டே விட்டார் அவர்.

"ஏம்ப்பா சுந்தரம்... எதுக்கு நீயும் செண்பகமும் அந்தப் பொண்ணை இந்தப் பேச்சுப் பேசறீங்க...? அப்பிடி என்னதான் செஞ்சிச்சு அது...?"

ஒரு சின்னத் தூண்டல் அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது. பாட்டிலைத் திறந்த பூதமாக வெளிப்பட்டார்கள்.

'பொண்ணாப்பா அது. முளைச்சு மூணு இலை விடல... என்ன பேச்சு பேசுதுங்கறீங்க... காரியமெல்லாம் ஆனதுக்கப்புறம் நான் காவேரியைக் கூப்பிட்டேம்ப்பா. அங்கே தனியா இருந்து என்ன செய்யப் போறே. குழந்தைங்களையெல்லாம் கூட்டிக்கிட்டுக் கூட வந்துடுன்னேன். அவ என்னவோ பெரிய இவ மாதிரி தானே வேலை செய்து தன் புள்ளைங்களைக் காப்பாத்திக்குவேன்னு வீம்பு பேசுனா...மனசு கேக்கல... கூடப் பொறந்தவ அம்போன்னு நிக்கப் போறாளே... அதுவும் நாலு குழந்தைங்களை வச்சுக்கிட்டு நடுத் தெருவுல நிக்கப் போறாளேங்கிற ஆதங்கத்துல கேட்டேன்... 'நாளைக்கே உன் பொண்ணு என் மகன் குணாவைக் கட்டிக்கிட்டு மருமகளாக என் வீட்டுக்கு வரப் போறவதானே... நாளைக்கு வர்றதை இன்னிக்கே வந்திடட்டும். கூட சேர்ந்து நீங்க எல்லோரும் வந்திருங்க' ன்னேன்...

"அவ்வளவு, தாம்ப்பா... சோறு தின்னுக்கிட்டிருந்த கையை உதறிக் கிட்டு எழுந்திடுச்சு அந்தப் பொண்ணு... சாமி வந்த மாதிரி முகமும், கண்ணும் செவக்க என்னைப் பார்த்துக் கத்திச்சுப் பாருங்க... அந்தக் கூடமே அதிர்ந்துப் போயிடுச்சப்பா..."

"அப்பிடி என்னப்பா கத்திச்சு அது...?" அமைதியாகவே கேட்டார் அவர்.

அதைக் கேட்டு சுந்தரம் சாமியாடினான். கறுப்பு முகம் ஜிவுஜிவுக்கப் பேசினான்.

"என்னவா..? அவ அழகு சுந்தரி, ரதி ரம்பை பாருங்க.. அந்தத் திமிர்ல கேட்டுச்சே ஒரு கேள்வி.. 'யாரு.. நானா..? கல்யாணம் பண்ணிக்கிறதா..? இந்தக் கறுப்பனையா?'ன்னு நம்ம குணாவைக் கைகாட்டிச்சுப் பாருங்க.. நீங்கன்னா அங்கியே ஓங்கிக் கன்னத்துல ஒன்னு விட்டிருப்பீங்க.. சில்லு மூக்கு உடைஞ்சு ரத்தம் கொட்டி யிருக்கும்.. நான் பொறுமையா அமைதியா திரும்பி வந்திட்டேன். கறுப்பன், கரிக்கட்டைன்னு எத்தினி இளக்காரமாப் பேசிச்சு அது.. நினைச்சு நினைச்சு ஆற மாட்டேங்குது.. அப்பிடியே அப்பனைக் கொண்டு வந்திருக்குப்பா... அவ்வளவு நிர்தாட்சண்யம்... செவப்புத் தோலுங்கிற கர்வம்.."

சொல்லிச் சொல்லி சுந்தரமும், செண்பகமும் மாள, அப்போது மவுனமாக இருந்து விட்டார் அவர். அவ்வளவு பெரிய விஷயமாக அதை எடுத்துக் கொள்ளவில்லை. அவரைப் பொருத்த வரை பெரிய விஷயமும் இல்லை.

ஆனால், அதுவே இன்று பூதாகாரமாய் விஸ்வரூபம் எடுத்து குணசேகரனை வாட்டிக் கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டார். வெளியில் தெரியாமல் உள்ளுக்குள்ளேயே புரையோடிப் போன புற்று நோயாக அவன் அவஸ்தைப்படுவது தெரிந்து கொண்டார். சாதாரண வலியா அது..? தாங்க முடியாத வலியா..? அந்த வலி தாங்க முடியாமல் தான் இப்படி அல்லாடி அலைக்கழிகிறாயா..? அறையோடு.அறையாக அடைபட்டு அவஸ்தைப் படுகிறாயா..?

அந்தப் பெண்ணின் அழகில் மட்டும் அவன் விழவில்லை. அவளின் அந்த அலட்சியம், அகம்பாவம் அனைத்திலும் வீழ்ந்து தவிக்கிறான். எப்பேர்ப்பட்டவன் ராவணேஸ்வரன்..! எத்தனைக் கலை களுக்கு அதிபதி! எப்படிப்பட்ட சிவபக்தன்! அவன் சரிந்து விழுந்த இடம் அது தானே..!

ராவணனாவது ராஜா. சக்ரவர்த்தி.. மன்னாதி மன்னன்... மன்னர்களுக்கு இது சகஜம் என்று விட்டுவிட்டாலும், எப்படிப்பட்ட மாமுனிவர் விஸ்வாமித்திரர்... என்ன தவம்! என்ன வலிமை..!



அப்படிப்பட்ட மகாதபஸ்வியே தடுமாறிய இடமாயிற்றே! தடுக்கித் தலைகுப்புற விழுந்த இடமாயிற்றே!

ஆனானப்பட்டவர்களெல்லாம் வீழ்ந்த இடமல்லவா அது! அம்மாடி! அழகான பெண்ணிற்கு இத்தனை வலிமையா..! யானையின் பலமா..! என்று ஆச்சரியப்பட்டார் அவர். எப்படிப்பட்டவர்களையும் அசத்திக் காலின் கீழ் போட்டு மிதித்துத் துவைத்து விடுகிறதே..!

அந்த மிதிபடுதலிலிருந்து குணசேகரனைக் காப்பாற்றி விடவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார். இனியும் இப்படி அவனைத் தவிக்க விடக்கூடாது. தத்தளிக்க வைக்கக் கூடாது. நீந்திக் கரையேறக் கற்றுத் தந்துவிட வேண்டும். மூழ்கிக் கொண்டிருக்கிற புதை சேற்றிலிருந்து இழுத்து வெளியில் போட்டு விடவேண்டும். உள்ளுக்குள் அடைபட்டு மூச்சுத் திணறிப் போகாமல் வெளிக்காற்றை சுவாசிக்க வைக்க வேண்டும். பரந்து கிடக்கிற வானம் காட்ட வேண்டும். மலைகளின் உயரத்தை அண்ணார்ந்து பார்க்க வைக்க வேண்டும்.

இவற்றைப் பார்க்கத்தான் நீ இருக்கிறாய். நிமிர்ந்து நிற்கத்தான் பிறந்திருக்கிறாயே தவிர குனிவதற்கல்ல.. மற்றவர்களைப் போல் நீ சாதாரண மனிதனில்லை. குணசேகரா..! ஊரைக் கட்டு இல்லை. இதற்கெல்லாம் வாடிப் போய்விடக் கூடாது. இது வந்தது தப்பில்லை. உள்ளுக்குள் நுழைந்தது தப்பில்லை. ஆனால், அங்கேயே நிலையாக நின்று கொண்டிராமல் அடித்துக் கொண்டு போய்விட வேண்டும். அப்படி அடித்துக் கொண்டு போகிறபோது நீயும் கூடப் போய்விடக் கூடாது. அழுத்தமாகக் காலூன்றக் கற்றுக் கொள்ள வேண்டும்..'

'வா.. நான் கற்றுத் தருகிறேன். இதென்ன பெரிய விஷயம்..? சாதாரண விஷயம்... பெண் விஷயம்... பூ என்று ஊதித் தள்ள வேண்டிய விஷயம் என்று அலட்சியம் காட்டித் தருகிறேன்.. ஒதுக்கித் தள்ள வேண்டியதையா உள்ளுக்குள் போட்டு ரணப்படுத்திக் கொண்டு வலியும் வேதனையுமாக வதைபடுவது..?

'குணசேகரா.. நீ என் பேரன்.. என் பேரன்..'

அடி வயிற்றிலிருந்து கிளம்ப யத்தனித்த பெருமூச்சை அடக்கிக் கொண்டு அமைதியாகச் சொன்னார் அவர்.

"வா... கொஞ்சம் வெளியே போயிட்டு வரலாம்... உன் கூடப் பேசி ரொம்ப நாளாச்சு பாரு..."

அதற்கெனவே காத்துக் கொண்டிருந்த மாதிரி அப்படியே அவரோடு கிளம்பிப் போனான் அவன்...

## 7

குணசேகரனை அழைத்துக் கொண்டு தெருவோடு நடந்து போனார் தாத்தா. எத்தனையோ முறை அவனுடன் அவ்வாறு நடந்து போயிருக்கிறார். ஆனால் அன்று என்னவோ புதிதாகத் தெரிந்தது. மிகவும் வித்தியாசமானதாகப்பட்டது. இதுவரை அவனுடன் அவ்வாறு நடந்தேயிராத உணர்வு தோன்றியது.

அந்த உணர்வு தந்த சந்தோஷத்தில் காலை வீசிப் போட்டு நடந்தார். நடக்க நடக்க மண் தெருவில் புழுதி கிளம்பிற்று அப்புழுதியில் பாதங்கள் புதையப் புதைய நடப்பது அதி உற்சாகமாக இருந்தது.

புழுதி என்றால் அது நகரத்துப் புழுதி அல்ல. வாகனப் புகையும் பெட்ரோல் நாற்றமும் கலந்த விஞ்ஞானப் புழுதியல்ல. மிக நல்ல கிராமத்துப் புழுதி வைக்கோல் மணமும், சாணத்தின் வாசனையும் கலந்து வீசிய சுகாதாரமான புழுதி. அந்தப் புழுதியும் கிராமத்து மண் மணமும் சேர்ந்து தாத்தாவை மிகவும் சந்தோஷப் படுத்தின. அந்த சந்தோஷத்தில் திரும்பி குணசேகரனைப் பார்த்தார் அவர். குழந்தையாகச் சிரித்துக் கொண்டே கேட்டார்.

"இப்படிப் புழுதியில் கால் புதைய நடக்கிற போது கல்யாண்ஜி எழுதின கவிதை ஒன்று ஞாபகத்துக்கு வருது. நீ அதைப் படிச்சிருக்கியா குணா...?"

கொஞ்சம் கூட சம்பந்தமில்லாத அந்தக் கேள்வியைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை குணசேகரன். 'கவிதை பற்றிப் பேசுகிற நேரமா இது...?' என்கிற எரிச்சல் ஏற்பட்டது. தன் மனநிலை புரியாமல் இங்கிதம் தெரியாமல் ஏன் இப்படி ஆரம்பிக்கிறார் தாத்தா...? ஆரம்பமே இவ்வாறு இருக்குமானால் பேச்சின் முடிவு எங்கு போய் நிற்கும் என்பதான கவலை ஏற்பட படிக்கவில்லை என்று பதிலளிக்கிற வகையில் தலையாட்டினான்.



'படிக்கலையா...?!' என அதிர்ச்சியடைந்த மாதிரி அவனைப் பார்த்தார் அவர்.

"வர வர கவிதை கூடப் படிக்க மாட்டேன்ற... அதுலயும் கல்யாண்ஜியின் கவிதை படிக்கலேன்னு தலையாட்ற... சரி... நீ படிக்காட்டிப் போனாப் பரவாயில்லை. நான் சொல்றேன் கேட்டுக்க..."

'கவிதை கேட்பதா...? இப்போதா...? அதுவும் இந்த மனநிலையிலா...? என்னவாகி விட்டது தாத்தாவிற்கு...?'

"என்ன பார்க்கிற...? சொல்லட்டுமா...? கேட்கறியா...?"

கேட்காமல் தன்னை அவர் விடப்போவதில்லை என்பதைப் புரிந்து கொண்டு 'சரி' என மீண்டும் தலையாட்டி வைத்தான். கணீரென்ற கோவில் மணிக்குரலில், கவியரங்கங்களில் கவிதை வாசிக்கிற தொனியில் ஆரம்பித்தார் அவர்

*ஊரின் எல்லையில்*

*ஓயாத பேராறு*

*எல்லாத் தெருவிலும்*

*ஏகப்பட்ட புழுதி.*

*நினைக்க ஆறு*

*நடக்க நடுத்தெரு*

சொல்லிவிட்டு முகத்தில் ஒருவிதப் பெருமை பொங்க அவனைப் பார்த்தார்.

"எப்படியிருக்கு...?"

"நல்லாயிருக்கு..."

"இதுதானே வேணாங்கிறது...?" என்று குரல் இறக்கினார். "எப்படி நல்லாயிருக்க முடியும்...? ஆற்றை நினைச்சுக்கிட்டேப் போனால் நடுத்தெரு ஆறாகி விடாதா...? எல்லாவற்றிற்கும் நினைப்புத் தானே காரணம்...? நாம் எது நினைக்கிறோமோ அதுவாக இல்ல ஆகிறோம்...? நம்ம நினைப்புலதானே எல்லாம் இருக்கு. நம்ம நினைப்பு யார் கையில் இருக்கு...? நம் கையில்தானே இருக்கு...?"

சடாரென்று குளிர்ந்த நீரை வாரி முகத்தில் அறைந்த மாதிரி இருந்தது அவனுக்கு. உள்ளுக்குள் சிலிர்த்துப் போயிற்று. சந்தர்ப்பம் தெரியாத கேள்வியா அது..! சம்பந்தமில்லாததா...? இங்கிதம் தெரியாதவரா இவர்..! யம்மாடி..! எங்கு ஆரம்பித்து எங்கு வருகிறார்! எப்படிப் பிடிக்கிறார்! எமகாதக மனிதர்! யாருக்கு வரும் இந்த சாதுர்யம்...? யாரால் இவரை வெல்ல முடியும்...?

சட்டென்று தாத்தாவை இறுகக் கட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. கன்னத்தில் முத்தமிட வேண்டுமென்றிருந்தது. தன்னை அடக்கிக் கொண்டான். அதற்குப் பின் அவரும் ஒன்றும் கேட்கவில்லை. அமைதியாகவே நடந்தார்கள். சொல்லி வைத்த மாதிரி இருவரும் பெரிய குளத்தின் படிக்கட்டு வரை வந்தார்கள். படிக்கட்டிற்கு மேலிருந்த கட்டைச் சுவரில் உட்கார்ந்து கொண்டார்கள். கருங்கல் சுவர் கூட இல்லை. வெறும் மண் சுவர்தான். ஆனாலும் பிட்டத்தில் அதன் சூடு பரவிற்று. அதில் வெய்யிலின் உக்கிரம் தெரிந்தது.

சுற்றிலும் ஒருமுறை நோட்டம் விட்டார் தாத்தா. சூரியன் சாய்ந்து மறைய சிறிது நேரமிருந்தது. 'இதோ.. கொஞ்சம் கொஞ்சமாக மறையப் போகிறேன்..' என்று சொல்கிறாற்போல் தோன்றியது. பார்த்துக்கொண்டே வந்தால் தடாலென்று மறைந்துவிடும். கண்ணிமைக்காமல் காத்திருந்தால் கூட மறைகிற நேரம் தெரியாது. சரேலென்று அந்த ஆரஞ்சுப் பந்து இருந்த இடம் தெரியாமல் அமுங்கிப் போய்விடும். 'அடேடே..! பார்த்துக் கொண்டிருந்தோமே... எப்போது மறைந்தது..?' என்கிற ஆச்சரியம் ஏற்படும்.

சூரியன் மறைவதை, சந்திரன் உதித்து முழுவதுமாக வெளிவருவதை, மொட்டு விரிந்து மலராவதை யாரால் பார்க்க இயலும்...? இவை மூன்றும் நிகழுகின்ற அந்த க்ஷணப்பொழுதைப் பிடிக்க யாருக்கு வரும்..? இந்த சிருஷ்டி ரகசியம் பிடிபட்டவன் இங்கு ஏன் இருக்கப் போகிறான்..? இதில் கிடந்து உழலப் போகிறான்..?

ஒரு சின்னப் பெருமூச்சோடு பார்வையை உயர்த்தினார் தாத்தா. மஞ்சள் வெய்யில் நீரில் விழாதவாறு எதிர்க்கரையின் மரங்கள் தடுத்துக் கொண்டு நிற்பதைப் பார்த்தார். கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஆள் நடமாட்டமின்றி அந்த இடம் மோனமாகக் கிடந்தது.



அறுவடைக்கு நின்ற வயல்வெளியெங்கும் குச்சு குச்சாகப் பழுப்புத் தாள்களின் அணிவகுப்பு தெரிந்தது. புல் பூண்டுகள்கூட வெய்யிலின் உக்கிரம் தாங்காமல் சாய்ந்து, கருகி, புழுதி மண்டினாற் போலிருந்தது. காற்றில் தூசு வாசனையும், வைக்கோல் மணமும் கலந்து வீசிற்று.

அந்தக் காற்று, குளத்து நீரில் படிந்து அலை அலையாக ஓடிற்று. படித்துறைக்கு இரு பக்கங்களிலும் இருந்த அரச மரங்கள் சலசலத்தன. நீள நீளமான விழுதுகள் தொங்கிய ஆல மரங்கள் யாராலும் தங்களை அசைக்க முடியாது என்கிற கம்பீரத்தோடு நின்று கொண்டிருந்தன.

குளத்து நீரலைகளையும், தளிர் முற்றாத அரச மரங்களையும், ஜடாமுடி முனிவர்களை ஞாபகப்படுத்துகிற ஆலமரங்களையும் குளத்தங்கரையைச் சுற்றின மேட்டில் பரந்து வளர்ந்திருந்த புளிய மரங்களையும், தூங்கு மூஞ்சிகளையும், தொலை தூரத்துப் பனை மரங்களையும் மாறிமாறிப் பார்த்து அந்த மோனத்தில் நீண்ட நேரம் லயித்துக் கிடந்தார் தாத்தா. பின்னர் சடாரென்று நிகழ்காலம் நினைவிற்கு வர தலையை உதறிவிட்டுக் கொண்டார். 'என்ன இது..?' என்கிற எண்ணத்தில் குணசேகரனின் பக்கம் திரும்பினார்.

அப்போதுதான் தன்னோடு அவன் வந்ததும், பக்கத்தில் உட்கார்ந்திருப்பதும் உணர்வில் உறைக்க ஆரம்பித்தது. எதற்காக அவனை அழைத்து வந்தோம் என்பது மெல்ல பிடிபடத் துவங்கிய நேரத்தில் தன்னை சுதாரித்துக் கொண்டார். மல்யுத்தக்காரனைப் போல் நேரிடையாகவே கோதாவில் இறங்கினார்.

"சொல்லு குணா..? ஏன் இப்படி இருக்க..? எது உன் மனசைப் போட்டு இத்தனைக் கஷ்டப்படுத்துது..?"

அவரைப் பார்ப்பது தவிர்த்து மெல்ல தலைகுனிந்து கொண்டான் அவன். அவனுள் தைத்துக் கொண்டு நிற்கும் முள்ளை எடுக்க வேண்டுமானால் ஊசியால் குத்தித்தான் ஆக வேண்டும். வேறு வழி இல்லை என்பதைப் புரிந்து கொண்டு அவரே ஆரம்பித்தார்.

"... மனசு இப்போதெல்லாம் நிலையா நிக்க மாட்டேன்னுது போல இருக்கு. உட்கார்ந்தியானால் மணிக்கணக்கில் அப்படியே கிடப்ப... இப்ப என்னடான்னா கொதிக்கிற வெய்யிலில் கால்ல

செருப்பு கூடப் போடாமல் கழனி, களத்து மேடு, கொல்லை வெளின்னு அலையிற.. வீட்டுக்குத் திரும்பி வந்தா எப்போது பார்த்தாலும் ரூமுக்குள்ளாறவே அடைஞ்சுக் கிடக்கிற.. மருந்து பற்றின விசாரிப்பு இல்ல.. என்கிட்ட பேசறதில்ல. பெற்றவங்க முகத்தைக் கூட பார்க்கிறதில்லை. சரியான சாப்பாடில்ல. தூக்கமில்ல. இந்த வயசுல இந்த அளவுக்கு அலைக்கழியணும்னால் .. யார் அவ..? உன் அத்தை மகதானே..? காவேரியின் பொண்ணுதானே..?"

குரல் உயர்த்தாமல், வார்த்தைகளை அழுத்தாமல் மிகவும் மெதுவாகத்தான் கேட்டார். ஆனால் அதுவே அவனுக்குள் கோடாரியாக இறங்கிற்று. வலி பொறுக்க முடியாதவனாக நிமிர்ந்து அவரைப் பார்த்தான் அவன்.

அந்தப் பார்வை..அதில் தெரிந்த நெஞ்சின் ரணம்..! இதயத்து வேதனை..!

ஒரு வினாடி கண்மூடி மவுனித்தார் பெரியவர். இன்ன மருந்து தர வேண்டும் என்பதைத் தீர்மானித்து மெல்ல அவனது தோள் தொட்டார். பின்னர் முதுகிற்கு இறங்கினார். மெதுவாக வருடிக் கொடுக்கத் துவங்கினார். அந்த ஸ்பரிசத்தில் அவனுக்கு ஒருமுறை உடம்பு உதறிற்று. முதுகுத் தண்டு சொடுக்கிற்று. உள்ளுக்குள் எதுவோ மெல்ல மெல்ல அடங்கிக் கொண்டு வருவது புரிந்தது. சடாரென்று அத்தனை நாட்களாக இருந்து வந்த தவிப்பும், தள்ளாடலும், வலியும் வேதனையும் மறைந்து அந்த இடத்தை அமைதி ஆக்கிரமிக்கத் தொடங்கிற்று. அமைதி என்றால் சாதாரண அமைதியில்லை. மேலோட்டமான அமைதியில்லை. ஆழ்ந்த, நிச்சலனமான அமைதி. இத்தனை நாட்களும் தேடியலைந்தானே.. அந்த அமைதி, இவ்வளவு சுலபமாய்.. சீக்கிரமாய்.. வினாடி நேரத்தில்.. வெறும் ஸ்பரிசத்தில்.. சாதாரண வருடலில்..

உள்ளக்குள் சிலிர்ப்பு ஓட மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்க அவரை ஏறிட்டான்.

'தாத்தா.. இது எப்படி வந்தது..? எங்கிருந்து இந்தக் கலையைக் கற்றுக் கொண்டீர்கள்..? அந்தக் காலத்தில் நீங்கள் போன அனுராதபுரத்திலிருந்தா..? ரிஷிகேசத்திலிருந்தா..? உலகம் முழுவதும் உள்ள அத்தனை மனிதர்களையும் ஒருமுறை உங்கள் கையால் தொட்டு வருடிக் கொடுத்து விட்டு வாங்களேன்..'



"என்ன குணா அப்படிப் பார்க்கிற..?"

"ஒன்னுமில்ல தாத்தா.."

"ஒன்னுமில்லைன்னு நீ சொல்றதுலதான் ஆயிரம் விஷயமிருக்கு. உனக்கு நான் ஒன்னு சொல்ல ஆசைப்படறேன் குணா. சொல்லட்டுமா..? கேட்பியா..?"

"இதுவரை நீங்க சொல்லி நான் எதைக் கேட்காமற் போயிருக்கேன் தாத்தா..?"

"கேட்டிருக்க.. எல்லாம் கேட்டிருக்க.. கேட்டுக் கேட்டு மொத்தமும் கத்துக்கிட்டிருக்க. ஆனால், இப்போ அந்தப் பழைய குணசேகரன் காணாமற் போய்விட்ட மாதிரியில்ல தெரியுது.. இப்போது இருக்கிறது புது குணசேகரன்னு இல்ல தோணுது.."

சடாரென்று உடைந்து தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முற்பட்டான் அவன்.

"இல்ல தாத்தா.. நானும் பழைய குணசேகரனாகத்தான் தவிக்கிறேன். மீண்டும் பழைய மாதிரி ஆகிவிட மாட்டோமான்னு துடிக்கிறேன். இந்தப் புது குணசேகரனை எனக்கே பிடிக்கல தாத்தா.. ஏன் இப்படி ஆனோம்னு கோபம் கோபமாக வருது. எப்படி பழைய மாதிரி ஆகப் போறோங்கிற வழி தெரியாமல்தான் திண்டாடிக்கிட்டிருக்கேன் தாத்தா.."

"வழிதானே தெரியல.. நான் காட்டித் தரேன். என் கையைப் பிடிச்சுக்கிட்டு கூடவே வா. நீ நிக்கிற இருட்டிலிருந்து வெளிய கொண்டுக்கிட்டு வந்திடறேன் என்ன.. வருவியா..?"

"வரேன் தாத்தா.. நிச்சயமாக வரேன். அப்படி வரணும்னு தானே நானும் ஆசைப்படறேன்."

"நீ ஆசைப்படறது எத்தனை நிஜமோ அதே மாதிரி உன்னை வெளியே கொண்டுக்கிட்டு வந்திடணும்னு நான் ஆசைப்படறதும் அத்தனை நிஜம். இதெல்லாம் நிஜமாக இருக்கிறபோது வேறு சில நிஜங்களை மனசு விட்டுப் பேசியே தீரணும்.. வேற வழி இல்ல.. என்ன.. பேச ஆரம்பிக்கட்டுமா? கேட்கறியா..?"

"சொல்லுங்க தாத்தா.. கேட்டுக்கறேன்.."

ஒரு ஆரம்பத்தைத் தேடுகிறவராகக் கால் வினாடி அமைதியாக இருந்து பின்னர் சட்டென்று துவக்கினார்.

"இப்படிப் பார்க்கிற விஷயங்களிலெல்லாம் மனதைப் பறிகொடுத்துவிடக் கூடாது குணா. அமைதி போய்விடும். நிம்மதி கெட்டுவிடும். இவை இரண்டையும் இழந்த பின் வேறு எதை வாங்கப் போகிறோம் சொல்லு..? இவை இரண்டையும் இழந்த பின்பு வேறு எதை வாங்கினால்தான் என்ன..?"

"இல்ல தாத்தா... பார்க்கிற எல்லாத்துலயும் நான் இப்படி மனசைப் பறி கொடுக்கிறவனில்லேன்கிறது உங்களுக்கே தெரியும்."

"சரி. அப்படின்னா இதுல மட்டும் ஏன் பறி கொடுத்த..?"

சடாரென்று திரும்பி அவரைப் பார்த்தான். அவன் அந்தப் பார்வையில் மீண்டும் உள்ளே நுழைந்து விட்ட வலியும், வேதனையும் அவருக்குப் புரிந்தது. சற்று முன்பு தோன்றிய அமைதி அகன்று விட்டது தெரிந்தது. அவன் மீது எல்லையில்லாத இரக்கம் ஏற்பட்டது. குரலைத் தழைத்து மிகவும் மென்மையாக்கிக் கொண்டார் அவர்.

"-- அதுக்குக் காரணம் அந்தப் பொண்ணோட அழகு. இல்லையா குணா..? பளிச்சுனு, வெள்ளை வெளேர்னு தங்க விக்கிரகம் மாதிரி இருக்குதுன்னு எல்லாரும் சொல்றாங்களே... அந்த அழகு. ஆமாம். அப்பிடியா இருக்குது. அந்தப் பொண்ணு...? எல்லாரும் சொல்ற அளவு அத்தின அழகாகவா இருக்குது..?"

"ஆமாம் தாத்தா?" சொன்ன போது அவன் கண்களில் தோன்றிய மின்னலைக் கவனித்துக் கொண்டார் அவர். பாவமாக இருந்தது ரம்யா மீது அவனுக்கு ஏற்பட்ட அதே பரிதாபம் இப்போது அவன் மீது அவருக்கு ஏற்பட்டது. மெல்ல அவனை அதிலிருந்து மீட்டு வெளியில் கொண்டு வந்து விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டார். அது இழப்பே இல்லை என்பதைப் புரிய வைத்துவிட வேண்டும். எதையும் வலியும் வேதனையுமற்று பார்க்கச் செய்ய வேண்டும். எல்லாவற்றையும் விட்டுத் தள்ளி நிற்கச் செய்ய வேண்டும்.

தள்ளி நிற்றல் சுகமானது. இதமானது. மனதை லேசாக்கக் கூடியது இந்த இதத்தை, சுகத்தை அவனுக்கு எப்படிக் கற்பிப்பது? எங்கிருந்து ஆரம்பிப்பது..!



நீண்ட வெண்மையான தாடியை வருடியவாறு யோசிக்கத் தொடங்கினார் அவர்...

# 8

தன்...ரபீந்திரநாத் தாகூர் மாதிரி, ஸ்ரீ அரபிந்தோ மாதிரி நீண்டு வளர்ந்திருந்த தன் வெள்ளை நிறத் தாடியைத் தடவியபடி வெகுநேரம் பேசாதிருந்தார் தாத்தா. தொலை தூரத்தை வெறித்தவாறு மௌனமாகவே இருந்தார். அவராகவே மீண்டும் பேச்சைத் துவக்குவார் எனக் காத்திருந்த குணசேகரன் பொறுமையிழந்து போனான். கீழே குனிந்து பளபளவென்றிருந்த கூழாங் கற்களைப் பொறுக்கி ஒவ்வொன்றாகக் குளத்தில் எறிய ஆரம்பித்தான்.

காற்றின் சிற்றலைகள் தவிர சலனமற்றுக் கிடந்த குளத்து நீரில் 'களக்'கென்ற சத்தத்தோடு விழுந்த கூழாங்கற்கள் வட்ட வடிவில் பெரிய பெரிய அலைகளாக எழுப்பின. அந்த சத்தத்தில் சட்டென்று கவனம் கலைந்து திரும்பிய தாத்தா அதையே தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார்.

"அதும் பாட்டுக்கு அமைதியாகக் கிடந்த குளத்துல கல்லெறிஞ்சு எப்படி சலனத்தை உண்டாக்கிட்ட பார்த்தியா? இதே மாதிரித்தான் உனக்குள்ளேயும் நீயே ஒரு கல்லை எறிஞ்சுக்கிட்டு சலனத்தை ஏற்படுத்திக்கிட்டுக் கஷ்டப்படற..."

அதற்குப் பதில் சொல்ல வழியின்றி தலைகுனிந்து கொண்டான் அவன்.

"இதப்பாரு குணா..! என்னைப் பாரு... சரி, நீ சொல்ற மாதிரி அந்தப் பொண்ணு அவ்வளவு அழகுன்னே வச்சிக்க. ஆனால், அந்த மாதிரி அழகை இதுவரை நீ பார்த்தே இல்லையாப்பா?"

"இல்லை தாத்தா... இத்தனை அழகான பொண்ணை என் ...ழ்நாளில் நான் பார்த்ததில்லை..."

"மனுஷங்களை விடு; அழியற அழகு... நானாக ஆகத் தேயற ...கு... அதைப் போய் என்னவோ பெரிசா பிரமிச்சுப் பேசற. ...ற்கையை எடுத்துக்க... உலகம் உள்ளவரை இருக்கப் போகிற இந்த ...ற்கை அழகில்லையா? இதோ எதிரில் தெரிகிற குளம், சுற்றி பரந்து

நிற்கிற மரங்கள், நீல நிறத்தில் விரிந்து கிடக்கிற ஆகாயம், அதில் முளைக்கிற நட்சத்திரங்கள், உக்கிரமாக உதிக்கிற சூரியன் மென்மையான கிரணங்களோடு வெளியில் வருகிற சந்திரன் வீட்டுத் தோட்டம் முழுசும் கலர் கலராகக் கம்பளம் விரிச்ச பூத்துக் கிடக்கிற பூக்கள்... இவற்றிலெல்லாம் அழகு தெரிய சொல்ற மனித அழகை மிஞ்சின அபூர்வ அழகுகளோடு உன் கண்ணுக்குப் படல...?"

தன்னை எங்கு பிடிக்க வருகிறார் என்று அறிந்து கொள்கிற முயற்சியில் அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

"என்ன குணா அப்படிப் பார்க்கிற? இவையெல்லாம் அழகுன்னு படலையா உனக்கு...? அபூர்வ அழகுகளாகத் தெரியலையா...? எத்தனை ராத்திரி வானத்தை அண்ணார்ந்து பார்த்து மலைச்சுப் போய் நின்னிருக்க... ஐயோ! என்ன அழகு தாத்தா...! எத்தினி அழகுன்னு மாய்ஞ்சுப் போயிருக்க... பௌர்ணமி நிலவைப் பார்த்துகிட்டே இருந்திருக்க. அமாவாசை இருட்டை எப்படி ரசிச்சிருக்க... தாத்தா, இதனால்தான் பாரதி கருநீலப் புடவையடின்னு பாட்டெழுதினானான்னு கேட்டிருக்க...?"

அந்த உண்மையில் தலைகுனிந்து போயிற்று அவனுக்கு. ஆனாலும் அவர் விடுவதாக இல்லை. சொல்ல நினைத்தவற்றையெல்லாம் சொல்லி விடுகிற உத்வேகத்தோடு ஆரம்பித்தார்.

"... உண்மைகளை எதிர்நோக்கக் கத்துக்க குணா, தைரியமாகப் பார்க்கப் தெரிஞ்சுக்க. நீ சொன்ன மாதிரி அபூர்வமான அழகுகளாக எத்தனை இல்லை இந்த உலகத்துலன்னு நீயே நினைச்சுப் பாரு. வானம் அழகு; நட்சத்திரங்கள் அழகு; சூரிய சந்திரர்கள் அழகு; பூமி அழகு; அதன் பசுமை அழகு; மலை அழகு; அதிலிருந்து விழுகின்ற நீர்வீழ்ச்சி அழகு. அவ்வளவு தூரத்திற்குக் கூடப் போக வேண்டாம். எதிரில் தெரிகிற இந்தக் குளம். இதன் கரையோர மரங்கள். நம் முன்னால் படர்ந்து கிடக்கின்ற இந்த மோனம்... இவையெல்லாம் அழகு தானே? எல்லாவற்றிலும் அழகு தானே?

"இவை அனைத்தையும் தள்ளி நின்று ரசிக்க முடிகிறது. அந்த ரசனை சாத்தியமானதாகிறது. ஆனால் ஒரு பெண்ணின் அழகை மட்டும் தள்ளி நின்று ரசிக்க முடியல; அது சாத்தியமானதாகயில்ல;



அந்த அழகைத் தன்னுடையதாக்கிக் கொள்ளணும்னு தோணுது. மனசு அந்த ஆளுமைக்கு ஆசைப்பட்டு ஏங்கித் தவிக்குதில்ல."

"அது... அது வந்து... நீங்க சொன்ன மற்ற எதையும் தன்னுடையதாக்கிக் கொள்ள முடியாது தாத்தா..."

"ஏன் முடியாதுன்னு கொஞ்சம் யோசிச்சுப் பாரு குணா... யோசிச்சு பதில் சொல்லு."

பதில் சொல்லாது பேசாதிருந்தான் அவன். தலைகுனிந்து மௌனமாக இருந்தான்.

"ஏன் குணா பேசாமல் இருக்க...? உனக்கே பதில் தெரிஞ்சுப் போச்சுன்னு நினைக்கிறேன். இப்போ நான் கேட்டதற்குப்புறம்னு இல்ல. ஏற்கனவே தெரிஞ்சிருக்கு. ஒத்துக்க முடியாமல்தான் சங்கடப்பட்டுக்கிட்டிருக்க. அதுக்கெல்லாம் விலை இல்லை. ஆனால் பொண்ணுங்களுக்கு விலை இருக்கு. ஏதோ ஒரு விலை. பணம் மட்டுமில்லாமல் வேறு ஏதேதோ விலை. பதவி, அந்தஸ்து, உத்யோகம், வீடு, வாசல், நிலம் நீச்சுன்னு ஏகப்பட்ட விலை... இதெல்லாம் கொடுக்க முடிஞ்சவங்க வாங்கிடறாங்க. சொந்தமாக்கி வச்சுக்கிடறாங்க. முடியாதவங்க உன்னை மாதிரி மனசுக்குள்ளப் போட்டு மறுகறாங்க."

"தாத்-தா...!" என்று குரல் தழுதழுத்தான் அவன்.

"இயற்கையோட அதி வலிமையான சக்தி பொண்ணுங்கதான் குணா. அவுங்களுக்காக நடக்கிற போராட்டங்கள்தான் அதிகமானதாக இருக்குது. எத்தனையோ யுத்தங்கள் நடந்து முடிஞ்சிருக்குது. உண்மையாகப் பார்த்தால் மகாபாரத யுத்தம் கூட மண்ணுக்காக நடக்கல. திரௌபதிங்கிற பொண்ணுக்காகத்தான் நடந்திருக்குது. கண்ணுக்குத் தெரிஞ்ச யுத்தங்கள் ஆயிரமானால் தெரியாத யுத்தங்கள் எத்தனையோ ஆயிரம். நீ கூட உன்னுக்குள்ள யுத்தப்படுத்திக்கிட்டுத்தானிருக்க. உன்னை நீயே காயப்படுத்திக்கிட்டு வலிதாங்க முடியாமல் தவிக்கிற. அதனால்தான் பார்க்கிற விஷயங்களிலெல்லாம் மனசைப் பறிகொடுத்து விடக்கூடாதுன்னு சொல்றது..."

அவரே கால் விநாடி நிறுத்திப் பின்னர் மென்மையும், குழைவும் கலந்த குரலில் தொடர்ந்தார்.

“அதுவுமில்லாமல் இன்னொரு விஷயத்தையும் நீ எப்படிப் புரிஞ்சுக்காமல் போனேன்னு தெரியல. நீ நினைக்கிற மாதிரி அந்தப் பொண்ணு என்ன நினைக்கிறதோ..? அதுக்கு எத்தனை ஆசைகளோ..? அடி மனசின் எண்ணங்கள் என்னவோ..?”

“அதனால்தான் ஆரம்பத்துலேயே சொன்னேன். நினைக்க ஆறு நடக்க நடுத்தெருன்னு கல்யாண்ஜி எழுதினதில் எனக்கு உடன் பாடில்லேன்னேன். கல்யாண்ஜிங்கிறவரு ரொம்பப் பெரிய எழுத்தாளர். அற்புதமா எழுதுவாரு. இப்படி எழுதறவரு ரொம்பப் பெரிய மனுஷனாகத்தான் இருக்கணும்னு அடிக்கடி நினைச்சுக்குவேன். அப்படிப்பட்டவர் ஏன் இப்படி எழுதினாருங்கிறது என் சின்ன அறிவுக்குப் பிடிபட மாட்டேங்குது. ஆற்றை நினைச்சுக்கிட்டே நடந்தால் தெரு கூட ஆறாத் தெரியாதாங்கிறது தான் என் கேள்வி. நாம் எதை நினைக்கிறோமோ அதுவாகி விட மாட்டோமான்றது தான் என் வாதம். நினைப்பதாக ஆகலேன்னால் எண்ணங்களுக்கு வலிமை இல்லை. நினைப்பது நியாயமில்லேன்னு தானே அர்த்தம்..?”

“நினைப்பது நியாயமாக இருந்தால் அது தானாக நடக்கும். நடக்கணும். எந்த நியாயமும் தோற்றுப் போனதில்லை. மனுஷக் கணக்குக்கு வேணும்னால் தோற்றுப் போன மாதிரி தெரியலாம். ஆனால் இயற்கையின் கணக்குக்குத் தோல்வியே கிடையாது. அதன் கணக்கு வேற கணக்கு அதைப் போட நம்மால் முடியாது. நீ நல்லவன். யோசிப்பவன். விவரம் தெரிஞ்சவன், மனசாட்சிக்கு மாறாகப் போகாதவன். அதனால்தான் இத்தனையும் பேசறேன். கேள்வி மேல் கேள்வி கேட்கிறேன். அதே தைரியத்துல இன்னும் ஒரு கேள்வி கேட்கணும். அதையும் கேட்டு விடட்டுமா..?”

‘என்ன கேள்வி..?’ என்கிறார் போல் அவரை ஏறிட்டான் அவன். அந்த மனது புண்பட்டு விடக்கூடாது என்று நிதானமாக, பக்குவமாக ஆரம்பித்தார் அவர்.

“ஏன் குணா... அந்தப் பொண்ணுக்கு சகல விதத்திலும் ஏத்தவன்னு உன்னை நீயே ஒத்துக்கறியா..? ஒப்புக்கறியா..? இல்ல, நான் ஆம்பிளை. ஆம்பிளைக்கு ஆம்பிளையாக இருக்கிற ஒரு தகுதி தவிர வேறு என்ன தகுதி வேணும்..? எப்படி இருந்தா என்னன்னு நாக்குல நரம்பில்லாமல் சொல்லுதே இந்த உலகம்... அப்படி நினைக்கறியா...”



“தாத்தா..!” என்று அதிர்ச்சி தாங்க முடியாமல் சடாரென்று குறுக்கிட்டானவன்.

“அதிர்ச்சியாக இருக்குதில்ல..? தாங்கிக்க முடியல இல்ல..? தகுதிக்கு மீறி மனசு ஆசைப்படுதுன்னு தெரியுதில்ல..? உனக்கு ஆசைகள் இருக்கிற மாதிரி அந்தப் பொண்ணுக்கும் ஆசைகள் இருக்குமில்ல..? அதுவும் அத்தினி அழகான பொண்ணுன்னு சொல்றீங்க... சாதாரண அழகு கொண்ட பொண்ணுங்களுக்கே தனக்குப் புருஷனாக வரப் போகிறவன் நல்லா நிறமா, லட்சணமா, பெரிய படிப்பு படிச்சவனா நல்ல உத்தியோகத்துல இருக்கிறவனாக வரணும்ன்னு ஆசைப்படற போது அந்தப் பொண்ணுக்கு ஆசை இருக்கிறது தப்பா..?

“அதுக்காக நீ அழகில்லேன்னு சொல்ல வரல்ல நான். அழகுங்கிறது அவங்கவங்க மனசைப் பொருத்த விஷயம். சில பேருக்கு வெள்ளைத் தோலைப் போட்டுக்கிட்டு மினுக்கணும். பார்க்கிறவங்களை மருட்டணும். சில பேருக்குக் கறுப்பு அழகு காந்தலே ருசி, அதனால்தான் பாரதி காக்கைச் சிறகினிலே நந்தலாலா... நின்தன் கரியநிறம் தோன்றுதய்யா நந்தலாலான்னு பாடினாரு... உனக்கு அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்கு. ஆனால் அந்தப் பொண்ணுக்கு உன் கறுப்பு நிறம் பிடிக்கல. அதனாலதான் ‘நானா..? கல்யாணம் பண்ணிக்கிறதா..? இந்தக் கறுப்பனையா’ன்னு கேட்டிருக்கு...”

“... பிடிக்கிறதும் பிடிக்காமல் போறதும் அவங்கவங்க மனோ பாவத்தைப் பொருத்த விஷயம் குணா. இல்லை. உனக்குப் பிடிச்சுத்தான் ஆகணும்னு வற்புறுத்த முடியுமாப்பா..? அப்படி வற்புறுத்தலாமா..? உனக்குப் பிடிக்கிறதுக்கு இருக்கிற உரிமை அந்தப் பொண்ணுக்கு பிடிக்காமப் போறதுக்கும் இருக்குதில்ல. பொண்ணுன்ற காரணத்தினாலேயே வற்புறுத்தித் திணிக்கலாமா..? அதுவும் அந்தக் காரியத்தை நீ செய்யலாமா..? சொல்லு குணா..? நான் சொன்ன இத்தனை விஷயங்களும் உனக்குத் தெரியாததில்ல... உன் அறிவுக்குப் பிடிபடாததில்ல... சொந்தப் பிரச்சினைங்கிற போது - எதுவும் தனக்குன்னு வர்றபோது மற்றவங்களுக்குத்தான் பார்வை மாறும். கோணங்கள் வித்தியாசப்படும். நியாயங்கள் வேறுபடும். உனக்கும் அவ்வாறு வேறுபடலாமா குணா..? நியாயங்கள் மாறுபடலாமான்றதை நீயே சொல்லு..?”

உருகிப் போனான் அவன். நெகிழ்ந்து அவர் கையைப் பற்றிக் கொண்டான். அதில் எது எதையோ சொல்ல முயன்றான். ஒன்றும் சொல்லமுடியாமல், வார்த்தைகள் வராமல் தவித்தான். அத்தனை நாட்களாகத் தனக்குள் விழுந்து கிடந்த பெரிய திரை அகன்ற மாதிரி தோன்றியது. நிரப்பப்பட முடியாத பள்ளம் ஒன்று நிரம்பிய மாதிரி இருந்தது. ஏற்கெனவே மெல்லப் பிடிபட்டுக் கொண்டு வந்த உண்மைகள் பளீரெனப் புலப்பட ஆரம்பித்தன.

கண்களை மூடிக் கொண்டான் அவன்.

'அர்ஜுனனுக்குக் கிருஷ்ணர் மாதிரி தனக்குத் தாத்தாவோ..? கர்ம யோகம் பயில்விப்பவரோ..?'

மெல்ல அவன் தோள் தொட்டார் அவர். முதுகு வருடிக் கொடுத்தார். மென்மையாய்,நிதானமாய் மனதையும் வருடிக் கொடுக்கிற இதத்தில் பேச்சைத் துவக்கினார்.

"அதுக்காகத்தாம்ப்பா தள்ளி நிற்கச் சொல்றது. விலகி நின்று பார்க்கச் சொல்றது. ஒரு பூவைக் கூட அது இருக்கின்ற இடத்தில் வைத்தே ரசிக்கச் சொல்றது. வானம், சமுத்திரம், நீர் நிலைகள், மலை உயரங்களை யெல்லாம் அவை இருக்கின்ற இடங்களில் வைத்தே ரசிக்க முடிகிற போது, பெண்ணையும், பூவையும் மட்டும் தன் வீட்டில் கொண்டு வந்து வைக்கத் தோன்றுகிறதே.. தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு விடத் துடிக்கிறதே.. அது ஏன்..?

"சிலபேர் வேரோடு செடியைப் பிடுங்கிக் கொண்டு வந்து தன் வீட்டில் நட்டு அழகு பார்ப்பார்கள். பூக்களைப் பறித்துக் கட்டித் தங்கள் தலையில் வைத்துக் கொள்வார்கள். எவ்வளவு சுயநலம்! எத்தகைய ஆளுமை! பூ அது இருக்கிற செடியிலேயே இருக்கட்டுமே.. செடி அது முளைத்த பூமியிலேயே வளரட்டுமே.. அவையவை இருக்க வேண்டிய இடத்தில் இருக்கக்கூடிய விதத்தில் இருந்து விட்டுப் போகட்டுமென விட்டு விடுங்களேன்.. தள்ளி நின்று ரசிக்கக் கற்றுக் கொள்ளுங்களேன்.. எதையும் சொந்தமாக்கிக் கொண்டால்தான் ரசிக்க முடியுமா..? சொந்தமாக்கிக் கொண்டபின் எத்தனை பேர் ரசித்திருக்கிறார்கள் என்பதைச் சற்று யோசித்துப் பார் குணா."

"போதும் தாத்தா.. போதும்" என்று இடையில் குறுக்கிட்டான் அவன். "புரிந்து போய் விட்டது தாத்தா.. எனக்குள்



விழுந்துகிடந்த மாயத்திரை விலகி விட்டது.. இனி நான் பழைய குணா தாத்தா.. உங்களுடைய குணா.."

சரேலென்று எழுந்து நின்றவர் அவனை இழுத்துத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

"இதுல தப்பு எதுவுமில்ல குணா.. பெரிய குற்றம் ஒன்றும் நிகழ்ந்து போயிடல.. சாதாரண பலவீனம். மனித பலவீனம். அந்த பலவீனம் உன்னுக்குள் நுழைஞ்சது கூடத் தப்பில்ல. ஆனால், அங்கேயே தங்கிப் புரையோடத் தொடங்குச்சுப் பாரு.. அதுதான் தப்பு. புண்ணாக்கிப் போய் வலியாகப் பரவி வாட்டி எடுத்திச்சு பாரு.. அதுதான் என்னையும் கஷ்டப்படுத்திச்சு. உனக்குள் புரையோடிப் போன புண்ணுக்குப் பச்சிலை வச்சுக் கட்டத்தான் நான் உன்னை இங்கு கூட்டிக்கிட்டு வந்தேன். ரணமாறத்தான் அழைச்சுக்கிட்டு வந்தேன். ஒரு வைத்தியன் செய்ய வேண்டிய வேலையைத்தான் செய்தேன். முதல்ல கட்டியைக் கீறி ரத்தமும், சீழும் அகற்றினால்தான் பச்சிலை வைத்துக் கட்ட முடியும். கீறின போது ரொம்ப வலிச்சுச்சாப்பா..? தாங்கிக்கிறது கஷ்டமாக இருந்திச்சா..?

"இல்லை தாத்தா.. இல்லை. யாரவாது கீறி எடுக்க மாட்டாங்களான்னுதான் காத்துக்கிட்டிருந்தேன். உங்களைத் தவிர பக்குவமாகக் கீறி எடுக்க யாருக்கு வரும்னும் நினைச்சுக்கிட்டிருந்தேன்.."

"சரிப்பா.. மருந்து வச்சுக் கட்டினபோது எரிஞ்சிச்சா..?"

"ஊஹூம் கொஞ்சம் கூட எரியல. உங்க மருந்து எரியுமா தாத்தா..?"

"இப்போ எப்படியிருக்கு..?"

"சில்லுனு இதமா இருக்கு தாத்தா. மூடிக்கிடந்த மொத்தக் கதவையும் திறந்துவிட்ட மாதிரி இருக்கு. அறைக்குள் அடைபட்டு இருட்டிலும், புழுக்கத்திலும் மூச்சுத் திணறி தவிச்சுக்கிட்டிருந்தவனுக்கு, சிலுசிலுன்னு காத்து வீசின மாதிரி ஆகிப் போச்சு.."

மெல்ல சிரித்துக் கொண்டார் தாத்தா..

"ரொம்ப இருட்டிடுச்சு.. வா போகலாம்.." என்று எழுந்து நடந்து கொண்டே கேட்டார்.

"படிச்சு முடிச்சு பாஸ் செய்திட்ட போலிருக்கே குணா.. மேல என்ன செய்யிறதாக உத்தேசம்..?"

"திரும்பவும் மெட்றாஸுக்குப் போகலாம்னு இருக்கேன் தாத்தா..."

"போய்.. ?"

"மேல படிக்கப் போறேன் தாத்தா..!"

"என்ன படிக்கப் போற..?"

"உங்க படிப்புதான். இதே மருத்துவம்தான். முறையா, தொழில் ரீதியா எம்.டி. முடிச்சு உங்க வழியில் தொடரலாம் என்கிற உத்தேசம் தான்..."

"செய்.. ஜாம் ஜாம்னு சந்தோஷமாகச் செய். எல்லாரையும் காப்பாத்து. வலின்னு வர்றவங்க வேதனை அகற்று. நோய்னு நெருங்குகிறவங்களுக்கு நலம் தேடித்தா.. நான் உன்கூட எப்பவும் இருப்பேன். என் ஆசிர்வாதம் என்னென்னிக்கும் உனக்கு உண்டு..."

மனமும் முகமும் மலர கை தூக்கி ஆசிர்வதித்தார் அவர்.

## 9

தாத்தாவின் அந்த ஆசிர்வாதம் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. காலையிலும் மாலையிலும் கிளினிக்கில் கூட்டம் நிரம்பி வழிகிறது. டோக்கன் கொடுத்து வரிசையாக அனுப்புகிற அளவிற்கு ஜேஜே என்றிருக்கிறது. கூட்டத்தைக் கட்டுப்படுத்தப் பையன் ஒருவன் இருக்கிறான். மருந்து மாத்திரைகளில் உதவி செய்ய மகேஸ்வரியம்மாள் இருக்கிறாள். மகேஸ்வரியம்மாளுக்கு உதவி செய்ய இரு உதவியாளர்களை வைத்திருக்கிறான். தொழிலில் நம்பிக்கை, நாணயம் இருக்கிறது. எப்படிப்பட்ட வியாதிகளையும் தீர்க்க முடிகிற திறமை இருக்கிறது. ஓஹோ என்று ஓடுகிறது. சுற்று வட்டாரமெங்கும் பரவிய பெயர் மெல்ல மெல்ல சென்னை முழுவதிலும் பரவி வெளியூர்களுக்கும் எட்டிக் கொண்டிருக்கிறது. டில்லி, பம்பாய், கல்கத்தா என வர ஆரம்பித்து இப்போது பினாங்கு, மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா வரை விரிவடைந்திருக்கிறது. போதாததற்குத் தனியார் தொலைக் காட்சி நிறுவனம் ஒன்று வாரா வாரம் வந்து பேட்டி காண்கிறது.



சிறுநீரகக் கோளாறு, ஆஸ்துமா, அல்சர், கான்சர், ரத்த அழுத்தம், ரத்த சோகை, க்ஷயம், கபம், வாதம், முடக்கு வாதம், பக்கவாதம் எல்லாவற்றிற்கும் தற்காப்பு முறைகள் சொன்னான். முன்கூட்டித் தடுக்கின்ற வழிகள் விளக்கினான். மனம் பற்றிப் பேசினான். எண்ணங்கள் பற்றி எடுத்துக் கூறினான். தொலைக் காட்சிப் பேட்டி போதாதென்று பத்திரிகைகள் பக்கங்கள் ஒதுக்குகின்றன.

6284001 என்கிற எண்கள் கொண்ட அவனது தொலைபேசி ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அலுக்காமல், சலிக்காமல், அமைதியாக, இதமாக அவனும் பேசிக் கொண்டிருக்கிறான். யாரோடு என்ன பேசினாலும் அடிமனதில் தாத்தாவின் நினைவு மூச்சுக் காற்றாக ஓடிக் கொண்டிருக்கிறது. சீராக நாடித் துடிப்பு மாதிரி இயங்கிக் கொண்டிருக்கிறது. இத்தனை பெயருக்கும், புகழுக்கும் காரணம் தாத்தா, இந்த அனுபவத்திற்குக் காரணம் தாத்தா, இவ்வளவு அமைதிக்கும், நிதானத்திற்கும் காரணம் தாத்தா.

அன்று மட்டும் தாத்தா தன்னை அழைத்துப் போய் பேசியிருக்காது போனால்.. கை பற்றி இழுத்து வெளியில் போட்டிருக்காது போனால்..?

உள்ளுக்குள்ளேயே அடைபட்டுப் போயிருப்பான். உடைந்து நொறுங்கியிருப்பான். எதற்கும் உதவாதவனாகியிருப்பான்.

அப்படியெல்லாம் நேராமல் நிமிர்ந்து நிற்கிற இன்றைய இந்த குணசேகரன் தாத்தா தந்த குணசேகரன். ஓஹோ என்று ஓடுகிற இந்த வைத்தியம் தாத்தா தந்த வைத்தியம். இத்தனைத் தெளிவு, திடம், தன்னம்பிக்கை, தீர்மானம்.. எல்லாமே தாத்தா தாத்தா. தாத்தாதான்..

உடனே ஓடிப்போய் தாத்தாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. எங்கு ஓடி எங்கு அவரைப் பார்ப்பது என்கிற எண்ணம் எழப் பேசாதிருந்தான். கூடவே வெளியிலிருந்து எவ்வாறு அவரைப் பார்க்க இயலும் என்ற கேள்வியும் எழுந்தது. வெளித்தோற்றத்திற்கு, வெளி உலகத்திற்குத் தாத்தா இல்லை என்பதுதான் நிஜம். தாத்தா இல்லை என்பது எவ்வளவு நிஜமோ, அதே மாதிரி அவர் தன்னில் ஒருவராய் தனக்குள் உறைந்து போய் விட்டதும் நிஜம். இது யாருக்கும் தெரியாத நிஜம். சொன்னாலும் நம்பமாட்டார்கள். சொல்லவும் அவன் தயாராக இல்லை.

இனிவிக் ஆரம்பிப்பதற்கு முன் தாத்தாவைக் கூட்டி வர ஊருக்குப் போயிருந்தான் அவன். அவர்கையால் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட வேண்டும் என்கிற ஆர்வத்தில் போனான். போன போதே வீட்டின் நடு முற்றத்தில் கயிற்றுக் கட்டிலில் வானம் பார்த்தவாறு படுத்துக் கிடந்தார். அது அவர் இடமில்லை. அவ்வாறு படுப்பவர் இல்லை. அவர் படுக்கிற நேரமுமில்லை. விடியற்காலையில் முதல் கோழி கூவும்போது எழுந்தால் நிச்சயமாகக் கைக்கடிகார முள்ளை நாலு என்று திருப்பி வைத்துக் கொள்ளலாம். வாசல் திண்ணையில் வெற்றுத் தரைதான் படுக்கை. இதுவரை திண்ணை தாண்டி அவர் உள்ளே வந்து அவன் பார்த்ததில்லை. அப்படி வந்தாரானால் அதி முக்கியமாய் ஏதோ பேசப் போகிறார் என்று அர்த்தம். அன்று அவனது அறைக்குள் வந்து மோட்டு வளையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவனை,

"வா.. கொஞ்சம் வெளிய போயிட்டு வரலாம். உன்கூடப் பேசி ரொம்ப நாளாச்சு பாரு.." என்று அழைத்துக் கொண்டு போய் குளத்தங்கரையின் குட்டிச் சுவர் மீது உட்கார வைத்துப் பேசினாரே.. உன்மத்தம் தெளிய வைத்தாரே.. கதவு திறந்து காற்றும் வெளிச்சமும் வரவழைத்தாரே.. கை பற்றியிழுத்து வெளியில் போட்டு அவன் அனுபவித்துக் கொண்டிருந்த வலியையும், வேதனையையும் போக்கடித்தாரே.. அவன் இழப்பு என்று நினைத்துக் கொண்டிருந்ததை இழப்பே இல்லை என்பதைப் புரிய வைத்தாரே.. எதையும் தன்னுடையதாக்கிக் கொள்ளாமல் தள்ளி நின்று பார்க்க, ரசிக்கக் கற்றுக் கொடுத்தாரே..

அன்றுதான் அவர் வாசல்படி தாண்டி, கூடம் தாண்டி, அவன் அறை வரை வந்த முதல் முறையாக இருக்கும் என நினைத்துக் கொண்டான். அப்படிப்பட்டவர் இங்கு ஏன் வந்து படுத்துக் கொண்டிருக்கிறார்..?

"என்ன தாத்தா.. இங்க வந்து படுத்துக்கிட்டிருக்கீங்க..?"

திரும்பி அவனைப் பார்த்த முகத்தில் சடாரென்று ஒரு மலர்ச்சி தெரிந்தது.

"நீ வரணும் உன்னைப் பார்க்கணும்னுதான் நினைச்சுக்கிட்டே இருந்தேன்.. நியாயமான தீவிரமான எண்ணங்களுக்கு எவ்வளவு



வலிமை இருக்குதுன்னு பார்த்தியா..? எண்ணங்கள் ஏன் நடக்கிறதில்லேன்னால் ஒன்னு நியாயமில்லாததாக இருக்கும். இல்லே தீவிர வலிமையற்றதாக இருக்கும். இவை இரண்டும் இல்லாத காரணத்தால்தான் நிறைய பேருடைய நிறைய எண்ணங்கள் நிறைவேறாமற் போகும். மூணு நாளாக ரொம்பத் தீவிரமாக உன்னையே நினைச்சுக்கிட்டிருந்தேன். நீ பஸ் ஏறி, ரயில் பிடிச்சு வர்ற மாதிரியெல்லாம் கூட அழுத்தமாக நம்ப ஆரம்பிச்சேன். அது உன்னை இங்கே கொண்டு வந்து சேர்த்திடுச்சு.. இந்தத் தீவிர, மிகத் தீவிர, ஒருமுகப்படுத்தப்பட்ட எண்ணம் இருக்குது பாரு குணா.. இதைத் தான் இங்கிலீஷ்ல டெலிபதின்னு செல்றாங்க.. க்ளேரி வாயன்ஸ் ஸ"ன்றாங்க.."

கண்ணிமைக்கும் நேரம் நிறுத்தி மீண்டும் ஆரம்பித்து விட்டார் அவர்.

"ரொம்ப நாளைக்கு முன்னால், கிட்டத்தட்ட ஏழெட்டு வருஷத்துக்கு முன்னால் 'நினைக்க ஆறு நடக்க நடுத்தெரு' கவிதை சொன்னேனே.. ஞாபகமிருக்கா. அது வாழ்க்கையின் நிஜம் சொல்கிற கவிதை; யதார்த்தம் சொல்கிற கவிதை.. நான் என்ன சொல்றேன்னால் நாம் எதை நினைக்கிறோமோ அதை நிஜமாக்கிடணும், யதார்த்தத்துக்குக் கொண்டு வந்திடணும், அதற்கு என்ன தேவைன்னு சொல்லு பார்க்கலாம்..? உன்னால் முடியும்.. கொஞ்சம் யோசிச்சி யானால் சொல்ல முடியும்.. சொல்லு..?"

மடமடவென்று அருவி மாதிரி வந்த அந்தப் பேச்சு தாத்தாவின் இயல்பு இல்லை. இயற்கைக் குணமில்லை. வந்ததும் வராததுமாக இப்படிக் கொட்டமாட்டார். காரணமற்றுப் பேச மாட்டார். நின்று நிதானித்து ஒவ்வொரு சொற்களாகப் பொறுக்கிக் கோப்பாரே.. அந்தக் கோர்ப்பு இல்லை. அதையெல்லாம் விட முக்கியமானதாக இப்படி வீட்டின் நடு முற்றத்திற்கு வந்து படுக்க மாட்டாரே.. கட்டாந்தரையும், ஒருக்களித்த கையும் தவிர வேறு கேட்க மாட்டாரே..

"ஏன் தாத்தா இப்படி வெறுந்தரையில் படுத்துக் கிடக்கிறீங்க? ஒரு பாய் விரிச்சு தலைகாணி வச்சுக்கக் கூடாது..?"

எத்தனையோ தரம் கேட்டிருக்கிறான் அவன். அப்போதெல்லாம் பெரிதாய் சிரிப்பார். அந்தச் சிரிப்பு தான் அதற்குப் பதில்.

வேறு பதில் வராது. இப்போதும் அதே மாதிரி அவனைப் பார்த்துச் சிரித்தார். பின்னர் அருகினில் அழைத்தார்.

"குணா இங்கே வாயேன். கிட்ட வாயேன்..." அவருக்கு மிக அருகில் போய் நின்றான் அவன்.

"என்ன தாத்தா?"

"ஒண்ணுமில்ல... வழக்கப்படி ஒரு கவிதை சொல்லணும்னு தோணிச்சு, சொல்லட்டுமா...?"

"எப்பவும் போல் கல்யாண்ஜியின் கவிதை சொல்லப் போறீங்க... அதானே...?"

"அதான் இல்லை... இந்தத் தரம் கல்யாண்ஜி இல்லை. கவிதைன்னால் கல்யாண்ஜி மட்டும்தான்னு நினைச்சுக் கிட்டிருக்கியா...? நகுலன், கலாப் ப்ரியா, ஞானக்கூத்தன், எஸ். வைத்தீஸ்வரன், விக்ரமாதித்யன், பிரம்மராஜன், க்ருஷாங்கினி, ஆத்மா நாம்னு எத்தனை பேர் இல்லை...?"

"சரி. இதுல இப்போ நீங்க சொல்லப் போறது யாருடைய கவிதை...?"

"ஆத்மாநாம் என்பவருடையது. ஹும்... கவிதை இருக்கு அவரில்லை..."

"அவரில்லைன்னால்...?"

"இல்லைதான். சரி விடு. அது எதுக்கு நமக்கு...? இல்லைன்றது எது...? வெறும் உடம்புதானே...? அதுவா முக்கியம்...? அதுக்காகவா பழகறோம்... அதை மீறி உள்ளுக்குள்ள இருக்குது பாரு... அதையே அவரு பேரா வச்சுக்கிட்டிருந்திருக்காரு. அதுதான் கவிதைகளாகவும் வெளிப்பட்டிருக்கு. அதுதான் எனக்கு வேணுமே தவிர மனுஷ னில்லை. எல்லாருக்கும் இருக்கிற கண்ணு, மூக்கு, வாய், ரெண்டு கை, ரெண்டு கால் இல்லை... இவை தான் அத்தனைக் கோடி ஜனங் களுக்கும் இருக்குதே... இவை தவிர என்ன இருக்குது?" என்று கேட்டுவிட்டு அவனைப் பார்த்தார். மெல்லப் புன்னகைத்துக் கொண்டே தொடர்ந்தார்.

"சாதாரண ஜனங்க கிட்ட கேளு. இவை தவிர வேற என்ன வெல்லாம் இருக்குதுன்னு சொல்லுவாங்க. வீடு, வாசல், நஞ்சையில்



இத்தனை ஏக்கர், புஞ்செயில் இத்தினி ஏக்கரு, சொத்து, சுகம், பணம், பதவின்னு நிறைய அடுக்கிக் கிட்டே போவாங்க. இதெல்லாம் சேர்ந்தாத்தான் அவுங்களுக்கு மனுசங்க. நான் சொல்றது இதெல்லாம் இல்லை. எனக்கு மனுஷங்க வேற... என் மனுஷங்களின் ஒருத்தருதான் ஆத்மாநாம். ஆத்மாநாம்னால் அவரது முகமில்லை. உடம்பு இல்லை. அதெல்லாம் எனக்குத் தெரியாது. தெரியவும் வேணாம். எனக்குத் தெரிஞ்ச ஆத்மாநாமை, என்னென்னிக்கும் நிலையான நிருபணமாக நிற்கப் போகிற ஆத்மாநாமை, தமிழ்மொழி இருக்கிற வரை இருக்கப் போகிற ஆத்மாநாமை உனக்குக் காட்டட்டுமா...? நான் தெரிஞ்சு வச்சிருக்கிற ஆத்மாநாமை நீயும் தெரிஞ்சுக்க வேணாமா...? அறிமுகப் படுத்தட்டுமா...? பழகிக்கிறியா...?"

இது மாதிரி பேசுபவர்தான் தாத்தா. ஆனால் இந்த முறை ஓர் அதீத பூடகம் தெரிந்தது; அவர் படிக்கிற கவிதைகள் போலவே பேசுவதாகத் தோன்றியது. கிளம்பி வேகம் பிடித்து விட்ட ரயிலை ஓடிப் போய்ப் பிடிப்பவனது உத்வேகம் காணப்பட்டது. ஏன் இந்த அவசரம்...? எதற்காக இப்படி எல்லாவற்றையும் கொட்டத் தவிக்கிறார்...?

இப்படியெல்லாம் தவிக்கக் கூடியவரில்லையே அவர்...?

வந்ததும் வராததுமாக இவ்வாறு ஆரம்பிப்பவரில்லையே...?

வீட்டின் உட்புறம் நுழைபவரில்லையே?

கயிற்றுக் கட்டில் போட்டுப் படுத்துக் கிடப்பவரில்லையே?

இந்நேரத்திற்கெல்லாம் மருந்துப் பையைத் தூக்கித் தோளின் மீது போட்டுக் கொண்டு சுற்றுபவராயிற்றே...? வீடு வீடாக அலையறவராயிற்றே...?

அவையெல்லாம் விட்டு... என்னவாயிற்று இவருக்கு...? அவரது இயற்கைக்கு மாறாக முரண்பட்டு ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார்?

உள்ளுக்குள் ஒவ்வொன்றாய் எழுந்த கேள்விகளை அடக்கிக் கொண்டான். பக்கத்தில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமைதியாக உட்கார்ந்து கொண்டான். அவரது கையைப்

பற்றி தன் கை விரல்களோடு கோர்த்துக் கொண்டான். 'அமைதியாக இருங்கள் தாத்தா..' என்கிறார் போல் மெல்ல ஒரு தரம் அழுத்தினான்.

"ம்.. சொல்லுங்க தாத்தா ஆத்மாநாமோட கவிதையை.." என்றான்.

முகம் பளிச்சிட ஆரம்பித்தார் அவர்.

"என்னைக் களைந்தேன்
என் உடல் இருந்தது
என் உடலைக் களைந்தேன்
நான் இருந்தது
நானைக் களைந்தேன்
வெற்றிடத்துச் சூனிய வெளி இருந்தது
சூனிய வெளியைக் களைந்தேன்
ஒன்றுமே இல்லை"

சொல்லி முடித்து ஒரு வினாடி அமைதியாக இருந்தார் தாத்தா.. அவர் எங்கு வருகிறார் என்பதைப் புரிந்து கொண்டு அவனும் பேசாதிருந்தான். ஆனால் மனதிற்குள் பாறாங்கல் ஒன்று விழுந்த மாதிரி கனத்துப் போயிற்று. பெரிதான வெற்றிடமாக ஒன்று ஏற்படப் போவதற்கான அறிகுறி தெரிந்தது. அது தாங்க முடியாததாக இருக்குமெனப் பட்டது. அந்த வெற்றிடத்தை நிரப்ப வேறு யாரால் முடியும்..? இந்தப் பிரியம் இந்தத் தோழமை, இத்தனை அறிவார்ந்த பேச்சு.. இவற்றிற்கு எங்கு போவான்..? யாரிடம் பேசுவான்...? யாரிடம் பேச இயலும்..? தாத்தாவைத் தவிர வேறு யார் தெரியும்...? நினைவு தெரிந்த நாள் முதலாகத் தாத்தா. தாத்தா, தாத்தாதானே..?

எட்டு வயதில் அவனை இழுத்து நிறுத்தி ஒரு கேள்வி கேட்டாரே..

"இந்த மனசுதான் எல்லாத்துக்கும் காரணம். மனசுன்றது என்னன்னு.. சொல்லு பார்க்கலாம்..?"

சிறிது யோசித்துவிட்டுச் சொன்னானே..

"மனசுன்றது வேற ஒண்ணுமில்ல தாத்தா.. எண்ணங்கள் தான். நம்ம எண்ணங்கள்ளாம் ஒண்ணாச் சேர்ந்துதான் மனசாகுது.."

சிரித்தவாறு தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாரே.. அன்றிலிருந்து மற்ற பையன்களைப் போல் பம்பரம் சுற்றியதில்லை.



கில்லி தாண்டு விளையாடியதில்லை. பந்தைத் தேடி ஓடியதில்லை. தாத்தா தவிர உலகமில்லை. இடையில் ரம்யாவைப் பார்த்துச் சிதற ஆரம்பித்த மனதைக் கூட அதி சாமர்த்தியமாகப்பிடித்து இழுத்து நிறுத்தி நிலைக்குக் கொண்டுவந்துவிட்டவர். அப்படிப் பட்டவர் தானே ஒரு நிலையைக் கடக்கப் போவதைத்தான் இப்படி சூசகமாகத் தெரியப்படுத்துகிறாரோ..?

தாங்க முடியாத உட்தவிப்பு ஓர் ஆழமான பெருமூச்சாக வெளிப்பட்டது அவனிடமிருந்து. அந்தப் பெருமூச்சின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு விட்டவராகச் சொன்னார் அவர்.

"நீ எதுக்கு இப்படி புஸ் புஸ்ஸுன்னு பெருமூச்சு விடறேன்னு தெரியுது. அதான் நீ நினைக்கிற மாதிரித்தான். நான் சொன்ன கவிதைக்குத் தலைப்பு என்ன தெரியுமா..? களைதல். ஒவ்வொன்றாக களைஞ்சுக்கிட்டே வந்திட்டேன். நானைக்கூடக் களைஞ்சிட்டேன். வெற்றிடத்துச் சூனிய வெளிக்கு வந்திட்டேன். வாசல் திண்ணையில் படுத்தா வானம் தெரியல. இப்படி முற்றத்துல மல்லாந்து படுத்தால் வெற்றிடத்துச் சூனிய வெளி தெரியுது. அந்த வெளியைப் பார்த்துக் கிட்டே கிடக்கலாமேன்னுதான் உள்ளாற வந்து முற்றத்துக் கயிற்றுக் கட்டில்ல விழுந்து கிடக்கேன். அம்புப் படுக்கையில் கிடந்தாராமே பீஷ்மர்.. அந்த மாதிரி கிடக்கேன். சூனிய வெளியைக் களையறதுக்கு முன்னால் உன்னைப் பார்த்திடணும். உன்கிட்ட நிறைய விஷயங்கள் பேசணும். உனக்குச் சிலவற்றை எடுத்துச் சொல்லணும். இவை எல்லாத்துக்கும் மேலாக உனக்குள்ள நுழைஞ்சு நீ.. நானாகி, நான் - நீயாகிடணும்னு தான் நீ வரணும்னு உன்னையே தீவிரமாக நினைச்சுக்கிட்டுக் கிடந்தேன். அந்தத் தீவிர நினைப்பு உன்னைக் கூட்டிக்கிட்டு வந்திடுச்சு. இனி.. இந்த சூனிய வெளியையும் களைஞ்சிடலாம்..."

தாத்தா புன்னகைத்தார். அவனுக்குப் பகீரென்றது. அடிவயிறு சுருண்டு கொண்டது. 'தாத்தாவின் தோழமையற்ற உலகமா..?' அந்த வெற்றிடத்தைச் சூனிய வெளியைத் தாங்க முடியுமா..? அதைத் தாங்கத் தாத்தாவால் முடியும். தன்னால் முடியுமா..?

முடியாது என்பதைப் போன்று நீண்ட நெடும் விம்மல் ஒன்று அவனிடமிருந்து தெறித்து வெளியில் வர, அன்போடும், அனுதாபத் துடனும் அவனை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார் தாத்தா.

## 10

அதன் பிறகு மூன்று நாட்கள் தாத்தா உயிரோடிருந்தார். அந்த மூன்று நாட்களும் பிரக்ஞை தவறாதிருந்தார். பேச்சு சீராக இருந்தது. வார்த்தைகள் மணியடிக்கிற மாதிரி கணீரென்று வந்தன.

"குணசேகரா... என்னை விட்டுப் போயிடாத... என் பக்கத்திலேயே இரு... என்ன..?"

"இருக்கேன் தாத்தா. உங்க பக்கத்திலேயேதான் இருக்கேன்..." என்று கை பற்றிக் கொண்டான் அவன்.

பற்றின கையை இழுத்து விரல் கோர்த்துக் கொண்டார். கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டார். மார்பினில் பதித்து கண்மூடி நீண்ட நேரம் பேசாதிருந்தார்.

அவரது இதயத்துடிப்பு தன் உள்ளங்கையில் பதிவாவதை உணர்ந்தான் குணசேகரன். நீண்ட நேரம் மூடிய கண்களை அவர் திறக்காதிருக்கவே மெதுவாகத் "தாத்தா... தாத்தா..." என்று கூப்பிட்டான்.

அதன்பின் கண் திறந்தவர் அவனைப் பார்த்து மெல்ல புன்னகைத்தார்.

"என்ன குணா... பயந்திட்டியா..?" என்று கேட்டார்.

"பயப்படாத குணா... இன்னும் நேரம் வரல. அதுக்காக இப்போ நேரமே வரப் போறதில்லைன்னும் நினைச்சுடாதே... மெல்ல நெருங்கிக்கிட்டிருக்கு. சரியாகச் சொல்லணும்னால் இன்னி லேர்ந்து எண்ணி ரெண்டாவது நாளோ, மூணாவது நாளோ"

"தா..த்..தா..!" - அவரை முடிக்க விடாது இடையில் குறுக்கிட்டான் அவன்.

"என் இப்படி அலர்ற குணா..? எதுக்காக இப்படிப் பதட்டப் படற..? ம்..? சொல்லு குணா..? ஏன் இந்தப் பதட்டம்..?"

மெல்ல உடைய ஆரம்பித்தான் அவன்.

"தாத்தா... நினைவு தெரிஞ்ச நாள் முதலா எனக்கு உங்களைத்தான் தெரியும். உங்களை மட்டும்தான் தெரியும். நீங்கள் இல்லாத ஒரு உலகத்தை என்னால் நினைச்சுப் பார்க்க முடியல..."



அதைக் கேட்டுப் பெரிதாய் சிரிக்க ஆரம்பித்து விட்டார் தாத்தா. எதற்கு அவ்வாறு சிரிக்கிறார்... ஏன் சிரிக்கிறார் என்பது புரியாமல் தடுமாறினான் அவன்.

"எதுக்குத் தாத்தா சிரிக்கிறீங்க..?"

"நீ கூட இப்படி சாதாரணமா... சராசரித்தனமாகப் பேசற பார்த்தியான்னு நினைச்சேன்... சிரிப்பு வந்திச்சு... ஆமாம்... நீ இப்படிப் பேசலாமா குணா..? இத்தினி நாளும் என் கூடவே இருந்திட்டு எப்பிடி இப்படிப் பேசற..?"

"என்ன தாத்தா நான் தப்பு பேசிப்புட்டேன்..?"

"தப்புன்னு நான் சொல்ல வரல குணா... மீதித் தாத்தாங் கன்னால் பூரிச்சுப் போயிருப்பாங்க... 'நம்ம பேரன் நம்ம மேல எவ்வளவு அன்பும் பாசமும் வச்சுக்கிட்டிருக்கான்னு' காங்கிதம் அடைஞ்சிருப்பாங்க. ஆனால் என்னால் அப்படி சந்தோஷப்பட முடியுமாப்பா..?"

"தா..த்..தா..?" - குரல் இறங்கி கிசுகிசுத்தது அவனுக்கு இன்னும் கூட தான் எங்கு தப்பு செய்தோம் என்பது புரியாமற் போயிற்று. அந்த நிலையிலும் டக்கென்று அவனைப் பிடித்தார் தாத்தா.

"இன்னும் புரியல..? நான் என்ன சொல்ல வரேன்னு தெரியலயில்ல..?"

அவன் பேசாது தலை கவிழ்ந்திருந்தான்.

"இதப்பாரு குணா... என்னைக் கொஞ்சம் நிமிர்ந்து பாரு..."

பார்த்தான்.

"என்ன தெரியுது..?"

"என்ன தெரியுதுன்னால்..?"

"முன்னால் என்ன பார்க்கிற..?"

"உங்களைத் தான் பார்க்கிறேன்..."

"என்னையா பார்க்கிற..?"

"ஆ...ஆமாம் தாத்தா..."

"மறுபடியும் தடுமாறுற பார்த்தியா..? என்னையா பார்க்கிற..?"

குழம்பிப் போய் மீண்டும் பேசாதிருந்தான்.

"சொல்லு குணா. என்னையா பார்க்கிற...?"

"ஆமாம் தாத்தா!" உறுதியோடு பளிச்சென்று பதில் வந்ததும் அவரும் புன்னகைத்துக் கொண்டே கேட்டார்.

"நான்னு நீ சொல்றது இந்த வெள்ளைத் தலைமுடி, நுனி முடிந்த நீண்ட தாடி, முலாம் பழ முகம், தூண் தூணாகத் தெரிகிற கை, கால், உயரமும் பருமனுமான என் உருவம்... இது தானே...?"

"ஆமாம்" எனச் சொல்ல வந்தவன் சடாரென்று நிறுத்திக் கொண்டு விட்டான். லேசாகப் பிடிபட ஆரம்பிக்கச் சட்டென்று அவரை ஏறிட்டான். அவன் பிடித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டதை உணர்ந்தவர் மேலும் தூண்டி எரிய வைக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் இறங்கினார்.

"கண்ணுக்கு முன்னால் தெரிவதையே உன்னால் சரியாகப் பார்க்க முடியல்லேன்னால் காணாததைப் பற்றின உன் அனுமானம் எப்படிச் சரியாக அமைய முடியும்... 'நான்'றது இந்த சரீரமில்லேன்னு உனக்குத் தெரியாதா குணா...? 'நானை' விட்டேன்னு நீ வந்த அன்னிக்கே உன்கிட்ட நான் சொல்லலை...? என்னை 'நான்'னு நினைச்சு எப்பவுமே நான் மயங்கினதில்லை. என்னைக் களைந்து, என் உடல் களைந்து, நானைக் களைந்து, வெற்றிடச் சூனிய வெளி கடந்துன்னு ஆத்மாநாம் கவிதை சொன்னேனே புரியலையா...? ஆத்மாநாம் சொன்ன மாதிரியில்லாமல் கீழிருந்து மேலாக ஒவ்வொண்ணாகக் களைஞ்சுக் கிட்டே வந்திருக்கேன். முதலில் சூனிய வெளி களைந்து, நானைக் களைந்து. என்னைக் களைந்து கடைசியாக உடல் களையக் காத்துக் கிட்டிருக்கேன். நீ என்னடான்னால் இந்த உடம்பை நான்னு நினைச்சுக்கிட்டு என் பக்கத்துலயே துக்கப் பட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்க... உனக்கு நான் எத்தினி சுத்துக் கொடுத்து வளர்த்திருக்கேன். அதெல்லாம் இப்படி துக்கப் படறதுக்கா...? இடிஞ்சுப் போய் உட்கார்றதுக்கா...? 'ஐயோ... நீங்க இல்லாமல் எப்படி என்னால் இருக்க முடியும்னு' புலம்புறதுக்காக...? ம்...? அதுக்கா குணா... சொல்லு...?"

சுளீரென்று ஒரு விளாறு விளாறினாற் போல் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான் 'சீ... என்ன இது...?' என்கிற வெட்கம் ஓடிய முகம் பார்த்து தாத்தாவின் முகத்திலும் மலர்ச்சி ஏற்பட்டது.



"ஹாங்... இதுதான் எனக்கு வேணும். சந்தோஷமா உட்காரு. சந்தோஷமாகப் பேசு... சந்தோஷமாக இரு... சந்தோஷமாகப் போய்ச் சேரு... இதை விட்டிட்டு... முகத்தைத் தொங்கப் போட்டுக்கிட்டு... கண் கலங்கிக் கிட்டு... நான் இல்லாமல் போயிடப் போகிற கற்பனையில் கவலைப்பட்டுக்கிட்டு... நீ... நான்றது தாத்தா பேரன் என்கிற வெறும் தேக சம்பந்தமான உறவுதானா...? சொல்லு...? நம்முடையது வெறும் தேக சம்பந்தமான உறவு மட்டும்தான்னு நினைச்சியானால்... தாத்தாங்கிற இந்தத் தேகம் - உடம்பு இல்லாமல் போயிடப் போவுதேன்னு கவலைப்படு, அழு... எல்லாச் சாவு வீடுங்க - மாதிரியும் பிலாக்கணம் பாடு..."

"... இதைச் சொல்கிற போது எனக்கு ஒரு கவிதை நினைவுக்கு வருது. நகுலன் எழுதிய கவிதை, தலைப்பு கூட நல்லலா ஞாபகமிருக்கு. 'சந்தை'ன்ற தலைப்பு, அந்தக் கவிதையும் சொல்லிடறேன். கேட்டுக்க, எதெல்லாம் சொல்லணும்னு தோணுதோ அத்தினியும் சொல்லிடறேன். நீ பாட்டுக்கு கேட்டுக்கிட்டே வா... ஹாங்... என்ன சொல்ல வந்தேன்...? கவிதை... நகுலனுடைய கவிதை...

*செத்த வீட்டில்*
*துக்கம் விசாரிக்கச்*
*சென்று திரும்பியவர்*
*சொன்னார்:*
*"செத்த வீடாகத்*
*தெரியவில்லை.*
*ஒரே சந்தை இரச்சல."*

கவிதை புரியுதா...? அந்த மாதிரி சந்தை இரைச்சலாக்கப் போறியா...?"

"இல்ல தாத்தா... இல்லை..."

"நீ மட்டும் இல்லேன்னு சொன்னால் போறாது. யாரையும் அழ விடக்கூடாது. ஒப்பாரி வைக்கச் சொல்லக் கூடாது. பிலாக்கணம் பாட விடக்கூடாது. நிம்மதியா என்னைச் சுடு காட்டுக்குக் கொண்டிட்டுப் போவணும். யாரெல்லாம் வராங்களோ அத்தினி பேரையும் அமைதியா'க வரச் செய்யணும். என்ன... செய்வியா...?"

"செய்யறேன் தாத்தா..."

ஒரு கணம் மௌனமாக இருந்தவர், பின்னர் கேள்விக் குறியோடு அவனைப் பார்த்தார்.

"... செத்துப் போனவனுக்கு ஏன் அழுவறாங்க தெரியுமா குணா...? அவன் இல்லாமற் போய் விடப்போவதை விட இருந்ததை யெல்லாம் நினைச்சு அந்த இருந்தது இல்லாமற் போய் விடுமே என்கிற கவலையில் தான் அழுவறாங்க... அந்தக் கவலை கூட உனக்குக் கிடையாது. ஏன்னால் நான்தான் உன்கூட உனக்குள்ளேயே இருக்கப் போறேன்..."

மறுபடியும் கால் வினாடி மௌனித்துப் பின் தொடர்ந்தார்.

"உனக்குள்ளேன்னால் உன் தேகத்துக்குள்ளேன்னு அர்த்த மில்ல. இது கூடு விட்டு கூடு பாய்கிற வித்தையில்லை. தேகம் உடையவன் என்றாலும் நான் தேகமில்லை. ஏற்கெனவே சொன்ன மாதிரி நான் என்பது உடம்பு இல்லை. மனமா என்று கேட்டால் மனமுமில்லை. பின் என்ன என்று கேட்டால்... ஒன்றுமில்லை. இந்த ஒன்றுமில்லைக்காகத்தான் எல்லாம் உள்ளது போல் அலையறாங்க... தேடறாங்க... தேடல் என்றதும் அந்தத் தலைப்பு அதே நகுலன் எழுதிய இன்னொரு கவிதையும் ஞாபகத்துக்கு வருது. அதையும் சொல்லிடறேன்...

*எதைத் திறந்தால்*
*என்ன கிடைக்கும்*
*என்று*
*எதை எதையோ*
*திறந்து கொண்டே*
*இருக்கிறார்கள்.*

— நீ எதையும் திறக்காதே குணா. எதையும் தேடாதே. எதுக்காகவும் ஆசைப்படாதே... எதற்கும் ஏங்காதே... கண்முன் காண்பதுதான் அந்த உருவம்தான் - பெயர்தான் என்று நினைக்காதே. நாம ரூபங்களைத் தாண்டி ஏதோ ஒன்று இருக்குது. அந்த ஏதோ ஒன்னு ஒன்றுமில்லாததாக இருக்குது. ஒன்றுமில்லாததற்கு ஏன் தேட...



வேண்டும்...? ஏன் திறக்க வேண்டும்? எதற்கு எதிர்பார்க்க வேண்டும்? எதை எதிர்பார்க்க வேண்டும்...?

*உலகச் சந்தையில்*
*ஒரு மனிதன் போனால்*
*இன்னொருவன்*
*உனக்கென்று*
*ஒரு லாப நஷ்டக்*
*கணக்கிருந்தால்*
*விஷயம் வேறு.*

"இதுவும் நகுலன் எழுதிய கவிதைதான். லாபமுமில்லை நஷ்டமுமில்லை என்று இரு. எந்தக் கணக்குக்குள்ளும் விழுந்து விடாதே..." தள்ளி நில்லு. எல்லாம் விட்டுத் தள்ளி நில்லு. எல்லா வற்றையும் விட்டுத் தள்ளி நிற்கிறவனுக்கு வாழ்க்கை சுலபம். தெளிவு.

"ஸ்படிகம் மாதிரி தெளிவாகக் கிடக்கிற நீரில் பார்த்தால் கீழே இருக்கிற கூழாங்கற்கள் தெரியும். அந்தத் தெளிவு வந்து விட்டால் தோற்றத்தையும் நாமத்தையும் விலக்கி உள்ளே பார்க்கிற சக்தி ஏற்படும். உள்தெரிந்து விட்டால்... தோலுரித்துப் பார்த்து விட்டால்... எதன் மீதும் ஆசை வராது. ஆட்கொள்ளத் துணியாது. வெறுமனே பார்த்துக் கொண்டே இருக்கத்தான் தோன்றும். அப்படிப் பார்த்துக் கொண்டிருப்பது தான் வாழ்க்கை, பார்த்துக் கொண்டே முடிவது தான் வாழ்க்கை. வாழ்க்கை என்பது விடையில்லை. வெறும் பார்த்துக் கொண்டிருக்கிற அனுபவம். விழிப்போடிருக்கிற அனுபவம். அந்தப் பார்த்தலை, விழிப்போடிருந்ததை அனுபவிக்கிற அனுபவம். நான் வெளிப்படையாகச் சொன்ன இவற்றையெல்லாம் அப்புறம் தனியாக உட்கார்ந்து யோசித்து அந்தரங்கமான அர்த்தம் என்ன என்பதை அறிந்து கொள்.

*விலகி நில்*
*விழிப்போடு இரு.*
*பார்த்துக் கொண்டிரு*
*பார்த்துக் கொண்டிரு.*
*பார்த்தலுக்கு மேல்*

*விஷயமொன்றில்லை.*
*பார்த்தலை மீறின*
*விஷயமுமில்லை.*

"நிறைய சொல்விட்டேன் குணா. நிறைய திறந்து காட்டிட்டேன். இனி சொல்லவோ திறக்கவோ ஒன்னுமில்லைன்னு நினைக்கிறேன். கடைசியாக ஒரே ஒரு கவிதை சொல்விடறேன். பிரம்மராஜன் எழுதின கவிதை. இது உனக்காக. உனக்கே உனக்காக.

*நிழல் நடனக் கலகம்*
*தோன்றும் துளிர்க்கும் துடிமனதிற்கு*
*கோபமே தடை என உடை*
*இதுவே கலை இதுவே கலை*
*இதன் மேல் நிலை இதன் மேல் நிலை."*

கவிதை சொல்லி கண்மூடினார். மீண்டும் திறந்தார். எழுந்து உட்கார்ந்தார். பின் நின்றார். அவனையும் நிற்கச் செய்தார். அருகில் போய் இறுக அணைத்துக் கொண்டார். உச்சந்தலையில் கை வைத்து பின் கழுத்தல் இறங்கி, முதுகுத் தண்டு தடவி, மீண்டும் அணைத்துக் கொண்ட அந்த ஐந்து நிமிடங்களில் அவன் அவனாக இல்லை. பளீரென்று உடம்பு முழுவதும் மின்சாரம் தாக்கி, அருவி இறங்கி, ஐஸ்கட்டி ஓடி, மூச்சு நின்று, மீண்டும் தொடர்ந்து...

மறு ஜென்மம் எடுத்த மாதிரி ஒரு புத்துணர்ச்சி; மனதெல்லாம் வியாபித்த சந்தோஷம்; உடம்பில் ஓடத் துவங்கிய புது ரத்தம்...

பழைய குணா இல்லை அவன். நிச்சயமாகப் பழைய குணசேகரனில்லை.

சட்டென்று அவனை விலக்கி நிற்க வைத்தார். தலை முதல் கால்வரை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார். மிகவும் திருப்தியாக உணரத் தொடங்கினார். அவனுக்கும் அதே திருப்தி ஏற்படுகிறதா என்றறிய கேள்வி கேட்டார்.

"போதுமா குணா..?"

"போதும் தாத்தா..."

"நான் எங்கே போகப் போகிறேன்..?"

"எங்குமில்ல தாத்தா..."



"எங்கே இருக்கப் போகிறேன்..?"

"எனக்குள்ள தாத்தா..."

"தெரியுதில்ல..?"

"தெரியுது தாத்தா..."

"சொன்ன அத்தினியும் விளங்குதில்ல..."

"நல்லா விளங்குது தாத்தா..."

"அப்போ நான் கிளம்பலாமில்ல..?"

"கிளம்புங்க தாத்தா..."

"வரட்டுமா..?"

"வாங்க தாத்தா..."

மறுபடியும் கட்டிலில் ஏறிப் படுத்தார், கண்மூடினார். பின்பு திறக்கவே இல்லை.

அப்பா ஓடி வந்தார். அம்மா வந்து அழ ஆரம்பித்ததும் தடுத்து நிறுத்தினான். அத்தை வந்து அழுத போதும் அழக் கூடாதென்றான். அந்த மாதிரி ஊர் ஜனங்களைத் தடுக்க முடியவில்லை.

"என் ராசா... மவராசா... போயிட்டியா..?"

"நோய் நொடியின்னா இனி நாங்க யாருகிட்டப் போவோம்..?"

"எங்களுக்கு மருந்து தர இனி யாரு இருக்காங்க..?"

மார்பிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு வந்தவர்களைப் பார்த்த போது அவனுக்கே ஒரு கவிதை நினைவுக்கு வந்தது; எங்கு படித்தான் எப்போது படித்தான் என்பது ஞாபகமில்லை. ஆனால் கவிதை மட்டும் நினைவிருந்தது. சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

*"செத்து விட்டான்"*
*என்றாய்*
*எனக்கு என்னவோ*
*அவன் இருந்ததுதான்*
*இன்றும்*
*என் உள்ளத்தில்*
*இருந்து கொண்டிருக்கிறது.*

கவிதை சொல்லிக் கொண்டிருந்தபோதே ஊர் திரண்டு போயிற்று. வாசலிலும் உள் அறையிலும், முற்றத்திலும், நடையிலும்

நெருக்கியடித்து ஜனம் நின்று கொண்டு விட்டது. அந்தக் கிராமம் போதாதென்று அக்கம் பக்கத்து கிராமங்களெல்லாம் கூடக் கூடின.

அத்தனை பேருக்கும் வீடு வீடாகப் போய் மருந்து தந்திருக்கிறார் தாத்தா... கால் நடையாகவே நடந்து போயிருக்கிறார். காசு வாங்காமல் வைத்தியம் செய்திருக்கிறார். அந்த அபிமானம், நன்றி விசுவாசம் கிராமத்து மண்ணிலும், மனங்களிலும் மீதமிருந்தது. அதுதான் அவர்களின் வருகையிலும் வாய்ச் சொல்லிலும் தெரிந்தது.

"ஒதுங்கு தம்பி..." என்று குணசேகரனை ஒதுக்கி விட்டார்கள். அவர்களே முன் நின்று எல்லாம் செய்தார்கள். குளிப்பாட்டி, புது வேட்டி கட்டி, பூமாலை போட்டு, சந்தனம் பூசி, பச்சைத் தென்னை ஓலை முடைந்து...

அன்று யாரும் கழனிக்குப் போகவில்லை. கடை திறக்கவில்லை வாகனங்கள் ஓட்டவில்லை. யாரும் சொல்லாமலே அக்கம் பக்க கிராமங்களிலெல்லாம் கூடக் கடையடைப்பு கடைப்பிடிக்கப்பட்டது. வாசல் திண்ணையில் கிடத்தி வரிசையாக வந்து முகமுழி பார்த்து, மாலை போட்டு, "எங்களை உட்டுட்டுப் போவ எப்பிடி மனசு வந்திச்சு மவராசா...?" என்றழுது, அடித்துக் கொண்டு புலம்பி...

மிகப் பெரிய அரசியல் தலைவர்களுக்கு மட்டுமே கிடைக்கக் கூடிய அத்தனை மரியாதைகளுடனும் தாத்தாவின் உடல் எடுத்துச் செல்லப்பட்டபோது -

மௌனமாகப் பார்த்துக் கொண்டு உடன் தொடர்ந்தான் குணசேகரன். தாத்தா சொன்ன, 'பாரு... அப்படியே வெறுமனே பார்த்துக் கிட்டே இரு...' நினைவிற்கு வர பார்த்துக் கொண்டே இருந்தான். அப்பா கொள்ளி வைத்தபோதும் அப்படித்தான் இருந்தான்.

ஊர் ஜனம் வியந்தது.

"சின்னவரு கண்ணுல ஒரு பொட்டு தண்ணி வரல பாரேன்...?"

"அவுரு ஏன் அழுவணும்...? பெரியவரு எங்க போயிட்டாரு...? அவுருக்குள்ளதானே புகுந்துக்கிட்டிருக்காரு...?"

அறியாமை பேரானந்தம் என்கிறார்களே அதுவா இது...? இன்னொரு 'ஸென்ஸ் ஈஸ் பிளீஸ்' என்கிறார்களே... அதுவா...?



அல்லது முற்றிய ஞானமா...? வாழ்ந்து பார்த்த அனுபவம் தந்ததா...?

எது அவர்களை இப்படிப் பேச வைத்தது...? யார் அவர்களை இப்படிப் பேச வைக்கிறார்கள்...? தாத்தாவா...? அதுவும் தாத்தா தானா...?"

'தேடாதே... எதையும் தேடாதே குணா... அவரவர்களை அப்படியப்படியே ஏற்றுக் கொள். அந்தந்த நிமிடங்களை அந்தந்த நிமிடங்களுக்காக வாழு. நேற்றை நினைத்து இன்று, நாளைய நினைப்பில் இன்று என்றால் இன்றைய இன்று என்னாவது...?'

தாத்தாவின் குரல் கேட்டதும் விட்டு விட்டான்.

*நேற்று இல்லை.*
*நாளை இல்லை.*
*இன்று நிஜம்.*
*இது நிஜம்.*

காரியம் முடிகிற பதினாறு நாட்களும் அமைதியாக இருந்தான். மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். ஊர் ஜனங்கள் வந்து அவனிடம் தாத்தாவிற்குக் கோவில் கட்டப் போகிறோம் என்றார்கள்.

"கோவிலா...!" ஆச்சரியமாகப் பார்த்தான் அவன்.

"ஆமாம் தம்பி, பின்ன என்ன... யாரு அவுரு...? சாதாரண வாழ்க்கையா வாழ்ந்தாரு...? சாதாரண மனுஷனா...? அந்தத் தலை முடியைக் கொண்ட போட்டு ஒரு சின்ன பிறை செருகிக் கழுத்துல பாம்பு தொங்க விட்டிருந்தோம்னால் அப்பிடியே சிவபெருமான்தான். அப்படியில்ல இருந்தாரு... அந்த மாதிரியில்ல நடந்துக்கிட்டாரு... சாதாரண மனுஷன்னா அவரை நினைச்சுக்கிட்டிருக்கீங்க...? சித்த புருஷன் தம்பி சித்த புருஷன். நாம செய்த புண்ணியம் நம்ம பூமிக்கு வந்தாரு... நாம் உயிரோடு வாழ்ந்த காலத்துல எங்க கூட இப்படி ஒரு சித்த புருஷரும் வாழ்ந்தாருன்னு பின்னால எங்க பேரன் பேத்திங் களுக்குத் தெரிய வேணாம்...? சரித்திரம் சொல்ல வேணாம்...?"

அயர்ந்து போனான் அவன்... படிக்காத இந்த ஜனங்களிடம் இப்படி ஒரு புத்திசாலித்தனமா...? ஒருவேளை படிக்காததால் தான்

இவர்களிடம் தங்களைத் தாங்கள் என்று நினைத்துக் கொள்கிற மயக்கமில்லையோ...? தான் என்கிற போதை ஏறாத காரணத்தால் பார்வை தெளிவாகக் கூர்மையாக இருக்கிறதோ...? அறிவு விசாலமாக வேலை செய்கிறதோ...?

தாத்தா சொன்ன மாதிரி கண்முன் கூடாகக் காண்கிற உருவம் தான். பெயர்தான் என்பதன்றி அவற்றைத் தாண்டிய ஏதோ ஒன்று இருக்கிறது என இவர்களால் அனுமானிக்க முடிந்திருக்கிறதோ...? இந்த 'நான்' விட்டால் எப்படிப்பட்ட தொலை தூரப் பார்வை கிடைக்கிறது...! அடேயங்கப்பா! எத்தனைப் பெரிய விஷயத்தை எவ்வளவு சுலபமாக விட்டுவிட்டிருக்கிறார்கள் இவர்கள்! காட்டுக்குப் போகவில்லை. கடுந்தவம் செய்யவில்லை. கால் மடக்கி உட்காரவில்லை. கண்மூடிப் புருவ மத்தியில் நிறுத்தவில்லை.

இப்படி கொஞ்சம் கூட அலையாமல், சிரமப்படாமல் வெகு சுலபமாக நானை விட்டு விட்டு மிகச் சாதாரணமாக வளைய வருகின்ற இவர்கள் அத்தனை பேரும் யோகிகளன்றி வேறு யார்...? ஞானிகளன்றி வேறு யார்...? இதுபோல் இந்தியா முழுவதும்! இன்னும் எத்தனை ஞானிகள்...!

அத்தனைப் பேருக்கும் ஒட்டுமொத்தமாகத் தலைக்கு மேல் கைகளை உயர்த்திக் கூப்பிக் கும்பிட்டான் அவன்.

"அப்படின்னா வீட்டுக்கு வீடு காசு சேகரிச்சு வேலையை ஆரம்பிச்சுடறோம் தம்பி..."

"கட்டி முடிச்சு திறப்பு விழா செய்யிற அன்னிக்கு நீங்க வந்துடணும் தம்பி..."

கிளினிக் திறப்பதற்குத் தாத்தாவை அழைத்துப் போக வந்தவனைத் தாத்தாவின் கோவில் திறப்பு விழாவிற்கு வரச் சொல்லி அழைப்பு விடுகிறார்கள்! முன்கூட்டித் தீர்மானிக்கப்பட்டு விட்ட மாதிரி இயங்குகின்ற இந்த இயக்கங்களை இயக்குவது யார்...?

விடை தெரியாமல் அவன் புன்னகைத்த போது, தங்களின் அழைப்பை ஏற்று அவன் ஒப்புக் கொண்டதற்கான அடையாளமாகத் தான், அந்தப் புன்னகை என்கிற எண்ணத்தில் ஊர் கலைந்து போயிற்று.



அதற்கு மறுநாள் ஊரை விட்டுக் கிளம்பி வந்து கிளினிக் திறந்தவன்தான். மறுபடியும் ஊர் பக்கம் திரும்பவே இல்லை. அதற்கு அவசியம் இருப்பதாகவும் நினைக்கவில்லை. தாத்தாவிற்காகத்தான் ஊருக்கு ஓடிக் கொண்டிருந்தான். அந்தத் தாத்தா தன்னில் கலந்து தானாகி விட்ட பின்பு ஊரில் என்ன வேலை என விட்டு விட்டான்.

அது மாதிரி விட முடியாமல் அப்பாவும் அம்மாவும் கடிதமெழுதினார்கள். கண்ணீர் விட்டார்கள். தொலைபேசியில் கெஞ்சினார்கள். எதையும் அவன் பெரிதாக எடுத்துக் கொள்ளாததால் நினைத்த போதெல்லாம் நேரில் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

"ஊருக்கு வராட்டிப் போனாப் போற... கல்யாணம் கட்டிக்கிடுடா... எங்கப்பாயில்ல... ராசா இல்ல...? அந்த ரம்யாப் பொண்ணு இல்லேன்னா ஊர் உலகத்துல பொண்ணேவா இல்லாமப் பேயிடிச்சு...?"

இன்னமும் தான் ரம்யாவிற்காக ஏங்குவதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருப்பதை நினைத்து உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.

"கல்யாணமா...?" என்கிற எண்ணத்தில் மீண்டும் பலமாகச் சிரித்த போது தாத்தாவும் கூடச் சிரிப்பது கேட்டது.

நான் சொன்ன மாதிரி

*"எதைத் திறந்தால்*
*என்ன கிடைக்கும்*
*என்று*
*எதை எதையோ*
*திறந்து கொண்டே*
*இருக்கிறார்கள்."*

திறந்து கொண்டுதான் இருப்பார்கள். நீ கண்டுக்காத குணா... பார்த்துக்கிட்டு போய்க்கிட்டே இரு. சுற்றி நிகழ்கிற சகலமான விஷயங்களையும் பார்த்துக்கிட்டிரு. இங்கு ஒரு விஷயம் நிகழுகின்ற அதே நேரத்துல தான் வேறொரு இடத்துல மற்றொரு விஷயமும் நிகழுது. எல்லாம் இப்படி நிகழ்ந்துகிட்டிருக்கிற வெறும் நிகழ்ச்சிகள் தான்னு உள்ள நுழையாமல் வெளிய ஒதுங்கி நின்று பார்த்துக் கிட்டே இரு..."

"சரி தாத்தா..." என்று சிரித்தவன் தள்ளி வெளியில் நிற்கக் கற்றுக் கொண்டான். எதையும் விலகி வந்து பார்க்கப் பழகி கொண்டான். அந்தப் பழக்கம் கலபமான பின் தன் அருகில் நின்று எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிற தாத்தாவிற்கு நன்றி சொன்னான்.

"தாங்க்ஸ் தாத்தா..."

"எதுக்கு..?"

"தள்ளி நிற்கக் கற்றுக் கொடுத்ததற்கு..."

"அப்புறம்..?"

"சந்தோஷம் பிடிபட வைத்ததற்கு. சந்தோஷமாகப் பேச, சந்தோஷமாகச் சிரிக்க, சந்தோஷமாக இருக்க, சந்தோஷமாகப் போய்ச் சேர..."

"வாழ்க்கையே அவ்வளவுதான் குணா..."

"இன்னும் ஒன்னு இருக்கு தாத்தா..."

"என்ன..?"

"மற்றவங்களையும் சந்தோஷப் படுத்தறது..."

"வேணாம் நீ கஷ்டப்படுவ..."

"இல்ல தாத்தா.. கஷ்டப்படாமல் என்னால் செய்ய முடியும்..."

"அதுலயும் தள்ளி நிற்க முடியுங்கிற..?"

"ஆமாம்."

"முடிஞ்சா செய்யி.. என்னால் முடிஞ்சது. மருந்து மூலமாக செய்தேன். உன்னாலயும் முடியும்னால், எது எதுல முடியுதோ அதுல செய்யி... வேற எதுக்குப் பிறப்பெடுத்துருக்கோம். எதைக் கொண்டு வந்தோம்..? எதைக் கொண்டு போகப் போறோம்? நாமும் சந்தோஷமாக இருந்து மற்றவங்களையும் சந்தோஷப்படுத்த முடிஞ்ச ரசவாத வித்தை தெரிஞ்சாப் பொறும். தெரியும்ங்கிற. விளையாடு. வித்தை காட்டு..."

சந்தோஷமான உலகம் கண்முன் விரிய "தாங்க்ஸ் தாத்தா..." என்று மீண்டும் அவருக்கு மனப்பூர்வமாக நன்றி சொன்னான் குணசேகரன்.



# 11

இரண்டு மூன்று முறை குணசேகரனின் அறைக்குள் எட்டிப் பார்த்துத் தலையை இழுத்துக் கொண்டு விட்டாள் மகேஸ்வரியம்மாள்.

எங்கோ தொலைதூரப் பார்வையிலும், கண்மூடித் தியானத்தில் இருக்கிற மாதிரியும் அவன் அடிக்கடி உட்காருகிற வழக்கம் தான். நோயாளிகள் யாருமில்லாத இடைவெளியில் அவன் அப்படித்தான் உட்கார்ந்திருப்பான். வெளி அறையில் காத்திருக்கிற நோயாளிகளுக்காக வைக்கப்பட்டிருக்கும் தொலைக் காட்சிப் பெட்டியில் மகேஸ்வரியம்மாள்தான் நிகழ்ச்சிகள் பார்ப்பாளே தவிர அவன் பார்த்ததில்லை. திரைப்படம், நாடகம் என்கிற எந்தவிதமான பொழுது போக்கிற்கும் சென்று அந்த அம்மாள் அறிந்ததில்லை கிளினிக் விட்டால் வீடு தவிர வேறெங்கும் அவன் சென்றதில்லை. வீடு கூட மருந்து தயாரிக்கிற எண்ணெய் காய்ச்சுகிற வசதிக்காக எடுக்கப் பட்ட தனி வீடுதானே தவிர மற்றபடி அவன் தன்னுடைய தனிப்பட்ட வசதிக்காக எடுத்துக் கொண்டதில்லை.

"எனக்கென்ன மகேஸ்வரியம்மா.. ஒரு ரூம் எடுத்துக்கிட்டாப் போறும். இல்லை. இங்க கிளினிக்கிலேயே கூடத் தங்கிக்கிடுவேன். தனி மனுஷனுக்கு எதுக்கு அவ்வளவு பெரிய வீடு..? ஆனால் எண்ணெய் காய்ச்ச, ஸ்புடம் போட பச்சிலை காயவைக்க, இடிக்க, அரைக்கன்னு ஒரு தனி வீடு தேவையாக இருக்குதே.." என்றிருக்கிறான் அவன்.

மருந்து சம்பந்தமான யோசனையில், நோய் முற்றி வருகிற நோயாளிகளைப் பற்றின கவலையில் அவ்வாறு அவன் உட்கார்ந்து நிறைய தரம் பார்த்திருக்கிறாள் அந்த அம்மாள். ஆனாலும் அன்று போல் அத்தனை நேரம் அவன் உட்கார்ந்ததில்லை. மணிக் கணக்கில் கண்மூடிக் கிடந்ததில்லை. அதிலும் வெளியில் நோயாளிகள் காத்திருக்கிறபோது தன் வயம் இழந்ததில்லை.

'என்ன இது..? இன்று ஏன் இப்படி இத்தனை நேரம் இவ்வாறு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்..?'

மகேஸ்வரியம்மாளுக்குப் புரியவில்லை. நோய் பற்றின விசாரமானால், மருந்து பற்றின சிந்தனையானால் அடிக்கடி ஏதாவதொரு புத்தகத்தை எடுத்துப் புரட்டுவாரே..? நோட்டுப்

புத்தகத்தில் குறிப்பு எழுதுவாரே..? இவை எதையும் செய்யாமல் அமைதியாக உட்கார்ந்திருக்கிறாரே..? என்ன காரணம்..?

ஒருவேளை வரப்போகிற மிக முக்கியமான நோயாளியின் உடல்நிலை பற்றிய சிந்தனையாக இருக்குமோ..? இருக்கலாம். அதனால்தான் காலையில் கிளினிக் திறந்த உடனே கூப்பிட்டுச் சொல்லி விட்டாரோ..?

'அம்மா.. கிளினிக்கைக் கொஞ்சம் சுத்தம் பண்ணிடுங்க. முக்கியமான ஒருத்தங்க வரப் போறாங்க..'

உடனே பரபரவென்று நாற்காலிகளைத் தூசு தட்டி, சோபாக்களைத் துடைத்து, படிக்கப் போட்டிருந்த பத்திரிகைகளை அடுக்கி வைத்து மேலே ஒரு மூலையில் தொங்கிக் கொண்டிருந்த ஒட்டடையை ஸ்டூல் போட்டு ஏறி துடைப்பத்தால் கருட்டி எடுத்து எதிர் சந்தில் வசிக்கிற வேலைக்காரப் பெண்ணை அழைத்து வந்து சுத்தமாகப் பெருக்கித் துடைத்து..

அத்தனையும் செய்து விட்டு எட்டிப் பார்த்தால் கூட குணசேகரன் அப்படியேதான் உட்கார்ந்திருந்தான். கொஞ்சம் கொஞ்சமாக எட்டு மணி வாக்கில் வர ஆரம்பித்த நோயாளிகளின் வரிசை அதிகமாயிற்று. நாற்காலிகள் நிரம்பி, சோபா நிரம்பி, பெஞ்சு வழியத் தொடங்கிற்று. டோக்கன் எண் இருபத்து மூன்றை எட்டியபோது நோயாளிகளிடமிருந்து சலசலப்பு எழ ஆரம்பித்தது.

"என்னம்மா.. இன்னுமா டாக்டர் வரலை..?"

"வந்திட்டாங்க.." தயங்கி பதிலளித்தாள் மகேஸ்வரியம்மாள்.

"என்ன செய்யிறாரு.. யாரையாச்சும் பார்த்துக்கிட்டிருக்காரா..?"

"யாரும் உள்ள போகலையே மகேஸ்வரியம்மா.. ஒன்னாம் நம்பர் டோக்கன் நானு. நானே உட்கார்ந்துக் கிட்டிருக்கேனே..?"

சட்டென்று மகேஸ்வரியம்மாளுக்கு ஒரு எண்ணம் உதிக்கச் சொன்னாள்.

"ஏதோ புஸ்தகமெல்லாம் பார்த்து மருந்து குறிப்பு எழுதிக்கிட்டிருக்காரு.. நீங்கதான் தெனமும் பார்க்கறீங்கல்ல..? காலை எட்டு மணிக்கு வந்தாருன்னால் பகல் சாப்பாட்டுக்குக் கூட



நேரத்துக்கு வீட்டுக்குப் போக முடியறதில்லை. மூணு, மூணரைன்னு சில நேரத்துல நாலு கூட ஆகிப் போகுது. வீட்ல சாப்பாடு எடுத்து வைக்கிற பையன் முக்கால் வாசி நாள் அப்படியே தூக்கி யாருக்காச்சும் கொடுத்து விட்டுக் காரியரைக் கழுவி வைக்கிறான். சாயந்திரம் ஐந்து ஐந்தரைக்கு வந்தாருன்னால் ராத்திரி பதினோரு மணிக்குத்தான் வீடு திரும்பறாரு.. அதுக்குமேல் மருந்து தயாரிச்சு எடுத்து வச்சுப் படுக்க ஒரு நாள் போல் மணி ஒன்னு ரெண்டுன்னு ஆகிப் போகுது.. தினமும் இப்படியே நேரம் கிடைக்காமல் தள்ளித் தள்ளிப் போனதுனால் இன்னிக்கு மருந்து புஸ்தகங்களைப் புரட்டி குறிப்பெடுக்க உட்கார்ந்திருட்டாரு.. இதுவும் அவருக்கா செய்துக்கறாரு..? எல்லாம் உங்களுக்குத்தான் செய்யறாரு.."

கூட்டம் முணு முணுப்பதைக் கைவிட்டு அமைதியாயிற்று. ஆனால் மகேஸ்வரியம்மாளால் அமைதியாக இருக்க முடியவில்லை. மீண்டும் அவனது அறைக்குள் எட்டிப் பார்த்தாள். கொஞ்சம் கூட மாறாமல் அவன் அப்படியே உட்கார்ந்திருக்கவே மெதுவாகக் குரலைச் செருமி கவனத்தைக் கலைத்தாள்.

சடாரென்று கண் விழித்தவன் ஒரு வினாடி தான் இருக்கின்ற இடம் புரியாமல் புருவம் சுருக்கினான். பின்னர் சட்டென்று நிகழ்காலம் பிடிபட மகேஸ்வரியம்மாளை ஏறிட்டான்.

"தாத்தா ஞாபகத்துல அப்படியே உட்கார்ந்திட்டேன் மகேஸ்வரியம்மா.. ரொம்ப நேரமாயிடுச்சில்ல? நிறைய நோயாளிங்க காத்துக்கிட்டிருக்காங்களா?"

ஒருவித குற்ற உணர்வுடன் மென்மையான குரலில் அவன் கேட்டதும் அந்த அம்மாள் அத்தனை பேர் அத்தனை நேரமாகக் காத்திருப்பதைச் சொன்னால் இன்னமும் வருத்தப்படுவான் என்பதால் பேச்சை மாற்றினாள்.

"யாரோ முக்கியமானவங்க வரப் போறாங்கன்னு கிளினிக்கை சுத்தம் செய்யச் சொன்னீங்க டாக்டர். செய்து வச்சிட்டேன்.."

அதைக் கேட்டதும் ஒரு வினாடி யோசித்தான் அவன். ரம்யா என்றதும் இன்னமும் தனக்குள் ஒருவித படபடப்பு ஏற்படுவதை உணர்ந்தான். "ஏனப்பா... ஏன்..? முழுசாக இன்னும் வெளிய வரலையா..? கொஞ்சம் ஒட்டிக்கிட்டிருக்காப்பல தோணுது.." தாத்தா

சிரிப்பது கேட்டது. ஏதோ ஓர் மூலையில் சிறிது பலவீனமிருப்பது பிடிபட தலைகுனிந்து கொண்டு தனக்குள் முணுமுணுத்தான் அவன்.

"ஒண்ணுமில்ல தாத்தா... இது ஹார்மோன் ஏற்படுத்தற படபடப்பு..."

"கூடாதே.. இந்தப் படபடப்பு உன் பலவீனத்தைக் காட்டுதே..."

பேசாதிருந்தான்.

"அந்தப் பொண்ணு போன் பண்ணிச்சுன்னா நீ ஏன் இப்படி பதட்டப்படற..? ஏன் அதீதமாகப் பேசற..? வேணாம் குணசேகரா.. விட்டுடு. மெல்ல வால் நுழைஞ்சிடும். ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையாகிடும். அவ வந்தால் என்ன..? கிளினிக்கை ஏன் சுத்தப்படுத்தச் சொன்ன? எதுக்காக விசேஷ கவனம் எடுத்துக்கற..? நீ நீயாக இரு. உன் இடம் உன் இடமாக இருக்கட்டும். அப்படியிருப்பது பிடிச்சா அந்தப் பொண்ணு வரட்டும். இல்லாட்டி போகட்டுமே..."

"சரி தாத்தா..."

"இன்னும் கொஞ்சம் தடுமாறிக் கிட்டு ஒரு மூலைல கொஞ்சமா ஒட்டிக்கிட்டிருக்கிறதைப் பிச்சுப் போட்டுடு.. இந்தப் பதட்டம். அவ வர்றான்ன உடனே ஏற்படற அந்த சந்தோஷம் எல்லாம் அடங்கிப் போயிடும். மற்ற நோயாளிகளை கவனிக்கிற மாதிரி அவளையும் சாதாரணமா கவனிக்க ஆரம்பிப்ப.. அவ டெலிபோனுக்கு சர்வ சாதாரணமா பதில் சொல்லுவ.. என்ன குணா...?"

"சரி தாத்தா...." - என்று நிமிர்ந்தவன் ஒருமுறை கண்மூடி தலையை உதறி விட்டுக் கொண்டான். மகேஸ்வரியம்மாளைப் பாத்து சர்வ சாதாரணமாக ஆரம்பித்தான்.

"வர்றது வேற யாருமில்ல.. மகேஸ்வரியம்மா.. அத்தை மக ரம்யா வரேன்னு சொல்லிச்சு. அதுக்கு இடம் சுத்தமில்லேன்னாப் பிடிக்காதேன்னு தான் சுத்தம் செய்யச் சொன்னேன்.... அப்புறம் இப்பத்தான் தோணுது. யாருக்காகவும் நாம் மாற முடியாது. நம்ம இடம் நம்ம இடமாக இருக்கட்டும். இடத்துக்காக வராமல் வியாதி குணமாகணும் என்கிற, ஒரே எண்ணத்துல மருந்துக்காக வர்றவங்க வரட்டும்', என்றவன் தன் வழக்கமான புன்னகையோடு, "ரொம்ப நேரமாயிடுச்சு.. பாவம்.. ரொம்ப நேரமா பேஷண்ட்ஸ் காத்துக்



கிட்டிருப்பாங்க. வரிசையா ஒவ்வொருத்தரா அனுப்புங்க.." என்று விட்டு அதி தீவிரமாக வேலையில் ஆழ்ந்து போனான்.

அரைமணி நேரத்திற்குப் பின்னர் மூன்று நான்கு நோயாளிகளைப் பார்த்து விட்டுத் தலை நிமிர்ந்தபோது அறை வாசலில் பெரிதான பேச்சு சத்தம் கேட்டது. சண்டையிடுகிற தொனியில் இரண்டு மூன்று பெண் குரல்கள் ஒரு சேரக் காதில் விழுந்தன.

"ஏம்மா... நாங்கள்ளாம் காலைல வந்து டோக்கன் எடுத்து வச்சுக்கிட்டு மணிக்கணக்கில் காத்துக் கிட்டிருக்கோம். நீ இப்பத்தான் வந்த... உடனே உள்ள நுழையப் பார்க்குற... தள்ளி நில்லும்மா..."

அவர்களின் அதட்டலுக்கு மகேஸ்வரியம்மாளின் பதில் குரல் கேட்டது.

"என்னங்கம்மா பேசறீங்க...? இது யாருன்னு நினைச்சுக்கிட்டிருக்கீங்க...?"

"யாராயிருந்தால் எங்களுக்கென்ன...? நாங்க நியாயத்தைத் தானே சொல்றோம். பணக்காரங்க, இளம் பொண்ணுங்கன்னால் மத்த இடங்கள்ல வேணும்னால் பல்லிளிச்சிக்கிட்டு முன்னால போக விடலாம். நம்ம டாக்டருகிட்ட அதெல்லாம் நடக்காது. அவருக்கு நியாயம்னால் நியாயம்தான். எல்லா மனுசங்களும் ஒண்ணுதான். அதனால் அந்தப் பொண்ணை ஒழுங்கா வரிசைல நின்று வரச் சொல்லுங்க..."

அதற்குள் அந்தக் கூட்டம் பார்த்துத் தவியாய் தவித்துப் போனாள் ரம்யா. தன் அழகிற்கும், நிறத்திற்கும் கொஞ்சம் கூட ஈடு இணையற்றவர்களுக்கு மத்தியில் நிற்கக் கூசிப் போனாள். வரக்கூடாத இடத்திற்கு வந்துவிட்ட உணர்வு ஏற்பட்டது. தகுதியற்ற மனிதர்களுடன் தனக்கென்ன பேச்சு என்கிற எண்ணத்தில் மகேஸ்வரியம்மாளை ஏறிட்டாள்.

"ஏம்மா.. நீதான் குணசேகரனுக்குப் பி.ஏ.வா?"

பி.ஏ. என்றால் என்ன என்பது புரியாமல் அந்த அம்மாள் தடுமாற வெறுப்பான குரலில் முகம் சிணுங்க மறுபடியும் கேட்டாள்.

"நீதான் உதவி செய்யிற பொம்பளையான்னு கேட்டேன்..."

டாக்டர் கூடத் தன்னை ஒருமையில் அழைத்தே இராத காரணத்தால் ரம்யாவின் அலட்சியமான கேள்வியில் அயர்ந்து போனாள் அந்தம்மாள். 'இத்தியூண்டு பெண்ணிற்கு இத்தனை திமிரா..?' என்று தோன்றிற்று. ஏதனால் ஏற்பட்ட திமிர்..? பணத்தினால் ஏற்பட்ட திமிராகத் தோன்றவில்லை. பெரிய பணக்காரப் பெண்ணில்லை. ஆட்டோவில் வந்து இறங்குகிற பெண் பணக்கார வீட்டுப் பெண்ணாக இருக்க முடியாது. அடிக்கடி குணசேகரன் அத்தை வீட்டிற்குப் போவதையும் அவர்களுக்கு உதவிகள் செய்வதையும் அந்தம்மாள் அறிவாள். ஆகவே இது பணத்திமிர் அல்ல; அழகினால் ஏற்பட்ட கர்வம். ஆளை அசர அடிக்கிற இந்த அழகு கொடுத்திருக்கிற இறுமாப்பு 'தன் அழகின் மூலம் எதையும் சாதித்துக் கொள்ள முடியும்.' என்கிற அசட்டுத் தன்னம்பிக்கை என்பதைச் சட்டென்று புரிந்து கொண்டு விட்ட அந்ததம்மாள் அவளை அதே அலட்சியத்தோடு ஏறிட்டுச் சொன்னாள்.

"கொஞ்சம் இருங்க. டாக்டர் கிட்டே கேட்டுக்கிட்டு வரேன்..."

ஸ்பிரிங் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த மகேஸ்வரியம்மாளோடு கூடவே உள்ளே நுழைய முயன்ற ரம்யாவை மற்ற பெண்கள் தடுத்து நிறுத்தி விட்டனர். அறை வாசலில் நடக்கின்ற போராட்டத்தை அறிய முயன்ற குணசேகரன்,

"என்ன மகேஸ்வரியம்மா.. என்ன சத்தம்..?" என்று கேட்டான்.

"குணா.. நான்தான் ரம்யா வந்திருக்கேன். உங்க பேஷண்ட்ஸ் என்னை உள்ளே நுழையவிடாமல் தடுக்கிறாங்க..." - மகேஸ்வரியம்மாளை முந்திக் கொண்டு வெளிவந்த ரம்யாவின் குரலில் நிலைமையைப் புரிந்து கொண்டு விட்ட குணசேகரன் தன் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான். ஏதோ சொல்ல முற்பட்ட மகேஸ்வரியம்மாளை கையமர்த்தி விட்டு ஸ்பிரிங் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து அமைதியாக ரம்யாவைப் பார்த்தான்.

"வா.. ரம்யா.. என்ன.. வரும்போதே புயலைக் கூட கூட்டிக்கிட்டு வர்ற..?"

"புயலுமில்ல சூறாவளியுமில்ல. உங்க பேஷண்ட்ஸ்தான் கொஞ்சம் கூட பேஷன்ஸே இல்லாமல் பிஹேவ் பண்றாங்க..."



24149
H00863

"அப்படியா..?" என்றவன் மெல்ல தன் தோழிகளைப் பார்த்தான்.

"உங்களுக்கெல்லாம் கொஞ்சம் கூட பொறுமையில்லேன்னு இவங்க சொல்றாங்க. அப்பிடி என்ன செய்தீங்க..?"

குணசேகரன் சொன்னதைக் கேட்டதும் சுறுசுறுவென்று முகம் மாறினார்கள் அவர்கள்.

"பொறுமையில்லாம அழும்பு செய்யிறது அந்தப் பொண்ணா நாங்களான்னு நீங்களே கேட்டுத் தெரிஞ்சுக்குங்க டாக்டர்.."

"அவங்க சொல்றதைக் கேட்டியா ரம்யா.. அப்படி அவங்க குற்றம் சொல்ற மாதிரி நீ என்ன செய்த..?"

"நான் என்ன செய்தேன்..? உங்களைப் பார்க்க உங்க ரூமுக்குள்ள நுழைய முயன்ற என்னைத் தடுத்து நிறுத்தினது இவங்களா, நானான்னு நீங்களே கேளுங்க?"

"என்னம்மா.. நீங்க தடுத்து நிறுத்தினீங்களா?"

"ஆ.. ஆமாங்க டாக்டர். நாங்கள்ளாம் மணிக்கணக்குல கைல டோக்கன் வச்சுக்கிட்டுக் காத்துக்கிட்டிருக்கிற போது இந்தப் பெண்ணு இப்ப வந்திட்டு உள்ள நுழையப் பார்க்குது.. இது தப்பில்லீங்களா..? பெரிய பெரிய டாக்டருங்க இடங்களிலெல்லாம் நடக்கிற அந்தத் தப்பு உங்க இடத்துலயும் நடக்கலாமா..? அதுக்கு நீங்க அனுமதிப்பீங்களான்னு சொல்லுங்க டாக்டர். நீங்க சரின்னு சொல்லிட்டா நாங்க விட்டுடறோம். எங்களுக்கு ஒன்னுமில்ல..."

படிப்பறியாத அந்தப் பெண்களின் நயமான நியாயமான பேச்சிற்கு முன் ரம்யா ஒன்றுமில்லாமற் போய்விட்டதை உணர்ந்து அவளை மிகுந்த அனுதாபத்துடன் ஏறிட்டான் அவன்.

"அவங்க சொல்றதில் இருக்கிற நியாயம் உனக்குத் தெரியுதா இல்லையா சொல்லு ரம்யா..."

அவள் கண்கள் பளபளக்க அவனை ஏறிட்டாள்.

"என்ன ரம்யா அப்படிப் பார்க்கிற..? சொல்லு ரம்யா.. அவங்க உணர்வுகளுக்குக் மதிப்புக் கொடுத்து நீயும் ஒரு டோக்கன் வாங்கிக்கிட்டு வரிசையில் நின்னு வர்றதுதான் நல்லது ரம்யா.."

முகம் முழுவதும் சிவந்து தணல் மாதிரி ஜொலிக்க படீரென்று கைகூப்பினாள் அவள்.

"ரொம்ப தாங்க்ஸ் குணசேகரன். அப்படி வரிசையில் நின்னுதான் வைத்தியம் பார்க்கணும்னால் அது எனக்குத் தேவையில்லை.. அந்த வைத்தியமும் வேணாம் நீங்களும் வேணாம்.."

சொல்லிவிட்டு பதிலுக்குக் கூடக் காத்திராமல் செருப்புக்கள் சப்திக்க அதிவேகமாகத் திரும்பி படியிறங்கிக் கீழே போனாள் அவள்..

## 12

வழி முழுவதும் பொருமிக்கொண்டே வந்தாள் ரம்யா. குணசேகரன் வேண்டுமென்றே தன்னை அவமதித்து விட்டதாக நினைத்தாள். இவ்வாறு அவமதிக்கக் காலமும், தருணமும் பார்த்துக் காத்துக் கொண்டிருந்து விட்டுத் தற்போது அவமதித்திருக்கிறான். வேண்டுமென்றே செய்திருக்கிறான். அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாதென்று மறுத்து விட்ட கோபம் உள்ளுக்குள்ளேயே அக்கினிக் குண்டமாகக் கனன்று கொண்டிருந்திருக்கிறது. அது இன்று நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததென்று தன் நெருப்பு நாவால் தீண்டியிருக்கிறது.

இதுவரை எங்கும் யாரும் தன்னை இவ்வாறு அவமதித்ததில்லை என்பதில் கோபம் பொங்கிப் பொங்கி வந்தது. கடைக்குப் போனால் முதலில் அவளுக்கு வேண்டிய பொருட்களைக் கொடுத்து விட்டுத்தான் மற்றவர்களைக் கவனிப்பார்கள். டெலிபோன் செய்கிற இடத்தில் பத்துபேர் காத்திருந்தாலும் அவளை அழைத்துக் கொடுத்துவிடுவார்கள். சினிமா டிக்கெட் வரிசையா, பஸ்ஸா, கல்யாண வரவேற்புக் கூட்டமா, விழாவா.. எதுவாக இருந்தாலும் பளீரென்ற அந்த முகத்திற்கு வாய் திறந்து கேட்காமலே எல்லாம் நடந்து விடும். முதன்மையில் கொண்டு போய் நிறுத்தி விடும். எல்லோருமே வழிவிட்டு விலகி ஒதுங்கிக் கொண்டு விடுவார்கள்.

தன் அழகின் வலிமை தெரியும் அவளுக்கு. பலம் தெரியும். எத்தனை பெரிய கூட்டமானாலும் ஆயிரம் பேருக்கு மத்தியிலும் அந்த உயரமும், வாளிப்பான உடலும் நிகுநிகுவென்ற தென்னம்பூ நிறமும். அதிலட்சணமான முகமும் தனியாகத் தெரியும். எப்படிப்பட்டவர்களானாலும் திரும்பிப் பார்க்க வைக்கும். ஒரு வார்த்தை



யாவது ஓடி வந்து பேசச் செய்யும். தங்களைத் திரும்பிப் பார்க்க மாட்டாளா என்று ஆண் வர்க்கத்தை ஏங்கச் செய்யும். அவள் பார்க்காத பட்சத்தில் அவளது கவனத்தைக் கவருகிற வழிதேடும். கடைசி பட்சமாக,

"மிஸ் மணி என்னங்க மிஸ்..?" என்றாவது கேட்டுவிடும்.

"உங்க கையிலதான் வாட்ச் இருக்கே.. நீங்களே பார்த்துக்கலாமே.." - முகத்தில் அடிக்கிற மாதிரி கேட்கத் தயங்க மாட்டாள் அவள்.

"ஹி..ஹி.. என் வாட்ச் ஓடல.. அதான் கேட்டேன்.." என்று அசடு வழிந்து விட்டுப் போகும்.

என்றாவது கல்லூரிக்குப் பஸ்ஸில் போகலாமென்று பஸ் ஸ்டாப்பில் நின்றால் போகின்ற அத்தனை கார்களிலிருந்தும் ஜன்னல் ஓர முகங்கள் அவளைக் கண்டு மலரும். கார் அகலும். திரும்பித் திரும்பிப் பார்க்கும். சியல்லோ, ஃபோர்டு, டாட்டா எஸ்டேட், பென்ஸ் எனத் தனியாகப் பயணிக்கிறவர்கள். பஸ் ஸ்டாண்ட் தாண்டிப் போய் விட்டுத் திருப்பிக் கொண்டு வந்து வலிய கேட்பார்கள்.

"லிஃப்ட் வேணுங்களா..? எந்தக் காலேஜ் போகணும்..?"

"நோ. தாங்க்ஸ்.."

அவளது மறுப்பிற்குச் சிலர் கண்ணியமாக (!?) நகர்ந்து போவார்கள். பலர் நகராமல் நின்று வற்புறுத்துவார்கள்.

"தனியாகத்தாங்க போறேன். ஒரு கஷ்டமுமில்ல.. உங்களை இறக்கி விட்டுட்டுப் போறேன்.."

"இல்லீங்க.. வேணாம்.."

"பரவாயில்லீங்க. வாங்க.."

"சாரி.. எனக்கு அப்படியெல்லாம் லிஃப்ட் ஏறி ஓஸிச்சவாரி செய்கிற வழக்கமுமில்லை. நான் நீங்க நினைக்கிற மாதிரி பொண்ணுமில்லை. நீங்க போகலாம்.."

"ஐஸ்வர்யா ராயை மிஞ்சின அழகான பொண்ணு சவாரி செய்த பெருமை என் காருக்குக் கிடைக்குமேன்னு பார்த்தேன். நீங்க

பிடிவாதமா மறுக்கிறீங்க... நானும், என் காரும் கொடுத்து வச்சது அவ்வளவுதான். பை தி பை... உங்க பேர் என்னன்னு தெரிஞ்சுக்கலாமா...?"

"தட் ஈஸ் நன் ஆஃப் யுவர் பிஸினஸ்..."

"கோபத்துல உங்க அழகு கூடுதே தவிர குறையல... ஆமாம். நீங்க ஏன் உலக அழகிப் போட்டியில் கலந்துக்கலை...?"

"யு...யூ ஸ்கௌண்ட்ரல்... நீங்களா நகர்றீங்களா... இல்ல... போலீஸைக் கூப்பிடட்டுமா...?"

"கூப்பிடுங்க... நான் கேட்ட கேள்வியில் என்ன தப்புன்னு அவங்களே சொல்லட்டும்..."

"சொல்றாங்களா... இல்ல, ஈவ் டீசிங்னு உள்ள தள்றாங்களான்னு பார்க்கலாமா...?"

"ஏய்... கமான்யா... எதுக்கு இப்ப இப்படிக் கோபப்படறீங்க...?தப்பு முழுதும் உங்க மீது இருக்கிறபோது எங்கமீது கோபப்பட்டா என்ன அர்த்தம்...?"

"என் மீது தப்பா...? என்ன தப்பு...?" புரியாமல் விழிப்பாள் அவள்.

"ஆமாம், இவ்வளவு அழகாயிருக்கிறது எங்க தப்பா...? உலக அழகிப் பட்டத்தை மீறின அழகெல்லாம் அழகிப் போட்டிகளில் கலந்துக்காமல் இருக்கிற விஷயமே உங்களைப் பார்த்ததுக்கு அப்புறம் தான் தெரிய வரும்...?"

அதற்கு மேல் அவளாலும் சிரிக்காமல் இருக்க முடியாது. சிரித்து விடுவாள்.

"ஹா... தாங்க்யூ..." அவளது சிரிப்பிற்கு முன்னால் நிற்க முடியாமல் தவிப்பது தெரியும்.

"எதுக்கு தாங்க்ஸ்...?"

"நீங்க சிரிச்சதுக்கு... வரீங்களா... காலேஜ்ல விட்டுட்டுப் போறேன்..."

"நீங்க சொன்ன அதே தாங்க்ஸைத்தான் நானும் திருப்பிச் சொல்லணும்..."



"ஓ... கமான்... இதுல எந்தத் தப்பும் இல்ல... கார்ல லிப்ட் போறது ஒரு தப்பா...?"

"தப்பு ரைட்டுன்றதெல்லாம் அவங்கவங்க மனோபாவத்தைப் பொருத்த விஷயம். என்னைப் பொருத்தவரை இது தப்புதான். எனக்கு இதெல்லாம் பிடிக்காது...ஐயம் ஸாரி. நீங்க போகலாம்..."

"எத்தனை அழகாயிருக்கீங்களோ அதே அளவுக்கு பிடிவாதமாகவும் இருக்கீங்க... வாழ்க்கையை சுலபமாக எடுத்துக்க உங்களுக்குத் தெரியலை..."

"சுத்துத்தர முயற்சிக்க வேணாம். நீங்க போகலாம்..."

"ஓ.கே. பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்..."

எத்தனையோ பேர் இப்படி எத்தனையோ விதமாகப் பேசிச் சலித்து நகர்ந்திருக்க, குணசேகரன் தன்னிடம் அவ்வாறு நடந்து கொண்டது அவளுக்குப் பெரிய அவமானமாகப் பட்டது.

'தன்னைப் போய் டோக்கன் எடுத்துக் கொண்டு வரிசையில் வரச் சொல்லி விட்டானே...?'

'இது என்ன ஊர் உலகத்தில் நடக்காத விஷயமா...? வேண்டியவர்கள், சொந்தக்காரர்கள் என்றால் முன்னால் பார்க்கமாட்டார்களா...? முதலில் கூப்பிட மாட்டார்களா...? தெரியாத, அறியாத இடங்களிலெல்லாம் தன்னை வரிசையில் நிற்க வைக்காமல் முதலில் வரச் சொல்கிற போது இவன் தன்னை டோக்கன் எடுத்து நிற்கச் சொல்லி விட்டானே...?'

'எப்படி முகத்தில் அறைகிற மாதிரி பேசிவிட்டான்! அதுவும் எத்தனைப் பெண்களுக்கிடையில்...? எந்த மாதிரி பெண்களுக்கிடையில்... மஞ்சள் பூசிய முகங்களும், மிட்டாய்க் கலர் புடவையும்... எண்ணெய் வழியும் முகங்களும்... பெரிய பெரிதாய் முறம் மாதிரி மூக்குத்திகளும்... அவர்களுக்கு மத்தியிலா...? என்னைவிட எந்த விதத்தில் அவர்கள் உயர்ந்தவர்கள் என்று அப்படி நடந்து கொண்டான்...?'

'பெரிய மனுநீதிச் சோழன் பரம்பரை... நீதி தவற மாட்டான்...'

பொங்கிப் பொருமி வெந்து வடித்தாள் அவள். நினைத்து நினைத்துக் கோபப்பட்டாள். இந்தக் கறுப்பனுக்கே இவ்வளவு அகங்

காரமும் திமிரும் இருந்தால் எனக்கு எவ்வளவு இருக்கும்...? வா... வீட்டுக்கு வா... சொல்கிறேன்...'

சடாரென்று திரும்பி வெளியில் பார்த்தபோது தன் தெரு தாண்டி ஆட்டோ போய்க் கொண்டிருப்பது தெரிந்தது.

"ஐய்யோ... என்னப்பா ஆட்டோ... தெரு தாண்டிப் போயிட்டியேப்பா..."

"நீங்க சொன்னால்தானேம்மா தெரியும்... எந்தத் தெரும்மா...?"

"திருப்புங்க... ஆட்டோவைத் திருப்பி பின்னால் போங்க..."

ஆட்டோ திரும்பி வீட்டு வாசலில் நின்றது. கீழே இறங்கப் போனவள் ஒரு வினாடி நிதானித்தாள். அம்மாவைப் பார்த்து உடனே இந்த விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்று தோன்றியது. ஆட்டோவை அம்மா வேலை செய்கிற எக்ஸ்போர்ட் கார்மெண்ட் கம்பெனிக்கு விடச் சொன்னாள்.

தையல் இயந்திரத்தோடு இயந்திரமாய் எதிரில் போராகக் குவிக்கப்பட்டிருந்த துணிகளுக்கிடையில் கிடந்த அம்மாவைத் தேடிப் பிடித்து வெளியில் அழைத்து வந்து சிடுசிடுத்தாள்.

"ஏம்மா... என்ன நினைச்சிக்கிட்டிருக்கான் உன் அண்ணன் மவன்...?"

"என்ன ஆச்சு ரம்யா...? நீ காலேஜுக்குப் போகல...?" அண்ணன் மகன் விஷயத்திலிருந்து பேச்சைத் திசை திருப்பத் தாய் முயல மகள் மீண்டும் பாயத் தொடங்கினாள்.

"காலேஜ் கிடக்கட்டும். இன்னிக்கு இல்லேன்னால் நாளைக்குப் போய்க்கிறேன். உன் அண்ணன் மவன் என்ன செய்தான்னு முதல்ல கேளு..."

சட்டென்று முகம் வாட அவளை ஏறிட்டாள் காவேரியம்மாள்.

"இதப்பாரு ரம்யா... வயசுல பெரியவங்களை அவன் இவன்னு மரியாதையில்லாம நீ பேசறது எனக்குப் பிடிக்கல..."

"ஆமாம்... ரொம்ப வயசுல பெரியவன் பாரு... பெரியவன்னால் நிஜமாகவே பெரியவனா நடந்துக்கிடணும்..."



"அப்படி என்னம்மா தப்பா நடந்துக்கிட்டான்...? வீட்டுக்கு வந்தானா என்ன குணா... காலை நேரத்துல?. நான் இல்லாத நேரத்துலயெல்லாம் வரமாட்டானே...?"

"அவன் எங்க வந்தான்...? நான் தான் அவனைத் தேடிக்கிட்டுப் போனேன்..."

"நீ அவனைத் தேடிக்கிட்டுப் போனியா...!" - ஆச்சரியமாகப் பார்த்தாள் அந்த அம்மாள்.

"என்னம்மா அப்படிப் பார்க்கிற...? அந்தக் கரிக்கட்டையைப் பார்க்கணும்னு நான் ஒன்னும் அங்க போல..."

"ரம்யா...!" என்று அதட்டிய காவேரியம்மாள் முதல் முறையாக அவள் மீது கோபம் காட்டத் தொடங்கினாள்.

"நீ இப்படி கரிக்கட்டைன்றது, அவன் இவன்னு பேசறதெல்லாம் நல்லாயில்ல. முதல்ல நாக்கை அடக்கக் கத்துக்க..."

"உங்க வீட்டு ஆளுங்கன்னா உனக்குப் பொத்துக்கிட்டு வருமே... அவங்க செஞ்சா என்ன ஏதுன்னு கேட்க மாட்டாயே...?"

"குணா தப்பு செய்யிறவனோ, தவறாக நடந்துக்கிறவனோ இல்லையே..."

"தப்பு செய்ய மாட்டான். தவறாக நடந்துக்கமாட்டான்."

"ரம்யா... திரும்ப சொல்றேன் நீ அவன் இவன்னு மரியாதை குறைவா பேசறதை நிறுத்தலேன்னா நான் உள்ள போயிடுவேன்..."

"சரி அவரு இவருன்னே பேசறேன் போதுமா...?"

"போதும். சொல்லு, தப்பு செய்யலை. தவறாக நடந்துக்கலைன்னால் என்ன செய்தான்...?"

"அவமானப்படுத்தினாரு உங்க அண்ணன் மகரு... மகன்னு கூட நான் 'ன்' போட்டுச் சொல்லல. 'ரு' போட்டு மகருன்னே சொல்றேன். சந்தோஷமா...?"

"அவமானப்படுத்தினானா...? குணாவா...? யாரை...?"

"வேற யாரை? என்னைத்தான்."

"உன்னையா...!? பொய் சொல்லாத ரம்யா. ஒரு போதும் உன்னை அவன் அவமானப்படுத்தியிருக்க மாட்டான். நீ வேணும்னா அவனை அவமானப்படுத்தியிருப்ப..."

"நான் உண்மை சொன்னால் கூட உனக்குப் பொய்யாக இருக்கு.. ஆனால் உன் அண்ணன் மகரு.. அரிச்சந்திர மகாப் பிரபு. மனுநீதிச் சோழன். தப்புத் தப்பு.. மனுநீதிச் சோழரு என்ன செய்தாரு தெரியுமா..?" என்று ஆரம்பித்துச் சொல்லி முடித்த ரம்யா அம்மாவிடம் கருவினாள்.

"வருவாரில்ல உன் அண்ணன் மகரு.. வீட்டுப் பக்கம் வரட்டும். அன்னிக்கு நான் என் அகங்காரத்தையும், திமிரையும் காட்டறேன். அவரு ஈகோவிற்கு என் ஈகோ கொஞ்சம் கூடக் குறைஞ்சதில்லைன்னு நிரூபிக்கிறேன். அப்படி நிரூபிக்காட்டி என் பேரு ரம்யா இல்லை.."

ஆள்காட்டி விரலை முகத்திற்கெதிரில் ஆட்டி மகள் சொல்லி விட்டுப் போனது நீண்ட நேரத்திற்குக் காவேரியம்மாளைக் கஷ்டப் படுத்திற்று. குணசேகரன் சொன்னதில் எந்தத் தவறும் அந்த அம்மாவிற்குத் தெரியவில்லை. குணசேகரனால் அப்படித்தான் சொல்ல முடியுமே தவிர ரம்யா எதிர்பார்க்கிற மாதிரி நடந்து கொண்டிருக்க முடியாது. அப்படி எல்லோரையும் போல் சாதாரணமாக நடந்து கொண்டிருப்பானானால் அவன் குணா இல்லை. குணசேகரனாக இருக்க மாட்டான்..

'இந்தப் பெண் ஏன் இப்படி இருக்கிறது..? இன்னமும் வாழ்க்கை தெரியவில்லையே..? நிஜம் பிடிபட மாட்டேன் என்கிறதே.. அவனைக் கிள்ளுக் கீரையாக மதிக்கிறதே.. அவனது நிறம் தெரிகிறதே தவிர உயரம் தெரியவில்லையே..! குணம் புரியவில்லையே..

மனிதர்கள் முகத்திற்காகவா குணத்திற்காகவா..?
உருவத்திற்காகவா உள்ளத்திற்காகவா..?
நிறத்திற்காகவா.. நெஞ்சத்திற்காகவா..?

அழகான புருஷனைக் கட்டிக் கொண்டு நான் கண்ட சுகம் தெரியுமா இந்தப் பெண்ணிற்கு..? இந்தப் பெண் என்ன.. இந்த காலத்துப் பெண்களே இப்படித்தான் இருக்கிறார்கள்? முகத்தையும், நிறத்தையும், உருவத்தையும்தான் பார்க்கிறார்களே தவிர அதைத் தாண்டி அப்பால் பார்ப்பதில்லை. தொலைநோக்கு இல்லை. வாழ்க்கை அழகான முகத்தில் இல்லை. உருவத்தில் இல்லை. வெள்ளைத் தோலில் இல்லை. சொன்னால் எடுத்துக் கொள் வார்களா..? புரியுமா..? புரியாது புரியவே புரியாது. எதுவும் சொல்லித்



தெரியாது. தெரிய வைக்க முடியாது. அடிபடவேண்டும். மிதிபட வேண்டும். அனுபவிக்க வேண்டும். அனுபவம் கற்றுத் தருவதை ஆயிரம் பேர் கற்றுத் தந்தாலும் வராது...

'எப்படிப்பட்டவன் குணா!

எவ்வளவு அற்புதமான பையன்!'

பெருமூச்சுதான் வெளிப்பட்டது அந்த அம்மாவிடமிருந்து. வேலை செய்து கொண்டே இவ்வளவு எண்ணங்களும் ஓடிய போது சட்டென்று ஒரு நினைவு தோன்றியது.

இந்தப் பெண்ணின் கோபம் தெரியாமல் அன்று ராத்திரியே குணா வீட்டிற்கு வந்தாலும் வரலாம். இவ்வளவு கோபத்தில் இருக்கிற இந்தப் பெண் அவன் முகத்தில் கதவை அறைந்து மூடினாலும் மூடும். முதலில் அவனுக்கு நிலைமையை எடுத்துச் சொல்லி விட வேண்டும்.

வேலையை விட்டு ஆபீஸ் அறைக்கு வந்து குமாஸ்தாவிடம் சொல்லி அனுமதி பெற்று குணாவிற்கு டெலிபோன் செய்தாள்.

"குணா.. அத்தை பேசறேன்.."

"சொல்லுங்கத்தை.. நல்லாயிருக்கீங்களா..? பார்த்த ஒரு வாரமாச்சு.."

"நீ நல்லாயிருக்கியாப்பா.."

"இருக்கேன் அத்தை, இன்னிக்குக் காலைல ரம்யா இங்கு வந்திருந்தா.."

"தெரியும்ப்பா.. அதுக்குத்தான் நானும் போன் செய்தேன்.."

"தெரியுமா..? எப்படி அத்தை..?"

"உன் கிளினிக்கிலிருந்து ரம்யா நேர இங்கதான் வந்திச்சு.."

"அங்கயா..?"

"ஆமாம்ப்பா.. நேர இங்க வந்து கத்திட்டுப் போவுது.."

"விடுங்க அத்தை. சின்னப் பொண்ணு.."

"சின்னப் பொண்ணு தாம்ப்பா.. அதனால்தான் சின்னத் தனமாக நடந்திடுமோன்னு பயமா இருக்கு.."

"போங்க அத்தை.. இந்த விஷயத்துக்கெல்லாம் பயந்துக் கிட்டு.."

"இல்லப்பா.. நீ வீட்டுக்கு வந்தால் அதே மாதிரி அவமானப் படுத்தணும்னு கருவிக்கிட்டுப் போவுது.."

"என்னை எப்படி அவமானப் படுத்த முடியும் அத்தை..?"

"வாசல்ல நிக்க வச்சு கதவை அறைஞ்சு மூடினாலும் மூடும்.."

"அவ்வளவுதானே.. மூடட்டும். இன்னிக்கு ராத்திரி கிளினிக்கை சீக்கிரம் முடிச்சுக்கிட்டு நான் வீட்டுக்கு வரேன்.."

"ஐயோ.. வேணாம்ப்பா.. அதைச் சொல்லத்தான் நான் கூப்பிட்டேன். அவ கோபம் கொஞ்சம் அடங்கட்டும்ப்பா.."

"பயப்படாதீங்க அத்தை.. அப்படி எதுவும் நடக்காது, அப்படியே நடந்தாலும் அது என்னைக் கஷ்டமோ கோபமோ படுத்தாது. இந்தக் கவலையை விட்டிட்டு வேலை முடிஞ்சு வீட்டுக்குப் போங்க.. ராத்திரி சாப்பாட்டுக்கு வந்திடறேன்.."

மறுபக்கம் தொலைபேசி துண்டிக்கப்பட, அன்றிரவு பற்றின கவலையும், பயமும் அதிகமாக மீண்டும் வேலையில் ஈடுபட முயன்றாள் காவேரியம்மாள்...

## 13

தொலைபேசியில் காவேரியம்மாள் தன்னை அழைத்துப் பேசியபின் சிறிது நேரம் அமைதியாக யோசித்தான் குணசேகரன். 'பாவம் அத்தை' என்று தோன்றிற்று. அவள் வேலை செய்கிற இடத்திற்கே போயிருக்கிறாள் என்றால் எப்படியெல்லாம் கத்தியிருப்பாள் ரம்யா என்பதை அவனால் உணர முடிந்தது. அவன் போன கோபத்திற்கு வெறும் கத்தலோடு நின்றாளே என்பதில் சற்று ஆறுதலும் ஏற்பட்டது.

அவனுக்குக் கோபம் வந்தால் வீடு எவ்வாறு இரண்டு படும் என்பதைப் பார்த்திருக்கிறான் அவன். சாட்சியாக நின்று அனுபவித் திருக்கிறான். தம்பி தங்கைகளையும், அம்மாவையும் நாக்குச் சவுக்கால் சுழற்றி சுழற்றி அடித்திருக்கிறாள். இடையிற் புகுந்து இவன் ஏதாவது சொல்லப் போனால் "இது எங்க குடும்ப விஷயம். இதுல நீங்க தலையிட வேண்டாம்.." என்று நிர்தாட்சண்யமாகத் தள்ளியிருக் கிறாள். இவன் மட்டுமின்றி வேறு யார் தலையிட்டாலும் அதே கதிதான்.



அப்பா போனபின் வீட்டிற்கு மூத்த பெண் என்பதில் பொறுப்பு ஏற்படாமற் போனாலும் திமிரும், அகங்காரமும் கூடியிருக்கிறது. அத்தனைப் பேரும் தனக்குப் பின்னால்தான் என்பது உள்ளுக்குள் ஊறிப் போயிருக்கிறது. எத்தனை பெரியவர்களா னாலும் மிகச் சுலபமாக எடுத்தெறிந்து பேசுகிற கர்வம் வளர்ந் திருக்கிறது.

அப்படி கர்வப்பட்ட அழகு தவிர அவளிடம் வேறு என்ன இருக்கிறது என்று யோசித்துப் பார்த்தான் அவன். உடனே தாத்தா தன்னை அழைத்துப் போய்க் குளத்தங்கரையில் ஊட்கார்த்தி வைத்துப் பேசியது மீண்டும் ஞாபகத்திற்கு வந்தது. அவர் சொன்ன நிஜத்தை மறுபடியும் நினைத்துப் பார்த்தான்.

"நீ சொல்ற மாதிரி அந்தப் பொண்ணு அவ்வளவு அழகுன்னே வச்சிக்க. ஆனால் அந்த மாதிரி அழகை நீ இதுவரை பார்த்ததே இல்லையாப்பா..?"

"இல்லை தாத்தா.. இத்தனை அழகான பொண்ணை என் வாழ் நாளில் நான் இதுவரை பார்த்ததே இல்லை.."

எத்தனை மடத்தனமாகச் சொன்னான். அழகுதான் எல்லாம் என்கிற மாதிரி எப்படிப் பேசியிருக்கிறான். அழகு என்பது எது என்று தெரியாமல் கூட அல்லவா சொல்லியிருக்கிறான். எது அழகு. எதெல்லாம் அழகு என எவ்வளவு அற்புதமாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார்!

"மனுஷங்களை விடு. அழியற அழகு... நாளாக ஆகத் தேயற அழகு. அதைப் போய் என்னவோ பெரிசா பிரமிச்சுப் பேசற.."

அழிகிற அழகு. நாளாக ஆகத் தேய்கிற அழகுதான் தன்னுடையது என்பதை எப்போதாவது நினைத்துப் பார்த்திருப் பாளா அவள்? யோசித்திருப்பாளா? தேய்ந்து அந்த அழகு அழிந்து போனால் எப்படி இருப்பாள்.. அதைக் கொஞ்சம் கூட நினைத்தே பார்க்காமல் அந்த எண்ணம் கூட வராமல் எவ்வளவு திமிரும் அகங்காரமுமாக நடந்து கொள்கிறாள்! அந்த அளவு திமிருக்கும், அகங்காரத்திற்கும் அவளிடம் என்ன இருக்கிறது..? கர்வப்பட அழகு தவிர வேறென்ன இருக்கிறது..? அழிந்து, தேயப் போகிற வெறும் வெள்ளைத் தோலுக்கும், அழகிற்குமா இத்தனைக் கர்வம்..?

கர்வத்தில் அவனால் நெல்முனை அளவு ஒப்புக் கொள்ளக் கூடியது வித்யா கர்வம் மட்டும்தான். அது கூடத் தப்புத்தான். ஆனால் அதற்கென்றே இருக்கக் கூடிய சில சிறப்பு அம்சங்களின் காரணமாகத் தான் அவனால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. படிப்பை அறிவைத் தன்னுடன் வைத்துக் கொண்டிருப்பவனை யாரும் எதுவும் செய்ய முடியாது.

*வெந்தணலில் வேகாது*
*வேந்தால் கொள்ளத்தான் முடியாது.*
*கொடுத்தாலும் நிறைவன்றி*
*குறைவுறாது.*
*கள்ளருக்கு மிக எளிது*
*காவலோ மிக அரிது...*

கொடுக்கக் கொடுக்க நிறைகிற சக்தி கல்வியைத் தவிர வேறு எதற்கு இருக்கிறது...? அதை அழிக்க முடியுமா...? சேதப்படுத்த முடியுமா...? தீயிட்டுக் கொளுத்த முடியுமா? திருடிக் கொண்டு போக முடியுமா...? அழியுமா...? தேயுமா...? என்ன செய்யும்...?

அப்படிப்பட்ட அறிவாளியா என்றால் நிச்சயமாக இல்லை. ரம்யா படிப்பிலோ, பொது அறிவிலோ தேர்ச்சி பெற்றவளில்லை. புத்திசாலிப் பெண்ணா என்றால் அதுவுமில்லை. ஒரு புத்திசாலிப் பெண் நிச்சயமாக அவ்வாறு நடந்து கொள்ள மாட்டாள். மனிதர்களை எடுத்தெறிய மாட்டாள். பக்குவமின்றிப் பேச மாட்டாள். இதமோ, அன்போ தெரியாமலிருக்க மாட்டாள். இவை எதுவும் தெரியாதவர்கள் எப்படிப் புத்திசாலியாக இருக்க முடியும்...? மூர்க்கமான பிடிவாதம் கொண்ட முரட்டுக் குழந்தையிடம் மட்டுமே இருக்கக் கூடிய குணங்கள் இவை.

"இதைச் செய்யாதேம்மா..." என்று பெற்றவள் கெஞ்சினால்...

"அப்படித்தான் செய்வேன் போ..." என்று முறைக்கிற முரட்டுக் குழந்தை.

"பெரியவங்கக்கிட்ட மரியாதையில்லாம நடக்கக் கூடாது..." என்றால்...

"நானும் கூடத்தான் பெரியவன்" என்று குதித்து உயரமாக்கிக் காட்டும் குழந்தை.



அந்தக் குழந்தைக்கும் ரம்யாவிற்கும் வித்தியாசமில்லை. முன்கோபமும், முரட்டுத்தனமும் நிறைந்த ஒரு பிடிவாதக்காரக் குழந்தைதான் அவள். அவளை அப்படியே விட்டு விட்டால் வாழ்க்கை வீணாகி விடும். படித்து முடித்து வேலைக்குப் போனாலும் நாலு பேர்களுக்கிடையில் பழக வேண்டியவள் அவள். கல்யாணமாகி கணவன் வீடு போகிறாள் என்றாலும் இந்த மூர்க்கமான முரட்டுக் குணத்தினால் அவளும் நிம்மதியாக இருக்க மாட்டாள். மற்றவர்களையும் இருக்கவிட மாட்டாள்.

அழகாக இருக்கின்ற ஒரே காரணத்திற்காக எல்லோரும் எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்துவிட வேண்டும் என்று அவள் நினைக்கின்ற நினைப்பு சரியானதல்ல. தள்ளி நிற்பவர்கள் வேண்டுமானால் விட்டுக் கொடுப்பார்கள். ஓரிரு முறைகள் விட்டுக் கொடுப்பார்கள். அதன்பின் திருப்பித் தாக்க ஆரம்பிப்பார்கள். அதே மாதிரி எப்போதும் பொறுத்துக் கொள்ளவும் மாட்டார்கள். அதற்கும் ஓர் எல்லை உண்டு. வெட்ட வெளிக்குக் கூட எல்லை உண்டு.

ஆரம்பத்தில் வேண்டுமானால் புற அழகு மருட்டலாம். ஆளை மயக்கலாம். அசர அடிக்கலாம். அக அழகு தெரிய வருகிற போது 'சீ! இவ்வளவு தானா...?' என்று தூக்கிப் போட்டு விடுவார்கள். அப்படித் தூக்கியடிக்கிறபோது மிகுந்த அடிபடும். வலியும் வேதனையும் ஏற்படும். ஆறாத ரணமாக நின்று அவஸ்தைப் படுத்தும்.

அந்த வலியையும், வேதனையையும் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியற்றவள் அவள். ரணத்தின் அரிப்பையும், எரிச்சலையும் பொறுத்துக் கொள்ள முடியாதவள். தன் பலவீனம் தெரியாமல் அனாவஸ்யமாக அடுத்தவர்களைத் தாக்குகிறாள்.

அவர்கள் திருப்பித் தாக்க ஆரம்பித்தால் தாங்கமுடியுமா இவளால்...?

காயம் தாங்க முடிந்தவர்கள் மட்டுமே அடுத்தவர்களைக் காயப்படுத்தத் துணிவார்கள்.

தாங்க முடியாத இவள் அழகு ஒன்றை மட்டும் ஆயுதமாக வைத்துக் கொண்டு, எதிரில் வருகிற அத்தனைப் பேரையும் எதிராளியாக நினைத்துக் கொண்டு தாக்குகிறாளே... எத்தனை அறியாமை! எவ்வளவு குழந்தைத்தனம்...!

இதை அவளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்கு மேலும் அவளை இப்படியே விட்டுவிடக் கூடாது. திருப்பித் தாக்கினால் தாங்கமாட்டாய் என எச்சரிக்கை வேண்டும். அவளை நேர்வழிப் படுத்தி நல்லதோர் வாழ்க்கைக்குத் தயாராக்க வேண்டும்.

'நீயும் சந்தோஷமாக இருந்து மற்றவர்களையும் சந்தோஷப் படுத்து... அதற்குத்தான் வாழ்க்கைப் அதற்காகத்தான் வாழ்க்கை என்பதைப் புரிய வைக்க வேண்டும்...'

மனதிற்குள் உறுதிப்படுத்திக் கொண்டுதான் அன்று அவன் அத்தை வீட்டிற்குக் கிளம்பினான். எட்டரை மணிக்கெல்லாம் மகேஸ்வரியம்மாளிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

"பேஷண்ட்ஸ் யார் வந்தாலும் நாளைக் காலைல வரச் சொல்லுங்க மகேஸ்வரியம்மா... அத்தை வீட்டுக்கு சாப்பிடப் போறேன்..." என்று கூறிவிட்டுக் கார் ஏறினான்.

அத்தை வீட்டு வாசலில் காரை நிறுத்திவிட்டு உள்ளே போனபோதே மற்ற குடித்தனக்காரர்கள் மலர்ச்சியோடு 'வணக்கம்' சொன்னார்கள். நிற்க வைத்து தங்கள் குறைகள் உடல் உபாதைகள் பற்றிப் பேசினார்கள்.

"கிளினிக்குக்கு வாங்கம்மா... குணப்படுத்திடலாம்..." என்று சொல்லிவிட்டு அவன் அத்தை வீட்டுப் போர்ஷனில் நுழைந்தபோது காவேரியம்மாள் வரவேற்றாள். படித்துக் கொண்டிருந்த குழந்தைகள் ஓடி வந்து அவன் கால்களைக் கட்டிக் கொண்டார்கள்.

"குணா மாமா... ஏன் ரொம்ப நாளாக வரலை...?"

"கணக்குல நான் நூத்துக்கு நூறு மாமா..."

"என்ன மாமா... இன்னிக்கு சாக்லேட் வாங்கிட்டு வரலை...?"

அந்த சந்தோஷமும், சிரிப்பும், மலர்ச்சியும் வீட்டில் ரம்யா இல்லாததைத் தெரியப்படுத்த, அவன் அவர்களைக் குனிந்து தழுவி, முத்தமிட்டு சமாதானப்படுத்தினான்.

"அடுத்ததரம் வரும்போது மறக்காமல் சாக்லேட் வாங்கிக் கிட்டு வரேன். இன்னிக்கு மறந்திட்டேன். ஆமாம். நீங்கள்ளாம் சாப்பிட்டீங்களா இல்லையா...?"



"ஓ... சாப்பிட்டோமே... இன்னிக்கு அம்மா மீன் குழம்பு வச்சிருக்காங்க... நீங்க அடிக்கடி வாங்க மாமா, அப்பத்தான் அம்மா அடிக்கடி மீன் குழம்பு வைப்பாங்க..."

சொன்ன அந்தப் பெண்ணின் முகம் பார்த்தான் அவன். நெஞ்சுக்குள் மெலிதாய் கனம் இறங்குகிற மாதிரி இருந்தது. மருமகனுக்குச் செய்து மகன் வயிறு அறிந்த தாயின் ஞாபகம் வந்தது. குரலைச் சன்னமாகத் தழைத்துக் கொண்டான்.

"வரேம்மா... பழைய மாதிரி வாரம் ஒரு முறை வர முயற்சிக்கிறேன்... மணி ஒன்பதாயிடுச்சு பாருங்க... நீங்க போய் படியுங்க... இல்ல... படுத்துக்குங்க..." என்று அனுப்பி வைத்தான்.

"படிச்சு முடிச்சாச்சு மாமா... படுத்துக்கறோம்... குட் நைட்..." என்று ஓடி வரிசையாகப் பாய் விரித்துப் படுத்துக் கொண்டு விட்டார்கள்.

அதன்பின் அத்தையைப் பார்த்தான் அவன். மெல்லிய புன்னகையோடு கேட்டான்.

"எங்க அத்தை ரம்யாவைக் காணோம்...?"

"ப்கூ..." என்று சூள் கொட்டினாள் அந்த அம்மாள்.

"ஏன் அத்தை சலிச்சுக்கறீங்க...? எங்க போயிருக்கா...?"

"ஏதோ காலேஜ் டே வருதாம். டிராமா ரிகர்சல்னு சொல்லிட்டு பிரெண்டு வீட்டுக்குப் போயிருக்கா... இப்போ வந்திடுவா... அதுக்குள்ள வாப்பா... உனக்கு சாப்பாடு போட்டு டறேன்..."

"ஏன் அத்தை இப்படிப் பயப்படறீங்க. அவசியமில்லாம பயப்படறதும் தப்பு. பயப்பட வேண்டியதற்கு பயப்படாததும் தப்பு. முதல் தப்பை நீங்க செய்யறீங்க. ரெண்டாவது தப்பை ரம்யா செய்யிறா..."

"ஆரம்பத்திலிருந்து எல்லாமே தப்புதாம்ப்பா... உங்க தாத்தா என்னைப் பெத்தது தப்பு. உங்க மாமாவுக்குக் கட்டிக் கொடுத்தது தப்பு. அதையெல்லாம் விடப் பெரிய தப்பு நான் இந்த மாதிரி ஒரு பெண்ணைப் பெத்து வளர்த்து வச்சிருக்கிறது... முதல் கோணல் முற்றுங் கோணல்னு ஆகிப் போச்சு என் வாழ்க்கை..."

அத்தையின் கன்னங்களில் உருண்டோடிய கண்ணீரைப் பார்த்தான் அவன். எல்லாப் பெண்களும் தங்களின் இயலாமையை எப்படி வெளிப்படுத்துவார்களோ அதே மாதிரி அத்தையும் வெளிப் படுத்துவதாகப்பட்டது. தங்கள் கஷ்டங்களுக்கும் குறைகளுக்கும் தாங்களே தான் காரணம் என்பதை மனிதர்கள் ஏன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார்கள் எனத் தோன்றிற்று. எல்லாவற்றிற்கும் அடுத்தவர்களைச் சுட்டிக் காட்டி, குறை சொல்லிப் பழக்கப்பட்டு விட்டார்கள்... மற்றவர்கள் மீது பழி போடுவது சுலபமானதாக இருக்கிறது. அது ஒரு தப்பித்துக் கொள்கிற வழியாகி விட்டது. தங்கள் கஷ்டங்கள் அனைத்திற்கும் தாங்கள் காரணம் என்று நினைப்பது நிம்மதி தருகிறது போலும்! அதை ஓர் விடுதலையாக உணருகிறார்கள் போலும்!

'நன்மையும் தீமையும் பிறர் தரவாரா...' என்பது தெரிய வில்லையே இவர்களுக்கு...

கண்களைத் துடைத்துக் கொண்டு அத்தை தட்டெடுத்து வைத்தாள். டம்ளரில் தண்ணீர் வைத்தாள்.

"வா குணா... உட்காரு..."

பின்பக்கம் போய் கை கழுவிக் கொண்டு வந்தவன்,

"நீங்க சாப்பிட்டீங்களா...?" என்று கேட்டான்.

"இல்லப்பா... ரம்யா வந்து சாப்பிட்டப்புறம்தான்..."

"அப்படின்னா ரம்யாவும் வந்து விடட்டுமே அத்தை... மூணு பேரும் ஒன்னாச் சாப்பிடலாமே..."

"ஒன்னாச் சாப்பிடுவதா...?! அவனோடா!? ஐயோ... என்னப்பா புரியாமப் பேசற... அவ வர்றதுக்குள்ள சாப்பாடு போட்டு உன்னை அனுப்பிடணும்னு பார்க்கிறேன்..."

அத்தையின் பதட்டம் கண்டு உள்ளுக்குள் பரிதாபப்பட்டான். "எத்தனை நேரமானாலும் ரம்யா வருகிறவரை இருந்து பேசிவிட்டுத் தான் அத்தை போகப் போகிறேன்..." என்று சொல்ல வந்தவன் சட்டென்று நிறுத்திக் கொண்டு விட்டான். அதைச் சொல்லி வேறு அவளைச் சங்கடப் படுத்த வேண்டாம் என்கிற எண்ணத்தில் பேசாமல் சாப்பிட உட்கார்ந்தான்.



தட்டில் சாப்பாடு போட்டு மீனோடு குழம்பு ஊற்றிய அத்தை, "இருப்பா... அப்பளம் பொரிச்சுக்கிட்டு வரேன்..." என்று சமைய லறைக்குள் நுழையப் போனவளைத் தடுக்க முயன்றான்.

"வேணாங்க அத்தை... உங்க கை மீன் குழம்புன்னா குழம்பு தான். அதுக்கு எதுக்கு அப்பளம்...?" என்று விட்டு அன்னத்தைக் குழம்பு இட்டு கலந்து ஒரு கவளம் வாயில் வைத்திருப்பான்.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

"ஐயய்யோ... ரம்யா வந்திட்டா... அவ சினேகிதி உமா கொண்டு வந்து விட்டுட்டுப் போறா..."

அத்தை பதற அமைதியாக இருந்தான் அவன். உள்ளே வந்து ரம்யா உட்கார்ந்து சாப்பிடுகிற குணசேகரனைக் கண்டதும் அதி ஆக்ரோஷமானாள்.

"என்னை அவமானப்படுத்தினவனை வீட்டுக்கே வரவழைச்சு விருந்து படைக்கிறாயாம்மா நீ...?"

ஆவேசமாகக் கத்தியவள் கண்கள் சிவக்க ஓடிவந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவனின் தட்டைக் காலால் ஓர் உதை விட்டாள். சாப்பாடும், மீன் துண்டும் சிதறி விழ, தட்டு எகிறி எதிர் சுவற்றில் முட்டி பெருத்த சத்தத்தோடு வந்து தரையில் விழுந்தது.

குழந்தைகள் பதறி தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டார்கள். காவேரியம்மாள் ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்தாள். அக்கம் பக்கத்திலிருந்து தலைகள் எட்டிப் பார்த்தன.

ரம்யாவின் ஆவேசத்திற்கும், ஆத்திரத்திற்கும், கோபத்திற்கும் எதிர்மாறான அமைதியுடனும், நிதானத்து'-னும் உட்கார்ந்திருந்த இடம் விட்டு எழுந்து கொண்டான் குணசேகரன்.

*நிழல் நடனக் கலகம்*
*தோன்றும் துளிர்க்கும் துடி மனதிற்கு*
*கோபமே தடை என உடை*
*இதுவே கலை இதுவே கலை*
*இதன் மேல்நிலை இதன் மேல்நிலை.*

நிலைத்தான்...

# 14

கோபமே வரவில்லையா அல்லது தன்னை அடக்கிக் கொண்டிருக்கிறோமா என்று ஒரு வினாடி யோசித்தான் குணசேகரன். அவை இரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை மிக நன்றாகப் புரிந்து கொண்டிருப்பவன் அவன்.

அடக்குதல் என்பது இயற்கைக்கு மாறானது. வலிந்து திணிக்கப்படுவது. திணிக்கப்படுவது எதுவுமே நிரந்தரமானதல்ல. தீர்வு அல்ல. எவ்வளவு வலிந்து திணிக்கிறோமோ அதே அளவு வலிமையோடு நிச்சயம் ஒரு நாள் பிய்த்துக் கொண்டு வெளிவரும். வெடித்துக் கொண்டு வெளியேறும். ஆகவே அடக்குமுறை என்பதில் நெல் முனையளவு கூட நம்பிக்கையற்றுப் போனவன்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த தட்டை உச்சக் கட்ட கோபத்திலும், ஆத்திரத்திலும் ரம்யா எட்டி உதைத்த போதும், சாப்பாடு அறை முழுதும் சிதறி, தட்டு பெரும் சத்தத்தோடு எதிர் சுவரில் மோதி விழுந்த போதும், பக்கத்துப் போர்ஷன் தலைகள் எட்டிப் பார்த்தபோதும் தான் அமைதியாக எழுந்து நிற்பது நிஜமான அமைதியே தவிர வலிந்து திணிக்கப்பட்டதல்ல என்பதை உணர்ந்து கொண்டான். இயற்கையாகவே தனக்குக் கோபம் வரவில்லை எனப் புரிந்து கொண்டான்.

யாருக்காக இருந்தாலும் கோபம் வந்திருக்கும். மூர்க்கமாக ரம்யா மீது இறங்கியிருப்பார்கள். தலைமயிரைப் பிடித்திழுத்து கீழே தள்ளி மிதித்திருப்பார்கள். அகங்காரத்தின் உச்சம் இது. திமிரின் எல்லை. அதிகபட்ச ஆத்திரம். இதை நிச்சயம் ஒரு ஆண்மகனால் தாங்கிக் கெண்டிருக்க முடியாது.

ஏன் ஆண்மகன் என்கிறோம்..? பெண் என்றால் தாங்கிக் கொள்வாள். கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமா எனவும் கேட்டுக் கொண்டான். அப்படியல்ல அது. பெண் இயற்கையிலேயே ஆணை விடச் சற்று பொறுமை மிகுந்தவள். கொஞ்சம் அமைதியானவள். அடக்கத்தின் காரணமாகக் கோபமோ, குதூகலமோ சட்டென்று வெளிக்காட்டி விடாதவள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக உடற்பலம் குறைந்தவள். அதன் காரணமாகவே உடனடித் தாக்குதலில் ஈடுபட்டு விடாதவள். ஆகவேதான் பெண் என்கிறபோது சலுகைகள் காட்டப்படுகின்றன. அல்லது எடுத்துக் கொள்ளப்படு



கின்றனவே தவிர அவளைக் குறைவாக மதிப்பிடப்படுவதால் அல்ல என்கிற தெளிவும் ஏற்பட்டது.

பெண்ணைப் பற்றி தான் இவ்வாறெல்லாம் நினைக்க அதற்கு முற்றிலும் எதிர்மாறானவளாகரம்யா நடந்து கொண்டது அவனுக்கு ஒரு வித ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பெண் அமைதியானவள் அடக்கமானவள் என்கிறோம். ஆனால் இவளோ அதற்கு நேர் எதிராக அல்லவா இருக்கிறாள். கோபம், அகங்காரம், ஆத்திரம், எல்லை மீறின திமிர், கர்வம்..!

இவை அனைத்திற்கும் காரணம் அழகா..? வெறும் அழகா..? இந்த உயரமும் வாளிப்புமான உடம்பா..? நிகுநிகுவென்று மின்னுகிற தென்னம்பூ நிறமா..?

இந்த நிறம் மங்கும்.. வயதாக ஆக உடம்பில் வாளிப்பும், வனப்பும் குறையும், அழகு அர்த்தமற்றதாகி விடும் என ஏன் தெரிந்து கொள்ளாமலிருக்கிறாள்? அழியக் கூடிய அழகிற்காக இவ்வளவு ஆட்டம் போடுகிறோம். என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறாள்..? எப்போது புரியும் இவளுக்கு..? யார் புரிய வைக்கப் போகிறார்கள்..?

ஆழமான பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது அவனிடமிருந்து. யார் புரிய வைக்க முடியும்..? யார் சொல்லி எடுத்துக் கொள்வாள் அவள்..? அவள் மட்டுமல்ல.. யாருக்கும் எதையும் சொல்லிப் புரிய வைக்க முடியாது. அனுபவிக்க வேண்டும். எதுவும் தங்களுக்கென வரும்போதுதான் தெரியும். அனுபவித்து, அடிபட்டு, மிதிபட்டு எழுந்து நிற்கிற போதுதான் வலி தெரியவரும். வேதனை புரியவரும். இதே வலியும் வேதனையும்தானே மற்றவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் என்பதை உணர முடியும். நிறைய அவமானப்படுகிற போதுதான் வாழ்க்கை பிடிபடும். மனது பக்குவப்படும். 'தான்' என்பது தானாகக் கழன்று கீழே விழும். ஈகோவின் சிறகுகள் ஒவ்வொன்றாக முறியும்..

அனுபவங்களும், அவமானங்களுமே வாழ்க்கைக்கு வேண்டிய இரு பெரிய ஆசான்கள். அவர்கள் சொல்லித் தருவதை வேறு யாரும் சொல்லித்தர முடியாது. எவன் ஒருவன் அதிகபட்ச அவமானத்தைச் சந்திக்கிறானோ அவனே அதிகபட்ச அனுபவத்தைப் பெற்றவனா வான். அவனே அதிகம் தெளிவானவன். அகந்தை அழிந்தவன்

ஆன்மாவை உயர்த்திக் கொண்டவன். ஆகவே... அவமானப் பட வேண்டும். ரம்யா... உனக்கு நன்றி... உன்னால் மட்டுமே அவமானப் பட்டவன் நான். பட்டுக் கொண்டிருப்பவன். படப்பட இறங்கி வந்து இலவம்பஞ்சு மாதிரி லேசாகிக் கொண்டு வருபவன்.

"ஏன் குணா... நீதானே ஒரு நிமிஷத்துக்கு முன்னால் அனுபவமும், அவமானமும் எடுத்துச் சொல்றதை வேறு யாரும் எடுத்துச் சொல்ல முடியாதுன்னு நினைச்சிகிட்ட...?"

"அதனால் நானே அனுபவப்பட்டு தெரிஞ்சுக்கட்டும்னு விட்டுட்டீங்களா...?"

"அதுமட்டுமில்ல குணா... அதுல இன்னொரு அபாயமும் இருக்கு..."

"என்ன தாத்தா...?"

"அவமானப்படற எல்ல மனசுங்களும் பக்குவப்படறதில்ல. சில மனசுங்க, ஏன் நிறைய மனசுங்க பதிலுக்கு அவமானப்படுத்தணும்னு இறங்கிடுங்க... தான் பட்டதை விட அதிகம் படுத்தணும்னு வஞ்சம் தீர்க்கிற வன்முறைக்குத் தாவிடுங்க... அவமானத்தை அனுபவமா, ஆசானா ஏத்துக்கிறதுக்கும் ஒரு பக்குவம் வேணும் குணா, அந்தப் பக்குவம் உன்கிட்ட இருக்கிறதைப் பார்த்து நான் சந்தோஷப் படறேம்ப்பா..."

"போங்க தாத்தா..." என்று தலைகுனிந்தான் அவன்.

அதுவரை அவன் எழுந்து அப்படியே நின்று கொண்டிருந்த தில் உள்ளுக்குள் பதறிப் போனாள் காவேரியம்மாள். எப்படிப்பட்ட அவமானம் என்பதில் துடித்துத் துவண்டு போனாள். தன் இயலாமையில் ஏற்பட்ட வேதனையில் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

'எந்தப் பெற்றவள் இதைப் பொறுத்துக் கொண்டிருப்பாள்...? எந்தத் தாயால் இதைச் சகித்துக் கொள்ள முடியும்...? இப்படிப் பேயாட்டம் போடுகின்ற மகளைத் துடைப்பக் கட்டையால் விளாசியிருக்க மாட்டாளா...? கையில் கிடைப்பது கொண்டு புரட்டிப் புரட்டி அடித்திருக்க மாட்டாளா...? ஆனால்... நான்...? கண் எதிரில்



நடக்கின்ற அக்கிரமத்திற்கு சாட்சியாக நிற்கிறேனே...? எதுவும் செய்ய முடியாத கையாலாகாததனத்தில் தவிக்கிறேனே...?'

'பாவம் குணா... இப்படிப்பட்ட அவமானங்களையெல்லாம் சகித்துக் கொள்ள என்ன தலையெழுத்து அவனுக்கு...! எதற்காக இப்படி ஒரு ராட்சஷத்தனத்தில் ஆடுகிறாள் இவள்...? வரிசையில் வரச் சொன்னது ஒரு தப்பா...? அதற்கா இப்படிப்பட்ட தண்டனை...? காலால் எட்டி உதைப்பதா...? அதுவும் சாப்பாட்டுத் தட்டையா...? அன்னம் லஷ்மி இல்லையா...?'

அடிப்பாவி... இதற்காக எத்தனை அனுபவிக்கப் போகிறாயோ...? எப்படிப்பட்ட தண்டனை காத்துக் கொண்டிருக் கிறதோ...? இதையெல்லாம் பார்த்துப் பேசாமல் நின்று கொண்டிருக் கிறேனே... என்ன அம்மா நான்? என்ன வளர்ப்பு வளர்த்திருக்கிறேன்...?'

உள்ளுக்குத் தன்னைத் தானே நொந்தவாறு கண்கலங்க ரம்யாவைப் பாத்தாள்.

"ஏண்டீ இப்படி எல்லார் வயத்தெறிச்சலையும் கொட்டிக்கிற...?"

"வயத்தெறிச்சலைக் கொட்டிக்கிறது நானா... நீயா...?"

"நானா எல்லாரையும் எடுத்தெறிஞ்சுப் பேசறேன்? பெரியவங் கன்ற மரியாதை இல்லாமல் நடந்துக்கறேன்...? நானா சாப்பிட்டுக் கிட்டிருக்கிறபோது தட்டை எட்டி உதைக்கிறேன்...?"

"ஆமாம்... நீ கண்டவங்களையெல்லாம் கூப்பிட்டு உட்கார வச்சு சாப்பாடு போடுவ... நான் அதைப் பார்த்துக்கிட்டிருக்கணுமா...? யார் யாருக்கோ சாப்பாடு போடறதுக்கா நீ உழைச்சு சம்பாதிக்கிற...?"

"அவன் யாரோ இல்லைடி... கண்டவனில்லை... என் அண்ணன் மகன்... சொந்த அண்ணன் மகன்..."

"என்னை அவமதிச்சு அனுப்பறவங்க யாராக இருந்தாலும் எனக்கு யாரோதான், கண்டவங்கதான்..."

"நேர்மையா, நியாயமா வரிசையில் நின்று வரச் சொன்னது உனக்கு அவமதிச்சதாயிடுச்சா...? படிச்ச பொண்ணு... நீயேயில்ல

வரிசையில் போயிருக்கனும்.. அதை விட்டிட்டு செய்த தப்பை எடுத்துச் சொன்னவங்களைப் பொல்லாதவங்களாக்கிடறதா..?"

"பொல்லாதவங்களைப் பொல்லாதவங்கன்னு சொல்லாமல் வேற எப்படிச் சொல்றதாம்..?"

"வேணாங்க அத்தை.. விடுங்க.. சின்ன விஷயத்தை ஏன் பேசிப் பெரிசுபடுத்தறீங்க..?" இடையில் குறுக்கிட்டு வாக்குவாதத்தை நிறுத்தப் பார்த்தான் குணசேகரன்.

சடாரென்று மகனை விட்டு அவனைக் கோபமாகப் பார்த்தாள் காவேரியம்மாள்.

"எதுப்பா சின்ன விஷயம்..? சாப்பிட்டுக்கிட்டிருக்கிற போது தட்டை எட்டி உதைக்கிறதா சின்ன விஷயம்..? அதுவும் அடக்கமா நிதானமா இருக்க வேண்டிய பொண்ணு அப்படிச் செய்யிறதா சின்ன விஷயம்..? இப்படி விட்டு விட்டுத்தாம்பா அவ இந்த அளவுக்கு எகிறறா.. தான் ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை... அழகுல தன்னை மீறினவங்க கிடையாதுன்ற நினைப்புல இந்த ஆட்டம் ஆடறா..

"இவளை இந்த அளவுக்கு விட்டது என் தப்பு.. பொண்ணை அடக்கி வளர்க்காமல் எகிற வச்சது அவங்க அப்பா கொடுத்த செல்லம். நான் கறுப்பு. அழகில்லாதவ. ஏதாவது சொல்லிட்டா அவருக்குப் பொத்துக்கிட்டு வந்திடும். அதே, திமிரும் அகங்காரமும், ஆணவமுமாப் பொண்ணையும் குதிருகணக்கா வளர்த்து ஒரு பொறுப்பு தெரியாம நிக்க வச்சிட்டுப் போயிருக்காருன்னா நானும் இனிமேலும் அதே தப்பைச் செய்யலாமாப்பா..? நாளைக்கே கல்யாணமாகி ஒரு வீட்டுக்குப் போக வேண்டிய பொண்ணு இப்படி சாப்பாட்டுத் தட்டைக் காலால் எட்டி உதைச்சிச்சின்னா சும்மாவா விடறது. இந்த குணத்தோட குடும்பம் நடத்தப் போச்சின்னா நாலே நாள்ல திரும்பி வந்திடாது..?"

அத்தனை வருடங்களாக உள்ளுக்குள் போட்டு அழுத்தி வைத்திருந்த ஆற்றாமை வெடித்துக் கொண்டு வெளிவந்தது. அம்மாவை வெறுப்பும் கோபமுமாக ஏறிட்டுப் பார்த்தாள் ரம்யா,



"சரி, அப்படியே நாலே நாள்ல திரும்பி வந்தாலும் உன் வீட்டுக்கு வந்து நிப்பேன்னு மட்டும் நினைச்சிடாதே.. எத்தனை கெட்ட எண்ணம் பாரு ஒரு பெத்த அம்மாவுக்கு? எல்லா அம்மாக்களும் தன் பொண்ணு நல்லா இருக்கனும், போற இடத்துல சீரும் சிறப்புமாக வாழனும்னு வாழ்த்துவாங்க.. சாமி கடவுளே..! என் பொண்ணை நல்லா வையின்னு வேண்டிப்பாங்க, ஆனால் நீ? போன நாலாவது நாள் திரும்பி வந்திடணும்னு சபிக்கிற.. சீ! நீயெல்லாம் ஒரு அம்மா, உன்னை அம்மான்னு சொல்லிக்கிறதே மகாபாவம்! இனி நீ எனக்கு அம்மாவுமில்ல, நான் உனக்கு பொண்ணுமில்ல. இனிமேல் எந்தக் காலத்திலும் நான் உன்கிட்ட பேசறதாக இல்லை.. நீயும் என்கிட்ட பேசாதே.. போ..."

சொல்லி விட்டுச், சடாரென்று திரும்பி அந்த வீட்டிலிருந்த ஒரே அறைக்குள் புகுந்து பெரும் சத்தத்தோடு கதவை அறைந்து மூடித்தாழிட்டுக் கொண்டாள். மூடிய கதவையே பாாத்தவாறு சில வினாடிகள் திக்பிரமை பிடித்தவளாக நின்று கொண்டிருந்தாள் காவேரியம்மாள். பாதித்தூக்கம் கலைந்து திருதிருவென விழித்த குழந்தைகளை மீண்டும் படுக்கச் செய்தான் குணசேகரன். சிதறிக் கிடந்த சோற்றுப் பருக்கைகளைத் திரட்டி சுவர் அருகில் விழுந்து கிடந்த தட்டில் போட்டு அப்புறப்படுத்தி அந்த இடத்தை சுத்தப்படுத்திவிட்டு அத்தையை ஏறிட்டான்.

அப்போதும் சுவரில் சரிந்து அதேமாதிரித்தான் நின்று கொண்டிருந்தாள் அவள். அவளை அந்த நிலையில் பார்த்தபோது மிகுந்த வேதனை ஏற்பட்டது குணசேகரனுக்கு. சமையலறைக்குள் போய் ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வந்து அந்த அம்மாவின் முகத்திற்கு எதிரில் நீட்டினான்.

"இந்தாங்க அத்தை தண்ணி குடியுங்க.."

தண்ணீரை வாங்கிக் கொண்ட காவேரியம்மாளின் கண்களிலிருந்து கரகரவெனக் கண்ணீர் வடிந்தது.

"என்ன அத்தை இது.. அவ குணம் தெரியாதா..? இதுக்குப் போய் அழுவாங்களா..? கண்ணைத் துடைச்சிக்குங்க.."

"இப்போ.. நான் என்ன சொல்லிட்டேன்னு அவ இந்தப் பேச்சு பேசிட்டுப் போறா குணா..?"

"அவதான் விவரம் தெரியாத குழந்தைன்னா நீங்களுமா அத்தை..?"

"எத்தினி நாளுக்கு இப்படி விவரம் தெரியாமலே இருக்கப் போறா..?"

"எல்லாம் தெரிஞ்சுக்குவா அத்தை, தானாகத் தெரிஞ்சுக்குவா.. வாழ்க்கைல அடிபட்டா சகலமும் புரிஞ்சு போகும். அவ ஒரு குழந்தைக்கு அம்மாவாகிற போதுதான் அம்மான்னா என்னன்னு தெரியவரும். எல்லாக் குழந்தைகளும் பெத்தவங்களை எகிறும். கண்டிச்சா வெறுக்கும். என்ன அப்பா அம்மா இவங்கன்னு மூர்க்கம் காட்டும். அதே குழந்தைங்க வளர்ந்து கல்யாணம் முடிஞ்சு பெற்றவங்களாகி, சீராட்டி பாராட்டி வளர்க்கிற குழந்தைங்க அவங்களை எகிறுகிறபோதுதான் தங்க தப்பை உணருவாங்க. 'நம்ம அம்மா அப்பாவை நாம் வெறுத்த மாதிரி நம்ம பிள்ளைங்க நம்மளை வெறுக்குதுங்களே'ன்னு நினைச்சுப் பார்ப்பாங்க. இது இயற்கை அத்தை, சகஜம். அந்த வழி கடந்துதான் எல்லோரும் வந்திருக்கோம். அவளும் வருவா அத்தை, வந்தே ஆகணும்."

"எப்போ குணா..? நான் செத்த பிறகா..?" - வெறுப்பும், வேதனையுமாகக் கேட்ட காவேரியம்மாளிடமிருந்து ஆழமான பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

இதற்குப் பதில் எதுவும் சொல்ல இயலாத நிலையில்

"சில 'ஏன்'களுக்கும், எதற்குகளுக்கும் பதிலே கிடையாது அத்தை. காலத்தால் மட்டுமே பதில் சொல்ல முடியும்.." என்றவன் புறப்பட ஆயத்தமானான்.

"வரேன் அத்தை அடுத்த வாரம் மறுபடியும் வரேன்.." என்று விடைபெற்றுக் கிளம்பி வெளியில் வந்தபோது ரம்யா இருந்த அறையில் விளக்கு எரிவது தெரிந்தது.

அப்போது அவள் மீது அவனுக்குப் பரிதாபம் மட்டுமே ஏற்பட்டது.



# 15

அறைக்குள் போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்ட ரம்யாவின் மொத்தக் கோபமும், முழு ஆத்திரமும் அம்மாவின் மீதுதான் திரும்பிற்று. குணசேகரன் செய்ததாகக் கருதிய அவமானம் கூட அந்த விநாடி மறந்து போயிற்று. அவனைக்கூடப் பொறுத்துக் கொள்ளலாம் போலிருந்தது. ஆனால் அம்மாவைப் பொறுத்துக் கொள்வதென்பது இனி இயலாத காரியமாகப் பட்டது.

எப்போதுமே அம்மாவைப் பிடித்ததில்லை அவளுக்கு. அவளைப் பொறுத்தவரை அம்மா என்பவள் சமைத்துப் போட, துணி துவைக்க, வீட்டைத் துப்புரவாக்குகிற ஓர் இயந்திரம் மட்டுமே. நினைவு தெரியத் துவங்கிய நாள் முதலாக 'அம்மா' என்று அவள் அன்பாய் அழைத்ததில்லை. பிரியமாய், நெருங்கியதில்லை. சந்தோஷமாகக் கட்டி அணைத்ததில்லை. முத்தமிட்டதில்லை. உட்கார்ந்து பேசியதில்லை. பள்ளிக் கதைகள், கல்லூரிக் கதைகளைச் சொன்னதில்லை. மனதில் இருந்த எந்த எண்ணத்தையும் பகிர்ந்து கொண்டதில்லை. பெரியவளாகும் சமயத்தில் சாதாரணமாகப் பெண் குழந்தைகளுக்குத் தாயோடு ஒரு நெருக்கமும், அந்யோன்யமும் ஏற்படுமே.. அதுகூட ஏற்பட்டதில்லை.

அப்பா திட்டுவதைக் கேட்டுக் கேட்டோ அல்லது அம்மாவின் கரிக்கருப்பு நிறமோ.. சாமர்த்தியமில்லாதவள் என்ற நினைப்போ.. முகத்தின் அவலட்சணமோ... ஏதோ ஒன்று அவளை அம்மாவை விட்டுத் தள்ளியே நிறுத்தியிருக்கிறது. வெறுமனே தள்ளி நிறுத்தியிருந்தாலும் பரவாயில்லை. ஒருவித வெறுப்பையும் அலட்சியத்தையும் வளர்த்திருக்கிறது. அம்மா என்கிறபோதே அவள் முகம் தானாகச் சுருங்கும். உடம்பு நெளியும். மனது அருவெறுக்கும். நெஞ்சுக்குள் நெருப்பு மண்டும்.

அம்மாவை எத்தனை வெறுக்கத் துவங்கினாளோ அத்தனை அப்பாவை நேசிக்க ஆரம்பித்தாள். விரும்பி ஒட்டிக் கொண்டாள். எதுவானாலும் அப்பா.. அப்பா.. அப்பா என்றாக்கிக் கொண்டாள்.

"ரம்யாக்குட்டீ.." நடையில் கால் செருப்பை கழற்றுகிறபோதே அப்பா கூப்பிட்டுக் கொண்டு வர வேண்டும். இல்லாவிட்டால் முகம் வாடிச் சுருங்கி விடும். மனசு சோர்ந்து போகும்.

'என்ன இந்த அப்பா... இப்படி உம்முனு முகத்தைத் தூக்கி வச்சிக்கிட்டு வராங்க...?' என்று தோன்றும்.

ஒருநாள் கூப்பிட்டுக் கொண்டு வர மறந்தாலும் அன்று முழுவதும் அவருடன் பேசமாட்டாள். அவர் எத்தனை கெஞ்சினாலும் இறங்க மாட்டாள். "போங்க... ஒன்னும் வேணாம்... அப்போ கூப்பிட்டுக்கிட்டு வரல... இப்போ ஏன் வந்து வந்து கெஞ்சறீங்க...?" என்று முகம் திருப்பிக்கொள்வாள்.

"அம்மாடி... இனிமேல் தெருக்கோடி திரும்பும் போதே கூப்பிட்டுக் கிட்டு வரேம்மா... என்னை மன்னிச்சிடும்மா... இன்னிக்குக் கூப்பிட்டுக்கிட்டு வராதது தப்புத்தாம்மா..." கன்னத்தில் போட்டுக் கொண்டு தோப்புக்கரணம் போடாத குறையாக அவர் கெஞ்சிய பிறகே விடுவாள்.

மறுநாளிலிருந்து மறக்காமல் அவர் "ரம்யாக்குட்டி..." என துள்ளிக் குதித்து கும்மாளமாக ஓடிப்போய் அவர் கழுத்தைக் கட்டிக் கொள்வாள்... கைகளை மாலையாகக் கோர்த்துக் கொண்டு தொங்குவாள்.

"எனக்கு என்னப்பா வாங்கிக்கிட்டு வந்திருக்கீங்க...?"

"என்னடா வேணும் உனக்கு...?" - எட்டு வயது மகளைத் தூக்கி எண்ணூறு முறை முத்தமிட்டுக் கேட்பார்.

"எங்க கிளாஸ்ல எல்லாரும் குடை ஜிமிக்கி போட்டுக்கிட்டு வராங்கப்பா... எனக்கும் குடை ஜிமிக்கி வேணும்ப்பா..."

"குடை ஜிமிக்கின்னா... என்னடா...?"

"காதுக்குப் போட்டுக்கிற ஜிமிக்கிப்பா..."

"தங்கமாடா...?"

"ஆமாம்ப்பா... பின்ன என்ன... எனக்குப் பித்தளையா வாங்கித் தருவீங்க...?"

"இல்லடா... ஒரு பேச்சுக்குக் கேட்டேன்... எங்க கிடைக்கும் அது...?"

"எல்லா நகைக் கடைங்களிலும் கிடைக்கும்ப்பா..."

"அப்ப சரி... கிளம்பு... வாங்கிடுவோம்..."

"இப்பவேவாப்பா...?!"



"பின்ன...? கேட்டது யாரு...? என் ரம்யாக்குட்டியில்ல... உடனே வாங்கிட வேணாம்... கிளம்பு கிளம்பு"

அந்த அப்பா எங்கே...? போன நாலாவது நாள் திரும்பி வரச் சபிக்கிற இந்த அம்மா எங்கே...? அம்மாவா இவள்? ஒரு புதுத்துணி வாங்கி வந்து தந்திருப்பாளா? பிறந்தநாள், பண்டிகை எதற்காவது பரிசு உண்டா...? பிரியமாய் ஒரு வார்த்தை பேசியிருப்பாளா...? அப்பா மாதிரி செல்லமாக 'ரம்...யா...க்...குட்...டி...'

அதற்கு மேல் தாங்க இயலாதவளாகக் கரகரவென்று கண்ணீர் வடித்தாள். ஆத்திரம் கோபம் எல்லாம் போய் சொல்லில் அடங்காத துக்கம் நெஞ்சை அழுத்திற்று.

'அப்பா... அப்பா... ஏன் என்னை விட்டுப் போனீங்க... இவங்க கிட்ட என்னை விட்டுட்டுப் போயிட்டீங்களேப்பா... என்னையும் கூட்டிக்கிட்டுப் போயிருக்கக் கூடாது...'

அப்பா போன பின்னர் தன் நிலைமை மிக மோசமாகி விட்ட உணர்வு ஏற்பட்டது. அப்பாவிற்குப் பிறகு அம்மா தன்னை அதிகம் சீண்டுகிறாள். எடுத்ததற்கெல்லாம் குற்றம் கண்டுபிடிக்கிறாள். குளித்துவிட்டு டவல் சுற்றிக் கொண்டு வந்தால் தப்பு என்கிறாள். அண்ணன் மகன் என்கிற கருப்பனைக் கல்யாணம் செய்து வைத்து விட வேண்டுமென்று எதிர் பார்க்கிறாள். அந்தக் கருப்பன் தன்னை அவமதித்ததற்குத் தான் திருப்பி அவமதித்தால் தப்பு என்கிறாள். கல்யாணம் பண்ணிக் கொண்டு போன ஒரு வாரத்திற்கெல்லாம் திரும்பி வந்துவிட வேண்டுமென்கிற சாபம் வேறு...

என்ன அம்மா இவள்... நின்றால் தப்பு, நடந்தால் தப்பு, உட்கார்ந்தால் தப்பு, நான் செய்தால் எதுவும் தப்பு. எல்லாமே தப்பு... சே...! அம்மாவா இவள்... அப்பா போனதற்குப் பதில் இவள் போய் அப்பா இருந்திருந்தால் எப்படியிருக்கும்...? தன்னை ஒரு ராணி மாதிரி நடத்தியிருக்க மாட்டாரா...? தலையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்க மாட்டாரா...? கேட்பதற்கு முன்னால் தானாகவே எல்லாம் வாங்கிக் கொண்டு வந்திருக்க மாட்டாரா...? அப்போதே அப்படி என்றால் இப்போது என்னைப் பார்த்துப் பார்த்து எத்தனை சந்தோஷப் படுவார். இன்றைய என் அழகு அவருக்குள் எவ்வளவு பிரமிப்பையும், பெருமையையும் ஏற்படுத்தும்! 'ரம்யாக்குட்டி எவ்வளவு அழகுடா நீ!'

நிமிஷத்துக்கு நிமிஷம் 'உனக்கு திருஷ்டி சுத்திப் போடணும்டா...' என வாய் ஓயாமல் சொல்லியிருக்க மாட்டாரா...?

ஆனால் இந்த அம்மா என்ன செய்கிறாள். 'வெறும் முகம் மட்டும் அழகாக இருந்தால் போதுமா? மனசும் அழகாக இருக்க வேண்டாமா...?' என்று ஏதோ உபதேசம் செய்கிற மாதிரி சொல்கிறாள்.

அதற்குக் காரணம் பொறாமை. வெறும் காழ்ப்புணர்ச்சி. பெற்ற பெண்ணின் அழகைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு உள்ளுக்குள் மண்டிக் கிடக்கிற குரோதம். அழகில்லாமல் பிறந்துவிட்ட தாழ்வு மனப்பான்மை... அது தன்மீது கோபப்படச் செய்கிறது. குற்றம் கண்டுபிடிக்க வைக்கிறது. குறை கூறச் சொல்கிறது.

அம்மா...! அந்த வார்த்தைக்கே அர்த்தமில்லாதவள் நீ! உன்னை நான் வெறுக்கிறேன். மனப்பூர்வமாக வெறுக்கிறேன். பெற்ற பெண்ணின் அழகு கண்டு பொறாமைப் படுகிற உன்னை அம்மா என்று நினைக்கக் கூட கூசுகிறேன்.

இனி உன்னை நான் அம்மா என்று கூப்பிடப் போவதில்லை. உன் சம்பாத்தியத்தில் சாப்பிடப் போவதில்லை. படிக்கப் போவதில்லை. காலணாக் காசிற்கு உன் கையை எதிர் பார்க்கப் போவதில்லை. என் காலில் நான் நிற்கப் போகிறேன். சுதந்திரமாக வாழப் போகிறேன்...

உடனே உள்ளுக்குள் மளமளவெனக் கற்பனைகள் வளரத் தொடங்கின. ஒரு பெரிய வெளிநாட்டுத் தொடர்புள்ள என்.ஆர்.ஐ. கம்பெனியில் வேலைக்கு அமர்ந்துவிட்ட மாதிரியும், மாதம் பத்தாயிரம் சம்பாதிக்கிற மாதிரியும் வெளிநாட்டுத் தொடர்புள்ள கம்பெனி என்பதால் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போகிற மாதிரியும், டில்லி, பம்பாய், கல்கத்தா என விமானத்தில் பறக்கிற மாதிரியும், கையில்லா ரவிக்கையும், கத்தரித்த கூந்தலும், உதட்டு லிப்ஸ்டிக்கும், நுனிநாக்கு ஆங்கிலமும்...

வேலை என்று கிடைத்துவிட்ட பின் இந்த வீட்டில் இருக்கக் கூடாது. சீ! வீடா இது. ஒண்டுக் குடித்தன எலிவளை. பாத்ரூம் போகக் க்யூ குளிக்கக் க்யூ... ஆற அமர ஒரு நாளாவது குளித்தோம் என்பதுண்டா...? நாலு செம்பு தண்ணீர் ஊற்றி மடமடவென்று



சோப்பு போட்டுக் கொண்டு வந்து விட வேண்டும், சற்று நேரமானால் கதவு தட்டுவார்கள்.

"எங்களுக்கெல்லாம் ஆபீசுக்கு நேரமாவுது..." என்பார்கள்.

"கிளியோபாட்ரா மாதிரி குளிக்கணும்னால் தனி வீடு, தனி பாத்ரூம் பார்த்துக்கிட்டுப் போகணும்..." என முணுமுணுப்பார்கள்.

அம்மாவிற்கு மட்டுமல்ல. அந்த வீட்டில் யாருக்கும் தன்னைப் பிடித்ததில்லை. கூடப்பிறந்த தம்பி தங்கைகளுக்குக் கூடப் பிடிப்ப தில்லை. காரணம்...? தன் அழகு அவர்களின் கண்களை உறுத்துகிறது. பொறாமைப்பட வைக்கிறது. வயிற்றெரிச்சல் வாய்வார்த்தைகளாக வெளிவருகிறது.

ஒரு நல்ல வேலை கிடைத்து நல்ல சம்பளமும் கிடைத்து விட்டால் இங்கு இருக்கக் கூடாது. இந்த மனிதர்கள் முகத்தில் விழிக்கவே கூடாது. தனியாக ஒரு வீடு பார்த்துக் கொண்டு போய்விட வேண்டும்...

சட்டென்று மெலிதானதோர் பயமும் தலைதூக்கிற்று. இத்தனை அழகோடு, இந்த இளம் வயதில் ஒரு பெண் தனியாக வாழ முடியுமா...? பாதுகாப்பு இருக்குமா...?

ஏன் இருக்காது...? எத்தனை பேர் அப்படி வாழவில்லை...? சிங்கப்பூருக்கும், துபாய்க்கும், அபுதாபிக்கும் எத்தனை பெண்கள் வேலை கிடைத்து தனியாகப் போகிறார்கள்... கேரளத்துப் பெண்கள் எவ்வளவு பேர் இங்கு வந்து நர்ஸாக வேலை பார்க்கிறார்கள். அவர்களால் முடியுமானால் தமிழ்நாட்டுப் பெண்ணான என்னால் தமிழ்நாட்டில் தனியாக வாழ முடியாதா என்ன...?

தனி வீடு பாதுகாப்பு குறைச்சல் என்றால் ஒரு ஃப்ளாட் பார்த்துக் கொள்ளலாம். அல்லது கீழ் வீடு, மாடி வீடு என்றிருக்கிற வீட்டின் மாடி வீட்டை எடுத்துக் கொள்ளலாம்...

எதுவானாலும் இந்த வீட்டை விட்டு, அம்மாவை விட்டு, தம்பி தங்கைகளை விட்டு, தன்னைப் பார்த்தாலே கடுக்கிற இந்த மனிதர் களை விட்டுத் தனியாகப் போய்விட வேண்டும். அதன்பின் இவர்கள் யாருடைய முகத்திலும் விழிக்கக் கூடாது. முக்கியமாய் அம்மாவைப் பார்க்கவே கூடாது...

அதற்கு முதலில் வேலை தேடிக் கொள்ள வேண்டும். நாளைக் காலை எழுந்து கல்லூரிக்குப் போகக் கூடாது. வேலை தேட ஆரம்பிக்க வேண்டும். சாதாரண வேலையாக இருக்கக் கூடாது. மிக நல்ல கம்பெனியில் கை நிறைய சம்பாதிக்கிற வேலையாக இருக்க வேண்டும்.

கிடைக்குமா..? ஒரு டிகிரி கூட முடிக்காத தனக்கு அத்தனை சுலபத்தில் கிடைத்து விடுமா.. அதுவும் தான் நினைக்கிற மாதிரியான இடத்தில் நினைக்கிற மாதிரியான வேலை..?

ஏன் கிடைக்காது..? இந்த ஐந்தடி நாலங்குல உயரத்திற்கு, தாழம்பூ நிறத்திற்கு, வாளிப்பான உடம்பிற்கு, தெருவில் போகிற அத்தனைப் பேரையும் திரும்பிப் பார்க்க வைக்கிற கவர்ச்சிகரமான முகத்திற்கு..

எத்தனை தடியன்கள் விழுகிறான்கள்.. காரைத் திருப்பிக் கொண்டு வந்து லிப்ட் வேண்டுமா என்று கேட்கிறார்கள்..

இவன் வேண்டாமென மறுத்தாலும் விடாமல் கெஞ்சிக் கொண்டு நிற்கிறான்கள்..

சாதாரணக் கார்களா...? ஃபோர்டிலும், பென்ஸிலும், சியல்லோவிலும், ஒபலிலும் வருகிறவர்கள் சாதாரண மனிதர்களா..?

தெருவில் பஸ்சுக்குக் காத்துக் கொண்டு நிற்கிறபோது வழிகிற தடியன்கள் வேலை என்று தேடிப் போனால் தராமலா போய்விடுவான்கள்..? மிகவும் கெட்டிக்காரத்தனமாய் வேலையும் வாங்கிக் கொண்டு, வழிசல் அளவிலேயே அவர்களை நிற்கவும் வைத்து அதிசாமர்த்தியமாய்த் தப்பித்துக் கொண்டுவிட வேண்டும்.

முடியுமா..?

நிச்சயமாக முடியும். தன்னால் எதுவும் முடியும். முடிய வேண்டும்..

தீர்மானித்தபின்னரே மனது சற்று நிம்மதியாயிற்று. அவளுக்கு உள்ளுக்குள் தகித்துக் கொண்டிருந்த ஆத்திரம், கோபம், அகங்காரமெல்லாம் மெல்ல அடங்க ஆரம்பித்தன. மெதுவாகக் கண்களை மூடித் தூங்க முயன்று புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள் அவள்..



# 16

மறுநாள் காலை எழுந்தபோது மிகவும் தெம்பாக இருந்தாள் ரம்யா. தெளிவாக இருந்தாள். முதல் நாள் இரவு ஏற்பட்ட வருத்தம், சோகம் எல்லாம் மறைந்து எல்லாம் ரம்யா ரம்யாவாக இருந்தாள். என்னவானாலும் இன்றைக்கே வேலை தேடிக் கொண்டு விட வேண்டும் என்கிற தீர்மானமான முடிவில் இருந்தாள்.

'இனி கல்லூரிக்குப் போகக் கூடாது அம்மா கைக்காசை எதிர் பார்க்கக்கூடாது. சொந்தக் காலில் நிற்க வேண்டும். சுயமாகச் சம்பாதிக்க வேண்டும்..'

அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தபோது தாழ்வார ஓரமாக உட்கார்ந்து தம்பி தங்கைகள் படித்துக் கொண்டிருந்தார்கள். அவளை ஒருமுறை தலை உயர்த்திப் பார்த்துவிட்டு மீண்டும் குனிந்து கொண்டார்கள்.

'எல்லாத்துக்கும் எத்தனைத் திமிர். உடம்பு நிறைய அகங்காரம். அக்காவாச்சே... வயசுல மூத்தவளாச்சேன்னு கொஞ்சமாவது மரியாதை இருக்கா, இதுங்களுக்கு..? பயமிருக்கா..? இதுக்கெல்லாம் காரணம் அம்மா. அவங்க கொடுக்கிற இடம். செல்லம். ஒரு கண் வெண்ணை. மறுகண் சுண்ணாம்பு இந்த அம்மாவிற்கு. இவங்க என்றால் பிரியம். நான் என்றால் வெறுப்பு. சீ! அம்மாவா அவள்..? சின்னம்மா மாதிரி எத்தனை ஓரவஞ்சனை..!

அடிவயிற்றிலிருந்து கொழுந்து விட்டு எரியத் தொடங்கிற்று. மீண்டும் அம்மா மீதும் தம்பி தங்கைகள் மீதும் வெறுப்பும், ஆத்திரமும் மண்டிக்கொண்டு வந்தன. எவ்வளவு சீக்கிரம் இந்த வீட்டை விட்டுப் போகிறோமோ அவ்வளவு நல்லது என்று நினைத்துக் கொண்டே பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு மீண்டும் அறைக்குள் நுழைந்தபோது காவேரியம்மாள் ஒரு எவர்சில்வர் டம்பளரில் சூடாக டீ கொண்டு வந்து வைத்தாள்.

"காப்பிப் பொடி இல்லை. மாசக் கடைசி ஆயிடுச்சு. கையில பணமில்லை. அதனால் டீத்தூள் வாங்கி டீ போட்டுக்கிட்டு வந்திருக்கேன்..."

மேஜை மீது வைக்கப்பட்ட டம்பளரைக் கையால் வீசி இழே தள்ளியதில் சூடான டீ அறை முழுதும் சிதறி ஓட, தரையில் விழுந்த டம்பளர் உருண்டு மூலையில் போய் நின்றது.

ஒரு வினாடி ஆடிப் போன காவேரியம்மாள் கொதித்துத் தன் வாழ்நாளில் முதல் முறையாக அவளை அறையக் கை ஓங்கினாள். அந்த அறை தன் மீது விழாத வகையில் அவளது கையைப் பற்றிக் கொண்ட ரம்யா அம்மாவின் முகத்தைச் சுட்டு எரித்து விடுகிற மாதிரி பார்த்தாள்.

"மரியாதை கெட்டு விடும். ஜாக்கிரதை!" உறுமலாக வந்த மகளின் குரலில் காவேரியம்மாளின் அடிவயிறு புரண்டது.

"என்னடீ செய்வ..?"

"திருப்பி அடிச்சிடுவேன். என் மேல் ஒரு அடி விழுந்திச்சு.. உன் மேல் நாலு அடி விழும். அதுக்குத் தயாராக இருந்தியானால் கையை ஓங்கு.."

கால்வினாடி வெறுப்பும் வேதனையும் இயலாமையுமாக மகளின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்து அந்த அம்மாள் சட்டென்று குரல் கரகரக்கக் கேட்டாள்.

"எதுக்குடீ இந்தப் பேயாட்டம் ஆடற..?"

"பேய்க்குப் பிறந்தால் பேயாட்டம் ஆடாமல் என்ன செய்வாங்களாம்..?"

அதற்கு மேலும் அவளோடு பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்றுணர்ந்த அந்த அம்மாள் எல்லையற்ற விரக்தியோடு நகரத் துவங்கியதும் ரம்யாவின் குரல் அழுத்தமாக வந்தது.

"ஒரு நிமிஷம், நில்லு..!"

நின்று திரும்பினாள் அந்தம்மாள்.

"இன்னிலேருந்து நான் காலேஜுக்குப் போகப் போவதில்லை. வேலை தேடிக்கிட்டு இந்த வீட்டை விட்டுப் போகப் போறேன்..."

வீட்டை விட்டுப் போவதா..? ஒரு வயது வந்த பெண்ணால் எங்கு போக முடியும்..? எப்படித் தனியாக வாழ முடியும்..? அதுவும் இத்தனை அழகான பெண்.. விடுவார்களா..?

என்ன ஆகி விட்டது இவளுக்கு..? ஏன் இத்தனைக் குரூரமாகப் பேசுகிறாள்..? அடுத்தவர்களைத் தாக்குவதில் இத்தனை சந்தோஷமா..? நிஜமாகச் சொல்கிறாளா, அல்லது வேண்டுமென்றே என்னைக் கஷ்டப்படுத்திப் பார்க்கிறாளா..?



எதுவானாலும் இப்போது இவளுடன் வாய் கொடுக்க வேண்டாம். ஏற்கனவே நேரமாகி விட்டது. குழந்தைகளுக்கு சாப்பாடு போட்டு கைக்கு டிபன் கட்டிக் கொடுத்து சாப்பிட்டு விட்டு ஓட வேண்டும். இன்னமும் பேசிக் கொண்டு நின்றால் மணியாகி விடும். அப்புறம் கம்பெனி சூபர்வைஸர் ஆயிரத்தெட்டு கேள்விகள் கேட்பார். பதில் சொல்ல முடியாது. சாயந்திரம் வந்து இவளுடன் பேசிக் கொள்ளலாம்.

மவுனமாக நகர்ந்து போகிற அம்மாவை மதுரையை எரிப்பதற்கு முன்னிருந்த கண்ணகியாகப் பார்த்துக் கொண்டு நின்றாள் அவள். தான் வீட்டை விட்டுப் போகப் போவதாகச் சொன்னது கூட அம்மாவிற்குப் பொருட்டில்லை என்பது உள்ளுக்குள் ஆழமாய் காயமேற்படுத்தியது. அதன் ரணமும் வலியும் அதிகமாகத் தெரிய கீழ் உதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டாள்.

'நான் போகப் போகிறேன்' என்று சொன்னப்புறமும் இத்தனை அலட்சியமா உனக்கு..? போக மாட்டேன் என்கிற எண்ணமா...? அதனால்தான் பொருட்படுத்தாமல் திரும்பிப் போகிறாயா...? இன்றே போய்க் காட்டுகிறேன் பார். இன்று ராத்திரி நீ ஓவர் டைம் முடித்து விட்டு வருகிற போது நான் இந்த வீட்டில் இருக்கப் போவதில்லை...?

அம்மாவைப் பழி வாங்குகிற வெறியுடனும் வேகத்துடனும் வழக்கத்திற்கு மாறாக வெகு சீக்கிரம் குளித்து முடித்தாள். குளிக்கும் போதும் உடை மாற்றும்போதும் முகத்தை மேலும் அழகாக்கிக் கொள்ள முயன்றபோதும் அடுத்து என்னவெல்லாம் செய்ய வேண்டும் என யோசித்துத் திட்டமிட்டுக் கொண்டாள்.

தன்னிடமிருந்ததில் நல்லதாகத் தெரிந்த பச்சை வங்காளக் கைத்தறிப் புடவையும் அதற்குத் தகுந்த பளீரென்ற ஆரஞ்சு வர்ண ஜாக்கெட்டுமாகக் கிளம்பியபோது அம்மாவும் குழந்தைகளும் கிளம்பிப் போய் விட்டு இருந்தனர். பசி வயிற்றைக் கிள்ளிற்று. ராத்திரி கூட சாப்பிடாததால் வழக்கத்தை விடவும் அதிகம் பசித்தது. எப்போதும் போல் அம்மா சாப்பாடு எடுத்து மூடி வைத்திருப்பது தெரிந்தது.

'உயிர் போனாலும் போகலாமே தவிர இனி அம்மாவின் சாப்பாட்டைத் தொடக் கூடாது... அவள் இனி அம்மா இல்லை. பெற்ற அம்மா மாதிரியா நடந்து கொள்கிறாள்...?'

சின்னம்மா மாதிரியல்லவா பாரபட்சம் காட்டுகிறாள்..? ஒரு வேளை இவள் சின்னம்மாவே தானோ..? என் அம்மா செத்துப் போய் அப்பா இவளை இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்து விட்டாரோ..? அது எனக்குத் தெரியக் கூடாதென்று மறைத்து வைத்து விட்டாரோ..? அதனால்தான் தாயற்ற குழந்தை என்று அவர் என்னிடம் அதிகப் பாசம் காட்டினாரோ..?

அப்படித்தான் இருக்க வேண்டும். அதனால்தான் அவளுக்கு என்னைக் கண்டால் பிடிப்பதில்லை. என்னை ஒரு மாதிரியும் மற்ற குழந்தைகளை வேறு மாதிரியும் நடத்துகிறாள். அதனால்தான் நான் தனி அழகாக இருக்கிறேன். வெள்ளை வெளேறென்று சந்தன நிறத்தில் மின்னுகிறேன். அப்பா அழகு நல்ல நிறம். என் அம்மாவும் அழகாக இருந்திருக்க வேண்டும். தனி நிறத்தில் மின்னியிருக்க வேண்டும். கூந்தல் கால் முட்டியை எட்டியிருக்க வேண்டும். அதனால் தான் அதே அழகு தனக்கும் வந்திருக்கிறது. தன்னை மற்றவர்களில் இருந்து பிரித்துத் தனியாகக் காட்டுகிறது. நூறு பேருக்கு மத்தியில் நின்றாலும் பளீரென்று கண்ணில் அடிக்கிறது. இந்தக் கரிக் கட்டைக்குப் பிறந்திருந்தால் இப்படியா இருப்பேன்..? தகதகவென்று தங்க நிறத்திலா ஜொலிப்பேன்..! நான் இவள் பெண் இல்லை என்பதற்கு இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்..? இவளுடைய பெண்ணாக இருந்திருந்தால் இவளை மாதிரி... வருகிறானே... அண்ணன் மகன் என்று ஒரு தடியன். அவனை மாதிரி... அப்பா செத்துப் போனதற்கு வந்த அந்த மாமா மாமி மாதிரி... கரிக் கட்டையாகத்தானே பிறந்திருப்பேன்?

அந்தக் குடும்பமே கரிக்கட்டைகள்... அவர்களின் லட்சணத் திற்கு நான் மருமகளாக வர வேண்டுமாம்... எவ்வளவு ஆசை! அப்பா இருந்திருந்தால் கேட்டிருப்பார்களோ அந்தக் கேள்வி? வந்திருக்குமா அப்படிப்பட்ட தைரியம்? அப்பா செத்த காரியம் முடிந்த கையோடு என்ன கேட்டார் அந்த மாமா... ஒவ்வொர வார்த்தையாக மீண்டும் நினைவிற்குக் கொண்டு வந்தாள். அவளைப் பொருத்தவரை அந்தக் கருப்பு தினத்தை மறக்கவே முடியாது போலிருந்தது. வீட்டுக் கூடத்தில் வரிசையாக உட்கார்ந்து அத்தனை பேரும் சாப்பிட்டுக் கொண்டிருந்த போதல்லவா ஆரம்பித்தார். எத்தனை நாசூக்காகச் சொன்னார்.



"சரி காவேரி... உன்னால் முடியும்னே வச்சிக்க. மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமல் போகமாட்டான். நிச்சயம் குழந்தைகளை வாழ வச்சு உன்னாலும் வாழ்ந்து காட்ட முடியும்னாலும்... எதுக்கும்மா அந்த விஷப் பரீட்சையெல்லாம்? நமக்குள்ள எதுக்கு வீம்பும், வீண் பிடிவாதமும்? அண்ணன்னு நினைச்சு உரிமையோட ஏதேதோ பேசற? நாளைக்கே நான் சம்பந்தியாகப் போறவன்றதை மறந்திடாதேம்மா. உன் பொண்ணு ரம்யா என் மகன் குணசேகரனைக் கட்டிக்கிட்டு அந்த வீட்டின் மருமகளாகப் போகிறவ. உன் மகளோட எதிர்காலத்தை நீ மனசுல வச்சுக்கிடணும். அப்போ வர்றதை அவ இப்பவே வந்திடட்டும்னு சொல்றேன். ரம்யாவோட சேர்ந்து நீங்க எல்லோரும் வந்திடுங்கன்னு கூப்பிடறேன்..."

எப்படிக் கூப்பிட்டார் அவர்...

ஆடு நனையுதேன்னு ஓநாய் அழுதிச்சாமே... அந்தக் கதை... அவருடைய கருப்புப் பையனை நான் கட்டிக்கிறதுக்கு அவரால் வெட்ட முடிந்த அல்வா... என் ஒருத்திக்காக அத்தனை பேரையும் கூட்டிக்கிட்டுப் போய் வச்சுக் காப்பாத்தறாராம்...

எத்தனை பரோபகாரம். என்னை எப்படியாவது மருமகளாக அடைஞ்சிடணும்கிறதுக்காக வைக்கப்பட்ட பொறி. நானா அந்த மசால் வடை வாசனைக்கு சிக்குவேன். தங்கச்சி மீது அத்தனை பாசமிருக்கிறவர் இத்தனை நாள் வர்றதுக்கென்ன? அப்பா இருந்த போது ஒருத்தர் கூட எட்டிப் பார்க்கலையே... ஒருநாள் வீடு தேடி வந்ததில்லையே...

பயம்... அப்பாவிடம் பயம். அவர் இந்தக் கருப்பர்கள் கூட்டத்தை நெருங்க விட்டதில்லை. அப்பா போன பின் ஓடி வந்து ஒட்டிக் கொண்டு விட்டார்கள். அதிலும் இந்த டாக்டர் கருப்பன் வாரா வாரம் வந்து விடுகிறான். அவன் வந்த உடனே குழந்தைகள் ஓடிப் போய் ஒட்டிக் கொள்கிறார்கள். தன்னால் அந்த மாதிரி ஒட்ட முடியவில்லையே... என்? பாசமாக இருக்க முடியவில்லையே... தள்ளி விலகி தூரத்தில் தானே நிற்கிறேன்? அதிலிருந்தும் நான் அவர்களைச் சார்ந்தவளில்லை என்பது நிரூபணமாகவில்லையா? அவர்களைச் சார்ந்தவளாகவோ, அவர்களின் ரத்தமாகவோ இருந்திருந்தால் அவர்களுக்கு இருக்கும் எனக்கும் அதே பாசம் வந்திருக்க வேண்டுமே. அவர்களுக்கு இருக்

அந்த அளவு இல்லையென்றாலும் ஓர் ஓரத்தில் கடுகளாவாவது ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமே.

அப்படி எதுவும் இல்லையே, சுத்தமாகத் துடைத்து வைத்த மாதிரியல்லவா இருக்கிறது. அதுவும் பினாயில் போட்டு, டெட்டால் போட்டு எள்முனையளவு பாசம் கூட இன்றி அதிசுத்தமாகத் துடைத்து வைத்த மாதிரி இருக்கிறது.

சட்டென்று அவளது அடிமனதிலிருந்து ஒரு குரல் - மிக மெல்லிய குரல் கேட்க ஆரம்பித்தது. மேல் மனதும், நடுமனதும் குணசேகரனை வெறுத்து ஒதுக்கி, கருப்பன் என்று அவமானப் படுத்தியபோதும் அடிமன ஆழத்திலிருந்து மனசாட்சி மட்டும் அவ்வப்போது சொல்லிக் கொண்டே வந்தது. எல்லோரும் செய்கிற மாதிரி அடிமனதில் குரலை, ஆழத்திலிருந்து - தங்களுக்குள்ளிருந்து எச்சரிக்கிற - நேர்வழிப்படுத்துகிற, நல்லவனாக்குகிற அந்த ஆன்மா வின் குரலை மன சாட்சியை அலட்சியப்படுத்துகிற மாதிரி ஆசையில் சிக்கி அந்த ஆசை நிறைவேற வேண்டும் என்கிற ஒரே எண்ணத்தில் குறிக்கோளில் லட்சியத்தில் மற்ற நியாயங்களை அடகு வைக்கிற மாதிரி - மனசாட்சியின் மெல்லிய குரல் கேளாத செவிடர்களாகிற மாதிரி அவளும் ஆகிப் போனாளே தவிர உள்மனதின் ஓர் மூலை அடிக்கடி அவளுக்குள் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்திக் கொண்டு தானிருந்தது.

'குணசேகரன் கருப்புதான். ரஜினிகாந்த், விஜயகாந்த் மாதிரி கருப்புதான். ஆனால் அவர்களின் முக வசீகரம் இவனுக்கும் உண்டு. கம்பீரம் உண்டு. களை உண்டு, வெள்ளை வெளேறென்று பெண் பிள்ளைகளின் சாயலில் இருக்கிற அழகான ஆணில்லாது போனாலும், கருப்பாய், களையாய், லட்சணமாய் இருக்கிற முகம் தான் குணசேகரனுடையது. அதில் சந்தேகமில்லை. நல்ல மனமும், எண்ணங்களும் கொண்ட ஆண்மையோடு கூடிய ஆண் மகன்தான். அதில் சந்தேகமில்லை. இவள் கருப்பன் என்றும், கரிக் கட்டை என்றும் எத்தனை அலட்சியப்படுத்தினாலும் அதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளாத பரந்த மனதுக்காரன் தான். அதிலும் சந்தேகமில்லை.

நல்லவன், நாணயமானவன் எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை மாதிரி படபட வெனப் பொரிந்து கொட்டுபவனில்லை. முன்



கோபக்காரனில்லை. முரடனில்லை. யாரையும் எந்த வார்த்தை களாலும் புண்படுத்துபவனில்லை. இத்தனை சொல்லி அவமானப் படுத்தின தன்னிடம் கூட அவன் ஒரு வார்த்தை கோபமாகவோ, வேகமாகவோ பேசியதில்லை. அத்தனைக்கும் அமைதியாக, சாந்த மாகத்தான் இருந்திருக்கிறான். நேற்று ராத்திரி சாப்பிட்டுக் கொண் டிருந்த தட்டை தான் உதைத்தபோது கூட அம் - இல்லை சின்னம்மா தான் கோபப்பட்டாளே தவிர அவன் படவில்லை. அப்படியே அமைதியாக நின்று கொண்டுதான் இருந்தான்.

ஆனால் அதுவா ஒரு ஆண்பிள்ளைக்கு அழகு? அதுவா ஆண்மகனின் லட்சணம்..? புலி மாதிரி கம்பீரமாகச் சீறாமல் எலி மாதிரி பதுங்கிக்கொள்வதா..?

'சீ! என்ன ஆண் மகன் அவன்...' என்ற வெறுப்பு, மீண்டும் தோன்றிற்று. தன் கனவில், கற்பனையில் மிதக்கிற அந்த ஆண் மகன் எங்கே... இவன் எங்கே...? மில்ஸ் அண்ட் பூன் கதையில் வருகிற கதாநாயகன் மாதிரி - ரமணி சந்திரனின் கதைகளின் நாயகன் மாதிரி அரவிந்த்சாமி மாதிரி, அஜீத் மாதிரி, அப்பாஸ் மாதிரி...

தொட்டால் சிவக்கிற நிறமாய், அழகாய், உயரமாய், கவர்ச்சிகரமாய் சிரிக்கும் போதே சிந்தை பறி போகிறாற் போன்ற அழகனாய்...

அப்படித்தான் அவளுக்கு வேண்டும். அப்படிப்பட்டவனைத் தான் அவள் காதலிப்பாள். கல்யாணம் பண்ணிக் கொள்வாள். எங்கு போனாலும் பார்க்கிறவர்கள் பரவசப்பட வேண்டும். திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போக வேண்டும். அப்பா...! எப்படிப்பட்ட ஜோடி என்று வியக்க வேண்டும். 'மேட்ஃபார் ஈச் அதர் போலிருக்கு' என்று பேசிக் கொள்ள வேண்டும். தன் சிநேகிதிகள் மனதில் பொறாமையை எழுப்ப வேண்டும். இப்படிப் பட்டவன் நமக்குக் கிடைக்கவில்லையே என்று ஒவ்வொருத்தியும் ஏங்க வேண்டும்.

கிடைப்பானா அப்படிப்பட்டவன்..? ஏன் கிடைக்க மாட்டான்...? தன் அழகிற்கு எவன் மாட்டேனென்று சொல்லுவான்..? எவன் வேண்டாமென்பான்... எவன் விழாமலிருப்பான்? இந்த அழகை வைத்துக் கொண்டு சாதிக்க முடியாத காரியமும் உண்டா..? இதற்கு

விழாத ஆண்மகன் இருக்க முடியுமா...? தன் அழகால் எதையும் அடைய முடியும். யாரையும் வெல்ல முடியும்... வென்று காட்ட வேண்டும்.

முதல் வெற்றியாக அமையப் போவது வேலை. இன்று மாலைக்குள் தேடிக் கொண்டு விட வேண்டும். அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டரைக் கொண்டுவந்து அம் -ச்சி! திரும்பத் திரும்ப அம்மா என்றே வருகிறது.

அவள் எனக்கு அம்மா இல்லை; அம்மா இல்லவே இல்லை. சின்னம்மா... பழக்க தோஷத்தால் அம்மா என்று வருவதை அதே பழக்க தோஷத்தினால் சின்னம்மா என்று மாற்றிக் கொண்டு விட வேண்டும்.

என்ன நினைத்தேன்... ம்... அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டரைக் சின்னம்மாவின் முகத்தில் விசிறியடிக்க வேண்டும்.

உன் கூரையின் கீழ் நின்று உன் சாப்பாட்டைச் சாப்பிட்ட காரணத்தினால்தானே இத்தனை பேசினாய்... இவ்வளவு அலைக் கழித்தாய்... இனி உன் தயவு தேவையில்லை. நீ எனக்கு என்ன முடியுமோ செய்து கொள்... என்று சொல்லி விட்டு அப்பா வாங்கித் தந்த பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு கிளம்பி விட வேண்டும். அதையும் இன்றே செய்ய வேண்டும்...

அதற்கு உடனடியாக வேலை தேடிக் கொள்ள வேண்டும். தன்னுடன் படிக்கும் பணக்காரப் பெண்களையெல்லாம் நினைத்துப் பார்த்தாள். குடும்பத்தில் ரொம்பவும்கஷ்டம். அம்மாவிற்கும் உடம்பு சரியில்லை. அம்மாவின் வருமானம் மட்டும் போதவில்லை. தங்கை தம்பிகளைப் படிக்க வைக்க வேண்டும். அத்தனை பேரும் சாப்பிட்டாக வேண்டும். வீட்டு வாடகை, மளிகை சாமான், மருந்து செலவு, துணிமணி என சமாளிக்க வேண்டும். ஆனால் முடிவதில்லை. அதனால் அம்மாவிற்கு உதவியாக இருக்க நான் முடிவு செய்து விட்டேன். படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குப் போவதாக இருக்கிறேன். உன் அப்பாதான் இவ்வளவு பெரிய கம்பெனி வைத்திருக்கிறாரே... அவரிடம் சொல்லி எனக்கு ஒரு வேலை வாங்கித் தாயேன்... என்றால் யாரும் மறுக்க மாட்டார்கள். அதையே அவர்களின் அப்பாக்களிடமும் சொல்லி யாரிடமாவது வேலை



வாங்கிக் கொண்டு விடலாம். கொடுக்காமலிருக்க மாட்டார்கள்... இத்தனை அழகான ஒரு பெண் கேட்கிற போது யாரால் மறுக்க முடியும்...?

முதலில் யாரைக் கேட்கலாம்...? தன் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிற ஈஸ்வரியின் ஞாபகம் வந்தது.

அவளிடம் கேட்கலாம். அவளிடம்தான் கேட்க வேண்டும்...

பக்கத்தில் சென்ற ஆட்டோவை நிறுத்தி அதில் ஏறிக்கொண்டு ஈஸ்வரியின் விலாசம் சொல்லி 'அங்கு போப்பா...' என்றாள் அவள்...

## 17

ரம்யா போன போது ஈஸ்வரி காரில் ஏறிக் கொண்டிருந்தாள். இவளைப் பார்த்ததும் மலர்ச்சியாய் கீழே இறங்கி அருகில் வந்து கைபற்றினாள்.

"என்னப்பா இது... கூப்பிட்டா கூட வரமாட்ட... இன்னிக்கு நீயா வந்திருக்க... காலேஜுக்குத்தான் கிளம்பிக்கிட்டிருக்கேன்... ஒன்னாப் போயிடலாமா...?"

"இல்ல... இன்னிக்கு காலேஜ் கட்..."

"கட்டா...? எதுக்குப்பா...? கிளாஸ் முழுசும் எங்கேனாச்சும் வெளிய போறமா...? சினிமாவா...?"

"ஊஹூம், சினிமாவெல்லாம் இல்ல; நானும், நீயும் உங்க அப்பா கம்பெனிக்குப் போறோம்..."

"எங்கப்பா கம்பெனிக்கா...?" புரியாமல் விழித்தாள் ஈஸ்வரி, "எதுக்குப்பா...?"

ரம்யா உடனே பதில் சொல்லி விடவில்லை. டிரைவரின் மீது அவள் பார்வை போனதும் ஈஸ்வரி அவளை உள்ளே அழைத்துப் போய் தன் அறையில் உட்கார வைத்தாள். அந்த அறையை நோட்டமிட்ட ரம்யாவிடமிருந்து ஒரு ஆழமான பெருமூச்சு எழுந்தது 'இந்த மாதிரியெல்லாம் எந்தக் காலத்துக்கு வாழ்வது...?'

"காபி சாப்பிடறியாப்பா...?"

ரம்யாவிற்குப் பசித்தது. ரொம்பவுமே பசித்தது. ராத்திரியே சாப்பிடவில்லை. நேற்று பகல் கல்லூரிக்கு டிபன் பாக்ஸில் கொண்டு

போயிருந்த காரக் குழம்பு சாதம் சாப்பிட்டதுதான். அதிலிருந்து இந்த நிமிடம் வரை வேறெதுவும் சாப்பிடாதது நினைவிற்கு வர உடனே சரி என்று தலையாட்டினாள். ஈஸ்வரி கட்டிலின் தலை மாட்டிலிருந்த தொலைபேசி மாதிரி இருந்த கருவியை எடுத்து நாலாம் எண்ணை அழுத்தி "ரெண்டு காபி ராஜம்மா..." என்றாள்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த ரம்யா சற்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

"என்னப்பா இது... வீட்டுக்குள்ளே பேசறதுக்குக்கூட டெலிபோனா..?"

"இது டெலிபோன் இல்ல ரம்யா. இண்டர்காம்."

ஈஸ்வரிக்கு அவளிடம் அனுதாபமும் இரக்கமும் ஏற்பட்டது. இண்டர்நெட் உலகத்திற்கு வந்தாகி விட்டது. இன்னமும் இண்டர்காம் கூடத் தெரியாமல் இருக்கிறாளே... என்று தோன்றிற்று.

ரம்யாவைப் பற்றி ஓரளவு தான் ஈஸ்வரிக்குத் தெரியும். வசதியற்ற குடும்பம். அப்பா இல்லை. அம்மாதான் காப்பாற்றுகிறாள் என்பது மட்டுமே தெரியும். அவள் ரம்யாவின் நெருங்கிய சினேகிதியில்லை. நெருக்கமான சினேகம் என்று ரம்யாவுடன் இணை பிரியாமல் கூடவே இருந்து யாரையும் பார்த்ததில்லை.

அதி பணக்கார வர்க்கம், அதற்கு அடுத்த மட்டம், மத்தியதரக் குடும்பம், அதற்கும் சற்று கீழேயுள்ள ஏழ்மை சார்ந்தவர்களெனத் தராக வைத்து நிறுத்த மாதிரித்தான் சினேகிதக் கூட்டம் உருவாவதை அவள் கவனித்திருக்கிறாள். நட்பு கூட தகுதி பார்த்துத்தான் வருகிறது என உணர்ந்திருக்கிறாள். ஒவ்வொருவருக்கும் அவரவர் ஈகோ... அவரவருக்கேற்ற காம்ப்ளெக்ஸ். பணக்காரர்களுக்குத் தங்கள் தகுதிக்குக் கீழானவர்களுடன் பழகுவதா என்கிற உயர்வு மனப்பான்மை. ஏழைகளுக்குத் தங்கள் தகுதி மீறின பணக்காரர்களுடன் பழகத் தயங்குகிற கூச்சத்துடன் கூடிய தாழ்வு மனப்பான்மை. நட்பிற்குக் கூட இங்கு ஸ்டேட்டஸ் தேவையாக இருக்கிறது. தகுதி பார்த்துத்தான் ஏற்படுகிறது. அல்லது ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

நட்பு மட்டுமல்ல, எல்லா உறவுகளும் பணத்தின் அடிப்படையில் ஏற்படுகின்றனவே தவிர மனத்தின் அடிப்படையில்



அல்ல. காதல் கூட இங்கு கணக்குப் பார்த்துத்தான் வருகிறது. இயல்பாக ஏற்படுவதைக்கூட கணக்குப் பார்த்து விரட்டி விரட்டி அடிக்கிறார்கள். அல்லது அழிக்கப் பார்க்கிறார்கள்... சீ! என்ன உலகம் இது... எல்லாவற்றையும் ரூபா, அணா, பைசாவில் அளக்கிற உலகம்...

மிகவும் சலிப்பாக ஈஸ்வரி யோசித்துக் கொண்டிருந்த போது நாற்பது வயதிருக்கும் போலிருந்த ஓர் அம்மாள், ஒரு தட்டில் இரண்டு காப்பிக் கோப்பைகளை வைத்துக் கொண்டு வந்தாள். கோப்பையை எடுத்த போது தோன்ற ஏதோ ஈஸ்வரி கேட்டாள்.

"டிபன் சாப்பிட்டியாப்பா..?"

சட்டென்று ரம்யாவின் குறுக்கு புத்தி அங்கிருந்தே கணக்குப் போட்டு பதில் சொல்ல ஆரம்பித்தது. மெல்லத் தன் வழிக்குக் காய் நகர்த்தத் துவங்கிற்று.

"டிபனா...! எங்க வீட்டிலெல்லாம் ஏதுப்பா டிபன்..?"

"பின்ன... காலைல என்ன சாப்பிடுவீங்க..?"

"பழைய சோறு... மோர் இருந்தால் மோர் ஊற்றிக்குவோம். இல்லாட்டி தண்ணில கரைச்சுக் குடிச்சிடுவோம்..."

கால் வினாடி அவளை மிக மென்மையாகப் பார்த்த ஈஸ்வரி பார்வையை விடவும் மென்மையான குரலில் கேட்டாள்.

"சரிப்பா... அதாவது சாப்பிட்டியா இல்லையா..? உன்னைப் பார்த்தா எதுவும் சாப்பிட்ட மாதிரி இல்லையே..?"

ரம்யா பேசாமல் தலைகுனிந்து கொண்டாள். ஈஸ்வரி காபி டம்பளரைத் தட்டிலேயே வைத்து விட்டுச் சொன்னாள்.

"டிபன் இருக்குதில்ல ராஜம்மா. எடுத்து வையுங்க. இதோ இவளைக் கூட்டிக்கிட்டு கீழே வரேன்..."

அந்த அம்மாள் நகர்ந்ததும் ஈஸ்வரி ரம்யாவின் தோளில் கை வைத்தாள்.

"என்ன ரம்யா பிரச்சினை..? சாப்பிடாமல் கூட வந்திருக்க?"

ரம்யா ஏதோ சொல்ல வாயெடுத்த போது ஈஸ்வரியே தடுத்தாள்.

"வேணாம் வா.. முதலில் சாப்பிடு. அப்புறம் பேசிக்கலாம்.."

தயங்கிய குரலில் ரம்யா கொஞ்சம் தடுமாறிக் கேட்டாள்.

"உன்கிட்ட ஒரு உதவி கேட்க வந்திருக்கேன் ஈஸ்வரி.."

"நான்தான் சாப்பிட்டு விட்டுப் பேசிக்கலாம்னேனில்ல..? எழுந்திரு.. முதுல்ல டிபன் அப்புறம் பேச்சு.. என்ன.. ஓ.கே. தானே?"

சிரித்துக் கொண்டே ஈஸ்வரி கேட்க, சிரிக்க முயன்றவளாக எழுந்து கொண்டாள் ரம்யா, படியிறங்கிய போது பளிங்குத் தரையில் கால் வழுக்கிற்று. மாடி கைப்பிடி மரத்தின் மினுமினுப்பில் முகம் தெரிந்தது. கிரானைட் சுவர்கள் பல லட்சங்களைத் தங்களுக்குள் அடக்கிக் கொண்டிருந்த பெருமை சொல்லின. அயர்ந்து போனாள் ரம்யா.

'இப்படியெல்லாம் கூட ஒரு வீடு இருக்க முடியுமா..!'

'இது போலெல்லாம் தனக்கு ஏன் அமையவில்லை...? ஒண்டுக்குடித்தன வீடும், ஓட்டை உடைசல் சாமான்களுமாக... ஏன் இப்படி..? எல்லாமே தனக்குத் தப்பிப் போனது ஏன்..? நியாயமாகக் கிடைக்க வேண்டியதை, கிடைக்கக் கூடியதையெல்லாம் கூடக் கடவுள் தனக்கு ஏன் தராமல் தடுத்து விட்டிருக்கிறார்..?

ஒரு வேளை இவளைகளையெல்லாம் ஈடு செய்கிற மாதிரித்தான் இத்தனை அழகை அள்ளித் தந்திருக்கிறாரோ..? அதன் மூலம் நாம் தான் மற்றதை தேடிக் கொள்ள வேண்டுமோ? ஈஸ்வரிக்கு இவ்வளவு கொட்டிக் கொடுத்திருக்கிற கடவுள் அவளை எப்படிப் படைத்திருக்கிறார். ஒல்லிக்குச்சியாய். ஒட்டடைக் கொம்பு மாதிரி உயரமாய். கருப்பாய், எந்தக் கவர்ச்சியுமே இல்லாமல்..

எது இல்லாமற் போனாலும் பணம் இருக்க வேண்டுமோ...? பணம் எல்லாவற்றையும் ஈடு செய்து விடுமோ..?'

மெல்ல நிமிர்ந்து அவள் ஈஸ்வரியைப் பார்த்த போது மெலிதான புன்னகையோடு ஈஸ்வரி கேட்டாள்.

"என்ன பார்க்கிற ரம்யா..?"

"இல்ல.. நான் வந்த விஷயம்.."



"அதான் அப்புறம் பேசிக்கலாம்னேனில்ல.. முதல்ல சாப்பிடு சூடாகப் பூரி போடச் சொல்லியிருக்கேன். அதுக்கு மசால் இருக்கு இட்லி சட்னி வருது. அதை முடி அப்புறம் பூரி வரும்."

சமையல் அறையிலிருந்து ராஜம்மாவின் குரல் கேட்டது.

"பொங்கல் கூட இருக்கு பாப்பா.."

"பொங்கலும் இருக்காம். எல்லாம் கொண்டு வாங்க ராஜம்மா.. ரம்யா ஒவ்வொண்ணா ருசி பார்க்கட்டும்.." போதும் போதும் என்றால் கூட விடாமல் ஈஸ்வரி அருகில் நின்று உபசரித்தாள்.

"இன்னொரு பூரி வச்சிக்க ரம்யா.. கொஞ்சமா ஸ்வீட் சாப்பிடு.. பாதாம் அல்வா.. நேத்திக்கு அம்மா ஊருக்கு எடுத்துக்கிட்டுப் போக செய்தது.."

"உங்கம்மா ஊர்ல இல்லையா..?"

"ஊஹூம், அமெரிக்கா போயிருக்காங்க, நேற்று ராத்திரி, ஃப்ளைட்ல போனாங்க.."

"அமெரிக்காவா..! தனியாகவா போயிருக்காங்க..?"

"இல்ல அப்பாவும் போயிருக்காரு. வர ரெண்டு மாசமாகும். அங்கு எங்க அக்காவும் மாமாவும் இருக்காங்க... அக்காவுக்குக் குழந்தை பிறக்கப்போகுது. அதுக்கு உதவி செய்ய அம்மாவும் பிஸினஸ் விஷயமாக அப்பாவும் போயிருக்காங்க.."

டக்கென்று அல்வாவை வாயருகில் கொண்டு போன ரம்யாவின் கை அப்படியே நின்றது.

"என்ன ரம்யா..?"

ஒரு வித ஏமாற்றம் படர ஈஸ்வரியை ஏறிட்டாள் அவள்.

"அப்போ... உங்கப்பா ஊர்ல இல்லையா..?

"ஏன், என்ன விஷயம் ரம்யா..?"

"உன் மூலமா அவர்கிட்டதான் ஒரு உதவி கேட்க வந்தேன்.."

அதற்குள் ராஜம்மா சூடாக வேறு காபி கொண்டு வர, தானும் எடுத்துக் கொண்டு ரம்யாவிடமும் ஒரு கோப்பையைக் கொடுத்தாள் ஈஸ்வரி.

"குடி ரம்யா, மாடிக்குப் போய்ப் பேசலாம்.."

வகை, வகையாக டிபன் சாப்பிட்டு, காபியும் குடித்த பின்னர் மீண்டும் பழைய தெம்பும், தைரியமும் வந்தது ரம்யாவிற்கு. ஈஸ்வரி தன்னிடம் பரிதாபப்படுகிற மாதிரி எப்படிப் பேசலாம், எங்கு ஆரம்பிக்கலாம் என யோசித்துக் கொண்டே வந்தாள். மீண்டும் அறைக்கு வந்து கட்டிலில் உட்கார்ந்த போது ரப்பர் மெத்தையின் மென்மையையும் தன்னை அப்படியே உள்வாங்கிக் கொள்வதையும் உணர்ந்தாள் ரம்யா..

வாழ்க்கையில் இத்தனை சுகங்களா..?

கட்டிலில் சப்பணமிட்டு உட்கார்ந்து கொண்ட ஈஸ்வரி மடியில் ஒரு தலையணையை இறுத்திக் கொண்டு ரம்யாவைப் பார்த்துக் கேட்டாள்.

"ம்.. இப்ப சொல்லு.. என்ன பிரச்சினை உனக்கு?"

மனதிற்குள் பேசி யோசித்து முடிவு செய்திருந்த ரம்யா மிக அழகாக ஆரம்பித்தாள்.

"நான் படிப்பை விட்டிடலாம்னு இருக்கேன் ஈஸ்வரி.."

தூக்கி வாரிப் போட்டது ஈஸ்வரிக்கு. இன்னும் ஒரே வருஷம் தான் இருக்கிறது டிகிரி வாங்க. அதற்கு முன் யாராவது படிப்பை நிறுத்துவார்களா..? படித்த இரண்டு வருடங்களும் வீணாகி விடாதா..?

"என்ன ரம்யா இது.. எதுக்காக இப்பப் போய் படிப்பை விடணும் என்கிற.. கடைசி வருஷம் வந்தாச்சு. இப்போ போய் யாராச்சும் இந்த மாதிரி யோசிப்பாங்களா..?"

"யோசிக்க வேண்டிய நிலைமையில்தான் நான் இருக்கேன் ஈஸ்வரி.."

"அப்படி என்ன திடீர்னு நிலைமை இப்போ மோசமாயிடுச்சு..?"

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அடிக்கடி நெஞ்சு வலின்னு படுத்துக்கிடறாங்க. முன்ன மாதிரி தையல் மிஷின்ல ஓட்க முடியலேங்கிறாங்க.."



"எங்கே வேலை பார்க்கிறாங்க உங்கம்மா..?"

"சுகன் எக்ஸ்போர்ட் கார்மெண்ட் கம்பெனில.."

"சரி.. வீட்ல வேலைக்குப் போகிற நிலைமையில் வேறு யாரும் இல்லையா.."

"இல்லை. நான் தான் மூத்தவ. மீதி எல்லாரும் எனக்குக் கீழ் தம்பி, தங்கச்சிங்கதான்.."

"அவுங்கள்ளாம் என்ன செய்யிறாங்க..?"

"படிக்கிறாங்க.."

"சரி.. உங்க குடும்பத்துக்கு உதவி செய்ய தாத்தா, பாட்டிங்க, மாமன்மாருங்க, சித்தப்பா பெரியப்பாங்கன்னு யாருமேவா இல்லை?"

"இருந்திருந்தால் நான் உன்கிட்ட உதவிக்கு வந்திருப்பேனா ஈஸ்வரி..?"

நெகிழ்ந்து போய் அவள் கை பற்றிக் கொண்டாள் ஈஸ்வரி.

"சொல்லுப்பா... நான் என்ன செய்யணும் உனக்கு..?"

"உங்க அப்பா கம்பெனியில் வேலை வாங்கித் தரணும்."

"யாருக்கு..? உங்கம்மாவுக்கா..?"

"இல்லை... எனக்கு.."

"உனக்கா..!"

"ஏன் அத்தனை ஆச்சரியமாகப் பார்க்கிற ஈஸ்வரி. என்னைப் பார்த்தால் வேலை செய்கிற மாதிரி இல்லையா..?"

"அதில்லேப்பா.. இதான் கடைசி வருஷம். முடிச்சிட்டியானால் ஒரு டிகிரி ஹோல்டரா.."

"இல்லப்பா. அது முடியாது. இழுத்துப் பிடிச்சு இத்தனை தூரத்துக்கு வந்ததே பெரிய விஷயம். இனிமேல் முடியாது. நான் வேலைக்குப் போயே ஆகணும்கிங்கிற நிலைமைக்கு வந்திட்டது குடும்பம்.."

"அப்படியா..?" என்று யோசித்தாள் ஈஸ்வரி. ரம்யாவைப் பார்க்கப் பார்க்கப் பாவமாக இருந்தது. தன்னைப் போல் கவலை களற்றுத் திரிய வேண்டிய இந்த வயதில் இவ்வளவு பெரிய பாரமா

என்கிற பரிதாப உணர்ச்சி மேலிட்டது. கடவுள் தன்னை எவ்வளவு பத்திரப்படுத்தி பாதுகாப்பாக வைத்திருக்கிறார் என்பதில் நன்றியுணர்வு ஏற்பட தன்னையும் மீறிக் கை கூப்பினாள்.

அதைப் பார்த்த ரம்யா ஒன்றும் புரியாதவளாகத் திடுக்கிட்டாள்.

"என்ன ஈஸ் கை கூப்பற..?"

"கடவுளுக்கு நன்றி சொல்றேன். என்னை இவ்வளவு நல்லா, வசதியா வச்சிருக்காரேன்னு.."

"எனக்கு உங்க கம்பெனியில் ஒரு வேலை வாங்கிக் கொடுத்திட்டியானால் நானும் காலம் முழுகம் இதே மாதிரி கை கூப்பி உனக்கு நன்றி சொல்லிக்கிட்டே இருப்பேன்.."

"வேணாம்பா.. பெரிய பேச்செல்லாம் பேசாதப்பா... அப்பா ஊர்ல இல்லையேன்னுதான் யோசிக்கிறேன்.."

"உங்கப்பா இல்லைன்னால் வேற யாரும் இல்லையாப்பா..? அவருக்குக் கீழ் மேனேஜர் செகரெட்டரின்னு.."

"மேனேஜர், செகரட்டரியெல்லாம் சொல்ல முடியுமா, நடக்குமான்றது எனக்குத் தெரியல. அப்பாதான் கம்பெனி சேர்மென். அவருக்கு கீழ் மேனேஜிங் டைரக்டர் இருப்பாரு. அவருகிட்டதான் கேட்கணும்னு நினைக்கிறேன். கம்பெனி விஷயமெல்லாம் எனக்கு அதிகம் தெரியாதுப்பா, நானும் கேட்டதில்லை. அப்பாவும் சொன்னதில்ல. இருந்தாலும் போய்ப் பாக்கலாம். கேட்பதில் என்ன தப்பு..? ஆனால் ஒரு நிமிஷம் இரு. மேனேஜிங் டைரக்டர் பேரு வெங்கட்ராம அய்யிரு.. ஊர்ல இருக்காரா, கம்பெனிக்கு வந்திருக்காரான்னு விசாரிச்சிடறேன்.."

கட்டிலின் தலைமாட்டில் இன்டர்காமிற்குப் பக்கத்தில் இருந்த தொலைபேசி எக்ஸ்டென்ஷனில் ஆபீசைக் கூப்பிட்டு விசாரித்தாள். வெங்கட்ராமனே தொலைபேசி இணைப்பிற்கு வந்தார்.

"என்னம்மா ஈஸ்வரி... என்ன விஷயம்..? சாதாரணமா நீ ஆபீசுக்கு டெலிபோன் பண்ண மாட்டாயேம்மா..?"

"எனக்கு உங்களால் ஒரு உதவி ஆகணும் அங்கிள்.."



"என்னாலயா..? என்னம்மா..?"

"நீங்க அங்கே தானே இருப்பீங்க.. நேர்ல வரட்டுமா..?"

"நீ எதுக்குமா ஆபீசுக்கெல்லாம் வரணும்... நான் அங்கே வந்துடட்டுமா..?"

"வேணாங்க... நீங்க பெரியவங்க. உங்களை வீட்டுக்கு வரவழைச்சது தெரிஞ்சால் அப்பா திட்டுவாரு. நாவே அங்கே வரேன்.."

"அப்படியா சொல்ற..?" என்று தயங்கினார் அவர்.

"என்ன அங்கிள் தயங்கறீங்க.. எனக்கு ஒரு கஷ்டமுமில்லை.."

"உன் கஷ்டத்துக்குத் தயங்கலேம்மா.. என்னை வீட்டுக்கு வரவழைச்சால் அப்பா திட்டுவார்னு நீ பயப்படற மாதிரி உன்னை ஆபீசுக்கு வரவழைச்சாலும் அவர் என்னைத் திட்டப் போகிறாரேங்கிற பயம்தான்.."

"அப்போ என்ன செய்யலாம் சொல்லுங்க.."

"சரி, வா... அப்பா திரும்பி வந்து கேட்கிறப்போ சமாளிச்சுக்கலாம்.."

"தாங்ஸ் அங்கிள். இதோ கிளம்பி வந்துக்கிட்டே இருக்கேன்."

தொலைபேசியைத் துண்டித்து விட்டு 'வா போகலாம்' என ரம்யாவை அழைத்துக் கொண்டு அதி உற்சாகமாகக் கிளம்பினாள் ஈஸ்வரி.

## 18

ஈஸ்வரியின் தந்தை ஆவுடையப்பனும், வெங்கட்ராம ஐயரும் பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். பி.ஏ. முடித்த இருபத்தியோராவது வயதில் இருவருமே ஒன்றாக வியாபாரத்தில் நுழைந்தவர்கள். வியாபாரம் ஆவுடையப்பனுடையது. அதை இந்த அளவிற்குப் பெருக்கிய திறமை வெங்கட்ராமனுடையது.

அந்தக் கம்பெனியில் எதுவானாலும் வெங்கட்ராமனின் பார்வைக்குத் தப்ப முடியாது. அவர் உத்திரவின்றி எதுவும் உள்ளே நுழையவோ, வெளியேறவோ இயலாது.

வெங்கட்ராமனுக்குத் தெரியாமல் ஆவுடையப்பன் எந்த முடிவும் எடுத்ததில்லை. எதுவானாலும், "ஐயரைக் கலந்துகிட்டு, அவருகிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கிட்ட முடிவு செய்யுங்க..." என்பதுதான் ஆவுடையப்பனின் வாய்மொழி உத்தரவு. அதை இதுவரை யாரும் மீறியதில்லை. மீறுகிற தைரியமும் யாருக்கும் வந்ததில்லை.

வெங்கட்ராமனுக்குத் தற்போது வயது ஐம்பத்தாறு. கிட்டத் தட்ட முப்பத்தைந்து வருட அனுபவம். தொழில் அனுபவம் தவிர வாழ்க்கை அனுபவம், பல தரப்பட்ட மனிதர்களைச் சந்தித்த அனுபவம், பழகிப் பழகி நெளிவு சுளிவுகளைக் கற்றுக் கொண்ட அனுபவம். படித்து வந்ததோ, மற்றவர்கள் சொல்லி ஏற்பட்டதோ இல்லை. அனுபவித்துத் தெரிந்து கொண்ட அனுபவம்.

அந்த அனுபவம் முதல் பார்வையிலேயே ஈஸ்வரியோடு சேர்ந்து வந்த பெண்ணைத் தள்ளி நிற்க வைத்தது. எடுத்த எடுப்பிலேயே பிடிக்காமற் போகச் செய்தது. அதே அனுபவம் அதை வெளிக் காட்டாமல் உள்ளே இருத்தி சிரிக்கவும் வைத்தது.

"வாம்மா ஈஸ்வரி.. எப்படியிருக்க..?" என்று தன் முலாம்பழ முகம் மலர வரவேற்றார் அவர்.

"உட்காரும்மா..."என்றவர், "ஏம்மா இன்னிக்குக் காலேஜுக்குப் போகல..?" என்று கேட்டார்.

"இல்லை அங்கிள்..." என்றவாறு அவரது மிகப் பெரிய எக்ஸிக்யூடிவ் மேசையின் எதிர் இருக்கையில் உட்கார்ந்து கொண்டாள் அவள்.

"உட்காரு ரம்யா..." என்று அவளையும் உட்காரச் செய்தாள்.

"இது என் பிரெண்ட ரம்யா அங்கிள். என் கூடப் படிக்கிறா..."

"அப்படியாம்மா..." என்றாரே தவிர அவரது பார்வை ரம்யாவின் பக்கம் திரும்பவே இல்லை. ஈஸ்வரியின் முகத்திலேயே நிறுத்திக் கொண்டார்.

அதுவே ரம்யாவிற்கு என்னவோ போலிருந்தது. தன்னை அவர் ஒரு பொருட்டாகக் கூட நினைக்கவில்லை என்பது உறுத்தத் தொடங்கிற்று. 'பெரிது ரொம்பப் பொல்லாதது..!' என்கிற முடிவிற்கு



அவள் வந்தபோது ஈஸ்வரியிடமே அடுத்த கேள்வியைத் தொடர்ந்தார் அவர்.

"என்னம்மா சாப்பிடற.. காபியா.. கூல் டிரிங்க்கா..?"

"ஒன்றும் வேண்டாம் அங்கிள். இப்போதான் வீட்ல காபி குடிச்சிட்டுக் கிளம்பினோம்..."

"அப்பாவும் அம்மாவும் பேசினாங்களா..? மீனா எப்படியிருக்கா.. எப்போ டெலிவரின்னு தகவல் சொன்னாங்களா..?"

"ரெண்டு நாளைக்கு முன்னால் பேசினாங்க அங்கிள். இந்த மாதக் கடைசியில் டாக்டர் தேதி சொல்லியிருக்காங்களாம்..."

"சரிம்மா... காலேஜுக்கு லீவு போட்டுட்டு நீ வந்திருக்கிறதைப் பார்த்தால் ஏதோ முக்கியமான விஷயம்னு தெரியறது. சொல்லும்மா... நான் என்ன செய்யணும்?"

"இவளுக்கு நம் கம்பெனியில் நீங்க வேலை போட்டுத் தரணும் அங்கிள்."

"என்ன.. என்ன..?!" என்று சிரித்துக் கொண்டே கேட்டாலும் உள்ளுக்குள் அதிர்ந்து போனார் அவர். 'என்ன இந்தப் பெண்... இவ்வளவு விவரம் தெரியாததாக இருக்கிறதே... வெளியுலகமே தெரியாமல் வளர்த்து வைத்திருக்கிறானே ஆவுடையப்பன்..' என்று வருத்தப்பட்டார்.

எப்படி வெளி உலகம் தெரிய முடியும்..? வெளியில் போய் நாலு பேரோடு பழகி அடிபட்டால் அல்லவா தெரிய வரும்..? உள்ளுக்குள்ளே போற்றிப் பாதுகாத்து வளர்க்கப் படுகின்றவர்களால் வாழ்க்கையின் சில உண்மைகளையும், குரூரமான நிஜங்களையும் எவ்வாறு தரிசிக்க இயலும்..?

அவரது எண்ண ஓட்டம் புரியாதவளாகத் தன்னையே அவர் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருப்பது கண்டு மிக மெதுவாகக் கேட்டாள் ஈஸ்வரி.

"என்ன அங்கிள் அப்படிப் பார்க்கறீங்க..?"

"ஒன்னுமில்லேம்மா..." - சிந்தை கலைந்து திரும்பியவர், "இதுவரை நீ நம்ம ஆபீசைப் பார்த்ததேயில்லை, இல்லையாம்மா?"

என்கிற சம்பந்தமற்றதாகத் தோன்றிய ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தார்.

"இல்லை அங்கிள். ஏன் கேட்கறீங்க அங்கிள்..?"

"இன்னிக்கென்னவோ காலேஜுக்கு மட்டம் போட்டுட்ட. நிறைய நேரம் இருக்கும். அதனால் எழுந்து வா. ஆபீஸை ஒரு சுற்று சுற்றிண்டு வந்துடலாம்..."

அவரது பேச்சை மீற முடியாமல் அவரோடு போக வேண்டியதாயிற்று ஈஸ்வரிக்கு. பின்னாலே ரம்யாவும் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டது. இது ரிசப்ஷன். ரமணி தான் இங்கே ரிசப்ஷனிஸ்ட் ரமணி, நம்ம சேர்மெனோட செகண்ட் டாட்டர்ப்பா..." அறிமுகப்படுத்தினார்.

"இது அக்கௌண்ட்ஸ் செக்ஷன். இவர் சுந்தர மூர்த்தி. சீஃப் அக்கௌண்ட்டண்ட் இது டெஸ்பாட்ச் செக்ஷன் சென்டர். இங்கதான் கம்ப்யூட்டர், டெலக்ஸ், ஃபாக்ஸ்மிஷின் எல்லாம் இருக்கு. இது அட்மினிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்ட், இது பர்சேஸ் செக்ஷன் இது இன்ஜினியரிங் அண்ட் டெவலப்மெண்ட் செக்ஷன். இதுக்கப்புறம் புரொடக்ஷன் டிபார்ட்மெண்ட், இதோ இதான் நம்ம ஆபீசின் கோடியில் இருக்கிற கடைசிக் கட்டிடம். ஆர் அண்ட் டின்னு சொல்லுவோம். ரிசர்ச் அண்ட் டெவலெப்மெண்ட்."

கிட்டத்தட்ட இரண்டு ஏக்கர் நிலப்பரப்பையும், மூன்று மாடிக் கட்டிடத்தையும் சுற்றிக் காட்டி விட்டு மீண்டும் தன் அறைக்கே அழைத்து வந்தார். ஒரு மாடிக்குகூட படி ஏறவில்லை. எல்லா இடத்திலும் லிஃப்ட் இருந்தது. ஆனால் ஈஸ்வரிக்கு சற்று பெருமூச்சு வாங்கிற்று. அவ்வளவு சுற்றி, அத்தனை காட்டிய வெங்கட்ராமன் சிறிது களைப்போ, சோர்வோ, மேல்மூச்சு வாங்குதலோ இன்றித் திரும்பி வந்து தன் சுழல் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டவர் ஈஸ்வரியைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"என்ன அங்கிள் சிரிக்கிறீங்க..?"

"ஏம்மா... கொஞ்சம் கூட நடக்கிறதில்லை போலிருக்கு. ஆபீஸை ஒரு தரம் சுற்றிப் பார்க்கிறதுக்குள்ள மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கறது. தினமும் காலங் கார்த்தால எழுந்து அப்பா கூட வாக்கிங் போகக்கூடாது..? அவருக்கும் துணையாக இருக்கும். உனக்கும் ஒரு



24149
400883

எக்ஸர்ஸைஸ் ஆகுமில்லை?" - உரிமையோடு ... கொண்டவர் மேலும் தொடர்ந்தார்.

"இந்தக் காலத்துல நீங்கள்ளாம் ஏழரை மணிக்கு முன்னால எங்க எழுந்திருக்கறீங்க..." என்றவர் அழைப்பு மணியை அழுத்தி ப்யூனை வரவழைத்தார்.

"நீ வீட்ல சாப்பிட்டுட்டு வந்தது ஜீரணமாகியிருக்கும். அதுக்குத்தான் ஒரு ரவுண்ட கூட்டிண்டு போனேன். இப்போ என்ன சாப்பிடறேன்னு சொல்லு... காபியா, டீயா, ஹார்லிக்ஸா, போர்ன்விடாவா, இல்ல பெப்ஸி, கோக்கோ கோலான்னு கூல் டிரிங்க்கா..? எது வேணும்னு சொல்லு..."

"எனக்கு பெப்ஸி" என்றவள் ரம்யாவைப் பார்த்து, "உனக்கு என்ன சொல்லட்டும்..?" எனக் கேட்டாள்.

"ஊஹூம் எனக்கு ஒன்றும் வேண்டாம்" - வேண்டுமென்றே வேண்டாமெனத் தலையாட்டினாள் ரம்யா.

"ஏதாவது சாப்பிடு ரம்யா.." என்ற ஈஸ்வரி, "உனக்கும் பெப்ஸியே சொல்லிடட்டுமா..?" என்றாள்.

"இல்லை. வேண்டாம். எனக்குப் பிடிக்கலை!" பிடிவாதமாக மறுத்தாள் ரம்யா.

அப்போதும் வெங்கட்ராமன் 'ஏம்மா... ஏதாவது சாப்பிடேன்' என்று வற்புறுத்தாதது நெஞ்சை நெருடிற்று. ஈஸ்வரிக்குக் கிடைக்கிற மரியாதையும், மதிப்பும் தனக்குக் கிடைக்காதென்றாலும் தன்னை ஒரு மனுஷியாகக் கூட அவர் மதிக்காதது உள்ளுக்குள் ஊமைக் காயத்தை ஏற்படுத்தி வலிக்கச் செய்தது.

வெங்கட்ராமனைப் பற்றி ஒன்றும் அறியாத அவள், 'கம்பெனி ஈஸ்வரியின் அப்பாவுடையதுதானே. ஏதோ தன் கம்பெனி மாதிரி இந்தப் பெரிசு இத்தனைத் திமிரும், கர்வமும் பிடிச்சுக்கிட்டு அலையுதே..!' என்று எண்ணிக் கொண்டாள். 'இங்கு வேலையில் சேர்ந்ததும் முதலில் இந்தப் பெரிசின் கொட்டத்தைக் குறைத்து அடக்க வேண்டும்' எனவும் நினைத்துக் கொண்டாள்.

அவர்களுக்குப் பெப்ஸியும், தனக்குச் சர்க்கரையற்ற காபியும் வரவழைத்துக் கொண்ட அவர் காபியைக் குடித்து முடிக்கிற வரை

பேசாதிருந்தார். தரப்பட்ட முக்கியமான சில தொலைபேசி நபர்களி டமும் கூட மீண்டும் கூப்பிடுவதாகச் சொல்லி துண்டித்தார். அவர்கள் பெப்ஸி குடித்து முடிக்கிற வரை காத்திருந்தவர் அதற்குமேல் நேரத்தை வீணாக்க மனமின்றி சட்டென்று பேச்சை ஆரம்பித்தார்.

"ஆபீஸ் எப்படிம்மா இருக்கு ஈஸ்வரி...?"

அந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தடுமாறிய ஈஸ்வரி சமாளித்துக் கொண்டு "நல்லாயிருக்கு அங்கிள்" என்றாள்.

"வெறுமனே நல்லாயிருக்கு தானா...? ரொம்ப நல்லாயிருக் குன்ற சர்டிபிகேட் கிடையாதா...?" - சிரித்துக் கொண்டே கேட்டார்.

"ஐயோ ஸாரி அங்கிள். தப்பாகச் சொல்லிட்டேன். ரொம்ப ரொம்ப நல்ல இருக்கு அங்கிள்..." - அவளும் சிரித்தாள்.

"அதானே கேட்டேன்..." என பேப்பர் வெயிட்டைக் கையால் உருட்டியவர் உடனே விஷயத்துக்கு வந்தார்.

"ஏம்மா... அவ்வளவு டிபார்ட்மெண்ட்டையும் சுற்றிப் பார்த்தியே... ஒரு விஷயத்தைக் கவனிச்சியா...?"

"என்ன அங்கிள்...?" - புருவம் சுருக்கினாள் ஈஸ்வரி.

"என்னன்னு நீயே யோசிச்சுப் பாரு...?"

ஒரு வினாடி யோசித்துவிட்டு உதட்டைப் பிதுக்கினாள்.

"என்னன்னு தெரியல அங்கிள்..."

"சரி நானே சொல்லிடட்டுமா?"

"சொல்லிடுங்க அங்கிள்!"

"மொத்தக் கட்டிடத்தையும் ஒரு சுற்று சுற்றினாயே... எங்கே யாவது ஒரு பொம்மனாட்டி கண்ணுல பட்டாளா...?"

யோசித்து மெதுவாக 'இல்லை' எனத் தலையாட்டினாள்.

"ரிசப்ஷன்ல கூட நாங்க ஒரு பொம்மனாட்டியை வச்சுக்கலை. இதை 'நானாகச் சொன்னால் நீ நம்ப மாட்ட வேணும்னே சாக்கு போக்கு சொல்லித் திருப்பி அனுப்பிச்சுட்டதா நீ நினைச்சுக்கக் கூடாதுன்னுதான் உன்னையே அழைச்சிண்டு போய் ஆபீஸ் முழுசையும் சுத்திக் காட்டினேன்.



"இங்க பெருக்கறது, துடைக்கிறது, டாய்லெட் அலம்பறதுக் கெல்லாம் கூட ஆம்பிளைங்கதான். பொம்மனாட்டி வாசனை கூட உள்ள நுழையக் கூடாதுன்னு ரொம்பவும் கட்டுப்பாடாக இருக்கிற விஸ்வாமித்திர ஆபீஸ் இது. இதுக்குள்ள அழகான ஒரு பொண்ணைக் கூட்டிண்டு வந்து 'இவ என் சிநேகிதி. கூடப் படிக்கிறவ. வேலை கொடுன்னால் எப்படிம்மா கொடுக்க முடியும்?' உங்க அப்பாவானாலும் இதையேதான் சொல்லியிருப்பார். 'நோ லேடிங்கிறது' ஆபீஸ் பிரின்ஸிபின்ல ஒன்னும்மா. என்னால் பிரின்ஸிபிள்ல கையை வைக்க முடியாதும்மா. ஐயம் ஸாரிம்மா... முடியாதும்மா. முதல் தரமா ஆபீஸ் படியை மிதிச்சு உதவின்னு கேட்டுண்டு வந்த உன்னை இல்லேன்னு சொல்லித் திருப்பியனுப்பக் கஷ்டமாகத்தான் இருக்கு. ஆனால், வேற வழி இல்லையேம்மா. . . ஐயம் வெரி ஸாரிம்மா..."

மிக அழகாய், தெளிவாய், அதி மென்மையாய் நாசூக்காகத்தான் அவர் மறுத்தார். ஆனால் அவருடைய ஒவ்வொரு வார்த்தைகளும் ரம்யாவின் மனதில் முட்களாகத் தைத்தன. முதல் முதலாகக் கேட்டு வந்த இடத்திலிருந்து வெளிப்பட்ட மறுப்பு இடி மாதிரி இறங்கிற்று. இதை அவள் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. தான் போய்க் கேட்டால் தூக்கிக் கொடுத்து விடுவார்கள் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தாள். தனக்காக அத்தனை பேரும் வேலையை வைத்துக் கொண்டு காத்திருப்பதான பிரமையிலிருந்தாள்.

அதனால் இது பெரிய அதிர்ச்சியாக இருந்தது. தன்னை யார் மறுக்க முடியும் என்ற எண்ணத்தில் விழுந்த அடி தாங்க முடியாமல் வலித்தது. 'ஆரம்பமே இப்படியா?' என்பதில் அதிகம் ஆடித்தான் போனாள் அவள்...

## 19

அலுவலகத்தை விட்டு வெளியில் வந்ததும் ரம்யாவைக் கனிவாகப் பார்த்தாள் ஈஸ்வரி.

"லேடீஸே கூடாதுங்கிறது அவங்க ஆபீஸ் பாலிஸின்னால் நாம என்ன செய்ய முடியும் ரம்யா...?" - அவள் மனது புண்பட்டு விட்டதோ என்கிற ஆதங்கத்தில் அவளது கையைப் பற்றிக் கொண்டாள்.

செயலிழந்தவளாக எதற்கும் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தாள் ரம்யா. ஒரு வினாடி யோசித்து விட்டு ஈஸ்வரியே தொடர்ந்து கேட்டாள்.

"ஏன் ரம்யா... நம்ம கிளாஸ் மேட்ஸ் நிறைய பேருடைய அப்பாங்க பிஸினஸ்தான் செய்யறாங்க. அவங்க யார் கிட்டேயாவது கேட்டுப் பார்க்கலாமா..?"

"யார் கிட்ட கேட்கலாம்...?" - குரல் தழைந்து வந்தது ரம்யாவிற்கு.

"ம்..." என்று யோசித்த ஈஸ்வரி

"பிரேமிதான் எனக்கு பெஸ்ட் பிரெண்டு; அவகிட்ட கேட்கலாம்" என்றாள்.

"செய்வாங்களாப்பா...?"

"செய்யறாங்களோ இல்லையோ... கேட்டுத்தானே ஆகணும்... கேளுங்கள் கொடுக்கப்படும்னு ஏசுநாதரே சொல்லியிருக்காரேப்பா..."

"அப்படின்னா கேட்கலாம்ங்கறியா...?"

"டிரையல் காஸ்ட்ஸ் நத்திங். கேட்டுடலாம்."

"சரி, பிரேமி இப்போ எங்கே இருப்பா...?"

"காலேஜ்லதான் இருப்பா. லஞ்ச் அவர் போய் பர்ஸ்ட் அவர் முடிஞ்சதும் கூட்டிக்கிட்டு வந்திடலாம். நிலைமையை விளக்கிச் சொல்லி அவ அப்பாகிட்ட அழைச்சிக்கிட்டு போகச் சொல்லலாம்..."

அதுபோலவே முதல்வகுப்பு முடிந்ததும் ஈஸ்வரி போய் பிரேமியை அழைத்துக் கொண்டு வந்தாள். அதுவரை காரிலேயே காத்திருந்த ரம்யா நகர்ந்து ஈஸ்வரியும் பிரேமியும் ஏற இடம் கொடுத்தாள். அவர்கள் ஏறிக் கொண்டதும் டிரைவர் பணிவாக ஈஸ்வரியிடம் கேட்டார்.

"இப்போ எங்கே போகணும் சின்னம்மா...?"

ஈஸ்வரி பிரேமியிடம் "நேராக எங்க வீட்டுக்குப் போயிடலாமா பிரேமி...?" என அவள் சம்மதத்திற்குக் காத்திருந்தாள்.



"எனக்கு ஒன்னும் புரியலையே ஈஸ்... எதுக்கு இப்போ காலேஜிலிருந்து கூட்டிக்கிட்டு வந்த...?"

"அதைச் சொல்றதுக்குத்தான் எங்க வீட்டுக்கே போய் பேசலாமா... இல்ல, உங்க வீட்டுக்குப் போகலாமான்னு கேட்கிறேன்."

"ரெண்டும் வேணாம். டிரைவ் இன் போவோம். நிழல்ல காரை நிறுத்திட்டுப் பேசிட்டுத் திரும்பி காலேஜ் போயிடுவோம்..."

"திரும்பி நாம் காலேஜ் போகல. உங்க அப்பா ஆபீஸுக்குப் போகப் போறோம் பிரேமி..."

"எங்க அப்பா ஆபீசுக்கா..? எதுக்குப்பா...?"

"டிரைவ் இன் வரட்டும் சொல்றேன்..."

டிரைவ் இன் ஓட்டலில் நுழைந்து காரை மரத்தடி நிழலாகப் பார்த்து நிறுத்தி விட்டுக் கீழே இறங்கித் தள்ளிப் போய் நின்று கொண்டார் அந்த அனுபவசாலியான டிரைவர். அந்தப் பிற்பகல் நேரத்தில் அதிகக் கூட்டமில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கார்கள் கிடந்தன. இன்னும் சற்று நேரம் போனால் மாலை நேரக் கூட்டம் துவங்கி விடும். மூன்று மணியளவில் காப்பிக் கூட்டம் ஆரம்பமாகும். நிறையக் கார்கள் வரும். ஓரிரண்டு கார்களே இருந்த காரணத்தினால் காரை நிறுத்திய மறுவினாடியே ஒரு சர்வர் வந்தார்.

"என்ன சாப்பிடறீங்க...?" என்று பொதுவாகக் கேட்ட ஈஸ்வரி "நீ லஞ்ச் சாப்பிட்டு விட்டாயா...? பிரேமி...?" என்று அவள் பக்கம் பார்த்தாள்.

"லஞ்ச் முடிஞ்சப்புறம் பர்ஸ்ட் அவர்ல தானேப்பா வந்திங்க... ஆமாம். நீங்க சாப்பிடல...?"

"இல்ல. பிரேக் ஃபாஸ்ட் முடிச்சிட்டு எங்க அப்பா ஆபீசுக்கு போயிருந்தோம். அங்கிருந்து நேராகக் காலேஜ் வந்தோம்."

"அப்படின்னா நீங்க ரெண்டு பேரும் சாப்பிடுங்கப்பா. நான் வெறும் டீ மட்டும் குடிக்கிறேன்."

"உனக்கு என்ன வேணும் ரம்யா..?" ஈஸ்வரி கேட்டதும் சிறிது கூட இயல்பற்ற வேகத்தில் மறுத்தாள் ரம்யா.

"ஊஹூம். எனக்கு ஒன்னும் வேணாம்பா..."

"ஏன் வேணாங்கிற. காலைல எட்டு மணிக்கு டிபன் சாப்பிட்டது தானே..? ஏதாச்சும் சாப்பிடு. நான் ஒரு சென்னா பட்டூரா ஆர்டர் செய்யலாம்னு இருக்கேன். அதையே உனக்கும் சொல்லிறவா..?"

"வேணாம் ஈஸ்வரி. ப்ளீஸ், எனக்கு கொஞ்சம் கூடப் பசியில்லை. இதெல்லாம் எனக்கு வாங்கித் தர்றதை விட ஒரு வேலை வாங்கித் தந்தியானால் ரொம்ப நல்லாயிருக்கும், உதவியாயிருக்கும்..."

டிரைவரைக் கூப்பிட்டு எது வேண்டுமோ சாப்பிடச் சொல்லிவிட்டுத் தனக்கு ஒரு பட்டூராவும், பிரேமிக்கு டீயும் ஆர்டர் பண்ணி விட்டு நேரடியாக விஷயத்திற்கு வந்தாள் ஈஸ்வரி.

"பிரேமி.. இப்போ உடனடியாக நாம் ரம்யாவுக்கு ஒரு வேலை வாங்கித் தந்தாகணும். அவ குடும்ப நிலைமை சரியில்லை. பாவம். எப்படியாவது உங்க அப்பாகிட்ட சொல்லி நீதான் வாங்கித் தரணும்."

பிரேமி உடனே பதில் சொல்லி விடவில்லை. ஈஸ்வரி மாதிரி மனம் உருகி நெகிழ்ந்து போய் ரம்யாவை அழைத்துக் கொண்டு கிளம்பிவிடவில்லை. ரம்யாவை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள். 'இவள் நமக்கு நெருங்கிய சிநேகிதி கூட இல்லை. இவளுக்காக நாம் ஏன் மெனக்கெட வேண்டும்' என்று தோன்றிற்று. நிஜமாகவே இவளுக்குக் கஷ்டம்தானா என்பது கூடத் தெரியாத நிலையில் எதற்காக இவளை அழைத்துக் கொண்டு சுற்ற வேண்டும்..?'

பிரேமியின் எண்ணங்களைப் புரிந்து கொண்ட மாதிரியோ என்னவோ ஈஸ்வரி குரல் தழையக் கேட்டுக் கொண்டாள்.

"என்ன இருந்தாலும் ஒரு பெண். அப்பா இல்லை. அம்மா ஏதோ ஒரு இடத்துல வேல செய்து குடும்பத்தைக் காப்பாத்தறாங்க. தம்பி தங்கைங்கன்னு இருக்கிற பெரிய குடும்பம் வேறு. அம்மாவும் நெஞ்சு வலியால் அவஸ்தைப் படறாங்களாம். நம்ப கூடப் படிக்கிறவ நாம் உதவாமல் வேறு யார் உதவுவாங்க பிரேமி..."

பிரேமி அதற்கும் வாய் திறக்காமல் அமைதியாகவே இருக்க ஈஸ்வரி தொடர்ந்தாள்.



"ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்துக்கத்தானே இருக்கோம். அதுவும் உதவின்னு கேட்டு வந்திருக்கா. என்ன காரணத்தினாலோ அவளுக்கு என் ஞாபகம் வந்திருக்கு. இத்தனைக்கும் இவ கூட நான் நாலைஞ்சு முறைக்கு மேல் பேசினதில்லை. தமிழ் கிளாஸ்ல என் பக்கத்துல உட்காருவான்றதைத் தவிர வேறு ஒரு தொடர்பு இல்லை. ஆனாலும் நான் செய்வேன்ற நம்பிக்கையில்தானே ஓடி வந்திருக்கா. அந்த நம்பிக்கையைப் பொய்யாக்காமால் என்னால் முடிஞ்சதைச் செய்யணும்னுதான் எங்க ஆபீசுக்குக் கூட்டிக்கிட்டுப் போனேன்..."

"ஏன்... அங்கே கிடைக்கலையா..?"

"அதனால்தானே உன்கிட்ட வந்திருக்கேன். உங்க அப்பா ஆபீஸ்ல லேடிஸ் ஒர்க் பண்றாங்க இல்ல..?"

"பண்றாங்க... ஏன் கேட்கிற..?"

"எங்க அப்பா ஆபீஸ்ல நோ லேடிங்கிறதைப் பாலிஸியாகவே வச்சுக்கிட்டிருக்காங்க. அதனால் தான் ரம்யாவுக்கு அங்கே வேலை வாங்கித் தர முடியல. உங்க அப்பா ஆபீஸ்ல ஏற்கனவே லேடீஸ் ஒர்க் பண்றதால் அது ஒரு பிராப்ளமாக இருக்காது. நீயும் கூட வந்தியானால் நாம் போய் உங்க அப்பாகிட்ட பேசி கன்வின்ஸ் பண்ணி ஒரு அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டர் அடிச்சுத் தரச்சொல்லி கையோடு வாங்கி இவகிட்ட கொடுத்திடலாம்..."

லேசாகச் சிரித்தாள் பிரேமி.

"என்ன பிரேமி சிரிக்கிற..?" - சற்று வருத்தம் தோய்ந்த குரலில் கேட்டாள் ஈஸ்வரி.

"நீ நினைக்கிற மாதிரி இது அத்தனை சுலபமான விஷயமாக இருக்கும்னு நான் நினைக்கல ஈஸ்..."

"டிரை பண்ணிப் பார்க்கலாமேப்பா.. முயற்சி பண்றதில் என்ன தப்பு..? ரம்யாவோட அதிர்ஷ்டம் கிடைச்சால் கிடைக்கட்டுமே..."

"நான் வேணாம்னு சொல்லல ஈஸ். ஆனால் இன்னிக்கே, இப்பவே போக வேண்டிய அளவுக்கு அவசரமா அவசியமான்னு எனக்குத் தெரியல. 'ஏம்பா... இதுக்கா காலேஜ் கட்பண்ணிட்டு வந்திருக்க... ராத்திரி வீட்டுக்கு வருவேனில்ல..? அப்போ கேட்டிருக்கலாமே'ன்னு அப்பா கேட்டிட்டா..?"

"கேட்டால் சமாளிச்சுக்கலாம் பிரேம். நல்லது செய்யணும்னு நினைச்சால் உடனே செய்திடணும்னு எங்கப்பா சொல்லுவாரு. கொஞ்சம் தள்ளிப் போட்டால் கூட குரங்கு மனது மாறிடும். யோசிக்க ஆரம்பிக்கும். கணக்குப் பார்த்துத் தாவத் தொடங்கும். அதுக்கு முன்னால் செய்திடணும்னு மகாபாரதத்துலேருந்து ரெண்டு கதையை உதாரணம் சொல்லுவாரு..."

"என்ன கதைப்பா அது சொல்லு.. நானும் தெரிஞ்சிக்கறேன்.."

"முதல் கதை கர்ணனுடையதுப்பா, கர்ணன் எண்ணெ தேய்ச்சிக் கிட்டிருந்தானாம். வலது கையில் எண்ணெ ஊற்றி உச்சந் தலையில் வச்சுக்கிட்டிருந்தப்போ தர்மம் கேட்டு ஒரு பிராமணர் வந்தாராம், உடனே இடது கையால் பக்கத்திலிருந்த பொற்காசுகளை அள்ளிக் கொடுத்தானாம் கர்ணன்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த பெரியவர் ஒருவர், "கர்ணா... இடது கையால் தானம் செய்யலாமா..? வலது கை எண்ணெ என்றால் கழுவிக் கொண்டு வந்து வலது கையாலேயே தந்திருக்கலாமே...?" என்றாராம்.

"அதற்கு கர்ணன் சொன்னானாம்: "இடது கையிலிருந்து வலது கைக்கு மாறுகிற நேரத்திற்குள் மனசு மாறினாலும் மாறிவிடும். அதற்கு நான் இடம் கொடுப்பதில்லை..." என்றானாம். அந்த மாதிரி இடது கையிலிருந்து வலது கைக்கு மாறுகிற க்ஷண நேரத்திற்குள் மாறுகிற மனசுப்பா இது..."

ஈஸ்வரி சொல்லி முடித்த உடனே பிரேமி முகம் மலர்ந்தாள்.

"கொயட் இண்ட்டரஸ்டிங். இந்த மாதிரி இதிகாசப் புராணக் கதைகள்ளாம் நமக்கு எங்கேப்பா தெரியப் போகுது..?"

"நான் எப்படித் தெரிஞ்சிக்கிட்டேன்னு நினைக்கிற பிரேமி..? பத்து வயசிலிருந்து அப்பா கைச் செலவுக்கு கொடுக்கிற பணத்துல நிறைய அமர்சித்ர கதா புஸ்தகங்கள் வாங்கினேன். என்கிட்ட அத்தனை அமர்சித்ர கதா புஸ்தகங்களும் இருக்கும். நம் கலாச்சார, புராண, இதிகாச, பண்பாட்டுக் கதைங்களைச் சொல்றதுல, அதிலும் மனசுல பதியும் படியான சுலபமான இங்கிலீஷ்ல படக்கதைகளாகச் சொல்றதுல அமர்சித்ர கதாவுக்கு இணையான இன்னொரு புஸ்தகம்



வரல ஏனோ அந்தப் புஸ்தகம் இப்போ வர்றதில்ல. நின்னு போயிடிச்சி, தங்கம் வெள்ளியெல்லாம் கேட்டால் கூட நான் தூக்கிக் கொடுத்திடுவேன், ஆனால் புஸ்தகம் மட்டும் தர மாட்டேன், அதுவும் ஒரு அமர்சித்ர கதா கூடத் தர மாட்டேன்..."

"அமர்சித்ர கதாவை நான் பார்த்திருக்கேன், ஏதோ பழைய புராணக் கதைங்க, ரொம்ப போர்னு வாங்காமல் விட்டிருக்கேன். அதுக்குப் பதிலா மில்ஸ் அண்ட் பூன், நெவில் ஷுட்னு வாங்கிக்கிட்டு வந்திருக்கேன். நீ சொல்றதைக் கேட்டால் பெரிசா நான் எதையோ இழந்திருக்கிற ஃபீலிங் ஏற்படுது. சரி அந்த ரெண்டாவது கதையை நீ சொல்லாமலே விட்டிட்டியே.. அதையும் சொல்லிடுப்பா.."

"இப்படி கதை கேட்டுக் கிட்டிருந்தால் எப்படி உங்க அப்பா ஆபீசுக்குப் போறது...?"

"இந்தக் கதை முடிஞ்ச உடனே போயிடலாம்ப்பா!"

"நிஜமாகத்தானே..?"

"ஐ ப்ராமிஸ்..."

"சரி, அப்போ சொல்றேன் கேளு. இது தருமர் பற்றின கதை. தருமபுத்திரர் உள்ளே ஏதோ வேலையில் இருந்தாராம். அப்போ வாசலில் ஒருத்தன் "ஐயா... தருமம் போடுங்க ஐயா"ன்னு கேட்டானாம். மிக முக்கியமான வேலையில் இருந்த தர்மர், "நாளைக்கு வா, நிச்சயம் போடறேன்னாராம். அதைக் கேட்டுக் கொண்டிருந்த பீமன் ஒரு தண்டோராவைத் தூக்கிக் கொண்டு தெருத் தெருவாகப் போய் எங்க அண்ணன் பெரிய ஞானியாயிட்டார். உலகத்திலேயே பெரிய ஞானி இவருதான்னு தண்டோரா அடிச்சானாம். அதைக் கேள்விப்பட்ட தருமபுத்திரர் ஓடி வந்து பீமன் அடித்துக் கொண்டிருந்த தண்டோராவைத் தடுத்து நிறுத்திக் கேட்டாராம்.

"என்ன பீமா எதற்காக இப்படி ஒரு தண்டோரா..? திடீரென்று ஏன் என்னை ஞானியாகி விட்டேன் என்கிறாய்..?"

"திடீரென்று வருவதுதான் ஞானம். திடீரென்று ஆகிறவன் தான் ஞானி..." என்றானாம்.

"அது சரி, ஆனால் என்னை ஏன் அப்படிச் சொல்கிறாய்..?"

"பின்ன என்னங்கண்ணே... நாளை, என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரிகிறது. அந்த நாளை என்கிற நாளில் நீங்கள் உயிரோடு இருக்கப் போவதையும் உங்களால் உறுதியாகச் சொல்ல முடிந்திருக்கிறது. நீங்கள் உயிரோடு இருக்கப்போவது மட்டுமின்றி யாசகம் கேட்டு வந்த அந்த மனிதரும் உயிரோடுதான் இருப்பார் என்பது நிர்ணயமாகத் தெரிந்திருக்கிற காரணத்தினால் தானே அவரை நாளைக்கு வரச் சொல்லியிருக்கிறீர்கள். அதுவும் நிச்சயம் தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நாளை நீங்களும் உயிரோடிருக்கப் போவதை உணர்ந்து, யாசகம் கேட்ட பெரியவரும் உயிரோடு தான் இருக்கப் போகிறார் என்பதை அறிந்து கொண்டு அவரை வரச் சொன்ன நீங்கள் பெரிய ஞானியன்றி வேறு யார்..? அடுத்த நிமிடம் என்ன நடக்கப் போகிறது, அடுத்த ஒரு மணி நேரத்தில் நிலைமை என்ன என்பதைத் தீர்க்கமாகச் சொல்ல முடியாத நிலையற்ற இந்த உலகத்தில் நாளை என்ன என்பதை உணர்ந்து மிகத் தீர்க்கமாக வரச் சொன்ன நீங்கள் மிகப் பெரிய ஞானியாக அல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்..?" என்று கேட்டதும் தன் தவற்றை உணர்ந்தாராம் தரும புத்திரர்.

அதனால் தான்

*ஒன்றே செய்க*
*ஒன்றும் நன்றே செய்க*
*இன்றும் இப்போதே செய்க*

- என்று சொல்கிறார்கள்..."

சுஸ்வரி சொல்லி முடித்ததும் குடித்துக் கொண்டிருந்த தண்ணீர் டம்ளரை காரின் ஜன்னலில் பொருத்தப்பட்டிருந்த டிரேயில் வைத்த பிரேமி படீரென்று அடித்து தன் இரு உள்ளங்கைகளையும் சேர்த்துக் கை கூப்பினாள்.

"அம்மா... தாயே... ஔவைப் பாட்டியே... இப்பவே போயிட வாம்மா... உன் வாகன ஓட்டியை வரச் சொல்லும்மா..."

சிரித்துக் கொண்டே பிரேமியை வெற்றி கொண்டுவிட்ட சந்தோஷத்தில் டிரைவரைக் கூப்பிட்டுக் காரை எடுக்கச் சொன்னாள் சுஸ்வரி.



## 20

தந்தையின் அலுவலகமானாலும் உடனே உள்ளே நுழைந்து விட முடியவில்லை பிரேமியால். வாசல் வரவேற்பறையில் அரைவட்ட மேசையின் பின்னால் இருந்த மிக அழகான பெண்ணால் தடுத்து நிறுத்தப்பட்டாள்.

"எஸ் ப்ளீஸ்..?" என்றவளின் பார்வை ரம்யாவின் முகத்தில் பதிந்தது. 'எத்தனை அழகான பெண்..!'

ரம்யா வாய் திறக்காமல் இருக்க, பிரேமிதான் பேசினாள்.

"நான் அப்பாவைப் பார்க்கணும்."

"அப்பாவா... எந்த அப்பா..?"

"எனக்கு ஒரு அப்பதான் இருக்காங்க." சடாரென்று எழுந்த கோபத்தில் முகம் சிவந்தாள் பிரேமி.

அவளது கோபத்தினால் சிறிதும் பாதிக்கப்படாதவளாகப் பதில் சொன்னாள் வரவேற்பறைப் பெண்.

"ஐயம் ஸாரி மேடம். எல்லாருக்கும் ஒரு அப்பாதான் இருப்பாங்கன்னு நினைக்கிறேன். தயவு செய்து உங்க அப்பா பேரைச் சொல்லுங்க..."

"மிஸ்டர் சந்திரசேகர்."

"இந்த ஆபீஸ்ல நாலஞ்சு சந்திரசேகர் இருக்காங்க. உங்கப்பா எந்த சந்..."

"சேர்மென் கம் மானேஜிங் டைரக்டர்."

முதலாளியின் பெண் என்பது தெரிந்த பின்னரும் அந்தப் பெண் அனாவஸ்ய பயம், பணிவு எதையும் காட்டவில்லை. 'என் கடமையைத் தான் நான் செய்தேன்' என்பதான நிதானத்துடன் பேசினாள்.

"ப்ளீஸ் பீ ஸீட்டட் மேடம். அவர்கிட்ட கேட்டுச் சொல்றேன் யுவர் குட் நேம் ப்ளீஸ்..?"

"பிரேமி. பிரேமலதா..."

அந்தப் பெண் இன்டர்காமில் தொடர்பு கொண்டு அனுமதி பெற்ற பின்னரே அவர்களை உள்ளே அனுப்பினாள்.

"எதிரில் லிஃப்ட் இருக்கு. மூன்றாவது மாடி. வலது பக்கம் திரும்பினால் முதல் அறை..."

'உனக்கு நன்றி சொல்ல வேண்டிய அவசியமில்லை...' என்கிறாற் போன்ற இறுக்கத்துடன், "வா ஈஸ்..." என்று லிஃப்ட்டை நோக்கி நடந்தாள் பிரேமி. அப்பாவின் அறை வாசலில் சின்ன ஸ்டூலில் உட் கார்ந்திருந்த ஊழியரிடம் சொல்லியனுப்பி அப்பா வரச் சொன்ன பின்னரே உள்ளே நுழைந்தாள்.

"வாம்மா... என்ன ஆபீசுக்கே வந்திருக்க... அடடே... ஈஸ்வரியா... வா... வா... அப்பா அம்மா நல்லாயிருக்காங்களா..? இது யாரு இந்தப் பொண்ணு. இது வரை உங்க கூட நான் பார்த்ததேயில்லையே..." என்று மிகச் சரளமாகப் பேசி வரவேற்றார்.

"உட்காருங்கம்மா... என்ன விஷயம். படை திரட்டிக்கிட்டு ஆபீசுக்கு வந்திருக்கிங்க. 'காலேஜ்டே' அது இதுன்னு ஏதாவது டிக்கெட்டா..? என் தலையில் கட்ட வந்திருக்கீங்களா...?"

"இல்லப்பா வந்து..." பிரேமி ஆரம்பித்த உடனே இடையிற் புகுந்தாள் ஈஸ்வரி.

"நான் சொல்றேன் அங்கிள்..."

"சொல்லும்மா... என்ன விஷயம்..? அதுக்கு முன்னால என்ன சாப்பிடறீங்கன்னு சொல்லுங்க. வர வழைச்சிடறேன். சாப்பிட்டுக் கிட்டே பேசலாம்..."

"ஐய்யோ... இப்போதான் டிரைவ் - இன்ல மூக்கைப் பிடிக்க டிபன் சாப்பிட்டு விட்டு வரோம்..."

கைக்கடிகாரத்தில் மணி பார்த்தார் சந்திரசேகரன்.

"ஏம்மா மணி மூணரையாகுது, டிரைவ் - இன்னிலிருந்து வர்றதாகச் சொல்றீங்க. அப்படின்னால் இன்னிக்குக் காலேஜ் போகலையா நீங்க..?"

"நான் போனேன்ப்பா... லஞ்ச் முடிஞ்சு ஃபர்ஸ்ட் அவர்லே முக்கியமான விஷம்னு ஈஸ்வரி வந்து கூட்டிக்கிட்டு வந்திட்டா..."

"காலேஜைக் கட் பண்ணிட்டு வர்ற அளவுக்கு அப்படி என்ன முக்கியமான விஷயம்மா ஈஸ்வரி...?"



"அதைச் சொல்றதுக்காகத் தான் அங்கிள் இங்கே வந்திருக்கோம். வர்றபோது ரொம்ப பசி எடுத்துச்சுன்னு டிரைவ் இன்னுக்குள்ள நுழைஞ்சோம். அது தப்புன்னா மன்னிச்சிடுங்க அங்கிள். நான்தான் உங்ககிட்ட ஒரு உதவி கேட்கலாம்னு பிரேமியைக் காலேஜிலிருந்து அழைச்சிக் கிட்டு வந்தேன். அதுவும் தப்புன்னால் மன்னிச்சிடுங்க அங்கிள்..."

"தப்புன்னு இல்லேம்மா... இதோ இப்பவே மணி மூணாயிடுச்சு, இன்னும் ஒரு மணி நேரம் போனால் காலேஜ் முடிஞ்சிருக்கும். அதுக்கு அப்புறம் வந்து என்னைப் பார்த்திருக்கலாமே... அனாவஸ்ய மானக் கிளாஸைக் கட் பண்ணிட்டு வந்திருக்க வேணாமே..."

"ஐயம் ஸாரி அங்கிள். கட் பண்ணனும்னு பண்ணலை. அப்படி அமைஞ்சுப் போயிடுச்சு, ரொம்ப முக்கியமான வாழ்க்கைப் பிரச்சனைங்கிறதால்தான் கிளாஸைக் கூட விட்டுட்டு ஓடி வந்திருக்கோம்..."

"வாழ்க்கைப் பிரச்சினையா..? படிக்கிற பசங்களுக்கு என்னம்மா பிரச்சனை இருக்க முடியும்? படிக்கணும் என்கிற ஒரு பிரச்சினையைத் தவிர மற்ற எல்லாத்தையும்தான் அம்மா அப்பா ஏத்துக்கிடறாங்களே..?"

"அதுசரி அங்கிள், அது எங்களுக்கு. ஆனால் இவளுக்கில்ல... பாவம் அங்கிள். இவ கதையே வேற..."

"முதல்ல இந்தப் பொண்ணு யாருன்னே இன்னும் நீங்க எனக்கு அறிமுகப்படுத்தலையேம்மா..."

"ஸாரி அங்கிள். முதல்லியே கேட்டீங்கல்ல... மறந்திட்டோம். இவ பேரு ரம்யா. எங்க கிளாஸ்மேட்..."

"ஓ..! வெரி சார்மிங் கேர்ள். வாட் கேன் ஐ டூ ஃபார்யு யங் லேடீ..?"

"இவளுக்கு உங்க ஆபீஸ்ல நீங்க ஒரு வேலை போட்டுத் தரணும் அங்கிள்..."

"வாட்...!? வேலையா..? உங்க கிளாஸ்மேட்டுனு சொன்னீங்க... படிக்கிற பொண்ணுக்கு வேலையா..? எங்க ஆபீஸ்ல பார்ட் டைம் ஜாப் கொடுக்கிறதில்லேம்மா..."

"பார்ட் டைம் இல்லீங்க அங்கிள் ஃபுல் டைம் ஜாப்தான் கேட்கிறோம்."

"ஃபுல் டைமா.. அப்படின்னால் படிப்பு..?"

"இவளால் மேல படிக்க முடியாது அங்கிள்..."

புருவங்கள் சுருங்க அவளை ஏறிட்டார் அவர்.

"ஏன் முடியாது..?"

"அவ குடும்ப சூழ்நிலை அப்படி அங்கிள்..?"

"அப்படி என்னம்மா குடும்பச் சூழ்நிலை..?"

"இவளால் காலேஜ் ஃபீஸ் கட்ட முடியாது அங்கிள்."

ஈஸ்வரி சொல்லி முடிப்பதற்குள் சுர்ரெனக் கோபம் வந்தது அவருக்கு.

"என்னம்மா பேசற நீ... இந்தப் பொண்ணு பேரு என்ன சொன்ன..?"

"ரம்யா..."

"இவ நிஜமாகவே உங்க கிளாஸ்மேட் தானே..?"

"ஆமாம் அங்கிள் ஏன் அப்படி கேட்கறீங்க?"

"கேட்கிறதுக்கு பதில் சொல்லும்மா. உங்க பிரெண்டு தானே..?"

"ஆ... பிரெண்டுன்னா ரொம்ப குளோஸ் இல்ல அங்கிள். நானும் பிரேமியும் மாதிரி இல்ல..."

"ரொம்ப குளோஸ் இல்லேன்னாலும் பிரெண்டுதானே...?"

"ஆமாம் அங்கிள்."

"அதனால்தானே கூட்டிக்கிட்டு வந்திருக்கீங்க...?"

"ஆமாம்."

"உதவி செய்யணும்ங்கிற எண்ணத்தினால்தானே அழைச்சுக்கிட்டு வந்திருக்கீங்க?"

"ஆமாம்."

"உதவி செய்யணுங்கிற எண்ணமிருக்கிறவங்க, சிநேகிதின்னு நினைக்கிறவங்க இப்படிச் செய்யமாட்டாங்க..."



"அங்கிள்..?"

"நிஜமாகவே நீயும் பிரேமியும் அவளுக்கு உதவணும்னு நினைச்சிருந்தீங்கன்னால் என்கிட்ட கூட்டிக்கிட்டு வந்தேயிருக்கக் கூடாது."

"நீங்க என்ன சொல்றீங்கன்னு புரியலீங்க அங்கிள்..."

"ஏம்மா... ஒரு பிரெண்டால் காலேஜ் ஃபீஸ் கட்ட முடியலேன்னால் நாங்க கட்டறோம்னு சொல்றதை விட்டிட்டு, அவளைப் படிச்சு முடிக்கச் சொல்றதை விட்டிட்டு இப்படியா வேலைக்கு சிபாரிசு பண்ணி கூட்டிக்கிட்டு வருவீங்க..? அதுவா சிநேகிதத்துக்கு அழகு..?"

"இல்ல அங்கிள்.. வெறும் ஃபீஸ்தான் பிரச்சினைன்னால் அது மட்டுமே பிரச்சினைன்னால் அதைக் கட்ட நாங்க தயாராக இருக்கோம் அங்கிள். அது மட்டுமில்ல இவ பிரச்சினை. வீட்டுல மொத்தமாய் பிரச்சினை. இவளுக்கு அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். அவங்க எக்ஸ்போர்ட் கார்மெண்ட் கம்பெனியில் வேலை செய்து சம்பாதிச்சு குடும்பத்தைக் காப்பாத்திக்கிட்டு வராங்க. உதவின்னு செய்ய வேற சொந்தக்காரங்க இல்ல. தம்பி, தங்கைங்கன்னு நாலைஞ்சு பேர் இருக்காங்க.

இவளுடைய அம்மா அடிக்கடி நெஞ்சு வலியால் படுத்திடறாங்களாம், அதனால் குடும்பத்தைக் காப்பாத்தவே இவ வேலைக்குப் போயாகணுங்கிறா... இதுக்கு மேலயும் அம்மாவைக் கஷ்டப்படுத்தக் கூடாதுன்னு நினைக்கிறா, இனிமேல் இவ சம்பாதிச்சுக் குடும்பத்தைக் காப்பாத்தணும்னு அபிப்பிராயப்படறா... அது நியாயம்னு பட்டதால்தான் உங்க கிட்ட கூட்டிக்கிட்டு வந்தோம்..."

மேஜை மீதிருந்த பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டே ஒரு வினாடி யோசித்தார் அவர். பார்வை ரம்யாவின் மீது போய் மீண்டும் ஈஸ்வரியின் முகத்திற்கும் பிரேமியின் முகத்திற்கும் தாவிற்று.

"என்ன அங்கிள்..?"

ஈஸ்வரியே அவரது மவுனத்தைக் கலைத்தாள்.

தொண்டையை செருமிக் கொண்ட அவர் நிதானமாகப் பேச ஆரம்பித்தார்.

“இல்லம்மா ஈஸ்வரி. நீ என்ன காரணம் சொன்னாலும் எத்தனைக் காரணம் காட்டினாலும் அது எனக்கு சம்மதமாகப்படல நியாயம்னு தோணல. எந்த ஒரு பிரச்சனைக்கும் இரண்டு விதமான தீர்வு இருக்கு ஒன்னு உடனுக்குடன் ஏற்படுகிற குறுகிய காலத் தீர்வு. ஷார்ட் டைம் சொல்யூஷன். மற்றொன்று நிரந்தரத் தீர்வு. மீண்டும் அதே பிரச்சினை திரும்பி ஏற்படாமல் செய்யப்படுகிற முற்றிலுமான தீர்வு. பர்மனெண்ட் சொல்யூஷன். அவசரமாக இதிலிருந்து விடுபடணும்னு நினைச்ச ஒரு ஆவேசமான முடிவுலயும், மூர்க்கமான பிடிவாதத்தாலும் எடுக்கப்பட்டு விடுபவைதான் குறுகியகாலத் தீர்வு. இம்மீடியட் சொல்யூஷன். அதைப் பெரியவங்க செய்யமாட்டாங்க, வாழ்க்கையின் அடிபட்ட அனுபவசாலிங்க செய்யமாட்டாங்க. விவேகமாக சிந்திக்க செயல்படறவங்க செய்யமாட்டாங்க. அதனால் நானும் அதைச் செய்யக் கூடாது. செய்யவும் மாட்டேன்...”

“அங்கிள்...” என்று ஏமாற்றத்தோடு அவரை ஏறிட்ட ஈஸ்வரியை விட்டு விலக்கித் தன் பார்வையை ரம்யா மீது பதித்தார் அவர்.

“இதப் பாரும்மா... உன் பேர் என்ன சொன்ன...?”

“ரம்யா அங்கிள்.” - ஈஸ்வரியே சொன்னாள்.

“இரும்மா ஈஸ்வரி. அவ கொஞ்சம் பேசட்டும், வந்ததிலிருந்து வாய் திறக்காமல் உட்கார்ந்திட்டிருக்கா பாரு... ஏம்மா ரம்யா உன் நிஜமான கஷ்டம் என்ன... வெறும் பணமா...?”

ஆமாம் என்று தலையாட்டினாள் ரம்யா.

“பணம் மட்டும்தானா...?”

அதற்கும் தலையாட்டல் பதிலாக வர சற்று யோசித்தார் சந்திரசேகரன். பின்னர் ஈஸ்வரியிடம் நேரிடையாகப் பேசத் தொடங்கினார்.

“இதப் பாரும்மா ஈஸ்வரி. எனக்கு உன்னைத் தெரிஞ்ச அளவுக்கு இந்தப் பொண்ணைத் தெரியாது. அவ குடும்ப நிலைமை தெரியாது. இதுவரை பார்த்தது கூட கிடையாது. இப்போதான் முதல் தடவையாகப் பார்க்கிறேன். ஆனாலும் நீயும், பிரேமியும் கூட்டிக்கிட்டு வந்திருக்கிறதால் நம்பறேன். உங்களுக்கு சினேகிதிங்கிறபோது



எனக்கும் அவ பொண்ணு மாதிரிதான். பொண்ணுங்கிற ஸ்தானத்துல வச்சு யோசிச்சா உங்க ரெண்டு பேருக்கும் என்ன சொல்வேனோ அதையேதான் அவளுக்கும் சொல்லணும். அப்படிப் பார்க்கிறப்போ படிப்பை நிறுத்திட்டு அவளை வேலைக்குப் போகச் சொல்ல என் மனசாட்சி இடம் கொடுக்கல. இன்னும் ஒரு வருஷம் பல்லைக் கடிச்சிக்கிட்டு படிப்பை முடிச்சிட்டான்னால் ஒரு டிகிரி எடுத்திடுவா. அதுக்கப்புறம் எங்கு போய் வேலை கேட்டாலும் ஒரு தகுதியோடு கேட்கலாம். நிரந்தரமானதான வழி ஏற்படும். அவளுக்கும் கவுரவமாக இருக்கும்.

அதை விட்டு பாதிப் படிப்பில் நிறுத்தி வேலைன்னால் அவளுடைய தகுதி என்ன...? வெறும் பிளஸ் 2 தானே...? அதற்குத் தகுந்த வேலை தானே தரமுடியும். அது எப்படிப் பட்ட வேலையாக இருக்கும்னு நீயே யோசிச்சுப் பாரு. அந்த வேலையை உன் சிநேகிதிக்குக் கொடுத்தால் ஒத்துப்பியா...? அது போதுமா...? இல்லே... அழகாக இருக்கிற ஒரே காரணத்துக்காகத் தகுதிக்கு மீறின வேலையும் சம்பளமும் தந்துவிட முடியுமா...?”

கால் வினாடி இடைவெளி விட்டு மீண்டும் அவரே தொடர்ந்தார்.

“... அப்படித் தர்றவங்க இருப்பாங்க. ஆனால் அவங்க நோக்கமும், எண்ணங்களும் நல்லதாக இருக்காது. எதையோ எதிர்பார்த்து ஏதோ செய்யிறவங்களாக இருப்பாங்க. அதனால் வேற எந்த இடத்துக்கும் இந்தப் பொண்ணு வேலை தேடிப் போக வேண்டாம். கண்டவங்ககிட்ட கையேந்த வேண்டாம்.

நீ, நான் பிரேமி மூணு பேரும் சேர்ந்து இந்தப் பொண்ணு வீட்டுக்குப் போகலாம். இவ அம்மாகிட்டப் பேசலாம். நீங்க சொல்றதெல்லாம் உண்மையாக இருந்து, இவ அம்மாவும் சம்மதிச்சாங்கன்னால் இவ படிப்புச் செலவை நான் ஏத்துக்கறேன். இவளுடைய தம்பி, தங்கைகள் படிப்புக்கான செலவையெல்லாம் கூட டிரஸ்ட் மூலம் ஏற்பாடு செய்திடலாம். டிரஸ்ட் நான் ஏற்படுத்தின டிரஸ்ட் நம்ம கம்பெனி டிரஸ்ட், கஷ்டப்படும் குடும்பங்களுக்கு உதவணும்ங்கிற எண்ணத்துல ஏற்படுத்தின டிரஸ்ட். அதனால் அந்த டிரஸ்ட் மூலம் இந்தப் பொண்ணோட குடும்பத்துக்குக் கணிசமான

ஒரு தொகையை அனுப்பி வச்சிடலாம். இவங்க படிப்பு செலவு, இவங்க அம்மாவை ஒரு நல்ல டாக்டர்கிட்ட காட்டி அவங்க வைத்திய செலவுன்னு எல்லாத்தையும் எத்துக்கிட்டு செய்திடலாம். என்ன சொல்றீங்க..?"

"ஓ..! கிரேட் அங்கிள் வெரி கிரேட்..." என்று ஈஸ்வரி சந்தோஷத்தை அடக்க முடியாமல் திணற, "தாங்க்ஸ் டாடி. வெரி மெனி தாங்க்ஸ்" என்ற பிரேமி பெருமை பொங்க ஈஸ்வரியைப் பார்த்தாள்.

கிணறு வெட்டி பூதம் புறப்பட்ட கதையானதை நினைத்துக் கொண்டு அவர்கள் யாரையும் பார்க்காமல் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள் ரம்யா..

## 21

அந்த அலுவலகத்தை விட்டு வெளியில் வந்ததும் பிரேமியின் கையைப் பற்றி மிகுந்த நன்றியோடு குலுக்கினாள் ஈஸ்வரி.

"என்ன இருந்தாலும் பெரியமனுஷங்க பெரிய மனுஷங்கதான் பிரேமி.-சொல்லணும்.." என்ற ஈஸ்வரி திரும்பி ரம்யாவைப் பார்த்தாள். பார்த்த முகமும் கண்களும் மலர்ந்து கிடந்தன. பேச்சு எல்லையற்ற சந்தோஷத்தை வெளிப்படுத்தியது.

"என்ன ரம்யா. சந்தோஷம் தானே..? கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி இல்லை..?"

பொத்துக் கொண்டு வந்தது ரம்யாவிற்கு ஈஸ்வரியும், பிரேமியும் பேசியதைக் கேட்கக் கேட்க உள்ளுக்குள் பற்றி எரிந்தது. "எங்கப்பா இந்த மாதிரி ஏகப்பட்ட ஏழைங்களுக்கு உதவி செய்யராருப்பா.." என்றபோது ஒவ்வொரு வார்த்தைகளும் நெருப்புத் துண்டங்களாக நெஞ்சில் விழுந்தன. அதில் எரிந்து போனாள் அவள். அந்த வலியிலும் வேதனையிலும் துடித்துப் போனாள். உடனே பிரேமியை ஓங்கி அறையத் தோன்றியது. வேண்டுமென்றே தன் ஏழ்மையைக் குத்திக் காட்டுவது போலிருந்தது "இந்த மாதிரி ஏகப்பட்ட ஏழைங்களுக்கு.." என்பதில் 'இந்த மாதிரி' எனத் தன்னைச் சுட்டிக் காட்டியதில் உடைந்து போனாள்.



இதை வேறு யாராவது சொல்லியிருந்தால் என்ன செய்திருப்போமென யோசித்துப் பார்த்தாள். நிச்சயம் அவர்களை உண்டு இல்லையென ஆக்கியிருப்பாள். நாக்குக் கொடுக்கினால் விஷமாகக் கொட்டியிருப்பாள். நாராகக் கிழித்துப் போட்டிருப்பாள்.

ஆனால் இப்போது..? அத்தனையும் கேட்டுக் கொண்டு அமைதியாக உட்கார்ந்திருக்க வேண்டியதாக இருக்கிறது. எதிர்த்து ஒரு வார்த்தை சொல்ல முடியாமல் இருக்கிறதே. அவர்களுடன் அவர்கள் காரிலேயே போக வேண்டியதாக இருக்கிறது.

இதுதான் பணம் செய்யும் மாயமோ..? பணக்காரர்கள் என்றால் எதுவும் செய்ய முடியாதோ..? ஒரு வார்த்தை எதிர்த்துப் பேச இயலாதோ..? அவர்களிடம் உதவி என்று கையேந்தி விட்டால் 'சுயம்' போய்விட வேண்டுமோ..? அது சொன்னாலும் தலையாட்டுகிற நிர்ப்பந்தத்திற்கு ஆட்பட்டாக வேண்டுமோ..? வேறு, வழி இல்லையோ..? உலகம் முழுதும் இப்படித்தான் இயங்குகிறதோ..?

'பணத்திற்கு இத்தனை சக்தியா..!'

'கடவுளே.. என்னையும் ஒரு பணக்கார இடத்தில் படைத்திருக்கக் கூடாதா..? நானும் இவர்களைப் போல் நல்ல இடத்தில் பிறந்திருக்கக் கூடாதா..? நான் செய்த தவறு என்ன..? எதற்காக அந்த வீட்டில் பிறக்க வைத்து இப்படி அலைக்கழிக்கிறாய்..?'

குபீரென்று அவள் கண்கள் நீரால் நிரம்ப, ஈஸ்வரி அவள் உணர்ச்சி வசப்பட்டு நெகிழ்ந்து போனதாக நினைத்துக் கொண்டாள். சட்டென்று அவள் கையைப் பற்றிக் கொண்டாள்.

"ரொம்ப நெகிழ்ச்சியாக இருக்குதில்ல..? எனக்கும் அப்படித் தான் இருக்குது. இப்போ உனக்கு எவ்வளவு நல்ல வழி பிறந்திருக்குது பாரு... படிப்பையும் முடிக்கலாம். அம்மா நெஞ்சு வலியையும் ஆஸ்பத்திரியில் காட்டி வைத்தியம் செய்துக்கலாம். வீட்டுச் செலவுக்கும் கணிசமான ஒரு தொகை கிடைக்கும். அந்தக் கவலையும் பட வேண்டாம்.

"ஆக மொத்தத்துல அவ குடும்பம் முழுசையுமே எங்கப்பா தத்து எடுத்துக்கறாரு..." மீண்டும் பிரேமி வாரி வீசிய நெருப்புத் துண்டங்கள்...

இந்த முறை குபீரென்று பற்றிக் கொண்டாள் ரம்யா. அவளது இயற்கைக் குணம் அவளையும் மீறி வெளிப்பட்டது. மத்தாப்பூ மாதிரி சுறுசுறுவென்று பிரேமியைச் சுடத் துவங்கினாள்.

"ஐயம் ஸாரி... உங்க ரெண்டு பேர்கிட்டேயும் நான் ஒரு வேலைதான் கேட்டேனே தவிர பிச்சை கேட்கலை. எங்க குடும்பத்தைக் காப்பாத்தச் சொல்லி காலில் விழுந்து கெஞ்சலை..."

ஈஸ்வரியும், பிரேமியும் சற்றே அதிர்ந்து போனார்கள். பிரேமி முகம் சிவக்க அவளை ஏறிட்டபோது ஈஸ்வரி முந்திக் கொண்டாள்.

"ரம்யா... நீ என்ன சொல்றப்பா...?"

"நீங்க யாரும் எனக்குப் பிச்சை போட வேணாம்ங்கிறேன். ஏன் ஈஸ்வரி, உன்கிட்ட நான் இதையெல்லாம் கேட்டு கையேந்திக்கிட்டா வந்தேன்...?"

"அப்படின்னால்... நீ என்ன தான் சொல்ல வர...?"

"என்ன ஈஸ் அவகிட்ட போய் விளக்கம் கேட்டுக்கிட்டு...? பிச்சை போடக் கூட இவ லாய்க்கில்லாதவ ஈஸ். பாத்திரம் அறிந்து பிச்சை இடுன்னு பெரியவங்க சும்மாவா சொல்லியிருக்காங்க...? இப்படிப்பட்டவளுக்கெல்லாம் உதவி செய்தால் அது நமக்குப் பாவம் ஈஸ். பிச்சையிலும் இது அதிகாரப் பிச்சையாக இருக்கும் போலிருக்கு. எதுக்கு இவளையெல்லாம் இழுத்துக்கிட்டு அலையற...? உன் நேரத்தையும் வீணாக்கிக்கிட்டு என் நேரத்தையும் வீணடிக்கிறேன்னு எனக்குத் தெரியல. முதல்ல காரை நிறுத்தச் சொல்லு ஈஸ். நான் இறங்கிக்கிறேன்..."

"நீ எதுக்கு இறங்கணும்...?" ஈஸ்வரி அவளை சமாதானப் படுத்துகிற தொனியில் மெதுவாகவே கேட்டாள்.

"இல்லேன்னா அவளை இறங்கச் சொல்லு. இனிமேல் அவ கூட என்னால் வரமுடியாது. தேர் ஈஸ் எ லிமிட் ஃபார் எவ்வரி திங்..."

"யாரும் என்னை இறங்கச் சொல்ல வேணாம். நானே இறங்கறதாகத்தான் இருக்கேன்... டிரைவர்! கொஞ்சம் காரை நிறுத்துங்க..."



சர்ரென்று பிரேக் போட்டு ஒரு ஓரமாகக் கார் நிறுத்தப் பட்டது. அதிவேகமாகக் காரை விட்டுக் கீழே இறங்கிக் கொண்ட ரம்யா படாரென்று கதவை அறைந்து மூடினாள். ஜன்னல் வழியாக ஈஸ்வரியைப் பார்த்து "ரொம்ப தாங்க்ஸ் ஈஸ்வரி. குட்நைட் அண்ட் குட்பை."

சொல்லிவிட்டு திரும்பிக் கூடப் பார்க்காமல் விடுவிடுவென்று நடக்க ஆரம்பித்தாள். துக்கம் நெஞ்சை அடைத்தது. எங்காவது ஓரமாக உட்கார்ந்து வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. தனக்கென்று யாரும் இல்லாதது போலவும் தான் தனித்து விடப்பட்ட மாதிரியும் உணர்ந்தாள். வழக்கம் போல் அப்பாவின் ஞாபகம் வந்தது. 'அப்பா... அப்பா... என்னை ஏன் விட்டு விட்டுப் போனீர்கள்...? கூடவே அழைத்துக் கொண்டு போயிருக்கக் கூடாது...?'

கன்னங்களில் வழிந்த கண்ணீரை வலது கையால் துடைத்துக் கொண்டே நடந்தாள்.

உணர்ச்சிக் கொந்தளிப்பில் எந்த இடத்தில் இறங்கினோம் என்பது கூடத் தெரியாமல் தடுமாறினாள். நின்று ஒரு வினாடி சுற்றிலும் பார்த்தாள். அண்ணா மேம்பாலம் தாண்டி கடற்கரை நோக்கிச் செல்லும் சாலையில் இருப்பது புரிந்தது. வீட்டிற்கு இன்னும் நீண்ட தூரம் நடக்க வேண்டும். அவ்வளவு தூரம் நடக்க முடியாது போலிருந்தது. அதுவும் அந்த மனநிலையில் முடியவே முடியாது என்று தோன்றிற்று. ஆனாலும் நடந்துதான் போக வேண்டும். பஸ்ஸில் போக கையில் காசு இல்லை. ஆட்டோவில் போய் வீட்டிலிருந்து எடுத்துக் கொடுக்கலாமென்பதற்கும் வழியில்லை. வீட்டிற்குப் போனால் அம்மாவைத்தான் கேட்க வேண்டும்.

அம்மாவா அவள்... சட்டென்று அவள் அம்மா இல்லை. சின்னம்மா என முடிவு கட்டியது நினைவிற்கு வந்தது. அழுகையும் துக்கமும் மாறி அம்மா மீது வெறுப்பாக இறங்கிற்று. மீண்டும் அவளிடம் போய் கையேந்த வேண்டிய நிலைமை வேதனையளித்தது. காபி, டிபன், சாப்பாடு, பஸ், ஆட்டோ என அனைத்திற்கும் அவளிடம்தான் கேட்க வேண்டும். காலையில் வீட்டை விட்டுக் கிளம்பிய போது எத்தனை தீர்மானமாகவும், திடமாகவும்,

தைரியமாகவும் கிளம்பினோம். இன்று சாயந்திரத்திற்குள் ஒரு வேலை தேடிக் கொண்டு விடலாம் என எப்படி நம்பினோம்?

'இந்த ஐந்தடி நாலங்குல உயரத்திற்கும் வாளிப்பான உடம்பிற்கும், தகதகக்கிற நிறத்திற்கும், முகத்தின் அழகிற்கும் வேலை கிடைக்காமலா போயிவிடும் என்று நினைத்தோமே... இப்போது நடந்தது என்ன...? காலையிலிருந்து சுற்றி அலைந்தது மட்டுமே மிச்சம். தன்னை நிமிர்ந்து கூடப் பார்க்காத ஒரு கிழவர்; பணம் தந்து படிக்க வைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றுவதாகச் சொன்ன வகுப்புத் தோழியின் அப்பா, பாதி வழியில் காரை விட்டுக் கீழே இறங்கச் செய்த அந்தத் தோழி...

என்ன ஆகி விட்டது இந்த நாளுக்கு...? ஏன் இப்படியெல்லாம் அவமானப்படுகிறோம். இவ்வளவு தான் அவமானங்களா... அல்லது இன்னும் இருக்கின்றனவா...? இன்னும் இருந்தால் எப்படித் தாங்குவது...? கடவுளே... இனி என்ன செய்வது...? எப்படி வேலை தேடிக் கொள்வது...?

இதற்கு மேலும் போய் எந்தக் கல்லூரித் தோழியிடமும் வேலை கேட்க முடியாது. வேலை கேட்டு வந்த விஷயத்தையும், தான் நடந்து கொண்ட விதத்தையும் கண், மூக்கு, காது எல்லாம் வைத்து அத்தனைப் பேர்களிடமும் பிரேமி சொல்லுவாள். தான் பேசாத, செய்யாத விஷயங்களெல்லாம் கூடச் சேர்த்துச் சொல்லப்படும். கதை கேட்கிற ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டு அத்தனை பேரும் சிரிப்பார்கள். தன்னைப் பற்றித் தெரிந்தது, தெரியாதது, அறிந்தது, அறியாதது என அனைத்தும் சொல்லி அலசுவார்கள். நாளைக் காலையிலும், பகல் சாப்பாட்டு நேரத்திலும், சாயந்திரம் கல்லூரி விட்ட பின்பு மரத்தடி அரட்டையிலும் அடிபடப் போகிற பெயர் தன்னுடையதுதான். இன்னும் ஒரு வாரத்திற்கு தான் அவர்களுக்கு மெல்லக் கிடைத்து விட்ட அவல். சுகமாய், சுவாரஸ்யமாய் மெல்லுவார்கள். அனுபவித்து ருசியறிந்து மெல்லுவார்கள். அதனால் இனி அவர்கள் யாரிடமும் மறுபடியும் வேலை கேட்டுப் போகக் கூடாது. முடியவும் முடியாது. போனாலும் செய்ய மாட்டார்கள்.

என்ன செய்வது...? நாளைக் காலை எங்கு போய் வேலை தேடுவது...?



தன்னைக் கண்டதும் முகம் மலர்ந்து இளித்துக் கொண்டு வந்து நிற்கும் எந்த ஆணிடமும் வேலை கேட்கவோ, வேலை செய்யவோ அவளுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் தன்னிடம் வழிவதைப் பார்த்துத் தனக்குள் பெருமையும் கர்வமும் மட்டும்தான் பட முடியுமே தவிர தன்னையோ, தன் சுயமரியாதையையோ விட்டுக் கொடுக்க முடியாது. தன்னை மிகவும் நேசிப்பவள் அவள். தன்னைத் தானே நேசித்துக் கொள்கிற யாராலும் அது முடியாது. அவளால் முடியவே முடியாது.

அதனால் என்ன செய்வது. எப்படி வேலை தேடிக் கொள்வது என்பது புரியாமல் தவித்தாள். குணசேகரனிடம் கேட்கலாமா...? அவனிடம் எத்தனையோ பெரிய மனிதர்கள் வருகிறார்களே அவர்களில் யாரிடமாவது சொல்லி ஒரு நல்ல பாதுகாப்பான வேலை வாங்கித் தர மாட்டானா?'

சட்டென்று அந்த எண்ணத்தைத் தானே அடக்கிக் கொண்டாள். 'சீ! அவனிடமா...?' என்று தோன்றிற்று. அதைவிட அம்மா - சீ! மீண்டும் மீண்டும் அம்மா என்றே வருகிறதே... சின்னம்மாவோடு போய் அவள் வேலை செய்கிற ரெடிமேட் கார்மெண்ட் கம்பெனியில் சேர்ந்து கொள்ளலாம். மாட்டேன் என்று சொல்ல மாட்டார்கள். நிச்சயம் ஏதாவதொரு வேலை போட்டுத் தருவார்கள். நல்ல வேலையாகக் கூட இருக்கும். ஆனாலும் வேண்டாம். அவனே வேண்டாம் என்கிற போது யார் இந்த குணசேகரன்... அந்தக் கருப்பனிடம் போய் வேலை கேட்க வேண்டுமென்று தோன்றிய தன் புத்தியைச் செருப்பால்தான் அடித்துக் கொள்ள வேண்டும்.

யோசித்தவாறு நடந்ததில் சட்டென்று வீடு வந்து விட்டது. நடையில் செருப்பைக் கழற்றி விட்டு உள்ளே நுழைந்தபோது மிகுந்த களைப்பையும், அசதியையும் உணர்ந்தாள். வியர்வையில் நனைந்த ஜாக்கெட் உடம்போடு ஒட்டிக் கொண்டிருந்தது. தலையிலிருந்து வழிந்த வியர்வை முகத்தில் சிற்றாறுகளும் பெரிய ஆறுகளுமாக ஓடி கழுத்தில் இறங்கிற்று. அந்தக் களைப்பிற்கும், அசதிக்கும், வியர்வை வழிசலுக்கும் சில்லென்ற நீரில் நன்றாகக் குளிக்க வேண்டும் போலிருந்தது. அறைக்குள் போய் டவல் எடுத்துக் கொண்டு கொல்லைப் புறக் குளியலறைக்குப் போன போது தம்பி, தங்கைகள்

படிப்பதற்கான ஆயத்தத்தில் இருந்தார்கள். உள்ளே அம்மா - சீ! சின்னம்மா தீவிர சமையலில் ஈடுபட்டிருப்பதைக் கவனித்தாள்.

'இன்று என்ன சீக்கிரம் வந்து விட்டாள் போலிருக்கிறதே..?'

இரண்டு வாளித் தண்ணீரில் நன்றாகக் குளித்துவிட்டு வந்த போது அதி ஆனந்தமாக இருந்தது. களைப்பு, சோர்வு எல்லாம் அகன்று புதிதாக உணர்ந்தாள். காலையிலிருந்து அலைந்த அலைச்சல் கூட அதிகம் தெரியாத அளவிற்கு ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருந்தது. 'அப்பாடா..! இந்தத் தண்ணீருக்குத்தான் எவ்வளவு சக்தி!'

வழக்கம் போல் துண்டு சுற்றிக் கொண்டு வந்து உள் அறைக்குப் போய் நைட்டி மாற்றி தரையில் ஒரு தலையணை எடுத்துப் போட்டுக் கொண்டு படுத்தபோது ஒரு சுகம் தெரிந்தது. அப்பாடா என்றிருந்தது. அதுதான் உழைப்பின் சுகமோ என்று கூட நினைத்துக் கொண்டாள். வழக்கத்திற்கு மாறாக அவ்வளவு தூரம் நடந்து வந்த அயர்வில் லேசாகக் கண் இழுத்துக் கொண்டு போனபோது அறை வாசலில் நிழலாடிற்று. காவேரியம்மாள் வந்து நின்றாள். ஒரு அடி தள்ளி நின்றே கூப்பிட்டாள்.

"அம்மா... அம்மாடீ..."

குரல் காதில் விழுந்தும் ரம்யா பேசாதிருந்தாள்.

"ரம்யா... எழுந்திரும்மா..."

அதற்கும் பதிலில்லாது போகவே இன்னமும் அருகில் போய் மெதுவாகத் தோள் தொட்டு வேண்டினாள்.

"நேற்று ராத்திரி சாப்பிடல... காலையிலிருந்தும் எதுவும் சாப்பிடாமப் போய் இப்பத்தான் திரும்பி வர.. இப்படிக் கொலைப் பட்டினி கிடந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்... வா... எழுந்திரிச்சு வந்து ஒரு வாய் சாப்பிட்டுப் படுத்துக்க..."

அதுவரை அவள் பேசி முடிக்கட்டும் என கேட்டுக் கொண்டிருந்த ரம்யா திடீரென பழைய ஆவேசமும் கோபமும் வரச் சடாரென்று அவள் கையை வீசித் தள்ளிவிட்டு ஆக்ரோஷமாகக் கண்களைத் திறந்தாள்.

அந்தப் பார்வையின் உக்கிரத்தைத் தாங்க முடியாத காவேரியம்மாள் பயந்து ஓர் அடி பின் வாங்கினாள்.



## 22

ரம்யாவின் கோபம் காவேரியம்மாளுக்குப் புதிதில்லைதான். பல தடவைகள் பார்த்து, அடிபட்டு, அனுபவித்ததுதான். பழகிப் பழகி வேறு வழியில்லை என நெஞ்சைப் பதப்படுத்திக் கொண்டு விட்ட விஷயம்தான். புண்பட்டு ஆறின தழும்புகள் இன்னமும் அகலாதிருக்கின்ற விஷயம்தான்.

அந்தத் தழும்புகளைக்கூட குத்திக் கிளறி மீண்டும் மீண்டும் ரணப்படுத்திக் கொண்டுதானிருக்கிறாள் ரம்யா. அவைகளிலிருந்து ரத்தம் வடிகிறது. வலியும், வேதனையும் ஏற்படுகிறது பொறுத்துக் கொள்வதைத் தவிர என்ன செய்ய முடியும் என்று அமைதியாக இருக்கிறாள்; அந்த அம்மாள் வாய் மூடி மௌனமாக இருக்கிறாள்.

தன்னையும், தன் அண்ணன் மகன் குணசேகரனையும் கருப்பு என்கிற காரணத்திற்காக ஒதுக்கித் தள்ளி அலட்சியப்படுத்துபவள் தான் ரம்யா. அபாண்டமாகப் பேசுபவள். அகங்காரமாக நடந்து கொள்பவள்தான். வெள்ளை நிறம், அழகு என்பதால் சுற்றியுள்ள அனைத்து மனிதர்களையும் பகைத்துக் கொண்டு ஒற்றைப் பனை மரமாக நிற்கிறாளே என்கிற ஆதங்கம் கூட அந்தத் தாய் மனதிற்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்த அழகு என்கிற உணர்வும், கண்டினால் ரத்தம் வருகிற நிறமும், இந்த இரண்டைப் பற்றின மித மிஞ்சிய பிரக்ஞையும் அவளைச் சமுதாயத்தை விட்டே ஒதுங்கச் செய்கிறது. மிகச் சுலபமாக ஒதுக்கி வைத்து விடுவார்கள். விடுவார்களென்ன...? விட்டேயிருக் கிறார்கள். இந்த வீட்டின் அத்தனைக் குடித்தனக்காரர்களும் அவளைக் கண்டால் அலறிக் கொண்டு ஓடுகிறார்கள். 'பொண்ணா அது... பேய்...!' என்கிறார்கள்.

இவள் என்னவோ அவர்களெல்லாம் அடிமட்டம் போலவும் தான் உச்சியில் நிற்பதாகவும் நினைத்துக் கொண்டிருக்கிறாள். அவர்களோ இவளை அதலபாதாளத்தில் தள்ளி மூடி விட்டிருக்கி றார்கள். அவள் மீது எந்த மதிப்பும் மரியாதையும் இன்றி துச்சமாகப் பார்க்கிறார்கள்.

அதிலும் அன்று சாப்பிட்டுக் கொண்டிருந்த குணசேகரனின் தட்டைக் காலால் எட்டி உதைத்துத் தள்ளியதிலிருந்து அவள்மீது

ஏற்பட்ட எல்லையற்ற வெறுப்பிலும் கோபத்திலும் இன்னமும் பொரிந்து கொண்டிருக்கிறார்கள்.

"என்ன காவேரியம்மா நீங்க..? பார்த்துக்கிட்டுப் பேசாமல் இருக்கீங்க..? சாப்பிட்டுக்கிட்டிருக்கிற சாப்பாட்டுத் தட்டைக் காலால் எட்டி உதைக்கிற மமதையும், திமிரும் ஒரு பொண்ணுக்கு வந்திருக்குன்னா... அதை அப்படியேவா விடறது. உடனேயே கண்டிக்க வேணாம்..?" என்று கோபப்பட்டிருக்கிறார்கள்.

'அதுவும் ஒரு ஆம்பிளை சாப்பிட்டுக்கிட்டிருக்காரு அந்தத் தட்டை எட்டி உதைக்கிதே.. உருப்படுமா அது..?' என சாபமிட்டிருக்கிறார்கள். அந்த மாதிரி ஊரார் சாபத்தைக் கொட்டிக் கொள்கிறாளே என அந்த அம்மாளின் பெற்ற வயிறு பதறியிருக்கிறது.

"வேற ஏதோ ஆம்பிளையில்லை. உங்க கூடப் பொறந்த அண்ணன் மகன். உங்க சொந்த ரத்தம். அந்த ரோஷம் கூட உங்களுக்கு இல்லாமல் போயிடுச்சே..?" என்று உசுப்பி விட முயற்சித்திருக்கிறார்கள்.

"நீங்க தப்பு செய்றீங்க காவேரியம்மா. அது எது செய்தாலும் வாயை மூடிக்கிட்டுப் பேசாமல் இருக்கீங்க. எதுக்காக அப்படி இருக்கீங்கன்னே எங்களுக்குப் புரியமாட்டேங்குது..." என முகம் சிவந்திருக்கிறார்கள்.

"நாங்கன்னா எட்டி உதைச்ச அந்தக் காலைப் பிடிச்சு மளுக்குனு உடைச்சுக் கையில கொடுத்திருப்போம்..." என்று அவளது இயலாமையைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

"இதையே என் மகள் செய்திருந்தால் முடியைப் பிடிச்சு இழுத்துக் கீழே தள்ளி மிதிச்சுத் துவைச்சிருப்பேன்..." எனவும் தங்களது ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அவை அனைத்தையும் கேட்டுக் கொண்டு பேசாமல் இருந்திருக்கிறாள் அந்தம்மாள். இவற்றில் ஒன்றைக் கூடச் செய்ய முடியாத தன் இயலாமையை நினைத்து வருத்தமடைந்திருக்கிறாள். பெற்ற பெண்ணிற்கே தன்னை விரோதியாக அடையாளம் காட்டி விட்டுப் போன தன் கணவரை எண்ணி வேதனைப்பட்டிருக்கிறாள். ரம்யா மீது கோபம் வருவதற்குப் பதிலாகப் பரிதாபம் மேலோங்க மனசுக்குள்ளேயே மாய்ந்து போயிருக்கிறாள்.



'என்ன பெண் இது..? நிலை எது, நிலையற்றது எது என்பது தெரியாமலிருக்கிறதே... இந்த அழகும், நிறமும் மாறக் கூடியது என்பதைப் புரிந்து கொள்ளாமலிருக்கிறதே..? நல்லவர்கள், கெட்டவர்கள் என்கிற பாகுபாடு தெரியவில்லையே. வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் பிடிபடவில்லையே..? வேண்டியவர்களையெல்லாம் விரோதியாகப் பாவித்துத் தானும் கஷ்டப்பட்டு மற்றவர்களையும் கஷ்டப்படுத்துகிறதே.. அழகு ஒன்றின் காரணமாக எங்கோ உயரத்தில் நிற்பதாக நினைத்துக் கொண்டு தலைகுப்புற விழுகிறதே.. மனித குணத்தைக் கைவிட்டு மிருக நிலைக்குப் போய் விடுகிறதே.. பெண்ணின் இயற்கைக் குணமான பொறுமையையும், நிதானத்தையும் இழந்து கோபத்தையும், ஆவேசத்தையும் வளர்த்துக் கொண்டே போகிறதே..?

நாளுக்கு நாள் அது அதிகமாகிறதே தவிர குறையவில்லையே..? இது சரியில்லையே..? விபரீதமாயிற்றே.. இப்படி துவேஷத்தையும், வெறுப்பையும் வளர்த்துக் கொண்டு போனால் எங்கு போய் முடியுமோ என்கிற பொறுப்புணர்ச்சியுடனும், மனப்பக்குவத்துடனும், தாயின் கடமையைச் செய்ய வேண்டிய விவேகத்துடனும்தான் அப்போது ரம்யாவின் எதிரில் வந்து நின்றாள். ஒரு பிடிவாதக்கார, மூர்க்கமான குழந்தையிடம் பேசுகிற அரவணைத்துப் போகிற முடிவுடன்தான் அவளைத் தட்டி எழுப்பினாள்.

"நேற்று ராத்திரி கூட சாப்பிடல... காலையிலிருந்தும் எதுவும் சாப்பிடாமப் போய் இப்பத்தான் திரும்பி வர.. இப்படிக் கொலைப் பட்டினி கிடந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்..? வா.. எழுந்திருச்சு வந்து ஒரு வாய் சாப்பிட்டுப் படுத்துக்க..." எனப் பரிவும், பாசமும் மேலிட வேண்டினாள்.

அவை எவற்றையும் புரிந்து கொள்ளாமல் ரம்யா மீண்டும் முருங்கை மரம் ஏறிக் கொள்ள துவண்டு போனாள். அவள் பார்த்த பார்வையின் உக்கிரத்தைத் தாங்க முடியாமல் சற்று ஒதுங்கி நின்றாள்.

அந்த அம்மாளின் எந்த எண்ணத்தையும் புரிந்து கொள்ளாத ரம்யாவோ எப்போதும் போல் சீறிப் பாய ஆரம்பித்தாள்.

"எனக்குத்தான் உன்னைப் பார்க்கப் பிடிக்கலை. உன்கிட்ட பேசப் பிடிக்கலைன்னு சொல்லியாச்சில்ல..? திரும்பத் திரும்ப ஏன் வந்து என்னை இப்படி எரிச்சல் படுத்துற..?"

தன்னை சுதாரித்துக் கொண்ட அந்த அம்மாள் சிறிது கூட நிதானம் இழக்காதவளாகவே அவள் முகத்தை ஏறிட்டாள்.

"உனக்கு என்னைப் பார்க்கப் பிடிக்காமல் இருக்கலாம். பேசப் பிடிக்காமல் போகலாம். ஆனால் எனக்கு அப்படி இல்லையேம்மா... வீட்ல அத்தனை பேரும் சாப்பிட, நீ சாப்பிடாமல் இருக்கிறது பெத்தவளுக்குக் கஷ்டமா இருக்காதா..?"

"பெத்தவளா..? யாரு நீயா..? நீ என்னைப் பெத்தவளான்னே எனக்குச் சந்தேகமா இருக்குது"- பிரேமி தன் மீது வாரி வீசியதாக நினைத்துக் கொண்ட அதே நெருப்பை அவள் தாயின் மீது வாரி வீசத் துவங்கினாள்.

அந்தச் சூடு தாங்காமல் துடித்துப் போனாலும் பேச்சில் எதையும் வெளிக்காட்டுவதில்லை என்கிற வைராக்கியத்தோடு இருந்த அந்தம்மாள் மெதுவாகவே சொன்னார்.

"அப்படியெல்லாம் பேசாத ரம்யா... இந்த மாதிரியெல்லாம் வீணாக மனசைப் போட்டுக் குழப்பிக்கக் கூடாதும்மா... பெத்தவளான்னு சந்தேகப்படுகிற அளவுக்கு உனக்கு நான் என்னம்மா தப்பு செய்தேன்..?"

"என்ன தப்பு செய்யிலை..? உன் மற்ற குழந்தைங்களையெல்லாம் ஆசையாகக் கொஞ்சுறியே... அந்த மாதிரி ஒரு நாள் ஒரே நாள் என்னைக் கொஞ்சியிருக்கியா நீ..?"

"உன்னையும் கொஞ்சணும். தலை வருடிக் கொடுக்கணும். சோறு பிசைஞ்சு கைல போடணும். மடி மீது படுக்க வச்சுத் தூங்கச் செய்யணும் என்கிற எல்லா ஆசையும் எனக்கும் இருக்குதும்மா..."

"பொய்... சுத்தப் பொய்... இதையெல்லாம் உன் மற்ற பிள்ளைங்களுக்குச் செய்வே... எனக்குச் செய்வாயா என்ன..?"

"செய்வேம்மா... உனக்கும் செய்யணும்ங்கிறதுதாம்மா..."

"ஓ! போதும் நிறுத்து... உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன..?"



"நீ தெரிஞ்சுக்கிட்டிருக்கிறதா நினைச்சுக்கிட்டிருக்கியே... அது தப்பு. சரியில்லை. நீதான் ஆரம்பத்திலிருந்து என்கிட்ட ஒட்டலை. உங்கப்பாதான் உன்னை ஒட்ட விடாமல் செய்திட்டாரு..."

அதைக் கேட்டதும் ஏற்கனவே எரிந்து கொண்டிருந்தவள் இன்னமும் குபீரென்று பற்றிக் கொண்டாள்.

"ஓ..! இதுவரை ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சுக்கிட்டிருந்த... இப்போ மனுஷனையே கடிக்க ஆரம்பிச்சிட்டியா..? இந்த நாள் வரை என்மேல் பாய்ஞ்சுக்கிட்டிருந்த... இப்போ அப்பா மேல் பாய ஆரம்பிச்சிட்டியா? அனாவசியமா அப்பாவை இழுத்தே நான் சும்மாயிருக்க மாட்டேன். என்கிட்ட அன்பா, பாசமா இருந்த ஒரே ஆத்மா அப்பாதான். அவரு என்கிட்ட பாசமா இருந்தது உனக்குப் புடிக்கல. என்கிட்ட அவரு பிரியம் காட்டினது உனக்குப் பொறாமையை வரவழைச்சிடுச்சு. உன்கிட்ட அவரு அன்பாக இல்லை பிரியமாக நடந்துக்கலை. அந்த எரிச்சலை, கோபத்தை என் மீது காட்டுன. என் மேல் வெறுப்பை வளர்த்துக்கிட்ட தனக்குப் புருஷனாகக் கிடைக்காதவன் பொண்ணுக்கு மட்டும் அப்பனாகக் கிடைக்கிறானே என்கிற வயிற்றெரிச்சல் உனக்கு... அதை எல்லா விதத்திலும் என்மீது காட்ட ஆரம்பிச்சு இன்னி வரைக்கும் காட்டிக்கிட்டிருக்க..."

கொஞ்சமும் தகாத அந்தக் குற்றச்சாட்டை கேட்டு மனம் குமுறிப் போனாள் காவேரியம்மாள். அறுந்து போன பல்லியின் வாலாகத் துடித்தது நெஞ்சு. என்ன சொல்லி இந்தப் பெண்ணின் தப்பான எண்ணத்தை மாற்ற முடியுமென யோசித்துக் கொண்டிருந்த போதே மீண்டும் ரம்யாவே தொடர்ந்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கிற..? என்னடா நம் உள் மனசு இவளுக்குத் தெரிஞ்சு போச்சேன்னு பயப்படறியா..?"

"இல்லேம்மா..." என்று மீண்டும் தளழ்ந்து பதில் சொன்னாள் அந்தம்மாள்.

"ஏம்மா எல்லாத்தையும் இப்படித் தப்பாகவே நினைச்சுக்கிட்டு உன்னையே நீ குழப்பிக்கிற. இதனால் நீயும் கஷ்டப்பட்டு உன்னையறியாமல் மற்றவர்களையும் கஷ்டப்படுத்திடறம்மா..."

"மற்ற யாரையும் நான் கஷ்டப்படுத்தல. உன்னை மட்டும்தான் கஷ்டப்படுத்தறேன். நீ கஷ்டப்படணும்னே படுத்தறேன்..."

"ஏம்மா...? அதுல உனக்கென்ன லாபம்?"

"லாப நஷ்டக் கணக்குப் பார்க்க நாம் என்ன வியாபாரமா செய்யிறோம்... அம்மான்ற முறையில நீ எனக்கு எதுவும் செய்யில. அதனால் பொண்ணுங்கிற ஸ்தானத்துல இருக்க நானும் நினைக்கில. நீ என்னை விரோதியாகப் பாவிச்ச. நானும் அதே விரோதத்தைக் காட்டுகிறேன்."

"அம்மா பொண்ணுக்கு மத்தியில் எப்படியம்மா விரோதம் வரமுடியும்...?"

"வந்திடுச்சே... அதனால்தானே இத்தனையும்...?"

அவள் வழியிலேயே போய் அவளைத் திருத்த முயற்சிக்க ஆரம்பித்தாள் அந்தத் தாய்.

"சரிம்மா... இதுவரை அப்படி நடந்திடிச்சின்னே வச்சிக்க. இனி மேல் பழசை மறந்திட்டுப் புதுசாக வாழலாமில்ல...? நமக்குள்ள ஒட்டுறவை வளர்த்திக்கலாமில்ல...?"

"முடியாது... மனசுங்கிறது கண்ணாடி மாதிரி. போட்டு ஒரு தரம் உடைச்சப்புறம் ஒட்டாது. ஒட்ட முடியாது."

"அப்படியெல்லாம் சொல்லாத ரம்யா. தயவு செய்து சொல்லாத பழசையெல்லாம் ஒதுக்கித் தள்ளிடும்மா. நான் ஏதாவது தப்பு செய்ததாக நினைச்சியானால்..."

சடாரென்று இடையில் குறுக்கிட்டாள் ரம்யா.

"நினைச்சியானால் என்ன... நீ செய்தது அத்தனையும் தப்புத்தான்."

"சரிம்மா... அத்தனை தப்புக்கும் நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன். நீ எந்த விதத்தில் மன்னிப்புக் கேட்கச் சொல்றியோ அந்த விதத்தில் கேட்டுக்கறேன். வா... இப்போ வந்து முதல்ல சாப்பிடு..."

"உன் மன்னிப்பும் மண்ணாங்கட்டியும் யாருக்கு வேணும்...? நீயே வேணாம்னு நான் முடிவு கட்டினதற்கப்புறம் உன் கைச் சாப்பாட்டை சாப்பிடுவேன்னா நினைக்கிற... நெவர்... இன்னிக்கே



வேலை தேட ஆரம்பிச்சிட்டேன். இன்னும் நாலைஞ்சு நாள்ல வேலை கிடைச்சிடும்."

"வேலையா?!" அதிர்ந்து போனாள் காவேரியம்மாள்.

"உனக்கு எதுக்கும்மா வேலை...?"

"ஏன் நீ மட்டும்தான் சம்பாதிப்பியா...? நான் சம்பாதிக்க மாட்டேனா...?"

"அப்படின்னால் படிப்பு...?"

"என்ன படிப்பு படிச்சு நீ சம்பாதிக்கிற...? நீயே சம்பாதிக்கிற போது என்னால் முடியாதா என்ன... சம்பாதிச்சு என் சுய கால்களில் நிற்கிறதாக முடிவு செய்திட்டேன்."

"நல்ல விஷயம்தாம்மா... ஒவ்வொரு பொண்ணும் அவங்கவங்க சுயகால்களில்தான் நிற்கணும். அதுதான் அவங்களுக்கு நல்லது. நீ அதை இந்தச் சின்ன வயசிலேயே உணர ஆரம்பிச்சது ரொம்ப நல்லதுதான். ஆனால் படிப்பைப் பாழாக்கிக்காதேம்மா. படிச்சு ஒரு டிகிரி எடுத்திட்டு இந்த முடிவைச் செய்."

"எதை எப்போ செய்யணும்னு நீ எனக்கு சொல்லித் தரவேணாம். எனக்கே தெரியும். நான் ஒரு முடிவுக்கு வந்தால் வந்தது தான். அதை யாராலும் மாற்ற முடியாது. நீ சம்பளம் கட்டுகிற படிப்பு எனக்கு வேண்டாம். நான் வேலைக்குத்தான் போகப்போறேன்."

அந்த முடிவிலிருந்து உடனடியாக அவளை மாற்ற முடியாதென உணர்ந்த அந்தத் தாய் மனது வேண்டுமென்றே பேச்சை வேறு திசைக்குத் திருப்பிற்று.

"சரி. உன் இஷ்டப்படியே செய். ஆனால் இப்போ சாப்பிட வாம்மா..."

ஒரு வினாடி யோசித்த ரம்யா காவேரியம்மாளை ஏறிட்டாள்.

"நான் சாப்பிடணும்னால் ஒரு நிபந்தனை."

"சொல்லும்மா... என்ன நிபந்தனை...?"

"இந்த வேளையிலிருந்து சாப்பாட்டிலிருந்து இந்த வீட்டில் எனக்காகச் செய்யப்படுகிற ஒவ்வொரு செலவையும் குறித்து வைத்துக் கொள்வேன். வேலை கிடைத்து முதல் சம்பளம் வாங்கியதும் அவை

அத்தனையும் திருப்பிக் கொடுத்து விட்டுத்தான் போவேன். அதற்குச் சம்மதமா...?"

"போவேன் என்றால்... எங்கேம்மா...?"

"லேடீஸ் ஹாஸ்டலுக்கு."

'ஓ! அது வேற இருக்கிறதா' என்று நினைத்துக் கொண்ட அந்த அம்மாள் வேறு ஒன்றும் பேசாமல் "சரி. உன் இஷ்டம்." என்றாள்.

அம்மாவைப் பணிய வைத்து விட்ட பெருமிதம் முகத்தில் தெரிய,

"சரி. நீ போய் தட்டு போடு வரேன்" என்றாள் ரம்யா.

முதல் முறையாக வேதாளம் மெல்ல மரத்தை விட்டு இறங்க ஆரம்பித்திருப்பது குறித்து மனதிற்குள் மிக மெலிதாக ஏற்பட்ட சந்தோஷத்துடன் அந்த அறையை விட்டு அகன்றாள் காவேரியம்மாள்.

## 23

அன்றைய அந்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் வீடு அமைதியாக இருந்தது. புயலுக்குப் பின்பு ஏற்படும் அமைதியாக இருந்தது. ரம்யாவிடம் கூட ஒரு மாறுதல் ஏற்பட்ட மாதிரி தோன்றியது. ஒரு வார்த்தை பேசாமல், யாரிடமும் எந்தவிதக் கோபமும் காட்டாமல், எரிந்து விழாமல், உக்கிரமும் ஆக்ரோஷமும் இல்லாமல் இருந்ததில் காவேரியம்மாள் அதிகம் சந்தோஷப்பட்டாள். 'ஒருவேளை தன் பெண் திருந்தி விட்டதோ...?' என்கிற எண்ணத்தில் அகமகிழ்ந்து போனாள். 'இவள் இப்படியே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என்கிற ஆதங்கம் கூட ஏற்பட்டது.

'என் அப்பனே... பெருமாளே... இந்தப் பொண்ணு இதே நல்ல புத்தியோட நிம்மதியாக சந்தோஷமாக இருந்து எங்களையும் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் வாழ வைக்கட்டும்ப்பா. அவள் மனதிலும் அமைதி ஏற்பட்டு எங்க மனதிலும் அமைதி ஏற்படட்டும்ப்பா. இந்த நாலைந்து நாளாக இந்த வீட்டுல நிலவுகிற நிம்மதி நிலைக்கணும். எல்லாப் பெண்களையும் போல் என் பெண்ணும் அம்மா. தங்கச்சி, தம்பின்னு பாசத்தோடும், நேசத்துடனும் நடக்கணும். தாமரை இலைத் தண்ணீர் மாதிரி எங்க யாருடனும்



ஒட்டாமல், விலகி எங்கேயோ போய் நின்னுக்கிட்டு, எங்கள் மேல் வேண்டாத வெறுப்பையும், குரோதத்தையும் வளர்த்துக்கிட்டுத் தானும் தவித்து எங்களையும் தவிக்க வைக்கிறாளே... அது மாறணும். மாத்துப்பா... அவளை மாற்ற உன்னைத் தவிர வேறு யாராலும் முடியாதுப்பா... அவ படிப்பை ஒழுங்காக முடிக்கணும்ப்பா. பாதியில் விட்டு விட்டு வேலைக்குப் போகிற எண்ணத்தை மாற்றி டிகிரி எடுக்க வையப்பா...

அதற்கு அப்புறம் வேலைக்குப் போகட்டும். சம்பாதிக்கட்டும். சுய கால்கள்ல நிற்கட்டும். கல்யாணம் செய்துகிட்டு நல்லவிதமாகக் குடித்தனம் செய்யட்டும்...'

'... எனக்கு மூத்த பொண்ணு இவ. பின்னால் இன்னும் ரெண்டு பொண்ணுங்க இருக்காங்க. அவங்களையும் படிக்க வச்சு காப்பாற்றி கரை சேர்க்கணும். இவ இப்படி தான் தோன்றித்தனமாக நடந்துக்கிட்டால், எடுத்தேன் கவிழ்த்தேன்னு பேசினால், படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு வேலைக்குப் போகிறேன்னு கிளம்பினால், வேலை கிடைத்து விட்ட திமிரில் வீட்டை விட்டுப் போய் ஹாஸ்டலில் தங்கினால் குடும்ப மானம், மரியாதையெல்லாம் காத்தில் பறந்திடும்ப்பா. மூத்த பொண்ணு இப்படி நடந்துக்கிட்டால் அடுத்த இரண்டு பொண்ணுங்களும் பாதிக்கப்படுவாங்க. அவுங்க வாழ்க்கை பாதிக்கப்படும். முன்னேறு போகிற வழியில்தானே பின்னேறு போகும்னு உலகம் சொல்லி விடும்'

'அதனால் தயவு செய்து இந்தப் பொண்ணு மனசை மாற்றி இதே மாதிரி கோபம், ஆக்ரோஷம், வெறுப்பு எதுவுமில்லாமல் எங்க கிட்ட அன்பா, பிரியமா, சாந்தமா, நிதானமா நடந்துக்க வை பெருமாளே... இந்தக் குடும்பத்திலும் அமைதி, நிம்மதி, சாந்தி ஏற்பட வை. எல்லாப் பொண்ணுங்க மாதிரி இந்தப் பொண்ணையும் நல்ல பொண்ணாக மாற்றி என் வயிற்றில் பால் வார்க்க வையப்பா...'

என்றெல்லாம் நெஞ்சுருக, மனமார, வாயார வேண்டிக் கொண்ட அந்தம்மாள் ஒரு சின்ன வெள்ளைத் துணியை மஞ்சளில் தோய்த்து ஒரு ரூபாய்க் காசு எடுத்து முடிந்து வைத்து நேர்ந்து கொண்டாள்.

'அவள் எண்ணங்களும் வாழ்க்கையும் நேராகி என் அண்ணன் மகன் குணா இல்லாது போனாலும் அவள் வேறு யாரையாவது கட்டிக்கிட்டு நிம்மதியாக சந்தோஷமாக வாழட்டும். நான் உன் மலைக்கு மற்ற குழந்தைகளையெல்லாம் அழைச்சிக்கிட்டு நடந்து வரேம்ப்பா... என்னைக் கொஞ்சம் கண் திறந்து பாரப்பா... கல்யாணம் ஆன நாளிலிருந்து கஷ்டப்படறேம்ப்பா... இனி இந்தக் குழந்தைகள் மூலமாவது சுகப்படணும். அவங்களும் சுகப்பட்டு என்னையும் சுகப்பட வைக்கணும்ப்பா...'

கை கூப்பி, கண்மூடி, கெஞ்சி இறைஞ்சி பிரார்த்தனை செய்து விட்டு எல்லாக் குழந்தைகளுக்கும் சாப்பாடு போட்டுப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி விட்டுக் கடைசியாக ரம்யாவைக் கூப்பிட்டாள்.

"ரம்யா... சாப்பிட வாரியம்மா... இல்லே... வழக்கப்படி எடுத்து வச்சு மூடிட்டே போகட்டுமா...?"

ஒருமுறை காவேரியம்மாளின் முகத்தை நிமிர்ந்து பார்த்த ரம்யா எந்தவித பாவமும் அற்ற குரலில், "எடுத்து வச்சே மூடிட்டுப் போகலாம்" என்றாள்.

"சரிம்மா..." என்று திரும்பிய காவேரியம்மாளை ரம்யாவின் குரல் தடுத்து நிறுத்தியது.

"ஒரு நிமிஷம்!"

திரும்பிப் பார்த்தாள் அந்த அம்மாள்.

"இந்த நாலு நாளாக நான் சாப்பிட்ட சாப்பாட்டுக்கு, குடிச்ச காப்பிக்கெல்லாம் கணக்கு வச்சுக்கிட்டியா...?"

'பெருமாளே... இது என்ன சோதனை? இப்போதுதானே உன்கிட்ட வேண்டிக்கிட்டு வந்தேன். அதுக்குள்ள திரும்பவும் என்னைச் சோதிக்க ஆரம்பிச்சிட்ட பார்த்தியா...? வேண்டாம்ப்பா... வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏற ஆரம்பிச்சால் என்னால் தாங்க முடியாதுப்பா...'

உள்ளுக்குள் கெஞ்சியவாறு மெல்ல மகளை ஏறிட்டாள் அந்தப் பார்வையில் எல்லையற்ற பரிவும், பாசமும், அன்பும், ஆதரவும்



ததும்பி நின்றன. ஒருவித கெஞ்சல் தெரிய மிகவும் தயங்கி மெதுவான குரலில் பேசத் துவங்கினாள்.

"இல்லம்மா. எந்தக் கணக்கும் நான் வச்சிக்கலை..."

"ஏன் வச்சுக்கலை? அன்னிக்கு நமக்குள்ள என்ன ஒப்பந்தம் செய்துக்கிட்டோம்...?"

அந்த அம்மாள் பேசாதிருந்தாள்.

"இப்படிப் பேசாமல் நின்றால் என்ன அர்த்தம்...? குடிக்கிற தண்ணிக்குக் கூட கணக்கு வச்சுக்கிட்டால்தான் குடிப்பேன்னு நான் சொல்லலை...?"

"சொன்னேம்மா..."

"அப்படிச் சொல்லியும் கணக்கு வச்சுக்கிடலைன்னு கையை விரிச்சால் என்ன அர்த்தம்...?"

"என்ன ரம்யா பேசற...? அன்னிக்கு நீ ரொம்பக் கோவமாக இருந்ததால் உன்னைச் சாப்பிட வைக்கிற எண்ணத்தில் எதையோ சொல்லிச் சமாளித்தேனே தவிர நிஜமாகவே கணக்கு எழுதி வச்சுப் பேன்னா நீ நினைச்சே...?"

"கணக்கு வச்சுக்கலேன்னால் எனக்கு சாப்பாடு வேணாம்."

"இது என்ன பிடிவாதம் ரம்யா. நீ என் வயத்துல பொறந்த பொண்ணும்மா... அதுவும் மூத்த பொண்ணு..."

"இருக்கலாம். ஆனால் அது என் தப்பில்லே..."

"ரம்யா...?"

"உண்மையைத்தான் சொல்றேன். என்னைத்தான் பெற்றுக் கணும்னு விரும்பி நீயும் பெற்றுக்கலை. உனக்குத்தான் பிறக்கணும்னு வேண்டி வந்து நானும் பிறக்கலை. விருப்பப்பட்ட குழந்தை பிறக்கணும். விருப்பப்பட்ட பெற்றோர் அமையணும் என்கிற நிலை இருந்தால் யார் யாரோ எங்கெங்கோ பிறந்திருப்பாங்க. கூன், குருடு, நொண்டி, முடம்ங்கிற குழந்தைகளை எந்தத் தாயும் ஏத்துக்கிட்டிருக்க மாட்டா... முக்கியமாகப் பெண் குழந்தைகள் பிறந்திருக்கவே மாட்டாங்க. நல்ல காலமாகக் கடவுள் இந்த விருப்பு, வெறுப்பை மனுஷங்களுக்குக் கொடுக்கலை. மனுஷங்ககிட்ட விட்டு விடலை

நான் உன் வயத்துல பிறந்ததுக்கு எந்த வகையிலும் நான் காரண மில்லை. நான் பிறக்கிறதுக்கு நீ ஒரு கருவிதானே தவிர காரணமில்லை. அதனால் தமிழ் சினிமா மாதிரி பெத்தவ, பத்து மாசம் சுமந்தவ என்கிற தத்துவமெல்லாம் பேசிக்கிட்டிருக்காமல் ஹாஸ்டல்ல தங்கற மாதிரி நான் இங்கே தங்கறேன். ஹாஸ்டல் ஃபீஸ் என்னவோ, மெஸ் சார்ஜ் என்னவோ அதை நீ வாங்கிக்க; என்ன புரியுதா...?"

அந்த அம்மாளுக்கு அவனது வெற்று உதார் புரிந்தது. கையில் காசு இல்லாத காரணத்தினால்தான் இந்த அளவிற்காவது இறங்கி வந்திருக்கிறான் என்பது தெரிந்தது. காசு இருந்திருந்தால் என்றைக்கோ வீட்டை விட்டுப் போயிருப்பான். ஹாஸ்டலில் தங்கிக் கொண்டிருப்பான். ஹாஸ்டலில் தங்க யாரும் கடன் சொல்ல முடியாது. வேலை கிடைத்துத் தருகிறேன் என முடியாது. முன் பணம் கட்டினால்தான், வேலையில் இருப்பதை நிரூபித்தால்தான் ஹாஸ்டலில் தங்க விடுவார்கள். அவை இரண்டும் இல்லாத ஒரே காரணத்தினால்தான் இந்த அமைதி. இந்தப் பதுங்குதல். வேலை கிடைத்து விட்டால் ஒரே பாய்ச்சலாகப் பாய மாட்டானா...?

"என்னம்மா... யோசிச்சுக்கிட்டுப் பேசாமல் நிற்கிற...?"

சடாரென்று உடம்பு சிலிர்த்துப் போயிற்று காவேரி யம்மாளுக்கு. 'அம்மாவா...! நிஜமாகத்தான் அம்மா என்று கூப்பிட்டானா...! அப்படிக் கூப்பிடுவதை நிறுத்தி எத்தனை நாட்க ளாகி விட்டன...' மீண்டும் அவன் தன்னை அப்படிக் கூப்பிட வேண்டுமென்ற ஏக்கத்தில் மகனை ஏறிட்டாள். அந்தக் கண்களிலும், பார்வையிலும் எல்லையற்ற தாபம் தெரிந்தது.

"என்னன்னு கூப்பிட்ட... இன்னொரு தரம் கூப்பிடு ரம்யா..."

சட்டென்று தன்னையும் மீறி வந்துவிட்ட அந்த வார்த்தைக் காகக் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்ட ரம்யா குரலில் பழைய விரைப்பை வரவழைத்துக் கொண்டாள்.

"ஏதோ ஒரு தரம் வாய் தவறி வந்து விட்டதை இன்னொரு தரம் சொல்ல முடியாது. நீ எனக்கு அம்மா இல்லைன்னு நான் எப்போதே தீர்மானிச்சிட்டேன். அம்மா என்கிற நினைப்பு மனசுக்குள் வர்ற போதெல்லாம் 'சின்னம்மா... சின்னம்மா'ன்னு வலுக்கட்டாய



மாக மாத்திக்கிடுவேன். இப்போ சொல்றேன் கேட்டுக்க. நீ சின்னம்மா கூட இல்லை. நீ யாரோ நான் யாரோ. உன் வயத்துல பிறந்து தொலைச்ச ஒரே பாவத்துக்காகப் பல்லைக் கடிச்சுக்கிட்டிருக்கேன். அதுகூட கையில் காசு இல்லாமல் தான் இருக்கேன். காசு இருந்திருந்தால் எப்போதோ கிளம்பிப் போயிருப்பேன்.

"அந்தக் காசைச் சம்பாதிக்க நானும் நாயாக அலையறேன். நாலு நாளாக வேலை தேடி ஒவ்வொரு ஆபீஸ் படியாக ஏர்றேன். ஒவ்வொருத்தனும் ஒவ்வொன்றாகச் சொல்லித் தட்டிக் கழிக்கிறான். நேத்து போன இடத்தில் டைப்ரைட்டிங் தெரியுமா? ஷார்ட் ஹாண்ட் வருமா என்று கேட்டான். இன்னொருத்தன் கம்ப்யூட்டர் ஆபரேஷன் தெரிந்தால் உடனடி வேலை என்கிறான். கம்ப்யூட்டர் கத்துக்கிட்டா நல்ல எதிர்காலம் இருக்கு. ஆனால் எப்படிக் கத்துக்கிறது? பத்தாயிரம், பதினைந்தாயிரம்னு ஆகும். அதுக்கு எங்கே போக முடியும்...? வரிசையாப் புள்ளைங்களைப் பெத்துக்கத் தெரிஞ்ச உங்களுக்கு அவுங்க எதிர் காலத்துக்கு என்ன செய்ய முடியும்னு யோசிக்கத் தெரிலையே...? எதிர் காலம்ங்கிறது எந்த உத்திரவாதமும் இல்லாதது. போராட்டமானது. மிகுந்த போட்டிகள் கொண்டது. அந்தப் போட்டிகளில் புள்ளைங்கள் முன்னுக்கு வரணும்னால் இந்த மாதிரி படிப்பெல்லாம் தேவை. இந்த மாதிரிப் படிப்பெல்லாம் தரணும்னால் காசு வேணும். நம்ம கையில் காசு இருக்கா...? புள்ளைங்களை நல்ல விதமாகப் படிக்க வைக்க முடியுமா...? அவங்க அவசியத் தேவைகளையாவது நிறைவேத்தி வைக்க முடியுமான்னு கொஞ்சமாவது யோசிச்சா பிள்ளைங்களைப் பெத்துக்கிட்டீங்க...?

"நீதான் யோசிக்கலை. யோசிக்கிற புத்தி, தகுதி எதுவும் கிடையாது. ஆனால் அப்பா யோசிச்சிருக்க வேணாம்...? உன்னை வெறுக்கிற மாதிரி பேசி, நடிச்சு, கடைசியில் உன்கிட்டேயே இத்தனைக் குழந்தைங்களையும் பெத்துக்கிட்டாரு இல்ல... சீ! எத்தனை சுயநலம். உங்களை நீங்க கட்டுப்படுத்திக்காத காரணத்தால் நாங்க இப்போது கஷ்டப்படுகிறோம். உன்னை மட்டுமில்லை. இப்போ நான் அப்பாவையும் சேர்த்து வெறுக்கிறேன். என்ன மனுஷன். பொண்டாட்டிங்கிறவளை வெறுத்துக்கிட்டே அனுபவிச்ச

மிருகம். அதுக்கு உடன்போன அடுத்த மிருகம் நீ. இந்த ரெண்டு மிருகங்களுக்கும் வந்து மூத்த மகளாகப் பிறந்து நான்தான் இப்போது தவிக்கிறேன். திண்டாடித் தெருவில் நிற்கிறேன். உன்னை மட்டுமல்ல. இந்த உலகத்தில் இருக்கிற அத்தனை அப்பா, அம்மாக்களையும், அப்பா அம்மாவாக ஆகப் போகிறவங்களையும் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கறேன்...

"... உங்க சுகத்துக்காக ஒரு தொலைநோக்குப் பார்வை இல்லாமல் குழந்தை பெற்றுக்காதீங்க. அவங்க பெரியவங்களாகி வளரப் போகிற அந்த உலகத்தில் அதிகப் போட்டிகள் நிறைந்த உலகத்தில் நீங்க பெறப் போகிற குழந்தைங்களுக்கு அந்தப் போட்டிகளில் கலந்து கொள்கிற தகுதியைத் தர முடியும். அந்தப் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடைக்கும் என்கிற உத்திரவாதம் உங்களுக்குள் ஏற்பட்டால் மட்டும் குழந்தைங்களைப் பெற்றுக்குங்க.

"இல்லாட்டி இந்த மாதிரி பெற்றுப் போட்டு எங்களைத் திண்டாடச் செய்யாதீங்க. எதிர்காலத்துக்கான எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் எங்களை நடுத்தெருவில் நிற்க வைக்காதீங்க... குழந்தைகளின் எதிர்காலப் பாதுகாப்பிற்கு உத்திரவாதமும், அந்தத் தகுதியையும், உத்திரவாதத்தையும் நிரூபிப்பவர்களும் மட்டுமே குழந்தைகள் பெற வேண்டும் என்று அரசாங்கம் ஒரு உத்திரவு போடணும். சட்டம் இயற்றணும்.

"அது மிகக் கடுமையான சட்டமாக இருக்க வேண்டும். மீறுபவர்களுக்கு அதிகபட்ச தண்டனை தரப்பட வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தைப் பற்றின மிகப் பெரிய கேள்விக்குறி எழ, மருள மருள விழித்துக் கொண்டு நிற்கிற என்னைப் போன்றவர்களது எண்ணிக்கை குறையும். வேலையற்றவர்களது திண்டாட்டம் நீங்கும். எங்களுக்கு நாங்களே பாரமாகி இந்தப் பூமியையும் பாரமாக்க மாட்டோம்..."

அதற்கு மேல் தாங்க மாட்டாதவளாகக் குமுறிக் குமுறி அழத் தொடங்கிய மகளைப் பார்த்தவாறு அதிர்ந்து போய் நின்று கொண்டிருந்தாள் அந்தத் தாய்...



# 24

ரம்யா வேலை தேட ஆரம்பித்துப் பதினைந்து நாட்களும் உச்சி வெய்யில் உடம்பில் இறங்கச் சென்னை நகர் வீதிகளில் வலம் வந்து கொண்டிருந்தாள். அண்ணா சாலை அலுவலகங்கள், பாரீஸ் கார்னரின் வர்த்தக இடங்கள் என மாறி மாறி முற்றுகையிட்டாள். எத்தனையோ அலுவலகங்கள் ஏறி இறங்கினாள்.

எங்கு போனாலும் முன் அனுபவம் கேட்டார்கள். டைப் ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட் வேண்டுமென்றார்கள். கம்ப்யூட்டர் ஆபரேஷன் தெரியுமா என்றார்கள். இவை எதுவும் தெரியாது என அவள் தலையாட்டியதும் "எதுவும் தெரியாமல் என்ன வேலை கொடுக்க முடியும்...? தெரிந்து கொண்டு வாருங்கள்" என்றார்கள்.

இதற்கு மேல் டைப்ரைட்டிங் கற்றுக் கொண்டு ஷார்ஹாண்ட் பழகிப் பரிட்ஷை எழுதிப் பாஸாகி அதன் பின்னர்தான் வேலை என்றால் ஒரு வருடமாகிவிடும். ஒரு வருடம் காத்திருப்பதென்பது அவளால் முடியாத காரியம். ஒரு வருடத்திற்குப் பின்னர்தான் வேலை என்றால் அம்மாவிடம் அத்தனை வீம்பாகப் பேசியிருக்கமாட்டாள். எல்லாவற்றிற்கும் கணக்கு வைத்துக்கொள் என்று அகங்காரப் பட்டிருக்க மாட்டாள். வாய்விட்டு வார்த்தைகளை இறைத்தபின் அள்ள முடியாது. இனி கல்லூரிக்குப் போய் படிப்பதைத் தொடராலாமென்றாலும் படிப்பு முடிந்த பிறகும் இதே கதைதான். டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட் தெரியுமா. கம்யூட்டர் ஆபரேஷன் வருமா என்கிற இந்தக் கேள்விகளை மீண்டும் கேட்பார்கள். அப்போதும் இதே மாதிரி தெரியாதெனத் தலையாட்டியாக வேண்டும். ஒரு வருடம் படிப்பை முடித்து டிகிரி எடுத்த பின்னரும் இதே நிலைமைதான் என்கிறபோது என்ன செய்யலாமென்று யோசித்தாள்.

இனி அறிவார்த்தமான வேலைகளைத் தேடுவதை விட அழகார்த்தமான வேலை தேடுவதுதான் நல்லது என்பதாக மனதிற் குட்பட்டது. ரிசப்ஷனிஸ்ட் வேலை. ஏர்ஹோஸ்டஸ் வேலை என ஏதாவது கிடைக்காதா என்று ஏங்கினாள். தன் இத்தனை அதீதமான அழகிற்குக் கூட- ஒரு வேலை கிடைக்காததில் துவண்டு போனாள். வேலை என்று தீர்மானித்த பின்னர் ஒரே நாளில் கிடைத்து விடுமென்றுதான் நம்பினாள். தன் இந்த அழகிற்கு உலகத்தில் எதுதான் கிடைக்காமற்போகும் என்கிற எண்ணம் ஏற்பட்டது. வெறும் அழகும்,

நுனிநாக்கு ஆங்கிலமும் இருந்தால் எதையும் சாதிக்க முடியும். சாதித்து விடலாமென்று நம்பிக் கொண்டிருந்தாள்.

அந்த நம்பிக்கை சிதறிப் போனதில் முற்றிலும் மனம் தளர்ந்து போனாள். தன்னை எங்கோ கொண்டு போய் ராணி மாதிரி உட்கார வைத்து விடுவார்கள் என்ற எண்ணத்தில் மிகப் பெரிய அடியாக விழுந்ததும் தாங்கிக் கொள்ள முடியாமற் தவித்தாள். ஒரு வேலைக்கு இவ்வளவு கஷ்டப்பட நேரிடும் என்பது அவள் சிறிதுகூட எதிர் பார்க்காதது.

ஆனால், முற்றிலும் வேலையே கிடைக்கவில்லை எனவும் சொல்லிவிட முடியாது. விற்பனைப் பெண் வேலை, வீடு வீடாகச் செல்கிற வேலை, சில இடங்களில் தப்பான பார்வை, தப்பான நோக்கம் கொண்ட வெளிப்பூச்சிற்கு ஏதோ பெயர் சொல்லப்பட்ட வேலை என எது எதுவோ கிடைத்தது. பேனா, பேப்பர் தருகிற சாக்கில் விரல்களை மெல்ல வருடினார்கள். பார்வையில் துகிலுரித் தார்கள். புடவைக்கு அப்பால் தேடினார்கள். அவளுடைய அழகிற்குத் தரப்பட்டவை இந்த அங்கீகாரங்களே. பஸ் ஸ்டாப்பில் கல்லூரிக்குப் போக பஸ்ஸிற்காகக் காத்து நிற்கிற போதெல்லாம் லிஃப்ட் தருவதாகச் சொல்லி வந்த படகுக்கார் காரர்களின் அதே நோக்கம் தான் இவர்களுக்கும் என்பதைப் புரிந்து கொண்டாள். அது போன்ற எந்தவித வேலையையும் ஒப்புக் கொள்ள மனது மறுத்தது. வேறு நல்ல வேலைகளுக்கு இடமின்றி, கிடைத்த இந்த வேலைகளை ஏற்றுக் கொள்ளவும் மனமின்றி ஒருவிதப் போராட்டத்தோடு நாட்கள் நகர தவித்துப் போனாள்.

தன் வாழ்க்கையில் மட்டும் ஏன் எல்லாமே இப்படி நடக்கின்றன என்ற கேள்விக்கு திருப்தியான எந்த பதிலும் அவளுக்குக் கிடைக்கவில்லை. கல்லூரிக்கும் போகாமல், வேலையும் கிடைக்காது வெற்று அலைச்சல் கஷ்டமாக இருந்தது. பகற்பொழுதின் வெய்யில் முழுதும் உடம்பில் இறங்கினதில் கருத்துப் போய் விட்டது தெரிந்தது. நிகுநிகு வென்ற தாழம்பூ நிறம் மெல்ல மாறிக் கொண்டு வருவது தெரிந்தது. அலைச்சலும், வெய்யிலும் சேர்ந்து முகத்தில் களைப்பு, சோர்வு, கண்களுக்கடியில் கருவளையங்கள் எல்லாம் ஏற்படுத்தின கண்ணாடியில் பார்க்கப் பார்க்க நெஞ்சு கனக்கத் தொடங்கிற்று.



வேறு எதுவானாலும் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் அழகிற்கு பங்கம் வருவதை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும் என்ற கேள்வியில் உடைந்து போக ஆரம்பித்தாள். இப்படியே போனால் நிறம் முற்றிலும் மாறிக் கருத்து, முகவசீகரம் போய் அழகையெல்லாம் இழந்து நிற்க நேரிடுமோ என்று தோன்றியபோது அடிவயிறு பகீரென்றது. நெஞ்சைப் பந்தாக பயம் பற்றிக் கொண்டது. அந்த எண்ணம் தாங்க முடியாததான போது மிகவும் நிலைகுலைந்து போனாள்.

இனி வேலை தேடலாமா வேண்டாமா என்கிற தடுமாற்றம் ஏற்பட்டது. பேசாமல் அம்மாவிடம் சொல்லி, அவளது எக்ஸ்போர்ட் கார்மெண்ட் கம்பெனியிலேயே ஒரு வேலை தேடிக் கொண்டு விடலாமே.. என்று கூட எண்ணிற்று. ஆனாலும் அது தோற்றுப் போன உணர்ச்சியைத் தோற்றுவித்தது. யாரிடமுமே இரங்கப் பிரியப்படாதவள் அம்மாவிடம் இரங்க முற்றிலுமாகப் பிரியப்பட வில்லை.

'போயும் போயும் அம்மாவிடமா..?' என்ற கேள்வி மேலோங்கியதில் அந்த எண்ணத்தையும் கைவிட்டாள். அதற்கு இன்னொரு காரணத்தையும் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

'எனக்கேற்ற வேலையா அது..? இந்த அழகுக்கு ஏற்ற வேலையா...? வெள்ளிக் குத்துவிளக்கை வைத்துக்கொண்டு போய் யாராவது குளியலறை மூலையில் வைப்பார்களா..? அம்மாவின் கம்பெனியில் வேலைக்குச் சேருவது அது மாதிரிதான். தான் எப்படிப் பட்டவள்! எந்த மாதிரி அழகு! இதற்கா..? இந்த அழகிற்கா வேலை கிடைக்கமாட்டேன் என்கிறது..? சீ..! என்ன இது..?

'சரி வேலை கிடைக்காமற் போனாலும் போகட்டும். பெரிய, பணக்கார, அழகான இளைஞன் யாராவது வந்து தன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு போகக் கூடாது..? எத்தனை சினிமாக் களிலும், கதைகளிலும் நிகழவில்லை..? நிஜ வாழ்க்கையில் கூட அப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்ததாக எவ்வளவு கேள்விப்பட் டிருக்கிறோம்...? ஏன், டயானாவைப் பிரின்ஸ் சார்லஸ் அப்படித் தானே காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டார். டயானாவின் அழகில் மயங்கித்தானே பட்டத்து இளவரசி அந்தஸ்தில் கொண்டு போய் வைத்தார்..?

அந்த மாதிரி தனக்கு ஒருவன் வரக்கூடாதா..? உன் அழகிற்கு நீ தெருத்தெருவாக வேலை தேடுவதா..' என்று தூக்கிக் கொண்டு போகக் கூடாதா..? உடனே சிண்ட்ரில்லாவின் கதை ஞாபகத்திற்கு வந்தது. இரண்டாம் தாயாரால் கொடுமைக்கு ஆளான சிண்ட்ரில்லாவின் அதே நிலைமையில்தான் தானும் நிற்கிறோம் எனத் தோன்றியது. சிண்ட்ரில்லாவின் அழகை மிக எதேச்சையாகப் பார்த்து விட்ட ராஜகுமாரன் அவளது அழகில் மோகித்து அவளைத் தூக்கிக் கொண்டு போன மாதிரி தன்னை தூக்கிக் கொண்டு போக ஏன் எந்த ராஜகுமாரனும் வரவில்லை என்ற கேள்வி தொண்டையில் குத்திக் கொண்ட ஊவாமுள்ளாக உறுத்தத் தொடங்கிற்று. ஏதோ ஒரு புத்தகத்தில் எப்போதோ படித்த கவிதை வரிகள் பளீரென ஞாபகத் திற்கு வந்தது. அடிக்கடி நினைவிற்கு வந்து அவளை ஆட்டிப் படைக்கிற வரிகள்தாம் அவை.

'கொத்திக் கொண்டு போவாண்டி
ஆப்பிள் சிவப்பு உன் பேத்தி..'

தானும் ஆப்பிள் சிவப்புதான், தன்னையும் நிச்சயம் ஒரு ராஜகுமாரன் வந்து கொத்திக் கொண்டு போகப் போகிறான். ராஜா தேசிங்கு மாதிரி குதிரை மீது வந்து தூக்கிக் கொண்டு பறந்து விடுவான்.. என்றெல்லாம் கற்பனை செய்து வைத்திருந்தவளுக்கு எந்த ராஜகுமாரனும் வராதது மிகப் பெரிய ஏமாற்றமாக இருந்தது என்றால், இப்போது தெருத்தெருவாக அலைந்தும் வேலை கிடைக்காதது பேரிடியாக இறங்கிற்று.

வேலை என்கிற முடிவிற்கு வந்த உடனே 'இந்த அழகான முகத்திற்கு, ஐந்தடி நாலங்குல உயரத்திற்கு, திகுதிகுவென்ற நிறத்திற்கு இன்று சாயந்திரத்திற்குள் மிக நல்ல வேலையாகக் கிடைத்துவிடும் தேடிக்கொண்டு விடலாம். என்றிருந்தவளுக்கு நிஜம் மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பதினைந்து நாட்களாகச் சுற்றியவளுக்கு முதல் முறையாக வாழ்க்கையின் நிதரிசனம் மெல்லப் பிடிபடத் துவங்கிற்று. தன் கற்பனையும், நடைமுறை வாழ்க்கையும் முற்றிலும் மாறாக இருப்பதை உணர ஆரம்பித்த போது அடிவயிறு கலங்கிற்று. எதிர்காலம் என்ன என்பது கேள்விக்குறியாகி மருட்டியதில் அதிகம் பயந்து போனாள்



அவள். அம்மாவிடம் சரணாகதி அடைவதைத் தவிர வேறு வழியில்லை என்றாகி விடப் போகிறதே என்கிற தவிப்பில் அந்த எண்ணத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத காரணத்தால், 'எந்த வேலையானாலும் சரி. இன்று வேலை கிடைத்துத்தான் வீட்டிற்குத் திரும்புவது' என்கிற வைராக்கியத்துடனே வீட்டை விட்டுக் கிளம்பினாள்.

வீட்டை விட்டுக் கிளம்பின போதே மணி பதினொன்றாகி விட்டிருந்தது. தோல் செருப்பு அறுந்து போய் இன்னமும் தைக்கா திருந்ததால் பழைய ரப்பர் செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பினாள். நடையை விட்டுப் படியிறங்கித் தார் ரோடில் கால் வைத்த போதே வெய்யில் உடம்பைப் புடம் போடத் துவங்கிவிட்டது. சுரீரென்று முகத்தைச் சுட ஆரம்பித்தது. மைலாப்பூர் சித்திரக்குளம் சுற்றின சின்ன வீதியின் தார் இளக்கத்தில் கால் செருப்பு சப்பு சப்பென்று ஒட்டிக் கொண்டது. வீட்டின் மூலையில் எங்கோ கிடந்த பூச்சிகளால் பொட்டுகள் போடப்பட்டிருந்த பழைய குடை ஒன்றை எடுத்துக் கொண்டுதான் புறப்பட்டிருந்தாள் அவள். அந்தப் பழைய குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு நடக்க என்னவோ போல் தானிருந்தது. தன் அழகிற்கும் அந்த ஒட்டை விழுந்த குடைக்கும் கொஞ்சம் கூட சம்பந்தமில்லாததைப் புரிந்து கொண்டாலும் வெய்யிலின் உக்கிரத்திலிருந்து ஓரளவாவது தப்பிக்க முடியும் என்பதாலே குடை கொண்டு வந்திருந்தாள். ஆனால் வெய்யில் அந்தக் குடையைக் கொஞ்சம் கூட சட்டை பண்ணியதாகத் தெரியவில்லை. 'குடை வைத்தா என்னை தடுக்கப் பார்க்கிறாய்..' என்று கோபப்பட்ட மாதிரி இன்னமும் உக்கிரமாகி உடம்பைத் தாக்கத் தொடங்கிற்று. பிரித்த குடைக்குள்ளும் தாங்க முடியாத அனல் வீசிற்று.

'உஸ்..உஸ்..' என்று ஆற்றியவாறு கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தபடி நடந்து வந்தாள் அவள். சித்திரக் குளக்கரை கடந்து, நேராக வந்து, பிளாட்பாரக் காய்கறிக்கடைகள், பழக்கடை களால் போடப்பட்ட குப்பைகளை மிதிக்காமல் இருக்க சிரமப்பட்டு, ஐயங்கார், லியோ காபிக்கடைகளின் வாசனை நெஞ்சை நிறைக்க கபாலி குளம் வந்து தெருவைக் கடக்க நின்றாள். பூதம் மாதிரி விர்விர்ரெனப் போன பஸ்களும், கார்களும் ஆட்டோ ரிக்ஷாக்களின் ஹாரன் அலறல்களிலும் எதிர்புறம் போவதென்பது அத்தனை சுலபமாக இல்லை. சில விநாடிகள் தயங்கி நின்று, வண்டிகள் தயங்கிப்

போன நேரத்தில் சடாரென்று கடந்து பஸ் ஸ்டாப்பை அடைந்தாள். அதற்குள் வியர்வை ஆறாக வழிந்து ஓடலாயிற்று. ஜாக்கெட் நனைந்து உடம்போடு ஒட்டிக் கொண்டது. 21. 21-சி பஸ்களுக்கான நிழற்குடைக்குள் ஓடிப்போய் ஒதுங்கியபோது லேசாக நா வரளுகிற மாதிரி தோன்றியது. கைக்குட்டையை மூடியபோது காலடியில் யாரோ பள்ளம் தோண்டுகிற உணர்வு தோன்றியது.

'என்ன இது..? எதற்காக நாக்கு இப்படி உலர்ந்து போகிறது..? யார் தன் காலடியில் பள்ளம் தோண்டுகிறார்கள்..? திடீரென்று ஏன் சூரியன் மங்கலாகிக் கொண்டே வருகிறது..? இத்தனைச் சத்தமும், ஆரவாரமும் கொண்ட மயிலாப்பூர் குளக்கரை சட்டென்று ஏன் இப்படி ஓய்ந்து போய்விட்டது..? எதிரில் இருக்கிற மனிதர்கள், காட்சிகள் எல்லாம் மறைந்து எதற்காக இத்தனை இருட்டு சூழ்ந்து கொள்கிறது..? ஐயோ.. என்ன இருட்டு இது..?'

சடாரென்று அந்த பிளாட்பார ஓர பஸ் ஸ்டாப்பிலேயே சரிந்து கீழே விழுந்தாள் அவள்..

## 25

ஒரு பெண், அதுவும் இளம் பெண், அதிலும் அழகான பெண் பஸ் ஸ்டாப்பில் மயங்கி விழுந்தது அடுத்த வினாடியே மிகப் பெரிய செய்தியானது. காற்று வாக்கில் சாலையின் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை பரவிப் போயிற்று. ரம்யாவைச் சுற்றி ஆண்களும், பெண்களுமாக மிகப் பெரிய கூட்டம் கூடிப் போயிற்று. சைக்கிள்களும், ஸ்கூட்டர்களும், ஆட்டோக்களும் நின்றதில் போக்குவரத்து நெரிசல் பட ஆரம்பித்தது. இரு திசைகளிலும் மாறி மாறி கார் ஹாரன்கள் அலறத் துவங்கின. இரு புறங்களிலும் நீண்ட நெடும் வரிசையில் பஸ்களும், கார்களும் நின்று ஏதோ ஊர்வலம் மாதிரியான தோற்றத்தை ஏற்படுத்தியது.

தன்னைச் சுற்றி நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றங்கள் எதையும் அறியாதவளாக அப்படியே கிடந்தாள் ரம்யா. யாரோ ஓடிப் போய் சோடா வாங்கிக் கொண்டு வந்தார்கள். சோடா உடைக்கப்பட்டு முதலில் முகத்தில் தெளிக்கப்பட்டது. அதில் மெல்லக் கண் திறந்து பார்க்க முயற்சித்தவளது தலையைத் தூக்கி ஒரு வயதான மூதாட்டி தன் மடியில் இருத்திக் கொண்டாள்.



"அம்மா.. அம்மாடி... கொஞ்சம் கண்ணைத் தொறந்து பாரு யம்மாடீ..."

ஏதோ தன் பெண் வயிற்றுப் பேத்தி மயங்கி விழுந்து விட்ட மாதிரி பரிதவித்துப் போனாள் கிழவி. அந்தக் காலத்து மனுஷியாக இருக்கவே இன்னமும் பரிவு, பாசம், அன்பு, ஆசை எல்லாம் கலந்து ரம்யாவின் தலை வருடித் தந்து கொண்டிருந்தாள்.

"யாராச்சும் போய் இன்னும் ஒரு சோடா வாங்கிக்கிட்டு வாங்களேன்.."

கிழவி கெஞ்ச யாரோ ஓடிப் போனார்கள். மற்றொரு சோடாவும் உடைக்கப்பட்டு கிழவியிடம் கொடுக்கப்பட்டது.

"யம்மாடீ.. கொஞ்சம் சோடா குடி கண்ணு.."

எனக் கொஞ்சலாக ரம்யாவின் முகத்தைத் தொட்ட கிழவி சரேலென்று கையை இழுத்துக் கொண்டாள்.

"யம்மாடீ.. இன்னா... ஒடம்பு இந்தக் கொதி கொதிக்குது..?" என்று பதறினாள்.

"இம்மாஞ் சுரம் அடிக்குது.. இதுல எதுக்கு நீ வெளிய கிளம்பி வந்த..?" எனவும் கடிந்து கொண்ட கிழவி சுற்றி சூழ்ந்திருந்த கூட்டத்தினரைக் கெஞ்சி விலகச் செய்தாள். சற்றே காற்று வர இடம் ஏற்பட்டதும் அதற்கு மேல் வயது வந்த பெண்ணை நடுத்தெருவில் அப்படிக் கிடத்துவது சரியல்ல என்கிற பொறுப்புணர்ச்சி எழ மெதுவாகக் குனிந்து ரம்யாவின் காதருகில் போய் சொன்னாள்.

"மெதுவாக எழுந்திரிச்சுரு.. ஊடு எங்க... பக்கத்துலதானே கீது..?"

ஆமாமெனத் தலையாட்ட முயன்றாள் ரம்யா.

"அப்பாடின்னா வா.. நான் கூட வந்து உன் ஊட்டுல உட்டுட்டு வரேன்... எழுந்திரி கண்ணு.. ராசா.. யாராச்சும் ஒரு சைக்கிள் ரிக்‌ஷாவோ, ஆட்டாவோ கூப்பிடுங்கப்பா.."

ஆட்டோவிலிருந்து பயணி ஒருவர் இறங்கி ஆட்டோ தர கிழவி இன்னொரு பெண்ணின் உதவியுடன் ரம்யாவைத் தூக்கி நிறுத்தினாள் நிற்கக் கூட முடியாமல் தள்ளாடினாள் ரம்யா. தலைமீது ராட்சசன் ஒருவன் ஏறிக் குதிக்கிற மாதிரி வலித்தது. உடலின் சூடு

தாங்காமல் கண்களிலிருந்து ஆறாக நீர் வடியத் துவங்கிற்று. ஹா... ஹா என்று அரற்றியவள் கிழவியின் தோள்மீது சரிந்து கொண்டாள்.

"என்ன கண்ணு...?" கிழவி ஆதரவாகக் கேட்டாள்.

"மு..மு... டியல பாட்டி..."

"கொஞ்சம் சமாளிச்சு ஆட்டோவுல ஏறி வூடு எங்கன்னு சொல்லிடு கண்ணு...நிமிஷமாப் போயிடலாம்..."

அதற்குள் ஒருவர், "ஆயா... இதோ ஒரு அடியில் ஆஸ்பத்திரி இருக்குதே... அங்கே நாலஞ்சு டாக்டருங்க இருப்பாங்க.. கிருஷ்ண மூர்த்தின்னு ஒரு டாக்டர் கூட இருக்காரு... காட்டியே கூட்டிட்டுப் போயிடலாமே...?" என்று ஆலோசனை வழங்கினார்.

அதுவும் சரி எனப்பட கிழவி ஆட்டோவை ராமாராவ் பாலி கிளினிக் வாசலில் நிறுத்தச் செய்தாள். ரம்யாவைத் தாங்கிப் பிடித்து உள்ளே அழைத்துப் போய் வரிசையாகப் போடப்பட்டிருந்த நாற்காலிகள் ஒன்றில் அமரச் செய்தாள். நல்லவேளையாக அந்த நேரத்தில் கூட்டம் எதுவும் இல்லாததால் உடனடியாக டாக்டர் வந்து பார்க்க முடிந்தது.

அவளைப் பரிசோதித்த டாக்டர் காய்ச்சல் 103 டிகிரி இருப்பது கண்டு ஊசி மூலம் மருந்து செலுத்தினார்.

"எத்தனை நாளாக ஜுரம் இருக்கு...?" என்று கேட்டார்.

"இல்லீங்க டாக்டர், வீட்டை விட்டுக் கிளம்பினபோது கூட நல்லாத்தான் இருந்தேன்..." ஈனஸ்வரத்தில் பதில் சொன்னாள் ரம்யா.

"வீட்டை விட்டு எப்போது கிளம்பின...?"

தன் கைக்கடிகாரத்தில் மணி பார்க்க முயன்றவாறு "பதினோரு மணி இருக்கும்..." என்றாள் ரம்யா.

"வயிற்றுப் புரட்டல், வாந்தி ஏதாவது இருந்ததா...?"

"ரெண்டு நாளாகப் பசி இல்லை. எதுவும் சாப்பிடப் பிடிக்க வில்லையே தவிர வாந்தி இல்லை..."

"தலைவலி குளிர்னு ஏதாவது ...?"

"பத்து பதினைஞ்சு நாளாக வெய்யில்ல சுற்றினதால் தலைவலி மட்டும் இருந்துக்கிட்டிருந்தது..."



"சரிம்மா.... மூணு நாளைக்கு மருந்து எழுதித் தரேன். அப்புறமும் ஜுரம் குறையலேன்னால் ஒரு பிளட் டெஸ்ட் பண்ணிப் பார்த்திடுவோம்..." என்ற டாக்டர் மருந்து எழுதித் தந்து பீஸ் ஐம்பது ரூபாய் என்றார்.

தன் கைப் பார்ஸைத் திறந்து உள்ளே கிடந்த இரண்டு பத்து ரூபாய்களை எடுத்துப் பரிதாபமாக டாக்டரைப் பார்த்தாள் ரம்யா.

"என்கிட்ட இவ்வளவுதான் இருக்குங்க டாக்டர்..."

"அதனால் என்ன கண்ணு. என்கிட்ட இருக்குது. நான் தர்றேன்." என இடுப்பிலிருந்து சுருக்குப் பையை உருவித் திறந்து நான்காக மடித்துப் போட்டிருந்த ஐம்பது ரூபாய்த்தாளை எடுத்து டாக்டரிடம் கொடுத்தாள் கிழவி.

"ஏனுங்க.. இது வேற ஒண்ணுமில்லீங்களே... சாதாரண சுரம் தானுங்களே..." எனவும் விசாரித்தாள்.

"அப்படித்தான் தெரியுதுங்க பெரியம்மா. எதுக்கும் இரண்டு நாட்கள் கழிச்சு கூட்டிக்கிட்டு வாங்க பார்க்கலாம்" என்கிற டாக்டரின் பதிலை வாங்கிக் கொண்டு ரம்யாவை மீண்டும் கைத்தாங் கலாக அழைத்து வந்து ஆட்டோவில் உட்கார வைத்துத் தானும் ஏற முயன்ற போது தயங்கித் தடுத்தாள் ரம்யா. "வேணாங்க பாட்டி. நானே போயிடறேங்க... வீடு வரை வந்து திரும்பி வர்ற சிரமம் உங்களுக்கு வேணாம்..."

"இதுல இன்னா சிரமம் இருக்குது கண்ணு. எம் பேத்தி அஞ்சல மாதிரித்தானே நீயும்..."

"ரொம்ப ரொம்ப தாங்கஸ் பாட்டி. எங்க போகக் கிளம்பினீங்களோ பாவம். உங்க நேரத்தை நான் எடுத்துக்கிட்டேன். வீடு இதோ சித்திரகுளம் பக்கத்துலதான். அஞ்சு நிமிஷத்துல போய் சேர்ந்திடுவேன். அதனால் நீங்க சிரமப்பட வேணாம் பாட்டி..."

"நெசமாலும்தானே கண்ணு சொல்ற...?"

"நெசமாத்தான் பாட்டி..."

"சாக்கிரதையாப் போயிடுவ இல்ல...?"

"போயிடுவேன் பாட்டி..."

"யப்பா... ஆட்டோக்காரத் தம்பீ... சாக்கிர்தையா இட்டுக் கிட்டுப் போப்பா... வீடு உள்ளார போற வரைக்கும் கொஞ்சம் பொறுமையா இருந்து அனுப்பிட்டு வாப்பா..."

"நீ கவலைப்படாதே ஆயா... நான் உள்ளார கொண்டு போய் அவங்க அம்மா கிட்ட சொல்லி வுட்டுட்டே வாரேன்..."

ஆனால் ரம்யா திரும்பி வந்தபோது வீட்டில் யாருமில்லை வாசலிலேயே ஆட்டோக்காரருக்குத் தன்னிடமிருந்த இரண்டு பத்து ரூபாய்த் தாள்களில் ஒன்றைக் கொடுத்து அனுப்பிவிட்டு உள்ளே நுழைந்தாள். முற்றத்தைத் தாண்டியபோது வயிறு புரட்டிற்று. பின்னால் தோட்டத்துப் பக்கம் ஓடுகிற சக்தியற்று வழியிலேயே உட்கார்ந்து குடம் குடமாக வாந்தி எடுத்தாள். ஒவ்வொரு குடித்தனக் காரப் பெண்களும் எட்டிப் பார்த்துவிட்டு முகம் சுளித்துக் கொண்டு போனார்களே தவிர யாரும் அவளுடைய உதவிக்கு ஓடிவரவில்லை. ஓடி வர மனசு துடித்தாலும் ரம்யா என்பதால் தயங்கினார்கள்.

"ஐயோ... அதுங்கிட்ட யாரால் மல்லுக்கு நிற்க முடியும்...?" என்கிற எண்ணத்தில் சில பெண்கள் ஒதுங்கினார்கள்.

"இதுக்கு யாரு உதவி செய்வாங்க...? பொண்ணா இது...?" என்கிற வெறுப்பில் சிலர் தலையை இழுத்துக் கொண்டார்கள்.

"என்னாடீ இது... வயசுப் பொண்ணு வாந்தி எடுக்குது...?" கண் சிமிட்டலும் நக்கலுமாகச் சிலரும்...

"அழகுன்னு மகாத் திமிர் பிடிச்சு ஆடிச்சில்ல...? எவன் அழகை மட்டும் அனுபவிச்சுக்கிட்டு கைவிட்டுட்டானோ...?" குத்தலும் கிண்டலுமாகச் சிலரும்.

"ஐய்யோ... எய்ட்ஸ் வந்தவங்க கிட்ட யாச்சும் போகலாம். இதுங்கிட்ட போகவே கூடாதுப்பா..." என்று ஒருத்தியும் விலகி ஒவ்வொருவராய் அவரவர் போர்ஷனுக்குள் அடங்கிக் கிடக்க, ரம்யா வாய் கொப்பளிக்கக் கூடத் தண்ணீர் கிடைக்காமல் தடுமாறினாள்.

தானாக எழுந்து நடக்க முயன்று இரண்டடி வைத்தவள் மீண்டும் கண்கள் இருண்டு, கால்கள் துவண்டு மடியத் தடாலென்று தரையில் விழுந்தாள்.

அந்த சத்தத்திற்குப் பின்னரே குடித்தனக்காரப் பெண்கள் ஓடி வந்தனர். நான்கு பேர்களாகச் சேர்ந்து கைத்தாங்கலாகப் பற்றி தூக்கிக்



கொண்டு போய் அவளது போர்ஷனில் பாய் விரித்துப் படுக்க வைத்தனர்.

ஒரு பெண் தண்ணீரும் துடைப்பமும் கொண்டு ரம்யா வாந்தி எடுத்த இடத்தை கழுவிவிட, மற்றொரு பெண் தெருக்கோடி நாடார் கடைக்கு ஓடி காவேரியம்மாளுக்குச் செய்தி தெரிவித்தாள்.

சூப்பர்வைஸரிடம் விஷயத்தைச் சொல்லி லீவு வாங்கிக் கொண்டு காவேரியம்மாள் வீட்டிற்கு வந்தபோது மணி இரண்டைத் தொட்டது. பதறி மகளின் அருகே ஓடி நெற்றியில் கை வைத்துப் பார்த்தபோது நெருப்பாகச் சுட்டது.

"ஏன் காவேரியம்மா... எத்தினி நாளாக இந்தப் பொண்ணுக்கு இப்படிக் காய்ச்சல் அடிக்குது...?" தாங்கள் நினைத்த மாதிரி வம்பு பேச வாய்ப்பு அற்றுப்போன வருத்தத்தோடு கேட்டாள் ஒரு அம்மாள்.

"தெரியலீங்களே...? எப்போ, எதை இந்தப் பொண்ணு என்கிட்டே சொல்லியிருக்குது...? எத்தினி நாள் காய்ச்சலோ... இதோடு வேலை தேடி வேற அலைஞ்சிருக்குது..."

"ஊரெல்லாம் மலேரியா, டைபாய்டுன்னு இருக்குதுங்க... உடனடியா டாக்டர் வீட்டுக்குக் கூட்டிக் கிட்டு போயிடுங்க..."

"ஏன் வெளி டாக்டருங்க கிட்ட போறீங்க. உங்க அண்ணன் மகன் டாக்டருத்தானே...? அவரை வரச் சொல்லிப் பாருங்க..." மற்றொரு அம்மாள் நினைவுபடுத்தியதும் குணாவின் ஞாபகம் வந்தது.

"கொஞ்சம் பார்த்துக்கிடுங்க. நான் போயி என் அண்ணன் மகனுக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொல்லிட்டு வந்திடறேன்..." என்று ஓடி தொலைபேசியில் குணசேகரனை அழைத்து விஷயத்தைத் தெரியப்படுத்தி விட்டு கவலையும் வருத்தமுமாக வீடு திரும்பினாள் காவேரியம்மாள்...

## 26

"என்ன குணா...? இந்தப் பொண்ணு இப்படி கண்ணையே தொறக்காமல் படுத்துக்கிடக்குது...?" என்று பதறினாள் காவேரியம்மாள். ரம்யாவின் அருகில் உட்கார்ந்து யூடிகொலோன் போடப்பட்ட ஐஸ் தண்ணீரில் மெல்லிய வெள்ளைத் துணியை நனைத்து நனைத்து நெற்றியில் போட்டுக் கொண்டிருந்த குணசேகரன் அமைதியாக நிமிர்ந்து அத்தையைப் பார்த்தான்.

"ஒண்ணும் கவலைப்படாதீங்க அத்தை. எல்லாம் சரியாகப் போயிடும்..." என்றானே தவிர அவனுக்குள்ளும் ஒரு தவிப்பு இருந்தது கடந்த நாற்பத்தெட்டு மணிநேரமாகக் காய்ச்சல் சிறிது கூடக் குறையாதது கவலை தந்தது. பத்து நிமிடங்களுக்கு ஒருமுறை ஹோமியோபதி மாத்திரைகள் கரைத்த தண்ணீரை ஸ்பூனில் எடுத்து ரம்யாவின் உதடுகளைப் பிரித்து வாய்க்குள் விட்டுக் கொண்டிருந் தான். நினைவு தெரியாமல் அவள் படுத்துக் கிடந்தால் வேறு மருந்து களை எதையும் தர முடியவில்லை.

ஹோமியோபதி மருந்துத் தண்ணீரும், சூர்ணம் குழைத்த தேனை நாக்கில் தடவுவதுமாக இருந்தானே தவிர அவனுக்குள்ளும் அவளது நூற்றிநாலு டிகிரிக் காய்ச்சலுக்கான காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இதுவாக இருக்குமோ... அதுவாகக் கூடுமோ... என்கிற சந்தேகத்தின் அடிப்படையிலேயே மருந்துகளை மாற்றினான். எந்த மருந்தும் தங்காமல் உள்ளே போன சிறிது நேரத்திற்கெல்லாம் குடம் குடமாக வாந்தியாக வெளியில் வந்து காவேரியம்மாளைப் பயமுறுத்தியது. ஜுரவேகம் தாங்காமல் வாய்விட்டு அவள் அரற்றியதும், உடம்பு தூக்கித் தூக்கிப் போடுவதும் கண்டு பதறிப் போய்த்தான் குணசேகரனைக் கேட்டாள்.

"ஏன் குணா... நீ என்னப்பா நினைக்கிற...? இந்த மருந்தே போதும்னு தோணுதா. இல்ல... ஏதாவது ஆஸ்பத்திரியில் சேர்த்திட லாம்னு... நினைக்கிறியா... என்ன நினைக்கிறியோ அதைச் சொல்லி டுப்பா... இவ இருக்கிற நிலைமையைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்குதுப்பா..."

அத்தையின் கேள்வியும் பயமும் நியாயமானதாகப் பட்டது அவனுக்கு. ஆனாலும் ஏனோ ரம்யாவை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டுமென்று தோன்றவில்லை. அப்படித் தோன்றாததற்கு வலுவான காரணமாக ஏதோ ஒன்று இருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டான். ஆனால், அது என்ன காரணம் என்பது மட்டும் தெரியவில்லை. ஆகவே, மெல்லக் கண்மூடி, கவனம் முழு வதையும் புருவமத்திக்குக் கொண்டு வந்தான். தன்னுள் புகுந்து நின்று வழிநடத்தி வரும் தாத்தாவோடு மானசீகமாகப் பேச ஆரம்பித்தான்.



2414
4008623

"என்ன தாத்தா இது...? இரண்டு நாளாகியும் காய்ச்சல் குறையல...?"

மௌனமாய்ச் சிரித்தார் தாத்தா.

"என்ன தாத்தா சிரிக்கறீங்க...?"

"ஏன் இப்போ இப்படிப் புது[illegible]...?"

"நான் பதட்டப்படலை தாத்தா. [illegible]... என் அத்தை படறாங்க..."

"நிஜம் சொல்லு குணா...? அத்தை மட்டும்தான் கவலையும் பதட்டமும் படறாளா?"

"இல்ல தாத்தா... நூற்றிநாலை விட்டுக் காய்ச்சல் கொஞ்சம் கூட... இறங்கலையே?"

"இறங்கலை... நீ அதுக்கு என்ன காரணம்னு நினைக்கிற...?"

"புரியலை தாத்தா. அதான் உங்களைக் கேட்கிறேன்..."

"நிஜமாகப் புரியலையா குணா...?"

"கொஞ்சம் சந்தேகமாக இருக்கு தாத்தா."

மீண்டும் புன்னகைத்துக் கொண்டார் பெரியவர்.

"சரி. என்ன மருந்தெல்லாம் கொடுத்த... சொல்லு...?"

சொன்னான்.

"அவையெல்லாம் கொடுத்தும் காய்ச்சல் குறையலேன்னால் என்ன அர்த்தம்னு தெரியல...?"

"தா... த்... தா..."

"சரி. உனக்கே தெரியலேன்னால் தானாகத் தெரியவரும். இன்னும் ஒருநாள் பொறுத்துக்க..."

சொல்லிவிட்டு மறைந்தார் தாத்தா. ஆனால், அதை அத்தை யிடம் சொல்ல முடியாது. அத்தை மட்டுமல்ல. வேறு யாரிடமுமே சொல்ல முடியாது. சொன்னால் நம்பமாட்டார்கள்.

"அதுசரி. அத்தையை இப்போது எப்படி சமாளிப்பது...?"

யோசித்தவாறு முகம் உயர்த்தி அத்தையை ஏறிட்டான். அத்தை கேட்டது காதில் விழாத மாதிரி மெதுவாக ஆரம்பித்தான்.

"என்ன அத்தை கேட்டீங்க..?"

"இல்லப்பா... ரெண்டு நாளாகக் கொஞ்சம் கூட ஜுரம் குறையலையே. ஏதாது இங்கிலீஷ் டாக்டர் கிட்ட காட்டலா.. லா.. ன்.. னு.." என்று கடைசி வார்த்தைகளுக்குக் குரல் மங்க மெல்ல இழுத்தாள் காவேரியம்மாள்.

"ஏன் அத்தை.. என் வைத்தியத்தில் நம்பிக்கை இல்லையா..?" நேரிடையாக அவன் கேட்டுவிடத் தவித்துப் போனாள் அவள்.

"அதில்லேப்பா... நம்பிக்கை இல்லாமலா உன்னை போன் பண்ணி வரவழைச்சேன்? ஆனால் இப்படி ஒரு காய் காயுதேன்னுதான் கவலையாக இருக்கு."

"அதுக்கு எதுக்குக் கவலைப்படறீங்க அத்தை.. வருஷத்துக்கு ஒரு முறையோ.. ரெண்டு வருஷத்துக்கு ஒரு முறையோ இப்படிக் காய்ச்சல் வர்றது நல்லதுதான். உள்ளுக்குள்ள இருக்கிற சூடெல்லாம் வெளிய வந்திடும்.."

"வெறும் சூடாக இருந்தால் பரவாயில்லையப்பா... இப்போ அனலாக இல்ல கொதிக்குது... தங்க நிறத்துல மஞ்சள் மசேல்னு இருக்கிற அவ மூஞ்சி இப்போ செவசெவன்னு தணல் மாதிரியில்ல கிடக்குது.."

சடாரென்று தாத்தா சொன்னதும், இப்போது அத்தை சொன்ன செவசெவப்பும் பிடிபட ஒரு தீர்மானத்திற்கு வந்தான் அவன்.

"நாளை சாயந்திரம் வரை பார்க்கலாம் அத்தை. அப்போதும் ஜுரம் இறங்கலேன்னால் உங்க விருப்பப்படி ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கிட்டுப் போயிடலாம்.."

"ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கிட்டுப் போகணுங்கிறது என் விருப்பமில்லேப்பா. இப்படிக் காயுதே. ஒருவேளை டைபாயிடு. மலேரியான்னு ஏதாவதாக இருக்குமோன்னு சந்தேகமாக இருக்கு."

"இல்லை அத்தை. டைபாயிடு. மலேரியா ரெண்டுமில்லை."

"பின்ன.. இது என்ன காய்ச்சல்..?"

"நாளைக் காலை வரை பார்த்துவிட்டு உறுதியாகச் சொல்றேன் அத்தை. அதுவரை கொஞ்சம் பொறுத்துக்குங்க. ப்ளீஸ்.."



"ஏம்ப்பா.. வேற ஏதாவது ஸீரியஸாக இருக்கா.."

"இல்ல அத்தை. காலை வரை கொஞ்சம் பேசாமல் இருங்களேன். ப்ளீஸ்.."

இரண்டாவது தடவையாக அவன் ப்ளீஸ் போட அதற்கு மேல் எதுவும் கேட்காமல் உள்ளே போனாள் காவேரியம்மாள். அடுப்பைப் பற்ற வைத்து உலை ஏற்றி, அரிசி களைந்து போட்டாள். வெறும் புளி கரைத்து உப்பிட்டுத் தாளித்து ரசம் மட்டும் வைத்தாள். குழந்தைகளை வரிசையாக உட்கார வைத்து சாப்பாடு போட்டாள். அவர்களை ரம்யாவின் அறையில் படுக்க வைத்து விட்டு வெளியில் வந்து குணசேகரனைப் பார்த்தாள்.

அவன் இன்னமும் யூடிகொலோன் நீரில் துணி நனைத்து ரம்யாவின் நெற்றியில் போட்டுக் கொண்டிருந்தான். காவேரியம்மாள் தொலைபேசியில் விஷயம் சொல்லி வரவழைத்ததிலிருந்து வினாடி நேரம் கூட ரம்யாவை விட்டு நகராமல் இருந்தான். சிறிது கூட முகம் சுளிக்காமல் அவள் வாந்தி எடுக்க அதைக் கைகளில் வாங்கிக் கால்வாயில் கொட்டினான். தரையில் வாந்தி எடுத்தால் கொஞ்சம் கூடத் தயங்காமல் பினாயிலும், டெட்டாலும் ஊற்றித் துடைத்தான்.

வேளை தவறாமல் மருந்து தந்து, கெஞ்சி, காதருகில் குனிந்து குனிந்து வேண்டி மெல்ல அவளைக் கண் திறக்க வைத்து அரை டம்ளர் கஞ்சியாவது குடிக்கச் செய்தான். அதையும் அவள் வாந்தி எடுத்துவிட அதன்பின் வெறும் தண்ணீரும் பார்லி நீரும் மட்டும் பருகச் செய்தான்.

இரவு பகல் பாராமல், கிளினிக்கிற்குக் கூடப் போகாமல் ராத்திரி நேரம் தூங்காமல், அவள் முனகினால் கேசத்தை வருடித் தந்து, ஜுர வேகம் தாங்காமல் புலம்பினால் ஐஸ் கட்டி வைத்து..

இந்த இரண்டு நாட்களில் ஒருவேளை கூட அவன் இலை போட்டு உட்கார்ந்து சாப்பிடவில்லை.

"நீங்க சாப்பிடுங்க அத்தை நான் கொஞ்ச நேரம் போவட்டும். அப்புறம் சாப்பிடறேன்.." என்பான்.

'சரி' எனக் காவேரியம்மாள் சாப்பிட்டு முடித்து, கைவேலைகளைச் செய்து விட்டு வந்து கேட்பாள்.

"பசிக்கலீங்க அத்தை. கொஞ்சம் ரசம் சாதமோ, மோர் சாதமோ கரைச்சு இங்கேயே கொண்டு வந்திடுங்க.."

குளிக்கிற நேரமும், காலைக்கடன்களைக் கழிக்கிற நேரமும் தவிர மற்ற எல்லா நேரங்களிலும் நேர்ந்து கொண்ட மாதிரி வினாடி கூட ரம்யாவை விட்டு அகலாதிருந்தான். இந்த இரு நாட்களும் காவேரியம்மாளும் வேலைக்குப் போகாதிருந்தாள்.

"நீங்க வேணும்னால் வேலைக்குப் போங்க அத்தை. குழந்தை களை கவனிச்சுக்கிட்டு ரம்யாவையும் நான் பார்த்துக்கிடறேன்" என்று தான் சொன்னானே தவிர அவனிடம் சலிப்பு என்பது சிறிது கூட எட்டிப்பார்க்கவில்லை. அந்த வயது இளைஞர்கள் சொல்லக் கூடிய 'போரடிக்குது' என்ற வார்த்தையை ஒருமுறை கூட சொல்லவில்லை.

ரம்யாவை அவன் கவனித்துக் கொண்ட விதம்... அவள் முனகிய போது அவன் முகத்தில் ஏற்பட்ட பாவம்... அவளுக்கு மருந்து தந்ததில் இருந்த கனிவு.. ஜுர வேகம் தாங்காமல் அவள் உடம்பு தூக்கிப் போட்ட போது அவனிடம் ஏற்பட்ட பதட்டம்... அவன் காட்டிய அன்பு.. அந்த அன்பில் வெளிப்பட்ட காதல்...

'ரம்யா... இவனைப் போய்ப் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாயே..?' பெற்ற மனது தவித்தது.

'அடி பைத்தியக்காரப் பெண்ணே..! நீ நேசிப்பவனை விட உன்னை நேசிப்பவனைத்தாண்டி கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்' என்கிற அனுபவ உண்மையைச் சொல்லத் துடித்தது அந்தத்தாய் நெஞ்சம்.

'எது சொன்னால் என்ன..! தான் சொன்னால் எடுத்துக் கொள்ளவா போகிறாள்..' என்கிற ஆற்றாமைப் பெருமூச்சோடு அப்போதும் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"என்ன குணா..? இன்னிக்காவது ஒரு வாய் சாப்பிடப் போறியா.. இல்லே கரைச்ச கிளாஸ்ல ஊத்திக் கொண்டு வந்திடட்டுமா..?"

அத்தையின் ஆதங்கம் புரிய பாசமாய் ஒரு பார்வை பார்த்தான் அவன்.



"கோபப்படாதீங்க அத்தை. கரைச்சே கொண்டு வந்திடுங் களேன் ப்ளீஸ்!"

"ஏம்ப்பா... ரெண்டு நாளாக இப்படி சோறு காணாமல் இருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்..? நீயும் படுத்திட்டியானால் என்னப்பா செய்வேன் நான்..?"

"நான் படுக்க மாட்டேன் அத்தை. கவலைப்படாதீங்க. இன்னிக்கு ஒருநாள் மட்டும் பொறுத்துக்குங்க. நாளைக் காலை ரம்யாவுக்கு என்னன்னு தெரிஞ்சிடட்டும். அப்புறம் சாப்பாட்டைப் பற்றி யோசிக்கலாம்..."

"இது என்ன வேண்டுதலா. பிரார்த்தனையாப்பா..?" என்ற வாறே நகர்ந்த காவேரியம்மாளின் காதுகளை, "அப்படித்தான்னு வச்சிக்குங்களேன் அத்தை..." என்ற அவனது குரல் எட்டிற்று. அதற்கப்புறம் அந்த அம்மாள் எதுவும் பேசவில்லை.

அன்றிரவு முழுவதும் வினாடி நேரம் கூட விடாமல் அரற்றிக் கொண்டே இருந்தாள் ரம்யா. காய்ச்சல் நூற்று ஐந்து டிகிரியை எட்டிற்று. உடம்பு பாயை விட்டு ஒரு அங்குலத்திற்கு உயரத் தூக்கித் தூக்கிப் போட்டதில் குணசேகரனேகூடப் பயந்து போனான்.

"என்ன குணா இது..? நான் அப்போதே ஆஸ்பத்திரியில் சேர்த்திடலாம்னு சொன்னேனே குணா.. நீ கேட்கலையே.. இப்போ எனக்குப் பயமாக இருக்கே..." என்று பெண்களுக்கே உரித்தான குணத்தோடு காவேரியம்மாள் புலம்பத் தொடங்க,

'ஒருவேளை தப்பு செய்துவிட்டோமோ..?' என்கிற சந்தேகம் கூட ஏற்பட்டது குணசேகரனுக்கு.

ஆனால் மறுநாள் காலையில் காய்ச்சல் சற்று இறங்கி ரம்யாவின் முகம், முதுகு, கழுத்து என முத்து முத்தாகச் சுடர் விட்டபோது தான் நினைத்தது சந்தேகப்பட்டது சரிதான் என்கிற முடிவோடு எழுந்து கொண்டான்.

"நாம் எதிர்பார்த்ததுதான் தாத்தா. இன்னிக்குத்தான் முகம் காட்டியிருக்கு..."

"அதுக்குத்தான் ஒரு நாள் காத்திருன்னேன். மூணாவது நான்தான் ஆத்தா வெளிய வருவான்."

"எந்த ஆத்தா தாத்தா இது...?"

"பெரியாத்தாப்பா... முத்துங்களைப் பாரு தெரியும். ரொம்ப சுத்தமா, ஜாக்கிரதையா இருக்கச் சொல்லுப்பா..."

"சரி தாத்தா."

சொன்னானே தவிர அவனும் மனம் கலங்கித்தான் போனான். வீதிக்குச் சென்று அவன் வேப்பிலைக் கொத்துக்களோடு உள்ளே நுழைந்த போது மொத்தக் குடித்தனக்காரர்களுக்கும் புரிந்து போயிற்று.

"ஆத்தா ஒடம்புக்குள்ள இறங்கிறதுக்குத்தான் அத்தனைக் காய்ச்சல் காய்ஞ்சிருக்கா..." என்றாள் ஒரு பெரியம்மா.

"என்ன அம்மைங்க டாக்டர்...?" குரலில் கவலை தொனிக்கக் கேட்டார் ஒருவர்.

பெரியம்மை என்று சொல்லவில்லை குணசேகரன். அதற்காகப் பொய்யும் சொல்லவில்லை.

"என்னன்னு கணிக்க இன்னும் ஒருநாள் போவணுங்க..." என்று கூறி விட்டு உள்ளே வந்தான்.

வீட்டு வாசல் நிலைப்படியில் கொத்தாக வேப்பிலை கட்டித் தொங்க விட்டு ரம்யாவின் தலைமாட்டிலும் வைத்தபோது சமையலறை விட்டு வெளியே வந்தாள் காவேரியம்மாள். வேப்பிலைக் கொத்துக்களைப் பார்த்துவிட்டு அதிர்ந்து போனாள்.

"கு... ணா..."

"இந்த சந்தேகத்தில்தான் அத்தை ஒருநாள் காத்திருக்கச் சொன்னேன்" என்றபோது கலக்கமோ வருத்தமோ இன்றி மி... அமைதியாக வந்தது குணசேகரனின் குரல்...



# 27

வீடு முழுவதும் ஆடிப்போய் விட்டது. செய்வதறியாமல் அரண்டு போய்விட்டது. கிட்டத்தட்ட நாற்பத்தைந்து நாட்கள் படுக்கையில் கிடந்தாள் ரம்யா. படுக்கை என்றால் பாயும் தலையணையுமில்லை. பெரிதாய் வாழை இலை விரித்து அதில் படுக்க வைத்திருந்தார்கள். உடுத்தக் கூட இயலாத நிலைமையில் மெலிதான பழைய மில் வேஷ்டி ஒன்றால் கழுத்து வரை போர்த்தியிருந்தார்கள். ஜுரவேகம் தாங்க முடியாமல் 'ஹா...ஹா...' என்று அரற்றித் தீர்த்து விட்டாள். 'அம்மா... முடியலையேம்மா... குணா என்னால் முடியல குணா...' என்று மாறி மாறி அவர்கள் கை பற்றிக் கொண்டு புலம்பினாள்.

"கொஞ்சம் பொறுத்துக்க ரம்யா... கொஞ்சம் பொறுத்துக்க... எல்லாம் சரியாப் போயிடும்..." என்று குழந்தைக்குச் சொல்கிற மாதிரி சொன்னான் குணசேகரன். அவளை விட்டு அகலாமல் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்தான். மென்மையாகத் தலை வருடிக் கொடுத்தான். கண்ணோரம் வழிந்த கண்ணீரைத் துடைக்கக் கூட முடியாமல் பெரிய பெரிய கொப்புளங்களாக அம்மை நோயின் முழு தீவிரமும் அவள்மீது இறங்கியிருந்தது கண்டு சங்கடப்பட்டான். முதல் பதினைந்து நாட்கள் அவளை உலுக்கி எடுத்துவிட்டதைப் பார்த்து உள்ளுக்குள் மிகவும் வேதனைப்பட்டான். உயிரோடு எழுந்திருப்பாளா என்கிற சந்தேகம்கூட ஏற்பட்டது.

ஆனாலும் எதையும் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் அமைதியாக அவள் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான். ஹோமியோபதி மருந்தை வெறும் தண்ணீரில் கரைத்து பதினைந்து நிமிடங்களுக்கு ஒருமுறை ஸ்பூன் ஸ்பூனாக வாயில் செலுத்தினான்.

"கொஞ்சம் வாய் திற ரம்யா... மெதுவா லேசாத் தொறந்தாப் போதும்..." என்று கெஞ்சிக் கெஞ்சி திறக்க வைத்தான்.

குருவி மாதிரி சிறிதாய் இதழ் விரிக்கக் கூட கஷ்டப்பட்டுப் போனாள் அவள். வாய் திறந்தபோது வாய்க்குள்ளும் முத்து முத்தாய் முளைத்திருந்தது கண்டு அடிவயிறு சுருண்டு கொண்டது அவனுக்கு.

'ஐயோ... தாங்குமா இந்தப் பெண்... தாங்க முடியாமற் போய் விட்டால்...?' என்கிற பயம் ஏற்பட்டது.

அந்த பயம் வந்தபோதெல்லாம் தாத்தாவைக் கூப்பிட்டான்.

'தாத்தா.. அவளால் தாங்க முடியல தாத்தா.. வாய்க்குள்ள கூட அம்மை கண்டிருக்கு..'

'வாய்க்குள்ள மட்டுமில்ல.. தொண்டை அடிவயிறு என்று உள்ளுக்குள்ளல்லாம் கூட இறங்கியிருக்கும்..'

'என்ன செய்யிறது தாத்தா..?'

'என்ன செய்யணும்கிற..?'

'தாங்க முடியாமல் தவிக்குறா தாத்தா..'

'யாரால் தாங்க முடியலைங்குற..? அவளாலயா.. உன்னாலயா..?'

'தாத்தா.. இப்பக்கூட இப்படிப் பேசுனிங்கன்னா எப்படி..?'

'எப்பவும் ஒரு நிலையில ஒரே மாதிரி நிக்கிறவன்தான் மனுஷன்.. தனக்குன்னு வர்றபோது தாங்க முடியாமப் புலம்பித் தீர்க்கிறவன் மனுஷனில்ல..'

பேசாமலிருந்தான். தலைகுனிந்து மௌனமாக இருந்தான்.

'என்ன குணா பேசாமல் இருக்க..? கஷ்டம் வர்றபோது ஏதோ தான் மட்டுமே கஷ்டப்படற மாதிரியும், உடனே அந்தக் கஷ்டம் விலகிப் போயிடக் கூடாதான்னு ஆசைப்படறதும், இல்ல, தப்பிச்சுக் கிட்டு ஓடிடலாமான்னு நினைக்கிறதும்தான் சராசரி மனுஷனின் தன்மை. நீயும் அதேதானா குணா..?'

'இல்ல தாத்தா.. வந்து..'

'நானும் ஆரம்பத்திலிருந்து கவனிச்சுக்கிட்டுத்தான் வரேன். அந்தப் பொண்ணுக்கு ஒண்ணுன்னா நீ துடிச்சுப் போயிடற. உன்கிட்ட இருக்கிற இந்த பலவீனத்தை மாத்தணும்னு நினைச்சு நானும் தோத்துப் போய்க்கிட்டே இருக்கேன்..'

'இல்ல தாத்தா.. உலகம் தெரியல.. இன்னும் விவரம் பிடிபடாத பொண்ணாகவே இருக்குது. அழகு மட்டும்தான் எல்லாம். வெறும் முக அழகை வச்சுக்கிட்டு எதையும் சாதிச்சிடலாம்ங்கிற தப்பான நினைப்புலயே வாழ்ந்துக்கிட்டு இருந்தது..'



'இருந்ததுன்னு கடந்த காலத்துல பேசுற..?'

'நிகழ்காலம் என்னன்னு இதுக்கு மேலயும் பிடிபடாமலா போயிருக்கும்னு நினைச்சுத்தான் பேசினேன்..'

'அந்தப் பொண்ணுக்குப் பிடிபடறது கிடக்கட்டும். முதல்ல உனக்குப் பிடிபடுதான்னு பார்க்கலாம்..'

'என்ன தாத்தா அப்படிச் சொல்றீங்க..'

'அந்தப் பொண்ணு எழுந்திருச்சு உட்கார்ந்ததுக்கு அப்புற மில்ல உனக்குத் தெரியப் போகுது..'

'அப்படின்னா ரம்யா உசுரோட எழுந்திரிச்சு உட்கார்ந்திடு வான்னு சொல்றீங்க..'

'பொட்டுனு போயிடறதுக்கு நாமெல்லாம் அத்தனை நல்லவங்களா என்ன..?'

'தாத்தா..'

'ஐயோ.. என்னப்பா நீ.. அந்தப் பொண்ணு விஷயத்துல மட்டும் இப்படி இருக்க. நெருப்புன்னா நாக்கு வெந்திடும்ங்கிற. அத்தனை பிரியமா வச்சிருக்க..?'

'பிரியம்ங்கிறதில்ல தாத்தா.. வந்து.. ஒரு அபிமானம்..'

'சரி. அப்படியே இருக்கட்டும். அந்தப் பொண்ணு சுகமாகி எழுந்திருச்சதும் உன் அபிமானம் அப்படியே இருக்குதா.. இல்ல மாறிப் போயிடுதான்னு பார்க்கலாம்!'

'பார்க்கலாம்.. பார்க்கலாம்.'

'பார்க்கத்தானே போறீங்க.. சரி தாத்தா.. என்ன மருந்து கொடுக்கலாம் சொல்லுங்க..?'

'கொடுக்கிறதையே கொடு.. இதுக்கெல்லாம் மருந்து கொடுத்தா தீர்க்க முடியும்..?'

'இறங்கிடுமில்ல தாத்தா..'

'ஏறின எதுவும் இறங்கித்தானே ஆகணும்..'

'விலைவாசியைத் தவிர..' என்று சிரித்தான். அவரும் சிரித்தார்.

அதற்குப் பின்னர் தாத்தாவிடம் பேசுவதற்குக் கூட அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை. ரம்யாவின் பக்கத்தில் உட்கார்ந்து அவளைக் கவனிப்பதிலேயே ஓடிப் போயிற்று. காலை பதினோரு மணி அளவில் கிளினிக்கிற்குப் போய் ஒரு மணி வாக்கில் திரும்பி வந்தான். அதைக் கூட முதல் பத்து நாட்கள் மட்டுமே செய்ய முடிந்தது.

அதற்குப் பின்பு காவேரியம்மாளுக்கு லீவு கிடைக்காததால் தயங்கித் தயங்கி அந்த அம்மாள் குணாவின் எதிரில் வந்து நின்றாள்.

"என்னங்க அத்தை..?"

"இதுக்கு மேல் கம்பெனியில் எனக்கு லீவு தர மாட்டேங்க றாங்கப்பா.."

சற்று யோசித்த குணசேகரன் சடாரென்று நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"என்னப்பா அப்பிடிப் பார்க்குற..?"

"இல்லீங்க அத்தை. இதுக்கு மேலயும் வேலை செய்துதான் ஆகணும்னு நீங்க பிடிவாதம் பிடிக்கிறது நல்லதுன்னு எனக்குத் தோணல.."

"ஏம்ப்பா.. இதுக்கு மேலயும்னா.. நீ என்ன சொல்ல வரேன்னு எனக்குப் புரியல. என்னை உட்கார வச்சு சாப்பாடு போட யாராவது இருக்காங்களா..?"

"ஏன் அத்தை.. நான் இல்லேங்கிற முடிவுக்கே வந்திட்டீங்களா..? இல்ல, என்னை இந்தக் குடும்பத்துல ஒருத்தனா ஏத்துக்க மனசு துணியலையா..?"

"குணா..?!"

"சொல்லுங்க அத்தை. உங்க மனசுல படறதை மறைக்காமல் சொல்லிடுங்க."

"அப்படியில்ல குணா. இத்தனைப் பெரிய குடும்பத்தின் பாரம் முழுசையும் உன் தலையில் சுமத்தறது தப்பு குணா.."

"மொத்தமா நீங்களே சுமக்க வேணாம். ரெண்டு பேருமாகப் பகிர்ந்துக்கலாம்னுதான் சொல்ல வரேன்.."



"அப்படீன்னா..?"

"நீங்க வீட்டைப் பார்த்துக்குங்க.. நான் வேலையைக் கவனிச்சுக்கறேன்.."

"என்னை வேலைக்கே போக வேணாங்குறியா..?"

"வீட்டு வேலைகளை, குழந்தைகளைக் கவனியுங்க. அந்த வேலையே பெரிய வேலை. அதைச் செய்யுங்கன்னு சொல்ல வரேன். பொம்பளைங்க வீட்டோட இருந்து கவனிச்சா அந்த வீடே தனிதான் அத்தை.."

"அப்படீன்னா பொம்பளைங்க வேலைக்கே போகக் கூடாதுன்னு சொல்ல வரியா..?"

"நான் அப்படிச் சொல்வேன்னு எப்படி நினைச்சிங்க அத்தை. வேலைக்குப் போகிற பொம்பளைங்களைப் பார்த்தால் மனசு கஷ்டப்படுது. ரெட்டை பாரத்தை சுமக்கறாங்களேன்னு வருத்தம் ஏற்படுது. சாயந்திரமானால் பஸ் ஸ்டாப்பில் நிற்கிற பொம்பளைங் களைப் பாருங்க. ஆபீஸ் விட்டு வரும்போதே மணி ஆறு ஆறரை ஆகிவிடுது. அதுக்கப்புறம் பஸ் பிடிச்சு, வீடு போய்ச்சேர்ந்து, சமைச்சு, குழந்தைங்களுக்கும், வீட்டுக்காரருக்கும் போட்டு, வீட்டை சுத்தப்படுத்தி, சமையல் கட்டை ஒழிச்சு வச்சு. அவங்க படுக்கப் போகிற வரை டென்ஷன்தான். ஆபீஸ்ல காட்ட முடியாத டென் ஷனை எங்க காட்டுவாங்க..? குழந்தைங்ககிட்டேயும், வீட்டுக்காரன் கிட்டேயும்தான் காட்டணும். இந்த நிலைமை முன்னால ஆணுக்கு மட்டும்தான் இருந்தது. இப்போ பொண்ணுங்களுக்கும் அதே நிலைமை ஏற்பட்டுப் போயிடுச்சேன்னு கவலையா இருக்கு.. ரெண்டு பேரும் இப்படி கால்ல வெந்நீரைக் கொட்டிக்கிட்டு ஓடினால் குழந்தைங்க கதி என்னங்கிறதைக் கொஞ்சம் நினைச்சுப் பாருங்க..?"

"நீ சொல்றதெல்லாம் சரிப்பா. எல்லாத்தையும் நான் அப்படியே ஒத்துக்கிடறேன். ஆனால் என்னை உட்கார வச்சு சோறு போட யாரு இருக்காங்க? மகனா இருக்கான்..?"

"ஏன் அத்தை? நான் இல்ல..? என்னை மகனா ஏத்துக்க வேணாம். மகன் மாதிரின்னாச்சும் நினைச்சுக்கலாமில்ல..?"

மறு பேச்சு பேசவில்லை அந்த அம்மாள். உடனே ஒரு காகிதம் எடுத்து நீண்ட விடுமுறை கோரி எழுதி அனுப்பினாள். விடுமுறை கிடைத்தால் சரி. இல்லாவிட்டால் வேலையே தேவை இல்லை என்கிற முடிவில்தான் அதைச் செய்தாள்.

அதன்பின் வீடு சற்று நிதானமாக இயங்க ஆரம்பித்தது. குழந்தைகளைத் தள்ளி நிற்க வைத்துவிட்டு அவனும், காவேரியம்மாளும் மட்டும் மாறி மாறி ரம்யாவின் பக்கத்திலேயே இருந்தார்கள்.

மோரும், இளநீரும், கேழ்வரகுக் கூழும் கரைத்து கெஞ்சி வேண்டி, கொஞ்சிப் பேசி குழந்தைக்குப் பால் கொடுக்கிறாற் போன்று கொடுத்தார்கள்.

'எரியுதே... அம்மா... தாங்க முடியலையே...' என்று அவள் கதறின போதெல்லாம் அன்பாய், ஆதரவாய்ப் பேசி வேப்பிலையால் வருடித் தந்தார்கள்.

"சரியாப் போயிடும்மா... இன்னும் ரெண்டே நாள்ல எல்லாம் இறங்கிடும்" என்று சொல்லிச் சொல்லியே நாற்பது நாற்பத்தைந்து நாட்களைக் கடத்தினார்கள்

அதன் பின்பு தலைக்கு முதல் தண்ணீர் ஊற்றி மூன்று நாட்களுக்குப் பின்பு இரண்டாம் தண்ணீர் ஊற்றி, மூன்றாவது முறையும் தலைக்குக் குளிக்க வைத்த பின்னரே பாரம் குறைந்து சற்று இலேசானார்கள். அப்பாடா என்று உட்கார்ந்து கொண்டார்கள்.

"நல்லவேளையா அவ உசிரோட எழுந்திரிச்சிட்டா... அது போதும் குணா எனக்கு..." என்று காவேரியம்மாள் பெருமூச்சு விட்டாள்.

அந்தப் பெருமூச்சு அடங்குவதற்கு முன் ரம்யா படுத்திருந்த அறையிலிருந்து வீல் என்று அவள் வாய்விட்டு அலறின சத்தம் கேட்டதும் இருவரும் அதிர்ந்து போய் அந்த அறை நோக்கி ஓடினார்கள்.



# 28

பழைய கால பீரோ பதித்திருந்த நிலைக் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்த ரம்யா பயந்து போய்த்தான் அப்படி அலறினாள். முகமா அது...? தன்னுடைய முகமா...? அந்த அழகு எங்கே...? கவர்ச்சி எங்கே...? மினுமினுவென்று மெருகேறிக் கிடந்த தென்னம்பூ நிறமெங்கே? தீர்மையாய் கத்தரியால் சீறி வைத்த மாதிரி இருக்கும் அந்த மூக்கா இது...? ஜப்பானியர்களைப் போல் ஒன்றுமேயில்லாமல் இந்தக் கண்ணில் தண்ணீர் விட்டால் தடையே இல்லாமல் மறு கண்ணுக்கு ஓடுகிறாற் போல் முற்றிலும் வழித்து முனையில் எலுமிச்சம் பழமாக உருண்டு நின்று...

எப்போது இப்படி ஆயிற்று...? அம்மி பொளிகிறவனை அழைத்து வந்து அம்மா ஆட்டுக்கல்லுக்குப் பொளிவாய் போடுவாளே அந்த மாதிரி முழு முகமும் பள்ளம் பள்ளமான அம்மை வடுக்களும், நுனியில் திரண்டு நின்ற உருண்டை மூக்கும், கருத்து, கன்னங்கள் ஒட்டிப் போய், கண்கள் குழி விழுந்து...

கடவுளே...! இது என்ன கோரம்...? இந்த முகத்தை வைத்துக் கொண்டு வெளியில் தலைகாட்ட முடியுமா...? பார்க்கிறவர்கள் பயந்து போக மாட்டார்களா...? இது என்ன தண்டனை...? எதற்காக இந்தத் தண்டனை...? அழகு அழகு என இறுமாந்திருந்ததற்கா...? ஓ...! இது அநீதமில்லையா...? அதிகபட்சமில்லையா...? இதைவிடக் கொடுமை என்ன எனக்கு...? எப்படித் தாங்குவேன்...? எப்படித் தாங்குவேன்...?

வாய்விட்டுக் கதறி அழ ஆரம்பித்தாள். மடேர் மடேரென்று தலையில் அடித்துக் கொண்டு அழுதபோது விக்கித்து நின்று போன காவேரியம்மாளும், குணசேகரனும் ஓடிப் போய் தடுத்தார்கள்.

"ஐயோ... என்னம்மா ரம்யா இது...? இன்னிக்கு தான் மூணாவது தலைக்கு விட்டிருக்கு அதுக்குள்ள இப்படி அடிச்சுக்கிட்டு அழுதா கண்ணு போயிடும்மா..."

"விடும்மா... என்னை விடுங்க குணா... கண்ணு போகட்டும். இந்த முகத்தைப் பார்க்கிறதுக்குக் கண்ணு வேற தேவையா...? இந்தக் கண்ணு இருக்கிறதை விட போயிடறதே நல்லது..."

"உஷ்... என்ன ரம்யா இது...? என்ன போயிடுச்சுன்னு இப்படிக் கதறி அழுவற...? உன்னை உசுரோடு பார்க்கப் போறோமா இல்லை

யான்னு நாங்க தவிச்ச தவிப்பு எங்களுக்குத் தானே தெரியும்...? ஆதரவாகத் தோள் தட்டி ஆசுவாசப்படுத்த முயன்றவனின் மீது ஆத்திரத்தோடு பாய ஆரம்பித்தாள் அவள்.

"இப்படிப்பட்ட உசுரு எனக்குத் தேவையா...? இதைவிட என்னை அந்த ஆண்டவன் கொண்டே போயிருக்கலாமில்ல...? கொன்னு போட்டிருக்கலாமில்ல...?"

"சே! என்ன பேச்சு பேசற ரம்யா...?"

"உங்களுக்கென்ன...? நீங்க அப்படித்தான் பேசுவீங்க. உள்ளுக்குள்ள உங்களுக்கு சந்தோஷமாகக் கூட இருக்கும்...? அழகுன்ற திமிர்ல என்ன ஆட்டம் ஆடினா...? எப்படியெல்லாம் பேசுனா... வேணும். இவளுக்கு நல்லா வேணும். இதுதான் சரியான தண்டனைன்னு நினைச்சு சந்தோஷப்பட்டுக்கிட்டே வெளிப் பேச்சுக்கு என்னை சமாதானப்படுத்துற மாதிரி நடிக்கிறீங்க..."

அந்த அபாண்டமான குற்றச்சாட்டில் ஒரு வினாடி ஆடிப் போனாலும் உடனே தன்னை சமாளித்துக் கொண்டு விட்டான் குணசேகரன். அவள் நிலைமையில் நின்று பார்த்தபோது அது குற்றச்சாட்டே இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. அவளது மனப் போராட்டம் முற்றிலும் பிடிபட்டது.

பாவம் அவள் என்று வழக்கம் போல் அவள் மீது பரிதாபம்தான் தோன்றியது. அழகழிந்து நிற்பது பெரிய தண்டனை தான். இதைவிடக் கொடுமையான தண்டனை எதுவும் ஒரு பெண்ணிற்கு இருக்க முடியாது. எந்தப் பெண்ணாலும் அதைத் தாங்கிக் கொள்ள முடியாதுதான். உடைந்து சிதறித்தான் போவாள். உள்ளுக்குள் நொறுங்கிப் போவாள். அதிலும் இவள் இன்னும் அதிகம் நொறுங்குவாள்.

சாதாரண அழகா அது- அத்தனை பேரையும் ஆளுகின்ற அழகு ஆட்டிப்படைத்த அழகு! தெருவில் போனவர்களையெல்லாம் திரும்பிப் பார்க்க வைத்த அழகு சகலவிதமான செல்வங்களையும் அவளது காலடியில் கொட்டிவிட்டுக் காத்திருக்க வைக்கிற மாதிரியான அழகு அப்படிப்பட்ட உன்னதமான அழகு சிதைந்து உருக்குலைந்து போகுமென்றால் யாரால் தாங்கிக் கொள்ள முடியும் ? அதுவும் அந்த அழகை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு



எத்தனையோ விஷயங்களுக்கு அஸ்திவாரமிட்டு அற்புதமான ஒரு மாளிகை எழுப்பக் காத்துக் கொண்டு நின்ற இவளால் எப்படித் தாங்க முடியும்? தான் கட்டிய மாளிகை தன் கண் முன்பு சரிந்து விழுந்து தூள் தூளாவதை எந்தப் பெண்தான் தாங்குவாள்...? எப்படிப் பொறுத்துக் கொள்வாள்...?

ஒரு ஆழமான பெருமூச்சு எழுந்தது அவனிடமிருந்து. ஆனாலும் முக அழகுதான் அழகா...? பளபளவென்ற நிறமும், பொன் போன்ற மேனியும் மட்டுமா அழகு...? கவர்ச்சிகரமான உடம்புதானா அழகு என்கிற கேள்விகள் எழ, மெல்ல நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

இதைப் புரிய வைத்துவிட வேண்டும் இந்தப் பெண்ணிற்கு. வெளி அழகு அழகல்ல என்பதை உணர்ந்து விட்டால் இந்தத் துடிப்பும், தவிப்பும், குமுறலும், கொந்தளிப்பும் விலகிப் போய் விடும். இந்தத் துக்கமும் அழுகையும் தணிந்து விடும்.

ஆனால் எதைச் சொல்லி எப்படிப் புரிய வைப்பது என்று சற்று யோசித்தான் அவன். யோசித்துக் கொண்டிருந்தபோதே சடாரென்று அவன் கையை உதறிவிட்டு எழுந்து நின்றாள். "மாட்டேன்... நான் உயிரோட இருக்க மாட்டேன். என்னால் முடியாது. இந்த முகத்தை வச்சுக்கிட்டு வெளியில தலைகாட்ட முடியாது. தெருவுல நடக்க முடியாது. என்ன லட்சணமான முகம்டான்னு திரும்பிப் பார்த்தவங்கள்ளாம் 'ஐயோ... இவ்வளவு கோரமான முகமா'ன்னு...? முகத்தை மூடிக்குவாங்க. இந்த வீட்ல இருக்கிற எல்லாக் குடித்தனக்காரங்களும் 'வேணும் கட்டைக்கு வேணும். வெங்கல கட்டைக்கு வேணும்'ன்னு கேலி பண்ணி சிரிப்பாங்க. முடியாது என்னால, அதையெல்லாம் தாங்கிக்க முடியாது. தாங்கிட்டு உயிரோட இருக்க முடியாது. 'தலைமுடி கொட்ட ஆரம்பிச்சிடுச்சே... இப்படி கொட்டிக்கிட்டே போனா அழகு குறைஞ்சுப் போயிடுமே. இங்கிலீஷ் மருந்துங்க சாப்பிட்டா பின் விளைவுகள் இருக்கும். அதனால் வேணாம்னு முடிவு செய்து [illegible]ங்களே' ஓடி வந்தேன் குணா. வெறும் முடி கொட்ட ஆரம்பிச்சதையே தாங்கிக்க முடியாமல் உங்களைத் தேடி வந்த எனக்கு இது அதிகமில்லையா குணா...? எப்படி இருந்தேன்... இப்போ எப்படி

ஆயிட்டேன்..? ஐயோ.. ஐயோ.. மொத்த முடியும் கொட்டி தகதகன்னு இருந்த என் நிறமெல்லாம் போய், கழுவி வச்ச நெருப்புக் கலரா மாதி, முகம் முழுசும் பொளுவாய் போட்ட ஆட்டுக்கல் அம்மி மாதிரி மேடும் பள்ளமுமாகி.. வேணாம் குணா.. தயவு செய்து வேணாம். இந்த முகத்தோட என்னால இருக்க முடியாது. உயிர் வாழ முடியாது. தலைமுடிய உதிராமல் இருக்க மருந்து கேட்டு வந்த நான், இப்போ உசிரோடு இல்லாமல் இருக்க மருந்து கேட்கிறேன். ஏதாவது கொடுத்து என்னைச் சாக அடிச்சிடுங்க. சாகும் போதாவது அமைதியாகச் சாகிறேன் குணா. அப்படி என்னை சாக வச்சிடுங்க. இல்லாட்டி போனா சாவைக் கூட, இதே மாதிரி குரூரமானதாக நான் சந்திக்க வேண்டி வரும். இதைவிடக் கொடுமையான வலியிலும், வேதனையிலும் துடிக்க வேண்டி வரும்.. இதிலிருந்து தான் உங்களால் என்னைக் காப்பாத்த முடியல. அந்தக் குரூரமான முடிவிலிருந்தாவது என்னைக் காப்பாத்துங்க குணா. கருணைக் கொலைன்னு சொல்லுவாங்களே.. அந்த மாதிரி கருணை கொண்டு என்னைக் கொன்னுடுங்க குணா.. என்னைக் கொன்னுடுங்க..."

கதறித் துடித்த துடிப்பு கண்ணீரும் சொற்களுமாக வெளி வந்தது கேட்டுப் பதறிப் போன காவேரியம்மாள் "ஐயோ.. என்ன பேச்சு பேசுற ரம்யா.. என் அடி வயிறெல்லாம் கலங்குதே.. குணா.. என்னப்பா சொல்லுறா இவ.. என்னால தாங்கிக்க முடியலை யேப்பா.." என்று கதற ஆரம்பித்ததும் காவேரியம்மாளின் அருகில் வந்தான் அவன். மெதுவாய் இதமாய் அத்தையின் தோள் தொட்டுப் பேச ஆரம்பித்தான்.

"இதப் பாருங்க அத்தை. ரம்யா ரொம்பக் கலங்கிப் போயிருக்கா.. நொந்து போயிருக்கான்னா.. நீங்களும் அப்படியே கலங்கினீங்கன்னா எப்பிடி..? தயவு செய்து நான் சொல்றதைக் கேளுங்க.. நீங்க கொஞ்சம் வெளிய போங்க... அவகிட்ட நான் பேசறேன். என்மேல் நம்பிக்கை வச்சுக் கொஞ்ச நேரம் வெளிய இருங்க.."

உன்மேல் நம்பிக்கை வைக்கலேன்னா வேற யார் மேல் வைக்கப் போறோம்ப்பா.." என்று கண்களைத் துடைத்தவாறு



காவேரியம்மாள் வெளியேறியதும் கதவை மூடித் தாழிட்டான் குணசேகரன்.

வினாடி நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்தான். குளத்தங்கரையில் தன்னை நிற்க வைத்து தாத்தா அணைத்துக் கொண்டது ஞாபகத்திற்கு வந்தது. அப்போது தன் உடலில் பாய்ந்த அந்த உணர்வு.. அமைதி.. நிதானம்..தாத்தாவே தனக்குள் புகுந்தது போன்ற அந்த அனுபவம்..

விவேகானந்தருக்குப் பின்னால் தனக்கு வாய்த்த அனுபவம் அது. அதி அபூர்வமான அனுபவம். தற்போது அதுதான் இந்தப் பெண்ணிற்குத் தேவை. அந்த ஸ்பரிச அனுபவம். ஹீலிங் டச்.. எத்தனை பேசினாலும் தர முடியாத சமாதானத்தை, எந்தப் பேச்சும் கொடுக்க முடியாத நிம்மதியை..

அந்த ஹீலிங் டச் ஒன்றுதான் கொடுக்க முடியும். தொட்டுத் தருகிற வைத்திய முறையினால் மட்டுமே தீர்க்க முடியும். ஸ்பரிச உணர்வினால் மட்டுமே இவளைக் குணப்படுத்த இயலும். வேறு வழியில்லை.

மனதினுள் அழுத்தமாக முடிவு செய்து கொண்டவன் அதை மிகமிக மென்மையாய், இயல்பாய், நிதானமாய், நேர்த்தியாய் எல்லா வற்றிற்கும் மேலாக இயற்கையாய் குழந்தை வைத்தியமாய் அமைய வேண்டும் என்கிற பிரக்ஞை ஏற்பட மெல்ல ரம்யாவை நெருங்கினான்.

"இதப் பாரு ரம்யா..." என்று குழந்தையிடம் கெஞ்சுகிற செல்லத்தோடும், பிரியத்தோடும் அவளது முகவாய் தொட்டு முகம் நிமிர்த்தினான்.

"இப்படியெல்லாம் பேசலாமா ரம்யா.. அத்தைக்கும் எனக்கும் அதைக் கேட்க எவ்வளவு கஷ்டமாக இருக்கும்னு கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தியா...? அத்தைக்காவது மற்ற குழந்தைங்க இருக்காங்கன்னு வச்சுக்கிட்டாலும்.. எனக்கு உன்னை விட்டால் யார் இருக்காங்க ரம்யா...? என்கிட்டேயே நீ இப்படிப் பேசலாமா? உனக்குள்ளே வாழ்ந்துக்கிட்டிருக்கிற என்கிட்ட சொல்ல வேண்டிய விஷயமா இது...? ம்..? சொல்லு ரம்யா..?" என்றவாறு மெல்ல அவளை இழுத்துத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டவன் குனிந்து,

உச்சந்தலையில் முத்தமிட்டபோது உடல் முழுவதும் பாய்ந்த அந்த மின்சார உணர்வில் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கி அமைதியடைய ஆரம்பித்தான் அவள்...

## 29

கண்ணீர் என்பது மிகப் பெரிய வரப்பிரசாதம். கடவுளால் படைக்கப்பட்ட அன்பைப் போல் அழுகையும் சிறந்த வெளிப்பாடு. தாகத்தைத் தணிக்கிற தண்ணீர் மாதிரி துயரத்தைத் தணிப்பது கண்ணீர். அழுது முடித்து விட்டால் அகம் சுத்தமாகிறது. லேசாகிறது. பாரம் குறைகிறது. ஒரு விடுதலை உணர்ச்சி ஏற்படுகிறது. ஓரளவு நிம்மதி கூட வருகிறது.

அதனால் ரம்யாவை அணைத்திருந்த குணசேகரன் அவள் ஓயட்டுமென்று பேசாதிருந்தான். அவளுக்குள் அடைத்துக் கொண்டிருந்த அத்தனையும் அடித்துக் கொண்டு வெளியில் வரட்டுமென்று காத்துக் கொண்டிருந்தான்.

கதறலாக ஆரம்பித்த கண்ணீர் மெல்ல மெல்லக் குறைந்து கொண்டே வந்து தணிவான விசும்பலாக இழுத்துக் கொண்டிருந்த போது மெதுவாக முகவாய் தொட்டு அவளது முகம் நிமிர்த்தினான். ஒரு குழந்தையைப் பார்க்கிற மாதிரி மென்மையாய் அவளது கண்களுக்குள் பார்த்தான். தலை வருடித் தந்தான். குனிந்து முன் உச்சியில் முத்தமிட்டபோது உதடு பிதுக்கி கேவிக் கொண்டிருந்தாள் அவள்.

"அழுது முடிச்சிட்டியா ரம்யா...?" மிகுந்த இதத்தோடு கேட்டதும் மீண்டும் அவளுக்குள் அழுகை புரண்டு கொண்டு வருவதைப் பார்த்தான்.

"இல்ல ரம்யா... இதுவரைக்கும் அழுதது சரி. மனசு பாரம் குறையட்டும். கொஞ்சம் லேசாகட்டும்னுதான் நான் வேணுமின்னே பேசாம இருந்தேன். உன் வேகம் அடங்கட்டுமின்னு காத்துக்கிட்டிருந்தேன். பொண்ணாய்ப் பிறந்த உங்களுக்கு இந்த அழு[கை] மட்டும் இல்லேன்னால் ரொம்பக் கஷ்டப்பட்டுப் போயிருப்பீங்[க]. தாங்க முடியாமல் தவிச்சு நொறுங்கியிருப்பீங்க. எப்படிப்பட்ட சோகத்துலயும், கஷ்டத்துலயும், இழப்புலயும் இந்த அழுகைதான் உங்களைக் காப்பாத்திக்கிட்டு வருது. இதுதான் உங்களை உடைஞ்சு



சிதறாமல் சேர்த்து வச்சுக்கிட்டிருக்கு. ஒவ்வொரு கஷ்டத்துக்கும் கை கொடுத்துக்கிட்டிருக்கு.

ஆண்டவன் அழுகையை மட்டும் வைக்காது போயிருந்தால் உலகம் எப்போதோ அடங்கிப் போயிருக்கும். பெண் அழுதா அது அவளுக்கு அமைதி தர்ற விஷயம். அதே ஒரு ஆம்பிளை அழுதான்னா... அது அவனுக்கு அசிங்கம் சேர்க்கிற விஷயம். ஆம்பிளைங்க திடமாக நிற்க வேண்டியவங்க. வலிமையானவங்க. எதையும் தாங்கிக்க வேண்டியவங்க. கொஞ்சம் முரடங்க. மூர்க்கமானவங்க. எந்த உணர்வையும் வெளிக்காட்டாமல் உள்ளுக்குள் போட்டு மூடி சவப் பெட்டிக்கு அடிக்கிற மாதிரி ஆணியடிக்கணுமே தவிர அழுது புலம்பக் கூடாது. அப்படி அழுது புலம்பறவன் கோழை. அவன் ஆம்பிளையே இல்லை. அதனால்தான் ஆண்டவன் ஆணுக்கு வீரம், பெண்ணுக்கு அன்புன்னு பகிர்ந்து வச்சிருக்கான்..."

அதைக் கேட்டுக் கொண்டே வந்த ரம்யா தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதவளாக மீண்டும் கதறி அழ ஆரம்பித்ததும் பதறிப் போனான் குணசேகரன்.

"என்ன ரம்யா... எதுக்கு இப்போ இப்படி அழுவுற...?"

பதில் சொல்லாமல் வாய்விட்டு அழுதவளை அணைத்து நடத்தி அழைத்து வந்து அறை மூலையில் கிடந்த பழைய நாற்காலி ஒன்றில் உட்காரச் செய்தான். அவளுக்கு எதிராகச் சுவர் ஓரம் அடுக்கி வைத்திருந்த டிரங்குப் பெட்டி மீது தானும் உட்கார்ந்து மீண்டும் மெதுவாகக் கேட்டான்.

"சொல்லு ரம்யா... எதுக்கு மறுபடியும் அழ ஆரம்பிக்கற...?"

"இல்ல... வந்து... வந்து..."

"எதுவானாலும் என்கிட்ட தயங்காமல் சொல்லு ரம்யா...?"

"இல்ல... நீங்க சொன்ன... அந்த அன்பு கூட என்கிட்ட இல்லாமல் போயிடிச்சேன்னு..."

பாதியில் நிறுத்தி கைகளால் முகத்தை மூடிக் கொண்டு அவள் குமுறத் துவங்கியதும் ஒரு ஆழமான பெருமூச்சோடு எழுந்து அருகில்

போனபோது அவனுக்குள் ஒரு விடுதலை உணர்ச்சி ஏற்பட்டது. மனதிற்குள் மெலிதாய் சந்தோஷம் எட்டிப் பார்த்தது. 'இனி இவளை சரி செய்து விடலாம்' என்கிற நம்பிக்கை வலுத்தது. எல்லாம் நல்லபடியாக முடியும் என்கிற எண்ணம் உரம் ஏற்றிக் கொண்டது. அதில் எல்லையற்ற நிம்மதியும் வந்தது.

அவளருகில் போனவன் இரு கைகளாலும் தலையைக் கோதி விட்டான். வலது உள்ளங்கையால் முதுகு தடவிக் கொடுத்தான். மூடிக்கிடந்த அவளது முகத்திலிருந்து கையைப் பிரித்து கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தான்.

"இல்ல ரம்யா... நீ தப்பா நினைச்சுக்கிட்டிருக்க. அன்பில்லாதவங்கன்ற யாருமே இந்த உலகத்துல இருக்க முடியாது. அப்படி எந்த ஜீவ ராசியையும் கடவுள் படைக்கல. பூனை, காகத்துக்குக் கூட அன்பிருக்கு. புலி சிங்கத்துக்கு அன்பு இருக்கு. இப்படிப்பட்ட மிருகங்களுக்கெல்லாம் அன்பைக் கொடுத்த ஆண்டவன் உனக்குக் கொடுக்காமப் போயிடுவானா...? உனக்கும் கொடுத்திருக்கான். ஆனால் அந்த அன்புக்கு மீறின அழகைக் கொடுத்ததுல உன் கண்ணுக்கு அழகு மட்டுமே தெரிஞ்சுது. அந்த அழகின் மினுமினுப்புல. அது காட்டின ஜாலத்துல அன்புங்கிறது மனசுக்குள்ள ஒடுங்கி ஒரு ஓரமா உட்கார்ந்துக்கிடுச்சு. வெளிய தலை காட்டாம இருந்துக்கிடுச்சு. ஒடுங்கி உட்கார்ந்ததை இப்போ ஓங்கச் செய்யணும். தலை காட்டாம இருந்ததை வெளிய இழுத்துக்கிட்டு வரணும். எப்போ நமக்குள்ள ஒரு நல்ல விஷயம் இருக்குது அதை நாம் உபயோகப் படுத்தலைன்னு தெரிய வந்திச்சோ அந்த நிமிஷம் அதை நாம் உபயோகப்படுத்த ஆரம்பிச்சிடணும். இதப் பாரு ரம்யா... கொஞ்சம் நிமிர்ந்து என்னைப் பாரு..."

அதற்கும் அவள் தலை கவிழ்ந்திருக்கவே, அவனே அவளது முகம் நிமிர்த்தினான்.

"உனக்குள்ளேயும் அன்பு இருக்குதுங்கிற விஷயம் உனக்குத் தெரியுதில்ல...?" பேசாதிருந்தாள் அவள். மிரண்டு போன குழந்தை மாதிரி மருட்சியோடு அவனைப் பார்த்தாள்.

குரல் தழைத்து உருக்கமாகப் பேச ஆரம்பித்தான் அவன்.



"அப்படிப் பார்க்காத ரம்யா... உன்னுடைய இந்தப் பார்வை என்னை ரொம்ப சங்கடப்படுத்துது. தப்பு செய்த குழந்தை அம்மாவுக்குப் பயந்து மூலையில் ஒடுங்குமே அந்த மாதிரி இருக்குது..."

"தப்பு செய்தவ தானே நான்...?" உடைந்து போய் வந்த அந்தக் கேள்வி அவனுக்குள் ஒரு சந்தோஷத்தை ஏற்படுத்திற்று. முகத்தில் மெலிதான ஒரு புன்னகை கூட அரும்பிற்று.

"ரொம்ப நல்ல விஷயம் ரம்யா. தப்பு செய்தவங்க தன் தப்பை உணர்றதுங்கிறது நல்ல விஷயம். உணர்ந்தா மட்டும் போதாது. அதை வாய் விட்டுச் சொல்றதுங்கிறது இருக்கே... அது அதைவிட நல்ல விஷயம்" - ஒரு வினாடி நிறுத்தி மீண்டும் எங்கு ஆரம்பிக்கலாம் என்று யோசித்துவிட்டு மறுபடி தொடர்ந்தான்.

"... இதை உன்கிட்ட சொல்லணும்னு எத்தனையோ நாள் எனக்குத் தோணியிருக்கு ரம்யா. நிறைய விஷயங்களை எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கணும்னு நான் ஆசைப்பட்டிருக்கேன். உன் அப்பா செத்துப் போன போது வந்தேனே... அது உனக்கு ஞாபகமிருக்கா...? அப்போ உன் அழகைப் பார்த்து நான் பிரமிச்சுப் போய் நின்னுட்டேன். இப்படி ஒரு அழகான்னு எனக்குள்ள வியந்துக்கிட்டேன். எங்க ஊர்லயாகட்டும், மெட்ராஸ்லயாகட்டும்... உன்னை மாதிரி ஒரு அழகான பெண்ணை நான் சந்திச்சதே இல்லை. எந்த ஆணையும் பாதிக்கும்... எத்தினி வயசுக்காரனானாலும் பாதிக்கும் ஏன்... ஆணுக்குப் போவானேன்...? பெண்ணேயே கூடப் பாதிக்கும். ஒரு பொறாமை உணர்ச்சியைத் தூண்டி விட்டிருக்கும். ஆனால், அழகான பொண்ணுங்க நிம்மதியாக இருந்தாங்க... சந்தோஷமாக வாழ்ந்தாங்கன்னு சரித்திரமே கிடையாது ரம்யா. இப்போ மட்டுமில்ல. புராண காலத்திலிருந்து நிலைமை அதுதான். சீதையை எடுத்துக்க... அவ படாத கஷ்டமா...? திரௌபதி, தமயந்தி, அகலிகைன்னு வரிசையாக எத்தனைப் பொண்ணுங்க காலம் முழுசும் கஷ்டப்பட்டிருக்காங்கன்னு நினைச்சுப் பாரு. சரித்திர காலத்தை எடுத்துக்கிட்டா கூட அதே கஷ்டம்தான். ராணி பத்மினின்னு பட்டியல் போட்டா நீண்டுக்கிட்டே போகும். அதுக்காக நான் பொண்ணுங்க அழகாயிருக்கக் கூடாதுன்னு சொல்ல வரல. அழகாயிருக்கிறது பாவமில்ல. அது ஒரு வரப்பிரசாதம்.

ஆண்டவனால் கொடுக்கப்பட்ட விஷயம். இயற்கை ஏற்படுத்தித் தந்த சீதனம். நம் முயற்சியினாலோ, உழைப்பினாலோ வர்ற விஷயமில்ல. அதனால் அழகா இருக்கிற யாரும் அந்த அழகுக்காகப் பெருமையோ, கர்வமோ பட முடியாது. படவும் கூடாது. 'இது நமக்குக் கொடுக்கப்பட்ட ஒன்று. தானாக வந்த அதிர்ஷ்டம். மூதாதையர்களில் யாராவது அழகாயிருந்திருப்பாங்க. அவங்க கிட்டேயிருந்து வந்த ஜீன், ஜெனிடிக்ஸே தவிர வேற எதுவுமில்லன்னு நினைச்சுக்கணும் ரம்யா..."

"உன் முயற்சி, உன் உழைப்பு, உன் அறிவு, உன் புத்திசாலித் தனம்ங்கிற எதுவுமே இல்லாமல், உனக்கே தெரியாமல் நேர்ந்து போகிற ஆயிரமாயிர விஷயங்களில் இதுவும் ஒன்னுங்கிற போது இதுல பெருமைபட்டுக்கவோ, கர்வப்படவோ என்ன இருக்கு சொல்லு பார்க்கலாம்...? யானை மாலை போட்டு ராணியாகிற மாதிரித்தான். ராணியான பின் ராணிக்குண்டான கடமையை, பொறுப்பை நிறைவேத்தணும் அவ்வளவுதான். அதுக்காகத்தான் நீ ராணியாகவே ஆக்கப்பட்டிருக்க. அதை விட்டுவிட்டு நான்தான் ராணி... என்னைவிட எல்லாம் தாழ்ந்தவங்க... எனக்கு அடங்கி நடக்க வேண்டியவங்க. என்னை மாதிரி ராணியாக இல்லாத யாரும் மனுஷங்களே இல்லைங்கிற நினைப்பு எப்படி ஏற்படலாம்...? ஏன் ஏற்பட்டுச்சின்னு கொஞ்சம் நினைச்சுப் பாரு ரம்யா..."

கேட்கக் கேட்க வெட்கமும், வேதனையும், அவமானமும் ஏற்பட குறுகிப் போய் உட்கார்ந்திருந்தாள் அவள்.

"... அதுவுமில்லாமல் இந்த அழகு, பணம், பதவிங்கிற எதுவுமே நிலையானதில்ல ரம்யா, நாம் உயிரோடு இருக்கிற வரை கூட வரப் போகிற விஷயமில்லை. அழகா இருக்கிறவரை ஆம்பிளைங்க பின்னாலேயே சுத்துவாங்க. பணம் இருக்கிற வரை பத்துப் பேர் கூட நிற்பாங்க. பதவி இருக்கிற வரைக்கும்தான் மதிப்பு, மரியாதை எல்லாம். இதையெல்லாம் புரிஞ்சுக்கணும் ரம்யா. அழியக் கூடியது எது அழியாதது எதுன்னு தெரிஞ்சுக்கணும். இதோ ஒரே மாசத்துல உன் அழகு எப்படி ஆயிடிச்சு பார்த்தியா...? இதைச் சொல்லிக் காட்டணுங்கிறதுக்காக நான் சொல்லலை ரம்யா... நிஜம் எதுங்கிறதை எடுத்துக்காட்டணுங்கிறதுக்காகத்தான் சொன்னேன்..."



"உலகத்துலயே அழியாதது ரெண்டே விஷயங்கள்தான். ஒன்னு படிப்பு. அதாவது அறிவு. அந்த அறிவை, நாம் படிச்ச படிப்பை எதுவும் கொண்டு போயிட முடியாது. அதனால்தான் பெரியவங்க அதைப் பத்தி ரொம்ப உயர்வாகப் பாடி வச்சுட்டுப் போயிருக்காங்க...

*வெள்ளத்தால் அழியாது*
*வெந்தணலில் வேகாது*
*வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது*
*கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாது*
*கள்ளருக்கு மிக அரிது*
*காவலோ மிக எளிது*

ங்கிற - இந்தப் பாட்டு உனக்குத் தெரியும். நீ படிச்சிருப்ப. அப்படிப் பட்ட அறிவையும் அதே பாடலுக்குப் பொருந்தக் கூடிய அன்பையும் தவிர வேறு எதுவுமே நிலையில்லாதது. எல்லாமே அழியக் கூடியது. இவை ரெண்டை மட்டும்தான் நாமாகத் தேடிக்க முடியும். நம் உழைப்புல, நம் முயற்சியில் சம்பாதிச்சுக்க முடியும்."

"போதும் குணா... போதும். எனக்குப் புரிஞ்சுப் போச்சு குணா. அறிவு வந்திடிச்சு. என்னை மன்னிச்சுடுங்க குணா... மன்னிச்சுடுங்க..."

சரேலென்று அவளை இழுத்து அணைத்துக் கொண்ட குணசேகரன் அவளது காதருகில் போய் மெல்ல முணுமுணுத்தான்.

"வெறுமனே மன்னிச்சாப் போறுமா... இல்ல மனசுக்குள்ளயும் வச்சு போற்றிப் பாதுகாக்கலாமா...?"

"கு...ணா!" என்று திடுக்கிட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். குரல் கரகரத்தது. வார்த்தைகள் தடுமாறப் பேசினாள்.

"மனசுக்குள்ள வச்சுக்கிறதா... இந்த முகத்தையா...? என்ன சொல்றீங்க குணா...?"

"நான் நேசித்தது ரம்யாங்கிற பெண்ணை. மொத்த உருவத்தை, வெறும் முகத்தை மட்டுமில்ல. இன்னும் சொல்லப் போனால் இப்போ என் எதிர்ல நிற்கிற இந்த ரம்யாவைத் தான் நான் அதிகம் நேசிக்கிறேன். இதுதான் நிஜமான ரம்யா. எனக்குத் தேவையான ரம்யா..."

அவன் சொல்லி முடிப்பதற்குள் தடாலென்று சரிந்து அவனது கால்களைக் கட்டிக் கொண்டு பாதங்களில் முகம் பதித்து அழ ஆரம்பித்தாள் அவள். அதைச் சிறிதும் எதிர்பார்க்காத குணசேகரன் பதறிப் போனான்.

"ஐயோ... என்ன ரம்யா இது...? எழுந்திரு" என எழுப்பி நிறுத்தினான். பின்னர் கணீரென்ற குரலில் ஆணியடித்த மாதிரி பேசினான்.

"இதப்பாரு ரம்யா. நான் ஏதோ தியாகம் செய்திட்ட மாதிரி, விட்டுக் கொடுத்திட்ட மாதிரியெல்லாம் நினைச்சுக்காதே. ஆரம்பத்தி லிருந்து உன் மீது ஆசை வச்சேன். நீ வேணும்னு நினைச்சேன். உன்னைக் காதலிச்சேன். இன்னமும் காதலிச்சுக் கிட்டிருக்கேன். அந்தக் காதல் போனால்தானே மற்றதைப் பற்றி யோசிக்கணும். சாதல்னு புலம்பணும். நல்ல காலம். எனக்கு அந்த நிலை வரல. நான் உண்மையாக, என் காதல் நிஜமாக இருந்த காரணத்தால்தான் நீ எனக்குக் கிடைச்சிருக்க ரம்யா... கிடைச்சதுல திருப்தி படற மனுஷன் நான். போற்றிப் பாதுகாக்கிற மனுஷன். சந்தோஷமாக வச்சுக்கிற மனுஷன், உன்னையும் சந்தோஷமாக வச்சுக்குவேன் ரம்யா... அமைதியாக நிம்மதியாக நம்மால் வாழ முடியும். இந்த அமைதியும், நிம்மதியும் தவிர வேற என்ன வேணும் சொல்லு...?"

"வேணாம் இதுக்கு மேல் எதுவும் வேண்டாம்" என்கிற மாதிரி அவன் உதட்டைத் தன் விரல்களால் பொத்திய ரம்யா உருகிப் போய் தாங்க முடியாதவளாக அவன் மார்பில் சாய்ந்தாள்.

மென்மையாய் இதமாய் அவளை அணைத்துக் கொண்டான் அவன்.



# 30

"நிஜமாகவா சொல்ற குணா...?" என்று அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள் காவேரியம்மாள். ஒரு மணி நேரப் பேச்சிற்குள் எப்படி அவன் ரம்யா என்கிற தேரை நிலைக்குக் கொண்டு வந்தான் என்பது அவளுக்குள் கேள்விக் குறியாகவே நின்றது.

'ஆனால் தேர் பழைய தேரா என்ன...? அலங்காரமான தேரா...? ஜனங்க கூடி தரிசிக்கிற தேரா...? வர்ணம் போய் உடைஞ்சு மக்கி நிற்கிற தேருதானே...?'

இதை நிலைக்குக் கொண்டு வரணும்ங்கிற அக்கறையும், கவலையும் யாருக்கு இருக்கப் போவுது...? குணாங்கிற உன்னதமான மனுஷன் இல்லாட்டி போனா யாரு சீந்துவாங்க...? ஒரு மூலையில் நின்னு குமுறி இன்னமும் உருக்குலைஞ்சு இல்ல போயிருக்கும்...? இங்கிருந்து கொண்டிட்டுப் போய்க் கண்ணம்மாப் பேட்டையிலல்ல வச்சிருக்கணும்...? அப்படி முடிஞ்சு போயிடாமல் கயிறு கட்டி யிழுத்துக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிற கடவுளுக்கில்ல கை கூப்பணும்...? கடவுள் மாதிரி வந்து உதவியிருக்கிற குணாவை நிக்க வச்சுல்ல விழுந்து கும்பிட்டிருக்கணும்...!

கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு நிற்க குணாவை ஏறிட்டாள் அந்த அம்மாள். வார்த்தை வராமல் நெஞ்சு தழுதழுக்க இரு கையும் கூப்பிக் கும்பிட்டாள்.

"ஐயோ... என்னங்க அத்தை இது...?" - என்று ஓடி வந்து அவளது கை பற்றித் தழைத்தான் அவன்.

"என்னைப் போய் நீங்க கும்பிடலாமா அத்தை...?" என்றபோது அவனது குரலிலும் எல்லையற்ற வருத்தம் எட்டிப் பார்த்தது.

"வெறுமனே கும்பிட்டிருக்கக் கூடாது குணா. கால்ல விழுந்து கும்பிட்டிருக்கணும்..." என்று தடுமாறிய காவேரியம்மாளைச் சமாதானப்படுத்த முயன்றான்.

"என்ன சொல்றீங்க அத்தை நீங்க...? நிஜம் தெரியாமல் பேசறீங்கன்னு நினைக்கிறேன்..."

"இல்லப்பா— நிலைமை புரிஞ்சு பேசுறேன். நீ வாழ்வு கொடுக்க முன்வரலேன்னா அவ மூலையில் முடங்கி வெறும் முடமா, ஒன்னுக்கும் உதவாத ஜடமாப் போயிருப்பா—"

"அதுதான் இல்லீங்க அத்தை. உண்மை அது இல்லை. நான் ஏதோ தியாகம் செய்யப் போகிற மாதிரியும், என் வாழ்க்கையை விட்டுக் கொடுக்கப் போகிற மாதிரியும் நினைச்சுக்கிட்டு பேசுறீங்க. அப்படியெல்லாம் ஒண்ணுமில்லைங்கிறதை நீங்க புரிஞ்சுக்கணும்..."

"நீ என்ன சொல்ல வர குணா..?" குழப்பமாகப் பார்த்தாள் அந்த அம்மாள்.

"ஆமாங்க அத்தை நான் தியாகம் எதுவும் செய்யலீங்க அத்தை. போனாப் போகட்டும்னு இரக்கப்பட்டு ஏதோ பேருக்குக் கல்யாணம் செய்துக்கிடப் போறேன்னும் நினைக்காதீங்க. மாமா செத்துப் போன அன்னிக்குத்தான் முதல் முதலா உங்க வீட்டுக்குள் காலடி எடுத்து வச்சேன். அன்னிக்குத்தான் ரம்யாவையும் முதல் முதலாகப் பார்த்தேன். வெட்கத்தை விட்டுச் சொல்லணுமின்னா... பார்த்த வுடனே ரம்யாகிட்ட என் மனசை நான் பறிகொடுத் திட்டேங் கிறதுதான் நிஜம்.

"மின்னல் மாதிரி கண்ணைப் பறிக்கிற அந்த, அழகு மனைவியாகக் கிடைச்சால் எப்படியிருக்கும்னு எல்லா ஆம்பிளைங் களும் ஆசைப்படுகிற மாதிரி நானும் ஆசைப்பட்டது நிஜம். ஆனால் 'இவனையா..? இந்தக் கறுப்பனையா'ன்னு..? ரம்யா கோபப்பட்ட போதுதான் என் தகுதியின்மை எனக்கு உறைச்சது. உள்ளுக்குள் சுருங்கிப் போனேன். ஊருக்குப் போய் சாப்பாடில்லாமல், தூங்கப்பிடிக்காமல் விட்டத்தை வெறிச்சுப் பார்த்துக் கிட்டு உட்கார்ந்தேன்..."

அந்த நாட்கள் நினைவிற்கு வந்த மாதிரி ஒரு வினாடி அமைதியாக இருந்து பின் அதே நிதானமான குரலில் தொடர்ந்து பேச ஆரம்பித்தான்.

"அதுக்கப்புறம் தாத்தா வந்து என்னை வெளிய கூட்டிக்கிட்டுப் போய் குளக்கரையில் உட்கார வச்சு நிறைய விஷயங்களை விளக்கிச் சொன்னாரு. உனக்கு இருக்கிற மாதிரி 'தனக்கு அழகான புருஷன்



வரணும். தன்னைப் போல் செக்கச் செவேல்னு இருக்கணும்ங்கிற ஆசை அந்தப் பொண்ணுக்கும் இருக்குமில்ல..?' என்று கேட்டு, உண்மையை உணர வச்சாரு.

"தாத்தாகிட்ட பேசினதற்கப்புறம் ரம்யாவை விட்டு என் மனசை விலக்க நான் நிறைய பாடுபட்டேன். மனசுங்கிறது அடக்க அடக்க திமிறிக்கிட்டுத்தானே இருக்கும்..? ஆசைப்பட்டதை அடையுறவரை அமைதியிழந்துதானே தவிக்கும். அப்படி தவிச்சுக் கிட்டுத்தான் நானும் இருந்தேங்க அத்தை. வெளியில் காட்டாது போனாலும் உள்ளுக்குள் ஒரு ஏமாற்றமும், இழப்புணர்ச்சியும் இருந்துக்கிட்டேதான் வந்துச்சு. எப்படியாவது ரம்யா கிடைச்சிட மாட்டாளான்னு ஏங்கிக்கிட்டேயிருந்திச்சு.. அந்த எதிர்பார்ப்புடன் தான் நான் இங்க வந்து போய்க் கிட்டிருந்தேங்கிறதுதான் உண்மையும் கூட...."

-அவன் நிறுத்தினதும் காவேரியம்மாள் கேள்வி கேட்க ஆரம்பித்தாள்.

"அது சரி குணா... அதையெல்லாம் புரிஞ்சுக்கிட்டு இந்தப் பொண்ணு தன் மனசை மாத்திக்காதான்னு நானும் எத்தினியோ நாளு ஆதங்கப்பட்டிருக்கேன். ஆனாலும் நீ ஆசைப்பட்டது பழைய ரம்யாவுக்குத்தானே தவிர இந்த ரம்யாவுக்கில்ல."

"மன்னிக்கணும் அத்தை. அப்படியில்லேங்கிறதை ரம்யா பெரியம்மை வார்த்து படுத்த படுக்கையாக இருந்தபோதுதான் நானே புரிஞ்சுக்கிட்டேன். அவ பக்கத்திலேயே இருக்கணும். அவளுக்கு எல்லாம் செய்யணும்னு எப்போ எனக்குத் தோணிச்சோ.. எப்போ மூணு தண்ணி தலைக்கு விட்டப்புறமும் நான் கூடவே இருக்கேனோ.. அப்போதே நான் வெளி அழகுக்காக வந்து போனவன் இல்லைங் கிறதை நீங்க புரிஞ்சுக்கிட்டிருக்க வேணாம்..?"

"ஐயய்யோ.. நான் அப்படிச் சொல்ல வரல குணா.."

"நீங்க சொல்லலீங்க அத்தை. நான் சொல்றேன். சொல்லக் கடமைப்பட்டிருக்கேன். பெத்த கடமையிலும், பொறுப்புணர்ச்சி யிலும் நீங்க கேட்கிற நியாயமான கேள்விக்கு பதில் சொல்கிற கடமை எனக்கு இருக்கு இல்லையா..? அதனால் சொல்றேன் . ரம்யாவை வெறும் முக அழகுக்காக நான் நேசிக்கல. அவளை அவளுக்காக ஒட்டு

மொத்தமாக நேசிக்கிறேன். அவளைப் பார்த்த முதல் வினாடியில் என் மனசுல எந்த எண்ணம் இருந்திச்சோ அந்த எண்ணம் இந்த நிமிஷம் வரை அப்படியேதான் இருக்குது. கொஞ்சம் கூட மாறலை. சிறிதும் குறையல. அதே முழுமையுடனும் பூரணமாகவும்தான் இருக்குது. அதனால் நான் ஏதோ பரிதாபப்பட்டு ரம்யாவை ஏத்துக்கறேன்னோ அல்லது தியாகம் பண்றேன்னோ நினைக்க வேணாங்க அத்தை. என் கடைசி மூச்சு உள்ள வரை இந்தக் குடும்பத்துல இருக்கிற அத்தனை பேர்கிட்டேயும் இதே உறவுடனும், ஒட்டுதலாகவும் இருக்கணும்ங்கிறதுதான் என் ஆசை, வேண்டுதல் எல்லாமும். ரம்யாவை மட்டும் நான் நேசிக்கலை அத்தை. உங்களைக் குழந்தைகளையெல்லாம் நேசிக்கிறேன். அம்மா அப்பா கூட நாம் எல்லாரும் ஒண்ணாக ஒரே குடும்பமாக, ஒத்துமையாக வாழணும்ங்கிறதுதாங்க என் ஆசை..."

"குணா.. குணா.." என்று உணர்ச்சிவசப்பட்ட காவேரியம்மாள் மேலே பேசமுடியாமல் தடுமாறினாள். தழுதழுத்தாள். நெஞ்சுருகினாள். கடைசியில் அவன் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

"நீ.. நீ எனக்கு மருமகன் இல்லேப்பா.. மகன்... ஊஹூம். மகன்கூட இல்லை. நான் உனக்கு மகள்.. செத்துப் போய் உனக்கே மகளாகப் பிறக்கணும்னு ஆசைப்படறேம்ப்பா. அந்த பாக்கியம் கிடைச்சாப் போறும்ப்பா.."

"என்ன அத்தை இது..? பெரிய பேச்செல்லாம் பேசறீங்க..? இதை இதோடு விடுங்க. இனி ஆக வேண்டிய காரியங்களைப் பார்க்கலாம். ஏன் அத்தை உங்ககிட்ட ஒன்னு கேட்கணும்னு தோணுது. கூடவே தயக்கமாகவும் இருக்கு. மனசு விட்டுக் கேட்டிடட்டுமா அத்தை தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே..?"

"தப்பா நினைக்கிறதா..? உன்னையா..! என்ன குணா இது...? தெய்வத்தை யாராச்சும் தப்பா நினைப்பாங்களா..? தெய்வம் கெடுதல் நினைக்குமா..? சொல்லு குணா.. நீ எது சொன்னாலும் அது நல்லதுக்குத்தான் இருக்கும். என் நன்மைக்காகத்தான் இருக்கும். அதனால் சொல்லு குணா. தயங்காமல் சொல்லு..?"

"இல்லீங்க அத்தை.. வந்து.." என்று அதற்கு மேலும் தயங்கினான் அவன்.



"பார்த்தியா... அம்மாங்கறேன். வயத்துல வந்து பொறக்கப் போற பொண்ணுங்கறேன். அதுக்கப்புறமும் இப்படித் தயங்கலாமா குணா..?" காவேரியம்மாள் கொஞ்சம் கோபமாகவும், வருத்தமாகவும் கேட்டதற்குப் பின்னர் சட்டென்று சொன்னான்.

"கல்யாணத்தைக் கூட ஊர்லயே வச்சுக்கலாம்னு நினைக்கிறேங்க அத்தை. நீங்க பிறந்த ஊர். அப்பா பிறந்த ஊர் எல்லாத்துக்கும் மேல் தாத்தா வாழ்ந்த ஊர். வசிச்ச வீடு.."

"அதுக்கு ஏம்ப்பா தயங்குற. செய்திடலாம்ப்பா. சந்தோஷமா செய்திடலாம்."

மீண்டும் தயங்கி ஆரம்பித்தான் அவன்.

"அது மட்டுமில்லீங்க அத்தை. தாத்தா வைத்தியம் பார்த்த இடத்துல, தாத்தா ஸ்தானத்துல உட்கார்ந்து வைத்தியம் பார்க்கணும்ங்கிறதும் எனக்கு ஒரு ஆசைங்க. நான் படிச்ச படிப்பும், செய்யிற தொழிலும் நம்ம ஜனங்களுக்கு பயன்படணும்ங்கிறது என் எண்ணம். அதனால் டிஸ்பென்சரியையும் ஊருக்கே மாத்திடலாம்னு நினைக்கிறேன். இதைப் பற்றின உங்க அபிப்பிராயம் என்னங்க அத்தை..?"

"இதுல எனக்குன்னு தனி அபிப்ராயம் எங்கிருந்தப்பா வரமுடியும்..? இதுல மட்டுமில்ல.. எதுலயும் எனக்குன்னு ஒரு தனி அபிப்ராயம் கிடையாது. இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. இனிமேல் நீ என்ன நினைக்கிறியோ.. நீ என்ன முடிவு எடுக்கிறியோ அதுதாம்ப்பா என் முடிவும்."

"நிஜமாத்தானே அத்தை சொல்றீங்க..? உணர்ச்சிவசப்பட்டு ஒரு முடிவுக்கு வரலியே..?"

"இல்லேப்பா மனசு பூர்வமாகத் தான் சொல்றேன். உறுதியான முடிவு மட்டுமில்ல.. இறுதியான முடிவும் கூட அதுதான்."

"அப்படின்னால் அன்னிக்கு அப்பா கூப்பிட்ட மாதிரியே இன்னிக்கு நானும் கூப்பிடறேன். என்கூட நீங்களும், குழந்தைகளும் வரணும். எல்லாரும் ஒண்ணாக தாத்தா வாழ்ந்த வீட்ல வாழணும்னு ஆசைப்படறேன்."

"அவ்வளவுதானே. வந்திட்டாப் போச்சு."

"நிஜமாகவா அத்தை சொல்றீங்க...?"

"சத்தியமாகச் சொல்றேன்ப்பா. இனி உனக்காக, குழந்தைகளுக்காக, ஒட்டுமொத்தமாகக் குடும்பத்துக்காக வாழணும்ங்கிறதைத் தவிர எனக்கு வேறு என்னப்பா வாழ்க்கை இருக்கு..."

அதற்குப் பின் பேச்சிற்கு அர்த்தங்களற்ற மௌனத்தில் சில வினாடிகள் கடந்த பின் மிக மிக அமைதியான மனதோடு அமைதியான குரலில் சொன்னான்.

"அப்படின்னா நான் ஊருக்குக் கிளம்பறேன் அத்தை. அம்மா, அப்பாவிற்கு விவரம் சொல்லி கல்யாணத்திற்கு நாள் குறிச்சுக்கிட்டு வரேன். வரேன் ரம்யா..." என்று அவளிடமும் சொல்லிக்கொண்டு ஊர் நோக்கிப் புறப்பட்டான் அவன்.

## 31

திடீரென்று ஊர் வந்த குணசேகரனைப் பார்த்து சுந்தரமும், செண்பகத்தம்மாளும் அக மகிழ்ந்து போனார்கள்.

"அடடே... வாப்பா... வா... என்ன திடீர்னு வந்திருக்க...?" என்று முகத்தில் சந்தோஷம் பொங்க வரவேற்றார்கள்.

"நல்ல விஷயமாகத்தான் வந்திருக்கேன். எப்படிப்பா இருக்கீங்க... எப்படியம்மா இருக்கீங்க...? நல்லாயிருக்கீங்களா?" என்று கேட்டான் அவன்.

"எங்களுக்கென்னப்பா...? குத்துக்கல்லாட்டம் இருக்கோம். தாத்தா போனதுக்கப்புறம் நீ இந்த ஊர் பக்கம் திரும்பாத வேதனையும், குறையும் தவிர வேறென்ன எங்களுக்கு...?"

"அந்த வேதனையையும் குறையையும் கூட ஒட்டுமொத்தமாகத் துடைச்சு எறிஞ்சிடணும்ங்கிறதுக்காகத்தான் இப்போ வந்திருக்கேன். கல்யாணம் செய்துக்கிட்டு இங்கேயே, உங்க கூடவே இருந்திடலாம்ங்கிற முடிவோடத்தான் வந்திருக்கேன்..."

"என்ன? என்ன?!" என்று தங்களைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாதவர்களாகக் கண்ணகல அவனைப் பார்த்தார்கள்.



"என்ன அப்படிப் பார்க்கறீங்க...? நெசமாகத்தான் சொல்றேன். நம்ம ரம்யாவைக் கூட்டிக்கிட்டு அவங்க எல்லாரையும் கூட்டிக்கிட்டு இங்கே ஒன்னா, ஒரு குடும்பமா வாழலாம்ங்கிற எண்ணம். தாத்தா இருந்து வைத்தியம் பார்த்த அதே இடத்துல நானும் வைத்தியம் பார்க்கணுங்கிற ஆசை."

"ரம்யாவா... எந்த ரம்யா...?" என்று ஒருசேரக் கேட்ட அம்மாவையும், அப்பாவையும் பார்த்தான் குணசேகரன். எதனால் அத்தனை சந்தேகமாகவும், குழப்பமாகவும் கேட்கிறார்கள் என்பது புரிந்துபோக மெலிதாகப் புன்னகைத்தான்.

"நம்ம ரம்யான்னா வேற யாரும்மா...? உங்க நாத்தனார் மக ரம்யா... அப்பாவோட தங்கச்சி மக ரம்யா... என் அத்தை மக ரம்யாவேதான்."

"ஐயோ... அந்தப் பொண்ணா..." என்று அலறினார்கள் இருவரும்.

"அதுக்குப் புடிச்சிருக்கிற திமிரும், தெனாவெட்டும், பெரியவங்க, சின்னவங்கங்கிற மரியாதையில்லாமல் எடுத்தெறிஞ்சு பேசறதும்... அதையா சொல்ற குணா...?"

கால் வினாடி அப்பாவையே ஏறிட்டுப் பார்த்த குணசேகரன் பின்னர் மெல்ல ஆரம்பித்தான்..

"அப்பா... உங்க பதட்டம் எனக்குப் புரியுது. மனுஷங்க எப்பவும் ஒரே மாதிரி இருக்குறதில்ல. பணக்காரன் பணம் இருக்கிறவரை ஆடுவான். பதவியில் இருக்கிறவன் பதவி இருக்கிற வரை ஆடுவான். இதெல்லாம் போனால் இறங்கி வர்றதுங்கிறது சகஜம்தானே...? உலகத்துல நாம் பார்க்காத விஷயம் என்ன...?"

"அது சரிப்பா... ஆனா அந்தப் பொண்ணு தான் அழகுன்னு இல்ல ஆடிச்சு. உன்னைக் கருப்பன் கரிக்கட்டைன்னு என் எதிர்லயே என்ன பேச்சு பேசிச்சு...? அப்படி ஓர் திமிர் பிடிச்சுக்கிட்டுக் கிடந்ததே... இப்போ திடீர்னு உன்னைக் கட்டிக்க எப்படி சம்மதிச்சுது...?"

"இப்போ முன்னை மாதிரில்லப்பா அந்தப் பொண்ணு. ரொம்பவே மாறிடிச்சு.."

"எப்படி மாறிச்சு.. திமிர்னு எப்படி மாறும்..?"

"அழகெல்லாம் போயிருச்சு, அதனால் மாறிடிச்சு.."

"அழகு போயிடிச்சா..? என்னப்பா சொல்ற நீ..?" பதறிப் போனார்கள் இருவரும். "சொல்றதைக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுப்பா.. என்ன ஆச்சு..?"

முழு விவரமும் சொல்லி முடித்தான் அவன். ரம்யா கதறி அழுதது, காவேரியம்மாள் கையெடுத்துக் கும்பிட்டது உட்பட எல்லாம் சொன்னான்.

"என்னவானாலும் நம்ம குடும்பம்ப்பா.. உங்க தங்கச்சி. மாமா செத்துப் போய் காரியம் முடிஞ்ச கையோடு கூடவே வந்து இருக்கச் சொல்லி நீங்க கூப்பிட்டீங்க. அதையேதான் நானும் இப்போ சொன்னேன். அப்போ மறுத்த அத்தை இப்போ மறு பேச்சு பேசாம ஏத்துக்கிட்டாங்க. அத்தை, குழந்தைங்க, ரம்யா, நீங்க, நான் எல்லாரும் இந்த வீட்ல சந்தோஷமா இருக்கலாம்ப்பா. வீடும் கலகலன்னு இருக்கும். மனசும் சந்தோஷமாயிடும்."

கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி மௌனமாக இருக்கவே, அதன் அர்த்தம் புரியாமல் கேட்டான் அவன்.

"என்னப்பா.. ஏன் ரெண்டு பேரும் பேசாமல் இருக்கீங்க..?"

"வரப்போற மருமக அதி ரம்பையாக இருக்க வேணாம். சினிமா நடிகையாக ஜொலிக்க வேணாம். பார்க்கக் கொஞ்சமாவது லட்சணமாக இருக்கணுமில்ல..? நாலு பேருக்கு 'இதுதாங்க எங்க மருமக'ன்னு சொல்லிக்கிற மாதிரி இருக்கணுமில்ல..? கொஞ்சம் கூட லட்சணமில்லாத ஒரு முகத்தைக் கட்டிக்கிட்டு நீ மட்டும் எப்படிப்பா சுகப்பட முடியும்..?"

"அப்பா..?" என்று அதிர்ந்து போனான் அவன். அவர் அப்படிப் பேசுவார் என்பதைச் சிறிது கூட எதிர்பார்க்காத வருத்தத்தில் தொடர்ந்தான்.



"என்னப்பா இப்படிப் பேசறீங்க? அவ வேற யாரும் இல்லைப்பா. உங்க தங்கச்சி மகப்பா. இதே நிலைமை அவ உங்க மருமகளானதுக்கு அப்புறம் வந்திருந்தா என்ன செய்திருப்பீங்க..? வேணாம் இந்த முகம்னு விரட்டியடிச்சிருப்பீங்களா? அதே அம்மை எனக்கு வந்து என் முகம் விகாரப்பட்டிருந்திச்சின்னா.. மகனே இல்லைன்னு ஒதுக்கியிருப்பீங்களா..? ஒரு விபத்து நேர எத்தினி நேரமாகும்..? நோய் வந்து படுக்க எத்தினி நேரமாகும்? இவ்வளவு ஏம்ப்பா..? அடுத்த நிமிஷம் நான் உயிரோடு இருப்பேனா இல்லை யாங்கிறதே நிச்சயமில்லாதுதானே உண்மை.

"செத்த பிணத்தை பார்த்து சாகப் போகின்ற பிணங்கள் அழுகின்றன.. என்பது தானேப்பா நிஜம்?"

அவனை முடிக்க விடாமல் ஓவென்று கதறி அழுதார்கள், சுந்தரமும் செண்பகத்தம்மாளும்.

"ஐயோ.. என்ன பேச்சுப்பா பேசற..? எங்களுக்குன்னு இருக்கிறது நீ ஒருத்தன்தாம்ப்பா.. உனக்காகத் தானே நாங்க வாழ்ந்துக்கிட்டிருக்கோம்..? ஏதோ.. படிப்பறிவில்லை. மனசுல தோணினதைச் சொல்லிட்டோம். தப்புன்னா மன்னிச்சிடுப்பா."

"இதெல்லாம் யாருக்கும் எப்பவும் நிகழக் கூடியது தான்ங்கிறது புரியாமப் போயிடுச்சு. மொகம் நல்லாயிருந்து என்ன புண்ணியம்..? மனசு நல்லாயிருக்கணும்..? நல்லது நினைக்கணும். மனசுதான் மனுஷங்களே தவிர மொகமில்லேப்பா. அதுவுமில்லாமல் நீ சொன்ன மாதிரி யாரு அந்தப் பொண்ணு..? அந்நியமா.. அசலா.. நம்ம பொண்ணு. நம்ம ரத்தம். ஏதோ அறிவுகெட்டதனமா சொல்லிட்டதை மனசுல வச்சுக்காதே.. உன் சந்தோஷம்தான் எங்க சந்தோஷம். உன் சுகம்தான் எங்க சுகம். உன் முடிவு தான் எங்க முடிவு.

"அதனால் ஒரு நல்ல நாளாகப் பார்த்து அவுங்களை வீட்டைக் காலி செய்ய வச்சு, இங்க கூட்டிக்கிட்டு வந்திடு. அதுக்கப்புறம் தேதி குறிச்சு, தாம்பூலம் மாத்தி, கல்யாணத்தை 'ஜாம் ஜாம்'னு நடத்திடலாம். நாங்க இருக்கோம்ப்பா உனக்கு. உன் முகம் கோணாமல் நடந்துக்கிடுவோம். எல்லாம் நல்லபடியாக முடியும். போய் முதல்ல

குளிச்சு சாப்பிட்டுப் பிரயாணக் களைப்பு தீரக் கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கு. அதுக்கப்புறம் மீதி எல்லாத்தையும் பேசிக்கலாம்..."

மடமடவென்று மனதில் இருந்ததையெல்லாம் கொட்டித் தீர்த்தார் சுந்தரம். குணசேகரன் குளித்து வந்தபின் அவனுடனேயே உட்கார்ந்து சாப்பிட்டார்.

"நீ கொஞ்ச நேரம் கண்ணசரு. நான் வயக்காட்டுப் பக்கம் போயிட்டு வந்திடறேன்..." என்று கைக்குட்டையை விரித்துக் கொண்டு நடைதாண்டி தெரு இறங்கிப் போனார்.

தன் அறைக்குப் போய் சிறிது நேரம் படுத்துக் கொண்டான் குணசேகரன். உடல் களைத்துப் போயிருக்கவே கண் இழுத்துக் கொண்டது. வெள்ளைச் சூரியன் மஞ்சளாகி, அந்த மஞ்சளும் லேசாக மக்கிக் கொண்டு வந்தபோது சடாரென்று எழுந்து கொண்டான். அறையை விட்டு வந்தபோது முற்றத்துக் கொடியிலிருந்த துணிகளை அம்மா மடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

"ஏம்மா... இத்தினி நேரம் தூங்கிட்டேனே... கொஞ்சம் எழுப்பக் கூடாது?" என்று கேட்டான்.

"இப்ப எழுந்திரிச்சு என்னப்பா செய்யப்போற...? அசதியாகப் படுத்திருக்கியே. எழுப்ப வேணாம்னு விட்டிட்டேன். போய் முகம் கழுவிக்கிட்டு வந்தியானா சூடா காபி கலந்து தரேன். குடிச்சிட்டுக் காலாற நடந்து போயிட்டு வா... மனசுக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கும்..."

"அட... தேவலையே... அம்மாவுக்கு இந்தச் சின்னச் சின்ன சந்தோஷங்களையெல்லாம் கூடத் தெரியுதே... இதெல்லாம் மனசுக்கு இதமான விஷயங்கள்னு பிடிபடுதே..." என்று ஆச்சரியப்பட்டான்.

காபி குடித்துவிட்டு வீட்டை விட்டுத் தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தான். சாயங்கால வானம் அதி அழகாகத் தெரிந்தது. கூட்டம் கூட்டமாகக் கால்நடைகள் வீடு திரும்பிக் கொண்டிருந்தன. அவை ஏற்படுத்திய புழுதி, கிராமத்து மண் மணம், வைக்கோல் வாசனை சாண வாசனை...

அந்தப் புழுதியில் கால் புதையப் புதைய நடந்தபோது தாத்தாவும் கூட நடக்கிற உணர்வு தோன்றியது.



"ஏன் தாத்தா... கூட வட வரீங்களா...?

'வராம...? உன்னை விட்டு அகன்று எங்கே போயிருக்கேன்...?'

சிரித்துக் கொண்டான் அவன்.

'எதுக்கு சிரிக்கிற...? கடைசியில் நீதான் ஜெயிச்ச இல்ல...?'

'ஒரு விதத்துல ஜெயிப்பு... ஒரு விதத்துல தோல்வி...'

'தோல்வின்னு எதைச் சொல்ற...?'

'நிஜமாகவே உங்களுக்குப் புரியலையா தாத்தா...?'

'புரியலையப்ப... இப்போ இருக்கிற மனுஷங்களுடைய நிறைய குணாதிசயங்கள் புரிய மாட்டேங்குது.'

'உங்களுக்குப் புரியாமல் இருக்காது. தாத்தா. என் வாயால் சொல்லணும்னு எதிர்பார்க் றீங்க. சரி சொல்லிடறேன். நான் இன்னும் மனுஷனாகத்தான் இருக்கேன் தாத்தா. உயர முடியல... இந்த வெற்றி தோல்விகளிலிருந்து விடுபட முடியல...'

'அதனால் என்ன... பரவாயில்லை. மனுஷனாக இருக்கியேன்னு சந்தோஷப்படு. உயர முடியாட்டி போனாலும் கீழே இறங்கலயில்ல? இதப்பாரு குணா... சந்தோஷமாக இரு... அடுத்தவர்களுக்குக் கஷ்டம் கொடுக்காமல் எப்படியெல்லாம் சந்தோஷமாக இருக்க முடியுமோ அப்படியெல்லாம் சந்தோஷமாக இரு. நீயும் சந்தோஷமாக இருந்து மற்றவங்களையும் சந்தோஷப்படுத்து. அதுதான் வாழ்க்கை. அதற்காகத்தான் வாழ்க்கை."

'புரியுது தாத்தா... நல்லாப் புரியுது. மற்றவங்களை சந்தோஷப் படுத்தும் போது நமக்குள் வருதே... அது ரொம்பப் பெரிய சந்தோஷம்னு தெரியுது...' என்றவன், அதன்பின் சில வினாடிகள் இருந்து பின்பு கேட்டான்.

'ஏன் தாத்தா... போன வாட்டி இப்படி புழுதியில் கால் புதைய நடந்தபோது ஏதோ கவிதை சொன்னீங்களே... அது என்ன கவிதை?'

'ஓ... கல்யாண்ஜி கவிதையா...? சொல்றேன் கேட்டுக்க.

*ஊரின் எல்லையில்*
*ஓயாத பேராறு*
*எல்லாத் தெருவிலும்*
*ஏகப்பட்ட புழுதி.*
*நினைக்க ஆறு*
*நடக்க நடுத்தெரு.*

- ஆமாம். எதுக்குக் கவிதை யெல்லாம் கேட்குற..?'

'இல்ல தாத்தா... மெட்ராசுக்குப் போனப்புறம் யோசிச்சுப் பார்த்தான். சித்தர் பாடல்னா உங்களுக்குத் தெரிஞ்சிருக்க வாய்ப்பிருக்கு. இந்த மாதிரி புதுக்கவிதைங்கள்ளாம் எப்படித் தெரிய வந்திச்சு. இந்த வயசுல இதெல்லாம் எப்படிப் படிச்சீங்கன்னு புரியல..'

ஓஹோஹோ என்று தாத்தா வாய்விட்டுச் சிரிக்கிற மாதிரி தோன்றியது.

'பழம் பாடல்கள்ல மட்டும் தானே தாத்தாவுக்குப் பரிச்சயம் இருக்க முடியும்..? எப்படிப் புதுப் பாடல்களில் பரிச்சயம் ஏற்பட்டுச் சுன்னு யோசிக்கிறியா..? அது வேற ஒன்னுமில்ல... நா - பிச்ச மூர்த்தின்னு ஒரு இலக்கியவாதி என் காலத்து ஆளு. அவருகூட பேசிப் பழகி இதுல ஒரு ஆர்வம் வந்திச்சு. வைத்தியத்துல இருந்த அதே விருப்பம் இதுலயும் விழுந்து போச்சு. எல்லா புஸ்தகங்களையும் வரவழைச்சேன். நீயும் எல்லாம் வரவழி. நிறையப் படி. நல்லா வைத்தியம் பாரு. சுத்தி இருக்கிறவங்களையெல்லாம் சந்தோஷமாக வச்சிக்க. நீயும் சந்தோஷமாக இரு. இது போதும். வேற எதுவும் வேணாம்.

"எல்லாரும் இப்படி இருந்திட்டாலே உலகம் முழுசும் சந்தோஷமாயிடும். அன்பாயிடும். ஒத்துமையாயிடும். இந்த அன்பும், ஒத்துழைப்பும் சந்தோஷமும், பிரியமும்தான் வாழ்க்கை. இது யாருக்கும் தெ[illegible]லை. தெரிஞ்சுக்க ஆசைப்படவும் இல்லை. எல்லாம் இருக்காங்க[illegible] தவிர வாழலை. இருந்து என்ன ஆகப் போகிறது? செத்து தொ[illegible]யலாம். செத்து என்ன ஆகப் போகிறது? இருந்தே தொலையலா[illegible]னுதான் போய்க்கிட்டிருக்காங்க.



'நீ அப்படிப் போகாத குணா. வாழு. வாழத்தான் நாம் பிறந்திருக்கோம். வாழு, சந்தோஷமாக வாழு. நீயும் வாழ்ந்து மற்றவங் களையும் வாழ வை. நீயும் சந்தோஷமாக இருந்து மற்றவங்களையும் சந்தோஷப்படுத்து. இதுதான் இவ்வளவுதான். அப்போ நான் வரட்டுமா..?'

'தாத்தா... எங்க தாத்தா போறீங்க..?' அதிர்ந்தான் அவன்.

கண்சிமிட்டிக் குறும்பாகச் சிரித்தார் அவர்.

'தப்புப்பா... இனிமேலும் உங்கூட இருந்தா அது தப்பு. உன் பொண்டாட்டி வரப்போறா... அவ கூட நீ சந்தோஷாக இருப்ப. அப்பவும் கூட இருக்கிறது தப்பில்ல..? அதனால் இங்கேயே கழண்டுக்கிறேன்.

"இத்தினி நாளும் இதுக்காகத் தான் காத்துக்கிட்டிருந்தேன். கூடவே வந்துக்கிட்டிருந்தேன். இப்போ உன் மனசு நிலையாயிடுச்சு. சாந்தி கிடைச்சிடுச்சு. நீ இங்கேயே வரப்போற. என் இடத்துல உட்கார்ந்து என் தொழிலைப் பார்க்கப் போற. எனக்கு வேற என்ன வேணும் சொல்லு..? எண்ணி ஒரே வருஷம். உனக்கே வந்து உன் மகனாகப் பொறப்பேன். கவலைப் படாதே. அதுக்கான முயற்சியை மட்டும் நீ செய்யி போதும்' என்று மீண்டும் கண்ணடித்தார்.

அவரது கைகள் தலையை வருடுவது தெரிந்தது. முதுகுத் தண்டை சொடுக்கிக் கொடுப்பதை உணர முடிந்தது. தன்னோடு சேர்ந்து இறுக அணைப்பதைப் புரிந்து கொள்ள இயன்றது. அத்யந்த நண்பனின் அவரணைப்பு அது. நல்லாசிரியனின் ஆசிர்வாதம்.

'போதும்... இது போதும்.. இதற்கு மேல் வேறென்ன வேண்டும்..?'

மனசு குளிர்ந்து சிலிர்த்துப் போயிற்று. அந்த சிலிர்ப்பு உதட்டில் சந்தோஷமாக எட்டிப் பார்த்தது.

'வரேன் குணா..'

'வாங்க தாத்தா!'

'பேரனாக மறுபடியும் நானே வருவேன் குணா...'

'வாங்க தாத்தா...'

'சொன்னபடி ஒரு வருஷம். அதுக்கு மேல் தாங்க மாட்டேன் அது உன் கைலதான் இருக்கு!'

வெட்கம் கலந்த சந்தோஷத்துடன் சிரித்தவாறே கையசைத்தான் அவன்.

(முற்றும்)

சென்னை மாவட்ட கிளை நூலகம்
24149
4008623
கொளத்தூர், சென்னை-99.